உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

நாடிசாஸ்திரம்.

பி. எல். அருணாசல முதலியார் & பி

15, படவட்டம்மன் கோயில் தெரு,

பிரம்பூர் பேரக்ஸ் போஸ்டு, சென்னை.

1-12-0

கடவுள் துணை.

இந்நூல் அச்சிட்டவர் கருத்து.

மாட்சிமைபொருந்திய சிநேகிதர்களே! தெய்வீகத்தன்மை பொருந்திய நாற்பத்தெண்பெயர் முனிவர்களும், நவகோடி ரிஷிகளும் பதினெண்பெயர் சித்தர்களும் ஜீவகாருணியத்தினால் திருவாய்மலர்ந்தருளிய மூன்றுலட்சங் கிரந்தங்களில் என்னாற்கூடியவளவு ஆராய்ந்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகட்கு சாத்திய அசாத்தியங்களை எளிதிலுணரும்பொருட்டு, நாடிக்கிரந்தங்களை தற்காலமானிடர்க்குபயோகமுள்ளவற்றை மாத்திரம் சேர்க்கப்பட்டும் வீண்பிரயோசனமுள்ளவைகளைத் தள்ளப்பட்டும் தத்துவலட்சணம் தூதுலட்சண மிவைகளைக் கொள்ளப்பட்டும், பிரயோசனப்படும்படி அச்சிடலாயிற்று. அன்றியும் புராதனசங்கதியான முற்காலத்து தபோதனர்களாலியற்றிய சில நாடிக்கிரந்தங்கள், அதைச்சார்ந்த வயித்திய கிரந்தங்கள் இரண்டுலட்சமென்றும் வாதக்கிரந்தங்கள் ஒருலட்சமென்றும் கூறப்பட்டும் அவைகளை மகாமகத்துவம்பொருந்திய தன்வந்திரி அகத்தியமுனிவர் இன்னும் அநேகரிஷிகள் அச்சாத்திரக் கோர்வைகளைப் பொதிகையிலிருந்து திருப்பாற்கடலென்னும் தீவாந்திரத்தில் அலைவாரிதியில் ஏடுருவி சமுத்திரப் பிரவேசமாக்கிவிட்டார்கள். அதிற் சில கிரந்தங்களில் கோர்வைதப்பிக் கோர்வையாகவே மிதந்தும் கிழிந்தும் சிதறியும் கையிற்கிட்டின சில சாஸ்திரமாத்திரம் முற்பெரியோர்களுக்கு மாத்திரம் கிடைத்ததென்றும் அச்சாத்திரக் கோர்வைமாத்திரம் கிட்டினதாகவும் அதுதான் தற்காலபிரயோசனவுதவியென்றும் கேழ்வியுற்றிருப்போமல்லவா இப்படி பழமொழிவிளங்க இதுகளெல்லாம் நாம்கேள்வியுற் றிச்சாத்திரக் கோர்வையை சீர்திருத்தி பதினெண்பெயர் நாடிசாஸ்திரமென்றும் பெயர்வகித்து இத்தொகுப்பை அச்சிடத்துணிந்தேன். இதன்றி இனி எங்கேயாகிலும் இன்னம் கோர்வை கிடைத்தபோதும் பின்னால் அச்சிடப்படுவதுடன் இச்சாத்திரக் கோர்வைகளில் எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம் இப்படிக்கேதிருப்பினும் பெரும்பாலும் பெரியோர்கள் அங்கீகரிப்பீர்களாக. இந்நூல் திருத்தியவர் ஆயுள்வேத பாஸ்கரர் கந்தசாமி முதலியார்.

சரித்திரவரலாறு முற்றிற்று.

அட்டவணை.

பக்கம்.		தொகை.
3	அகஸ்தியர் இரத்தினச்சுருக்கநாடி	32
8	பரிபூரணநாடி	28
15	இரத்தினகிரிநாடி	39
24	திரட்டுநாடி	35
32	குணவாகடத்தின் வைத்தியசாரம்	36
39	மேற்படி நோயின்சாரம்	66
50	காவியத்தின்நாடி	95
63	வல்லாதியின்நாடி	41
70	வைத்தியசதநாடி	102
87	குறியடையாளநாடி	110
102	குருநாடி	101
117	சூடாமணிகயறுசூஸ்திரம்	30
122	திருமூலநாயனார்நாடி	101
124	தன்வந்திரிபகவான்நாடி	107
150	மேற்படியார் காவியம்நாடி	37
156	சிவவாக்கியர்நாடி	31
162	வியாசபகவான்நாடி	20
165	ஷையார் சரீரசூத்திரம்	17
168	யூகிமுனிநாடி	36
176	மேற்படியார் தத்துவம்	96
190	தேரையர்நாடி	51
196	புண்ணாக்கீசர்நாடி	8
197	சூதமுனிநாடி	27
201	வால்மீகர்பூதநாடி	16
203	மச்சமுனிநாடி	17
206	புலிப்பாணிநாடி	12
207	சட்டமுனிநாடி	21
209	போகர்நாடி	11
210	வரரிஷிநாடி	9
211	இராமதேவர்நாடி	11
212	இடைக்காடர்நாடி	10
214	கொங்கணர்நாடி	15

அட்டவணை முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

மஹா மகத்துவம் பொருந்திய

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

நாடி சாஸ்திரம்.

சித்தர்கள் பெயர் விருத்தம்.

காப்பு.

பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்
பண்பான அகத்தீசர் சட்டநாதர்
கார்த்திடவே இடைக்காடர் சண்டிகேசர்
கனராமர் போகர்சிவ வாக்கியசித்தர்
சேர்த்திடவே கோரக்கர் புண்ணாக்கீசர்
சிறப்பான மச்சமுனி பூனைக்கண்ணர்
வார்த்திடவே யோகிமுனி கொங்கணர்பாணி
வரரிஷி மலர்ப்பதம் காப்பதாமே.

முதலாவது,

அகத்தியமுனிவர் நாடி கூறுகின்றார்.

விருத்தம்.

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனினாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்திற் பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்வாத முயர்நடுவிரலிற்பித்தந்
திருவிரல்மூன்றிலோடிற் சேத்துமநாடியாமே. 1

ஆகியநாடிமூன்றும் படபடென்றோடிற்சென்னி
வாகினிலன்னங்கோழி மயிலெனநடக்கும்வாதம்
ஏகியவாமையட்டை யிவையெனநடக்கும்பித்தம்
போகியேதவளைபாம்பு போலவாஞ்சேத்துமந்தானே. 2

சேத்துமமெழுந்திரிக்கிற் றித்திப்புநாவிலேலும்
ஏத்தியகசப்புமீறி லெழும்பிடும்பித்தமாகும்
ஏத்தியபுளிப்புமீறில் வந்திடும்வாதமாகும்
சேத்துமந்தண்ணீர்பித்தந் தீக்காற்றுவாதமாமே. 3

வாதத்தில்வாதமாகில் வளர்ந்திடும்மன்னம்போல
நீதுற்றவுடலிநேர்ந்து நெகிழ்ச்சியாய்ச்சுருங்கும்வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனி யசனமுமற்பமாகும்
ஏதுற்றதனத்தின்முன்னே யெண்ணியேயறிந்துசொல்லே. 4

வாதத்திற்பித்தமாகில் வாயதுகுழறிப்பேசும்
பேதித்துகுளிருங்காலில் வீக்கமும்பெருகவுண்டாம்
தாதுற்றபுத்திதானுந் தடைபடுந்தடங்கண்மாதே
கோதுற்றவயிறுவிம்மிக் குடல்தனைபுரட்டுந்தானே. 5

வாதத்தில்சேத்துமமாகில் வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலைபிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்
தீதுற்றமெய்வெளுத்துத் திடமுடனசனஞ்செல்லாப்
பேதித்துநாவுபேசும் பெருகவேவீக்கமுண்டாம். 6

பித்தத்திற்பித்தமாகிற் பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகுஞ் சரீரத்திலிளைப்புண்டாகும்
அத்தியாயுலருமேனி யாகமும்வேறதாகும்
வத்தியேகொளுத்துகாயம் வரண்டுபின்வீக்கமுண்டாம். 7

பித்தத்தில்வாதமாகிற் பிடரியுங்காலுங்கையும்
குத்ததுபோலேயாகும் குறுகிமெய்பதறும்பின்னே
அத்தியாயுலருமேனி யாகமுஞ்சுரத்தால்நோவாம்
புத்தியுமடியுமிக்கப் பொருமைபோய்க்கோபமாமே. 8

பித்தத்திற்சேத்துமமாகிற் பிதற்றும்வாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந் தானறியாமலோடும்
சுத்திடும்பேய்கள்போலச் சுழற்றியவயிற்றில்நோவாம்
பித்தமுமெடுத்துக்கொட்டிப் பிடரியில்நோவதாமே. 9

வாட்டிடும்சேத்துமத்தில் வந்திடும்வாதமாகில்
நாட்டியகால்கள்போல நரம்பெலாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங் குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமேலாய் நாவதுகுழறுந்தானே. 10

சேத்துமபித்தமாகிற் றின்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற் பலவிதம்புளிப்பினிப்பாம்
சேர்ப்பதுபேசுமாறுந் திடமில்லைகோழையாகும்
காப்பதுகண்ணும்பீளைச் சாறும்பின்சத்தம்வேறும். 11

சேத்துமத்திற்சேத்துமமாகிற் றிமிர்தமாயறியுஞ்சொன்னோம்
ஆத்தமுநல்லதல்ல வழிவதுமெய்கண்டாயே
கூற்றன்வந்திடுவதாகுங் குறுமொழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னோம் யாத்திரைநாடிதானே. 12

நாடி பார்க்குங்காலம்.

காலமேசேத்துமநாடி கட்டுச்சிப்பித்தநாடி
மாலையில்வாதநாடி வகைதப்பிப்பிதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லா மியம்பினாரிதுதானென்று
காலஞ்சில்மரணமென்று நன்முனியருளிச்செய்தார். 13

நாடி இலக்கணம்.

போற்றியநாடிகாணும் போத்துபோற்புறந்துடித்தால்
சீற்றுவில்நுதலேமிக்கக் கிஞ்சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற் கருதியேதீரவிட்டால்
மாற்றியபாதம்பற்றில் மரணமென்றுரைக்கலாமே. 14

குறித்திடும்சேத்துமநாடி குதிரைபோல்நிமிர்ந்துதென்றால்
கறுத்திடுவிழியாய்நல்ல காரிகையாளேகேளாய்
மறுத்திவைபேசவேண்டாம் வயதிவைமுடிந்ததென்று
பொறுப்பில்லைதிங்களொன்றில் புகன்றிடுமரணமாமே. 15

ஆதித்தன்சந்திரன்போ லந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற் பெருக்கவேவகையினூடே
சோதித்துக்கண்டுநாடி சுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடை வந்துறநிற்குந்தானே. 16

கடிந்ததோர்நாடிதன்னைக் கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடி விதறியேதுடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடி கட்டுச்சித்துடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடி மாலையில்மரணந்தானே. 17

சேத்துமநாடிதானுந் தியங்கியமஞ்சைபோல
நாட்டியவட்டைபோல நடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேவேண்டாமேழு நாளினில்மரணமென்று
காட்டமாய்முனிவர்சொன்னார் நயம்பிடகுறித்துப்பாரே. 18

ஏற்றியதீபந்தன்னி லெரிசுடர்முனையைப்போல
தோற்றியநாடிதானுந் துயரறநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லை குறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாணாள்தானும் வளர்ந்திடுந்திண்ணந்தானே. 19

கண்ணும்பல்லுந்தான்கறுத்து கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணும்வயிற்றில்சேத்துமமு மோடிமிகவேதானடந்தால்
பண்ணும்மருந்துபலியாது பண்பாய்சுவாசமேல்வாங்கும்
மண்ணும்விண்ணுந்தானறிய மரணமாவார்கண்டீரே. 20

இடைதுடைமார்பின்கீழே யெறிபடப்பதறியோடில்
முடுகிடவீங்குமாகில் மூவரிலொருவரோடில்
படரவேதாகமிஞ்சிப் பஞ்சிடுங்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டா லறிந்துகொள்மரணமென்றே. 21

எடுக்கும்படுக்குமெழுந்திருக்கு மிளைத்தேமூச்சுதனைவாங்கும்
வடுக்கணைத்தவிழியிரண்டு மலரவிழிக்கும்வழிபார்க்கும் (ம்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந்தொண்டைதன்னையடைப்பிக்கு
அடுத்துவருவதிதுகண்டா லறிவீர்மரணநிச்சயமே. 22

ஊசிபோல்முகமுநீண்டு வுடம்பெல்லாநரம்புதோன்றிப்
பாசிபோல்கண்பஞ்சிட்டுப் பாரந்திருள்மூடுமாகில்
பேச்சுநாவறண்டுபேசிப் பித்ததுபிதற்றுமாகில்
காசினியறியச்சொன்னேங் கண்டுகொள்மரணமென்றே. 23

நாடியால்முன்னோர்சொன்ன நற்குறிகுணங்களாலும்
நீடியவிழியினாலு நின்றநாள்குறிப்பினாலும்
வாடியமேனியாலு மலரொடுநிகரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொல்லே. 24

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருங்கியகுணங்களாய்ந்து
முகங்குறிநாடிமூக்குச் செவிநுதனயனநாடி
அகந்துடியடிக்குநாடி யதுதிசைவிடுதிநாடி
உகந்துடியுந்திநாடி யுண்டையால்தடைகள்பாரே. 25

பார்மனக்கவலையற்றுப் பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்துநீயுஞ் செய்குணவழியிதென்று
ஊரகமுந்திதன்னி லொளிபலவியாதிசெய்யும்
தீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்கடானே. 26

சொல்லியவுந்திதன்னிற் சுழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி எழுபத்தீராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்ததிலேழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிந்துபாரே. 27

தான்மிகக்குளிர்ச்சிகொள்ளிற் றங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாய்நெய்பா லிறைச்சிகளுண்டால்வாதந்
தீன்மிகவருமேகோழி தின்னவர்நாடிபித்தம்
வானநற்கனிகடன்னை வாங்கினல்வாதமாமே. 28

வாதத்திலிளநீர்தன்னை வாங்கினனடிவாதம்
போதவேகோபமுள்ள பொருமினனடிபித்தம்
கோதைசேர்குழலார்தன்னைக் கூடினனடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னர் திறமுடனறிந்துதானே. 29

ஸ்திரீ புருடர்களுக்கு நாடிபார்க்கும் வகை.

தானெனவுலகத்துள்ளே தங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய் வரும்புலன்சொல்லக்கேளு
நானெனும்புருடற்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே. 30

நாடிபார்க்கும் மாதவகை.

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி ஐப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில் விழுகின்றநேரந்தானே. 31

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூன்றுநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமாமுனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபாரே. 32

வைத்தியரத்தினச் சுருக்கம் நாடிநிதானம் முற்றியது.

பரிபூரண நாடி.

புருஷ நாடி.

அஞ்சாகிப்பத்தான தசநாடிக்குள்
அப்பனேபவிமதியு நெருப்புமாகி
மிஞ்சாதவாதபித்தஞ் சிலேத்மமாகி
வீராமன்மூன்றினிலே வியாதிகாண
நெஞ்சாரக்காணுதற்கு வகையைக்கேளு
நேர்மையுள்ள தத்துவத்தை நினைவாய்ப்பார்த்து
நெஞ்சாரைப்போலப்பா நாடிதன்னை
திறமாகக்காணுதற்கு வகையைக்கேளே. 1

கேளப்பாபுருடருக்கு வலதுகையைக்
கிருபையுடன்றான்பிடித்து நெட்டைவாங்கி
சூளப்பாபெருவிரலோ ரங்குலத்துக்கப்பாற்
சுகமாகமூவிரலா லமுத்திப்பாரு
வாளப்பாமுதல்விரலே வாதநாடி
வண்மையுடனடுவிரலே பித்தநாடி
கேளப்பாபெருவிரலே சேத்மநாடி
திறமாகநின்னறிவாற் றெளிந்துகாணே. 2

புருடருக்கு நாடிகள் நடக்கும் விதம்.

காணவேபுருடருக்கு வாதநாடி
கானகத்துமயில்போலும் அன்னம்போலும்
தோணவேகோழிநடை நடக்குஞ்சொன்னேன்
துரியமென்றபித்தத்தி னுதிகேளு
எணவேயாமையுட னடையைப்போலும்
என்மகனே அட்டையைப்போல் நடக்கும்பாரு
வேணவேசெத்துமடிந்தான் பாம்புபோலும்
வேணபடிதவளைகுதி போலாம்பாரே. 3

பெண்களுக்கு நாடிகள் நடக்கும் விதம்.

பார்க்கவேபெண்டுகளுக் கிடதுபக்கம்
பதிவாகப்பார்த்திடவே பகாக்கேளும்
கார்க்கவேவாதமது சர்ப்பம்போலாங்
கனமானபித்தமது தவளைபோலாஞ்

சேர்க்கவேயையமென்ற நாடிதானுஞ்
சிறுநடையாவன்னம்போற் செழிப்பாய்க்காணும்
ஆர்க்குமேதோன்றுமிந்த நாடிமூன்றும்
அனுதினமூநல்லறிவா லறிந்துதேறே. 4

நாடிகள் கிழமைமேலு மீறியோடும் விதம்.

தேறவேசந்திரனும் வாதநாடி
திறமானசூரியனும் பித்தநாடி
மீறவேயக்கினியுஞ் சேத்மநாடி
விளங்கவேவியாழம திலங்கிமீறும்
கூறவேமந்தன்சே யிரவிமூன்றுங்
குணமானசூரியனுங் குமறியோடும்
ஏறவேதிங்கள்புதன் வெள்ளிதானு
மீன்பமுள்ளசந்திரனு மோடுங்காணே. 5

வியாதிகளறிய.

காணவேயிரவிலே வாதமோடில்
கனமானசளியிரும விரைப்புண்டாமே
நாணவேசெவ்வாயில் வாதமோடில்
நன்மையுள்ள்சுரமதுதா னணுகுஞ்சொன்னேந்
தோணவேமந்தனிலே வாதமோடில்
துணிந்ததொருசீதளமுஞ் சன்னியெய்தும்
வேணவேவியாழத்தில் வாதமோடில்
விலாவோடுதேகமெல்லாம் வலியுண்டாமே. 6

உண்டானதிங்களிலே பித்தமீறில்
உத்தமனேசலதோஷ முடனேகாணும்
பண்டானபுத்தியிலே பித்தமோடில்
பாரமுடனீறேற்றந் தலைக்குத்துண்டாம்
அண்டானவெள்ளியிலே பித்தமோடில்
அப்பனேகண்ணோயும் காதுநோயாம்
தண்டானகுருவினிலே பித்தமோடில்
தன்மையுறுந்தாபசுரந் தலைநோக்காடே. 7

நோக்காட்டையறிந்துரைக்க வயித்தியர்க்கு
நுண்ணறிவாய்சொல்லிவிட்டே னுணுக்கமெல்லாம்
பார்க்காட்டாற்றெறியாது பழக்கமாகப்
பார்த்தறிந்தோர்தனையடுத்துப் பரிவாய்க்கேளு

கேட்காட்டாற்கிடையாதிவ் வுலகத்துள்ளே
கிருபையுடன்மனமுறுதி யாகநீயும்
வாய்க்காட்டாலிந்நூலில் வாய்க்கும்பாரு
வண்மையுள்ளகுருநாடி வகையைப்பாரே. 8

குருநாடியிருக்குமிடம்.

பாரப்பாகுருநாடி யைந்துக்குநடுவாம்
பாரிநிற்கும்வரலாறு தன்னைக்கேளு
சீரப்பாபித்தத்தின் முன்னேநிற்குந்
தசநாடிபத்துக்குந் திறமாய்நிற்கும்
ஏரப்பாவாதமென்று சொல்வார்மூடர்
இருத்தியங்கேபார்ப்பளவில் வேறாய்நிற்குந்
தாரப்பாகெண்டகுரு நாடிநேர்மை
தனையறியவகையுனக்குச் சாற்றுவேனே. 9

பஞ்சநாடிகளிருக்குமிடம்.

சாற்றுவேன்பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்தூண்டி வாதமென்க
ஏற்றமுள்ளநடுவிரல்தான் பித்தமாகும்
இசைந்தமோதிரமே யையமாகுந்
தோற்றுகின்றசிறுவிரல்தான் பூதநாடி
சுற்றமுள்ளகுருநாடி யைந்துட்சேர்ந்து
மாற்றுமேகுருநாடி யைந்துட்சேர்ந்து
வளர்ந்துநிற்கும்பேர்பெரிய வுண்மைதானே. 10

பேர்பெரியகுருநாடி குணமேதென்னிற்
பிரண்டுவரும்வாதத்தி லட்டைபோல
கீரியவாய்வுமிகு மிருமற்றொன்றுங்
தினவுசொரிமிகவும்வருந் தேகம்வாடுஞ்
சூரியபித்தத்தி லாமைபோலத்
தோன்றிடிலோசுரமிருக்குஞ் சுற்றும்வாய்நீர்
கார்பெருகிவருவதுபோல் வியர்வுதோன்றுங்
கதித்திடில்நீர்கட்டுஞ் சிலேத்துமத்திற்போமே. 11

சிலேத்துமத்திற்குருநாடி சிங்கம்போலே
சீறிநிற்கிலதின்குணந்தான் சன்னிதோன்றும்
ஆற்பனத்தையூடுருவத் தமருமாகில்
அசாத்தியமாமரணகுறி தப்பாதப்பா

காற்பனவேகுருநாடி குன்றிப்போகில்
கழியும்வுயிர்கடுப்பெடுக்கும் கைகால்வீங்கும்
ஏற்பனவுமில்லையில்லை திட்டஞ்சொல்ல
மிறைந்தகுருநாடிகலை யிருத்திப்பாரே. 12

பாரப்பாகுருநாடி பக்கம்பாயில்
பாரித்தசிலேத்துமந்தா னெதிரேமோதும்
கூரப்பாகுருநாடி நேரேநிற்கில்
குற்றமில்லைவாதபித்த மிரண்டுஞ்சேரும்
தாரப்பாகுருநாடி பின்னேவாங்கில்
தப்பாதேசயித்தியங்கள் தானுண்டாகும்
காரப்பாஉடலுக்கு ளுயிராய்நின்ற
கருவானகுருநாடி யொன்றுகாணே. 13

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
யூடுருவித்தானிருக்கு முன்மைகேளீர்
வண்டுகள்தான்மதுவருந்து நேர்மைபோல
வாதபித்தசிலேத்துமத்தின் வதுவையுண்ணும்
என்றைக்கும்வாதபித்த நடுவேநிற்கும்
ஏறுவதுங்குறைவதுவு மில்லையப்பா
கன்றுக்குப்பாலிறங்கும் பசுவைப்போல
காத்திருக்குங்குருநாடி காலைப்பாரே. 14

குருநாடிநிலையறியாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டுச்சாத்திரத்துக் குவமைசொல்வார்
மருநாடிவாதபித்த சிலேத்மமூன்றின்
மத்தியமென்றிதையறிவார் வார்த்தைசொல்வார்
கருநாடிக்குருநாடி யாகக்காணுங்
கைம்முறையாய்க்குருதொட்டுக் காட்டத்தோன்றும்
பெருநாடிசாத்திரத்தில் மயங்கிடாதே
புலத்தியாகுருநாடிப் பின்னல்பாரே. 15

பார்த்தப்பாவாதபித்த நடுவேபார்க்கில்
பண்டதுபோன் மதுவுண்ணுமத்தியத்தில்
போற்றப்பாமூவிரலு முருவித்தாண்டிப்
பூரணமாய்மூலமுத லுருவிப்பாய்ந்து
சாற்றப்பாவிசைநரம்பி னூடேசேர்ந்து
சந்திரமண்டலமேவிச் சார்ந்துபின்னு

நாற்றமுற்றகுருநாடி யெங்குஞ்சுத்தி
நடுவில்வருநேர்மைதனை நாடிப்பாரே. 16

பம்பரம்போற்குருநாடி கிறுகிறென்று
பற்றிகிற்கும்வாதபித்த நடுவிலேதான்
அம்பரம்போற்குமிறியெழும் வாதபித்த
மையமென்றநாடிமுத லாடியோடிக்
கம்பமுடன்மண்டலங்கண் மூன்றுஞ்சுற்றிக்
கத்திரிக்கோன்மாறலெனக் கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்த நடுவிலேதான்
தமரகம்போலாடிநிற்குங் குருவிதாமே. 17

குருநாடிவாதமது நிற்கும்போது
கோழியுடன் அன்னமயில் குறியாமென்ன
வருநாடிபித்தத்தில் னிற்கும்போது
வளராமையட்டையென வகுக்கலாமே
திருநாடிசிலேத்துமத்தில் னிற்கும்போது
தெரித்துவிழும்விட்டிலைப்போற் றெளிந்துகாணும்
பெருநாடிசாத்திரத்தி லலையவேண்டாம்
பிராணகலைதனையறிந்து மரணம்பாரே. 18

மரணநாடி.

மரணமதையறிவதற்குக் குறியைக்கேளு
வழுவாதவிசைநரம்பு குளுந்துகாணும்
விரணமெனும்பொறிகளெல்லாம் தளர்ந்துமெத்த
விசைநரம்புதான்றளர்ந்து விரைந்துவாங்கி
நரணமெனப்பற்கடித்து மணியும்நட்டு
நாவுலர்ந்துமூச்சயர்ந்து நடுக்கமுண்டாய்த்
துரணமெனும்வாதபித்த சிலேத்துமமெல்லாம்
சோத்தியம்பார்விட்டிலைப்போற் றுடிக்கிற்சாவாம். 19

துடிகண்டசேத்துமந்தான் வெள்ளம்போலே
சுறுசுறுப்பாய் மடமடெனவோடுமாகில்
அடிகண்டமெற்றுநாள் மரணமாகும்
அப்பனேபித்தமது சிதறியோடில்
முடிகொண்டமூன்றுநாள் சாவார்சொன்னேன்
முழுமையுமே வாதமதுசிதறியோடில்

இடிகொண்டயெட்டாநாள் மரணமாவா
ரின்பமாய்க்கண்டறிந்தே யிடைந்துநில்லே. 20

நில்லப்பாவாதபித்த மிரண்டுங்கூடி
நிலைதப்பிச்சிதறியது வோடுமானால்
கொல்லுமப்பாபதினைந்து நாளிற்றானுங்
குணமாகவிதனுடனே ஐயங்கூடில்
வெல்லுமப்பாமண்டலத்தின் ஆக்கைபாழாம்
விதமாகமூன்றுமே வொன்றாய்க்கூடி
அல்லப்பா அப்பணைவால் துடியேகாணில்
அப்பனே அவர்பிழையா ரறிந்துபாரே. 21

பிழையாதவாதபித்த சேத்மங்கூடி
பிரண்டுவருந்தேள்கொடுக்குப் போலேயாடி
உளையாதவேடம்போ லோடுமானால்
உத்தமனே திங்களிலே மரணமாவார்
குளையாதநாடியின்மெய்க் குறியைக்காணார்
கூட்டமிட்டுக்குருவெனவே பிரசங்கிப்பார்
வழியானகண்ணிரண்டு மற்றகண்ணும்
விதியறிந்தாற்சன்னியுமே விலகும்பாரே. 22

சன்னியெழும்போலிருந்த நாடிமூன்றும்
சாதகமாய்ச்சுழல்வண்டு தண்ணீர்மீதில்
உன்னியதுபாராபரத்தே யோடுறுப்போல்
ஓடியெங்கும்வாதபித்த சேத்மமெல்லாம்
கன்னியதுசாதகமாய் வருமேயாகில்
கதிப்பாகும்வாதபித்தம் பம்பரம்போல்
பின்னியதுவிட்டிலைப்போற் கற்றறிந்துவீழிற்
பேச்சில்லைமரணமென்று பிரித்துச்சொல்லே. 23

சொல்லப்பாவாய்வுக்கு மந்தத்துக்குந்
துணையாகவமர்ந்துமெத்தத் தளர்வாயோடும்
அல்லப்பாசீதளமுந் தூங்கியோடும்
அப்பனேசன்னிதான் புழுப்போலோடும்
நில்லப்பாவயிற்றுவலி கண்டபேர்க்கு
நேராகவுள்ளுறவாய் வாங்கியோடும்
நல்லப்பாகிராந்தியென்ற நோய்தனக்குங்
கரையுடைந்தவருவியைப்போற் காணுங்காணே. 24

கரணிதத்தில்வாதமென்றாற் சேத்மவாதம்
காணுமடாசூலையென்றாற் சென்மபித்தம்
விரணமுடன்புண்புரைக்கு வாதபித்தம்
விதியறியாப்பீனிசந்தான் பித்தசேத்மம்
தூரணமுடனீர்ப்பாடு கெர்ப்பப்பாடானாற்
சொல்லுகிறேனடியெல்லாஞ் சுழன்றுகாணுங்
கிரணமென்றபாம்புவிஷந் தாதுவெல்லாங்
கெதிகெட்டுக்காணுது கெற்பமாமே. 25

வாய்வுமந்த கெர்ப்பிணிக்கும் வியாதிநாடி.

கெர்ப்பிணிக்குவாதபித்தங் கலங்கிக்காணும்
கிராணியதிசாரமென்றாற் றளந்துக்காணும்
உற்பவித்தகபமீளை காசரோகம்
உற்றிடிலோசிலேத்துமந்தான் மீறிக்காணும்
பிற்பிடித்தவிஷநீருஞ் சோகைபாண்டும்
பிலமானல்மேகனைப்போல் மீட்டும்பாரு
பற்பிடித்தமேகமென்றால் பித்தமீறும்
பாலகனேகாங்கைகொண்டு நீராம்பாரே. 26

நீர்மேகமானவர்க்கு நாடிதானும்
நிரணயமாய்நாடியெல்லாம் பிலமேகெட்டுக்
கார்மேகம்போல்வந்த ஏரியின்மேலே
காண்டுவிழும்புழுப்போலே புரட்டிக்காணும்
சீர்மேகமானவர்க்கு நாடிதானுஞ்
சிறிநிற்குங்குருநாடி திறமாய்த்தானும்
பேர்மேகங்கடுத்திடுகில் வாதபித்தம்
பின்னியதுதுடித்துவரும் உற்றுப்பாரே. 27

உற்றதொருகெர்ப்பிணிக்குச் சேத்மவாதம்
உறுதியெனும்விக்கலுக்குச் சேத்மவாதம்
மற்றதொருசுரக்தனுக்கு வாதபித்தம்
வகையானகணக்காய்ச்சல் பித்தம்வாதம்
சித்தமுறுந்தலையிடிக்குப் பித்தமாகுஞ்
சீரானகயரோவந் தனக்குப்பித்தம்
குற்றமில்லையிதன் குணங்கள் மருந்தாற்றீரும்
குருவானபூரணத்தின் குறிதான்பாரே. 28

பரிபூரணநாடி முற்றியது.

ஆக செய்யுள்-16

இரத்தினச்சுருக்க ஐந்நூற்றில்

நாடிப்பரிக்ஷை.

பூரணமாய்நிறைந்தாளும் பறைதாள்போற்றிப்
புகலுகிறேன்வயித்தியரத் தினச்சுருக்கம்
வாரணமாமுகத்தோனைப் பணிந்துபோற்றி
வரிசையாய்ஐந்நூறு வகையாய்ச்சொன்னேன்
காரணமாய்செந்தூரம் பற்பம்லேகியம்
கலிக்கம்யெண்ணெய் மாத்திரையும்பிட்டுவேது
சூரணமும்தயிலம்ஒத்துச் சுரசம்பத்துத்
துகைமுறிச்சல் கிறலுடன்கியாழமையே. 1

மைசுடும்நசியமது கிருதம்வேது
மகாசேர்வை ஆக்கிருணம்சகலதாது
பையுடனேகுருநாடி தொகுப்புரோகம்
பரவசமாயந்நூற்றில் பார்க்கச்சொன்னேன்
பொய்யில்லாரத்தினமாங் கிரிகிடம்போல்
பொறுமையாய்ச்சொல்லிவிட்டேன் சிவனுக்கொப்பாய்
வையகத்தில்வயித்தியரே அறிந்துபார்த்து
மருந்துசெய்யரோகத்தின் வகுப்பைக்கேளே. 2

அகஸ்தியர் சுந்திரர்க்குச் சொன்னது.

கேளப்பாவியாதியுடன் தொகுப்புச்சொல்வேன்
கெடியாகச்சுந்தரா சொல்லக்கேளு
நாளப்பாகுறிகுணங்க ளறிவதற்கு
நயமாகசொல்லுகிறே னறிந்துத்தள்ளி
வாளப்பாமலமோடு நீர்ப்பரிட்சை
வகுப்பானபரிசமொடு நயனநாடி
காளப்பாஅறிவாலே சாத்தியங்கள்
பாங்கானவசாத்தியங்கள் பணிந்துபாரே. 3

4748-வியாதிக்கும் பெயர்.

பாரப்பாவாதமது எண்பத்திநாலு
பருக்கவேபித்தமது நாற்பத்தெட்டு
தாரப்பாசேற்றிமங்கள் தொண்ணூற்றாறு
தனுர்வாய்வுமுன்னூறு சயமேழேழு

வேரப்பாபெருவயறு எட்டதாகும்
வெகுசூலையிருநூறு பாண்டுபத்து
நாரப்பாநேத்திரநோய் தொண்ணூற்ருறு
நறுசிலந்தியறுபதுவும் குன்மமெட்டே. 4

இதுவுமது.

எட்டப்பாசன்னிவகை எழுபத்தாறு
எழிவையுடன்பொருகழலை தொண்ணூற்மைஞ்சி
மட்டப்பாசுரமதுவே எண்பத்தைஞ்சி
மகோதரமோயேழுக்கும் சிரசில்வீக்கம்
முட்டப்பாஅஞ்சிக்கும் உடம்பில்வீக்கம்
முதிரவேபதினுறு பிளவைபத்து
குட்டப்பாபடுவனது பதினென்ருகும்
குமிளிநோய்எழுக்கும் பீலியெட்டே. 5

இதுவுமது.

பீலியுடன்உறுவசியம் அஞ்சதாகும்
பொரிகரப்பான்தொண்ணூறுகெண்டைபத்து
காலிநோய்குட்டமது இருபதாகும்
கதிர்வீச்சுமூன்ருகும் திட்டைஅஞ்சி
சேலிநோய்சோபமது பதினுறுக்கும்
சொல்விசுவுஆறுக்கும் மூர்ச்சைஎழு
வேலிநோய்ப்படுவதிலே நாற்பத்தாறு
வெகுமூலமொன்பதாம் கழல்நோய்பத்தே. 6

இதுவுமது.

பத்தானபீனிசங் கடிவிஷமெழுபத்தாறு
பிணிநாக்குப்பல்லுநோய் எழுபத்தாறு
கத்தாகுங்கிராணியது இருபத்தஞ்சி
கண்ணுடனேமாலையது இருபதாகும்
கொத்தாகும்அதிசாரம் இருபத்தைஞ்சி
கொள்கட்டிபனிரண்டு கிறுமிஆறு
முத்தாகுமுட்டுநோய் முப்பதுக்கும்
முதிர்ந்தநோய்இருபது சத்திஅஞ்சே. 7

இதுவுமது.

அஞ்சாகுங்கல்லடைப்பு எண்பதாகும்
அதிர்வாய்வுதொண்ணூறு திமிர்கோய்பத்து
மஞ்சாகும்விப்புருதி பதினெட்டுக்கும்
வளர்மேகம்இருபத்தோர் நீரோவைந்து
பஞ்சாகும்விஷபாகம் பதினுறுக்கும்
பகர்காதுநோய்பத்து விக்கல்பத்து
துஞ்சாகும்அரோசியங்கள் அஞ்சதாகும்
சொல்மூக்குநோய்பத்து உலகத்தாரே. 8

இதுவுமது.

குத்தாருங்கடிதோஷம் ஐந்நூறுக்கும்
குறிகாயங்குத்துவெட்டு எழுநூறுக்கும்
பத்தாகுங்கிரந்தியுமே நாற்பத்தெட்டு
பறக்கின்றபொறிவிஷமோ எண்ணூறுக்கும்
முத்தாகும்காள்கிட்டும் பிறநீர்கோர்வை
மூதிரவேஇருநூறு துடிநோய் நூறு
கொத்தாகும்பிள்ளைநோய் நூறதாகும்
கூறினேன்வியாதியுட விபரந்தானே. 9

லோகத்தில் மரணமறிவது.

கூறினேன்வைத்தியனை அழைக்குமுன்னே
கொல்லதுஎழுநூறு வயித்தியன்கையில்
மாறிணும்நோய்கள்தெரி யாமல்பார்த்து
வகையாகச்சாகிலது எண்ணூறுக்கும்
தேறியேவலநூலும் பார்த்தபேர்க்கு
செயமாகும்யிருபத்து வைந்துநூறு
பேறியதுநானூற்று நாற்பத்தெட்டுப்
பெருவயதுஉள்ளமட்டும் பேர்ந்திடாதே. 10

வயித்தியருடைய கிரமம்.

பேந்திடாதென்றுசொன்ன சுந்திராகேள்
பெரும்பாவஞ்செய்தகுற்ற முறைமையாலே
சேந்திடாப்பாவத்தை நிவர்த்திசெய்தால்
தீருமேஅபமிருத்துச் செயிக்கலாகும்

வந்திடாதுமையவட்கு உருத்திரற்கும்
வயிரவற்கும்பூசைசெய்து அவிழ்தமீய்ந்தால்
எந்திடாதுனைப்போலே வயித்தியர்களுண்டோ
யியலாகஉமையவட்கு சிவன்சொல்கேளே. 11

வியாதித்தொகுப்பு.

கேளடாஉமையவட்கு அரனார்சொல்ல
கெடியானஉமையவள்தான் முருகவேட்கு
நாளடாநாற்பத்து நாலுநூறு
நயமுடனேநாற்பத்து எட்டுரோகம்
கேளடாமுருகவேளெனக்குச்சொன்னார்
குணமாகவயித்தியர்க்கு கூறினேன்யான்
வாளடாபெருநூலைச் சுருக்கியானும்
வகையாகஐந்நூறு தொகையாய்ச்சொன்னேன். 12

கெற்பமழிதல்.

சொல்லுகிறேன் குறிகுணங்களாதியாக
துருசாகநாதவிந்து சேரும்போது
வெல்லுகிறேன்விதிவசத்தால் கர்மத்தாலே
விசைம்புழுவால்கிருமியால் மூலத்தாலும்
மல்லுகிறேன்கிரந்தியால் கற்பமானது
மதிபோகவெட்டைபா லழிந்துகெற்பம்
வல்லுகிறேன்பிதுகளுக்குத் தப்பியேதான்
வந்தபிள்ளைதனக்குமினி வகைசொல்வேனே. 13

பிறந்தபிள்ளை வியாதியால் இறக்கிறகுறி.

வகைசொல்வேன்கணமொன்று கறப்பானென்றும்
மாந்தமென்றும்பேராம்பல் யிசிநோயென்றும்
துகைசொல்வேனினிதப்பி வாதபித்தம்
சொல்லையமிதினாலே வியாதிமெத்த
நகைசொல்வேன்குருநாடி வலுமைமெத்த
நயமாகப்பெருநூலி லொளித்துவைத்த
பகைசொல்வேன்ஐந்நூற்றில் வெளியாய்ச்சொல்லி
பார்ப்பதற்குதூதனுடன் பனச்சைசொல்வேன். 14

கர்மங்கள் செய்தவர்கள்.

சொல்லுவேன்கறுப்புடனே பழுதுரோகம்
சொல்குருடன்காதுமந்தம் பூனைக்கண்ணன்
வெல்லுவேன்ரோமங்கள் சிவந்தபேர்கள்
மெய்நடுக்கில்துடிகயர்கள் வெடிச்சசொற்கள்
பல்லுமேபழுதாகுங் கண்சிமிட்டல்
பறந்தசொல்இவர்களையும் பார்த்தபோது
கொல்லுமேயவர்களைதான் கண்டாயானால்
கும்பமுனிசொல்வசனங் குறிப்பைக்கேளே. 15

சயனமரணக்குறி வேறு.

கேளேமுன்னேது தன்வந்து கிளரும்வார்த்தைதநீக்கலுமே
சூளேபித்தமேலேறிச் சொல்லும்வார்த்தைப்பலவிதமாய்
வாளேபறந்துமறந்தழைக்கல் வகையாய்ச்சொரியில்நிலங்கீறல்
சாளேசாவான்யிவர்சொல்லில் சடிதிபோகாதிருந்திடீரே. 16

தொடு மரணக்குறி.

இருந்தீர்முகத்தில்கையைவைத்தால் யேறும்பிணிகள்தீராது
வருந்திமார்பில்கையைவைத்தால் வாங்கும்பிணிகள்மாலறிய
பொருந்திக்கைகால்தோள்தொட்டால்போகும்பிணிகள்தீர்ந்திடுமே
பருந்திக்கேளுஞ்சுந்தரனே பாங்காயரைந்தேன்புவியறிய. 17

சொல்வசனத்தில் சாத்தியமசாத்திய மறிதல்.

கணக்குக்குறி.

சொல்லும்வசனமுதலெழுத்தை சூட்சமாகவேதுதித்து [டி
இல்லியிருக்கும்வியாதிகொண்டான் யிவன்பேரெழுத்தையுமேகூட்
கல்லியிருபத்தேழையுமே நாளும்பக்கத்துடன்கூட்டி
வல்லதுகையேழில்பெருக்கி வகையாயெட்டில்கழிப்பீரே. 18

இதுவுமது.

நின்றவிலக்கந்தனைக்கண்டு நோயுஞ்செபமும்ஒன்றுபிணி
மண்டில்தீராரெண்டுதின்மை வளருமூன்றுநாள்செல்லும்
என்றேநாலுவினையேறூர் யியல்பாலைந்துமரணமாம்
கொண்டேயாறுவெகுபிணியாம் குறையுமேழுந்தீர்ந்திடுமே. 19

திசைகுறி அறிந்து வேறு.

நாற்பெருந்திசைகள்நாடி கோணுமேநான்குமெண்ணும்
நாற்பெருந்திசையில்வந்து வினவினகருமம்நன்றும்

நாற்பெருந்திசையைவிட்டு கோணமேனான்குமாகில்
முன்னமேஆணுய்வந்து வொழிந்தபின்பெண்ணுய்வந்தால். 20

வைத்தியரை அழைக்கிற சகுணம்.

முன்னமேஆணுய்வந்து வொழிந்தபின்பெண்ணுய்வந்தால்
முன்னமேகருமம்தீதாம் பின்புநன்ருகுமென்ன
முன்னமேபெண்ணுய்வந்தால் முயன்றனுஆணுய்வந்தால்
சொன்னவைமுன்புநன்ருய் சூதிடுகொடுமாமே. 21

வழிசகுணம் மரணம்குறி அறிவது.

தண்டுகுடுவைபிடித்தாலும் தன்கையறுகண்டாலும்
முண்டமோடிமூக்கிலையன் மிகவுங்குருடன்விரலிலையன்
கொண்டவிறகுகட்டுலுப்பைக் கொள்ளிக்கையில்கொடியிட்டும்
மிண்டுமிவரைக்கண்டாக்கால் மிகவேமரணமியம்பீரே. 22

வழிசகுணம் பார்த்தல்.

தலைவிரிமொட்டைசட்டை தவசிசந்நாசிபார்ப்பான்
மூளையினில்வெறிவகும்பல் மூக்கறைவிறகுநட்டு
தலையிலாச்செக்கான்தட்டான் கதிரொற்றைப்பார்ப்பான்சேவை
எலையினிலிவரைகண்டா லேந்திழைக்கருமந்தீதே. 23

கன்னியர்தாசிவேசி கடிமணல்ரெட்டைப்பார்ப்பான்
மன்னியமுரசுசங்கு மங்கில்யசமூத்தியோடு
தன்னியநெய்பால்செற்ருேர் தோன்றியேயெதிரேகண்டால்
வன்னியவசனம்நன்று மகிழ்ந்தவர்முனிவர்சொன்னர். 54

பட்சி சகுணம்.

சொன்னதோர்நாரைக்காகம் பொத்துடன்வலமேயாகில்
இன்னமேகருமம்நன்ரு மியல்பெறக்காடைவல
முன்னமேகெருடன்கோழி முதுகுடனிடமேநன்ரும்
வன்னமாம்முனிவன்சொன்ன வைத்தியமார்க்கமாமே. 25

வாதம்குறிப்பு வேறு.

மார்க்கமடாவப்படியே யோடுமோகில்
மயிலினுடகால்போலே சாட்சியாகும்
மூர்க்கமுள்ளகுணங்கேளு நடக்கும்போது
முழங்காலும்பிடரியெல்லாம் கடுப்புக்காணும்

மார்க்கையிலேமேகத்தைச் சுத்திவிட்டு
பாங்கானசீரொழுகி விதனமாகி
நாக்கெல்லாம்வரண்டுவிடும் தாகமெத்த
வயிற்றெரிவும்சாந்தலுண்டாம் வரிசைபாரே. 26

பித்தம் 1 வாதம் கால் குறிப்பு.

சாந்தலுண்டாம்பித்தமொன்று வாதங்காலாய்
கதித்தெழுந்தநாடியடா அட்டைபோல்குண்ணும்
வாந்தியுண்டாமந்திக்கு வயரெரிப்பு
வளமாகசுரங்காணும் கண்ணுங்காந்தும்
ஊர்ந்துவிடும்பாண்டாகு மாசனத்தில்
உற்றதோர்மூலமாம் புண்ணுமாகும்
தீர்ந்துவிடும்அனுபானம் அறிந்துபோடு
திசைக்கொன்றாய்ஓடிவிடும் தெளிவுதானே. 27

தெளிவானபித்தமே தெளிந்துதானே
செவியடைக்கும்கண்ணொளியைத் திகைத்துக்காட்டும்
ஒளியாதேஉடல்வெறுப்பும் உயிரும்போகும்
ஒருவருடன்பேசாது பிச்சுபோலாம்
நளியாதுமேனியெங்கும் நடுக்சுல்காணும்
நாடாறுநீர்பாய்ச்சல் நவின்றேயோடும்
அளியாகுமிதுகண்டால் மருந்தியவேண்டாம்
ஆச்சரியசுரமென்றே அறிந்துபாரே. 28

வாதம் தனிக்குறி.

அறிந்துபார்வாதமே தணிந்துதானாற்
அன்னம்போல்நடக்குமப்பா நாடிபாரு
சரிந்திடவேகால்முடக்கும் போதுக்காட்டும்
தரியாதுஅன்னத்தை யுண்ணொட்டாது
எரியாதுதாகமுண்டாஞ் சந்நியாகும்
ஈயாதுசிவன்பற்பம் அஞ்சவேண்டாம்
குறியாகநாளெட்டில் குணமுமாகும்
கூகூவென்றலையாதே குறித்துப்பாரே. 29

வாதம் முக்கால் பித்தம் அரை சிலேத்துமம் கால் குறிப்பு.

பாரடாவாதமுக்கால் பித்தம்பாதி
பரிவாகசிலேத்துமத்தில் கால்தான்கூடில்

மார்படாபாம்பதுபோல் புணைந்துவீழும்
வகையறியவதினுடைய குணத்தைக்கேளு
வேருகும்வியாதியெல்லாம் வெவ்வேருகும்
மேற்குமதுசீதமுண்டாய் மேகமாகும்
தேருதுஉடல்தடிக்கும் கால்வெடிக்கும்
தெரிந்துகொண்டுஅனுபானம் செய்துக்கொள்ளே. 30

பித்தம் அரை சிலேத்துமம் அரை வாதம் கால்

செய்யடாபித்தத்தில் பாதியாகில்
சிலேற்றுமத்தில்சரிபாதி வாதங்காலாம்
உய்யடாநாடிதான் சுருண்டுவிம்மும்
உரைக்கின்றேன்உலகிலுள்ளோர் அறிந்துகொள்வீர்
பையவேவாய்காந்தும் வாய்நீறாறும்
பசிவாகக்கண்ணுழட்டும் யிரும்மல்காணும்
கையடாகால்களெல்லாம் வெடிப்புகாணும்
கருங்குட்டம்புகுமடா கண்ணுஞ்சாவே. 31

வாதம் 1 சிலேத்துமம் 1 பித்தம் 1 குறிப்பு.

சாவில்லைசாகாத நாடிகேளு
தனியானவாதமொன்று சீதமொன்று
சாவில்லைபித்தமப்பா அதுவுமொன்ருய்
சடுதியிலேகாட்டாது கூடினுக்கால்
சாவில்லைசாகாம லிருக்கலாகும்
சாத்தியத்தில்குணங்களப்பா யிதுகளெல்லாம்
சாவில்லைநோயில்லை வறுமையில்லை
சடுதியிலேமுடிவிலே யடங்குவாரே. 32

சிலேத்துமம் 1 பித்தம் கால் வாதம் கால்.

அடங்குகின்றசிலேட்டுமந்தா னென்றேயாகில்
அப்பனேபித்தமடா காலுமானல்
திடம்பெறவேயதினுடைய குணத்தைக்கேளு
செவியடைக்குமிரும்பலுண்டாஞ் சிரசுவேர்க்கும்
வடம்பெறவேவிழிமூக்குஞ் சலந்தானூறும்
வருக்கவொருமயக்கமுண்டா மூடனேதீரும்
விடங்குணங்கள்கண்டாக்கா லவிழ்தம்வேண்டாம்
விபரமாய்ச்சொல்லிவிட்டேன் விரும்புவீரே. 33

வாதம் கால் பித்தம் 1.

விரும்புவாய்வாய்வுசெய்யுங் கூத்தைக்கேளு
வேறேயொருகூத்துமில்லை விபரஞ்சொல்வேன்
உரும்புடனேவாதமப்பா காலுமாகில்
உற்றதொருபித்தமே கதிப்புமானல்
திரும்பியேவாய்வப்பா நிற்குங்கூற்று
தீயிலேபாய்ந்துவிடுந் திறமாய்ச்சொன்னேன்
மரும்பியே திறந்துவிட்டேன் வெளியதாக
மானிடவரறியாமல் தூஷிப்பார்கள்
மிரும்பியேவாதமடா கதிப்பதானல்
மேன்மையுள்ளவாய்வப்பா அம்புவியிலேபாயும்
தெரும்பியேபிரித்துவிட்டேன் சித்தனனல்
சிவசூக்ஷமறிந்துகொண்டு தேருவானே. 34

தேருவாய்சிலேத்துமந்தான் கதிப்பதானல்
திறமாகபித்தமங்கே அறைதான்சேரில்
மாறுவாய்வாதமப்பா கால்தான்கூடில்
வளையாகவரசியுட பாய்ச்சல்கேளு
கூறுவேன் அப்புவுக்கும் விண்ணுக்குந்தான்
குதிக்குமப்பாவாசியிட நடனம்பாரு
காருநீசதாநித்தங் கண்டுபார்த்தால்
கைவாசலுக்குத்தடங் காணும்பாரே. 35

வாதம் 1 பித்தம் முக்கால் சிலேத்துமம் 1 அசாத்தியம்.

தடமானவாதத்தி லொன்றதாகில்
தனித்துநின்றபித்தமப்பா முக்கால்கூடில்
இடமானசிலேத்துமந்தா னென்றதானல்
எலியதுபோலோடுமெப்பா நாடிபாரு
விடமானவுந்திக்கு வுண்ணுக்குமேல்
மூச்சதாயிழுக்குமப்பா விதங்கள்சொன்னேன்
படமானநெஞ்சடைக்கும் சர்வாங்கநோவும்
பரிவாகச்சொல்லுகிறேன் பாருபாரே. 36

பாரப்பாகண்டநாள் மரணமாகும்
பரிதாகயில்லாவிட்டால் மூன்றிற்கொல்லும்
சோரமதில்தணித்துநின்றாய் புத்தியெல்லாஞ்
செயலாகமயங்கிவிடுங் கோபங்காணும்

காரடாகண்டக்கால் நாடிதானுங்
கழுவினிடதலைபோலே காட்டிகுண்ணும்
கூரடாவெட்டாநாள் கொல்லுங்கொல்லும்
குணமாயவொன்பதிலே கூடுபோமே. 37

பூதநாடி.

போகும்பாவாதமென்ற நாடியொன்றாய்
புகழாகதனித்துநின்றால் பூதநாடி
ஆகுமப்பா அரணைவால்போல் துடித்துக்காணும்
அகன்றுவிடும்வாய்வப்பா திரேகங்குத்தும்
தாகுமடாசுகஜன்னி மார்க்கமாகும்
தனவானும்நோக்கிநின்றால் சாகான்பாரும்
பாருமடாசிலேத்துமந்தான் சிதறித்தாக்கில்
பதையாமல்தானிருப்பான் பரிந்துகேளே. 38

கேளப்பாயிப்படியே கணித்துச்சொன்னேன்
கிருபையுள்ளமைந்தனென்று லறிந்துகொள்வான்
ஆரப்பாளனைப்போலே சொன்னார்சித்தர்
ஆருமில்லைசொல்லுகிறேன் சடுதிசொல்வேன்
வாளப்பாகாயசித்தி மாயசித்திகாண்பார்
வளமாகயென்னுடைய நூல்கண்டோர்கள்
தேளப்பாயென்மாய்கை வைடித்தெல்லாம்
தெளிந்துநின்றறிந்தவனே சித்தர்தானே. 39

இரத்தினகிரிகிடம் முற்றிற்று ஆக செய்யுள் 9.

திரட்டுநாடி.

ஓதுநாடித்துகையையகத்திலும்
வாதபித்தசிலேத்துமவண்மையும்
பேதமானவியாதியின்பேர்களும்
ஆதியானவருந்தவரோதினர். 1

அட்டதானக்குறிப்பு.

திருமறைமுனிவர்கூறு மவர்கடச்செய்கைதன்னில்
வரும்பலவியாதியான வகையறிகுவதேதென்னில்
உருவதுநாடியாலு மொண்முகமல்நீராலுங்
தெருவிழிநாவினாலுந் தேர்ந்தவங்கணத்தினாலும். 2

உரைத்திடுந்தானமெட்டி லுருகுறியுரைக்குங்காலே
வருத்தியநாடிசெய்கை யுடம்பினில்வகுக்கக்கேளாய்
யுரைத்தெழுவுந்திக்கீழே வோமெனும்பிரணவத்தில்
பருத்தகுண்டலியேமூல மாயெழுநாடிபத்தே. 3

தசவாய்வுகளின் பெயர்.

பத்தின்பேரிடையினோடு பின்கலைசுழிமுனைபார்க்கில்
அத்திசிங்குவைகாந்தாரி யலம்புனைபுருடனோடு
வைத்திடுகுகுதன்மைத்த சங்கினிவகுத்தநாடி
நெத்திலேயெழுபத்தீரா யிரம்நரம்பென் றுசெப்பே. 4

செப்பியயெழுபத்தீரா யிரம்நரம்புடலிற்சேர்தல
எப்படியெண்ணவேண்டா றெழுவுடல்விழுதுபோல
மைப்பெருங்குழலின்மானே வளர்சிரமடியீராக
எப்பொருநாடிகிற்கு மடவினையுணர்ந்துகொள்ளே. 5

உந்தியேமூலமாக வுய்யென் றுங்கீழுமேலும்
வந்திடும்நாடிதன்னை வுடம்பினில்வகுக்கக்கேளாய்
அந்தமாஞ்சென்னிமீதே மாயிரமாகுமுண்மை
பைந்தொடிசெயிலிரண்டிற் பத்துமுன் னூறதாமே. 6

நாடித்தொகை.

வருவிழியிரண்டில்நாலா யிரமதாமானேமூக்கில்
அருவிமூவாயிரத்து முன்னூற்றுமுப்பதாகும்
பொருவியவல்குல்கன்னம் பொருந்துமையாயிரந்தான்
முருவுருபிடரிக்கீழ்தோள் மேலுமாயிரமதன்றே. 7

கண்டத்தாயிரமதாகுங் கையின்மூவாயிரந்தான்
தொண்டைக்கீழாகத்தானே சுழிதொப்புள்மேலதாக
ஒண்டொடிகேளாயொன்ப தாயிரத்தொருபத்தாறும்
அண்டத்துள்முனிவர்கூறு மாயுருவேதமாமே. 8

குருகின்மொப்பிடரிக்கீழே கூரெண்ணாயிரமதாகும்
மருத்திருவிலாவிநாடி வளருமூவாயிரந்தான்
முருப்பிடைலிங்கம்யோனி அடிவயிறுதித்துநாடி
திருத்தவேல்விழியாளேழா யிரமதாமென் றுசெப்பே. 9

பேசியமூலநாடி பேருமூவாயிரந்தான்
காசினிமுலையாள்சந்தி யிரண்டாயிரநரம்புகாணும்

வீசியபாதந்தன்னில் விளம்புமாயிரத்தினோடு
ஓசைசேர் நூற்றென்பாரே யென்னவேயோதுநூலே. 10

மொய்குழன்மானேநாடி முச்சுடன்றவங்கள்கூறின்
வெய்தியகோசமுந்தி யிதையமோடின்னங்கேளாய்
பையறவல்குல்மூலம் பகர்பிடர்முடிச்சோடுச்சி
வைகுருமெழுபத்திரா யிரமதாய்வகுக்கலாமே. 11

இப்படியெழுபத்திரா யிரநரம்பெல்லைக்கண்டு
ஒப்பிடநாடிபார்க்கு மடவினையுரைக்கக்கேளாய்
வெப்புறுவாதபித்த சிலேத்துமமிக்கமூன்றுந்
தப்பிலாதறிந்துகொள்ளும் குறிகுணஞ்சாற்றுவோமே. 12

இயம்பியபுருடருக்கு வலக்கரநாடியேகை
வயங்கினமின்னார்தங்க ளிடக்கரமானேகேளாய்
நயம்பெறநெட்டிவாங்கி நல்குமங்குட்டமூலந்
தயங்கிடுபசைவைத்தள்ளிப் பார்ப்பதுநாடிதானே. 13

செந்திருவனையாய்கேளாய் சிலேத்துமவாதபித்தம்
வந்திடும்நாடிமூன்று மடவிலேவைத்தபோது
முந்தெர்ச்சனைசெய்வாபி மொழியந்தமத்திமையேதத்தம்
பைந்தொடியனையாய்சேஷ்ட மென்றுதான்பகரலாமே. 14

தந்திரமாகமூன்று தானமுமறிந்துகொண்டால்
முந்தியவாதநாடி குணந்தனைமொழியக்கேளாய்
கொந்துருகுயிலேயன்னங் கொக்குடன்மயிலைப்போல
உந்தியநாடிகண்டால் வாதமென்றுரைக்கலாமே. 15

தாக்கியபித்தநாடி தான்செயுங்குறிகுணங்கேள்
வீக்குவார்முலையாரட்டை யாமைபோல்நடக்குமென்க
ஆக்கமாஞ்சிலேற்பநாடி யறிந்திடுந்தவளைபாம்பு
போக்குறுநடையதாகு மெனமுனிபுகன்றவாறே. 16

வாள்விழிமானேரெண்டு வாதமும்தத்தமொன்று
கோளுறநடக்குவண்மை கொடுஞ்சினஞ்சிரமேற்கொண்டு
நாளுறநடப்போனாக நடுவிரற்றொடுத்ததொன்று
மூளுறபித்தம்ரெண்டுஞ் சிலேற்பமொன்றுரைக்கக்கேளே. 17

கடிவிழிமானேபிள்ளை கண்டழதொட்டில்போலே
நடுவிரலசையலாகும் நாடிசிலேற்பனமிரண்டு

மிடையுறுவாதமொன்று மெழும்பிடிற்பிணைபல்நாகங்
கடுகியேபுணர்ச்சிபோலே நடப்பதுகண்டுகொள்ளே. 18

கொள்ளுகவாதம்ரெண்டு மொன்றுசேற்பனமுங்கூடில்
வள்ளுறநடுவேவட்டைகண்ணுள ரரணைவால்முறிந்துவீழ்ந்து
துள்ளியேசுழற்றல்போலாஞ் சொர்வுறுபித்தம்ரெண்டு
மொள்ளியவாதமொன்றும் கூடிடிலுறைக்கக்கேளே. 19

துடியினையடித்தாப்போலே துடித்திடுஞ்சேஷ்பம்ரெண்டுங்
கடுகியபித்தமொன்றும் நடப்பதுகாணவேண்டி
வரவரவல்குல்மானே மஞ்ஞையாமென்னவோடும்
மடவியேயறிந்துகொள்ளு மாயுருவேதமாமே. 20

வேதமேவுரைத்தவுண்மை வாதத்தின்வீடுதொப்புள்
ஓதுபித்தத்தின்வீடு கண்டத்தாஞ்சிலேத்துமத்துக்
காதியாயிதையமூச்சி வாகுமீயிதன்னந்தானே
தீதிலாமுன்னோர்பேசும் வாகடச்செய்கைதானே. 21

மேவியவாதஞ்செய்யுங் குணந்தனைவிரும்பக்கேளாய்
தாவியவயிறுமந்தஞ் சந்துகால்பொருந்துநோவாஞ்
சேவியதாதுநாசஞ் சிறுத்துடன்சிறுநீர்வீழும்
காவியங்கண்ணினளே மலமதுகரிகிக்காணும். 22

ஏவலாய்குழலாய்தத்தம் செய்குணம்விளம்பக்கேளாய்
கோலவேல்விழிசிவந்து குளிர்ந்திடிலிருக்குமல்லால்
சீலநீர்கடுத்துநொந்து சுறுக்கெனச்சிவந்துவீழும்
ஞாலமேகிறுகிறென்று நாவுலர்ந்திருக்குங்காணே. 23

சேத்துமஞ்செய்குணங்கேள் சில்லெனவுடம்புவேற்கும்
ஏத்தமாய்விஷநீரூறி சுழித்துநாவழுவழுக்கும்
நாத்தநீர்மாய்ந்துவீழும் நலம்பெறவெளுக்குமேனி
தோத்துமுக்குணங்கள்கண்டால் சிலேற்பனத்தொகுதியாமே. 24

முந்தியவாதம்ரெண்டும் பித்தமொன்றெழுந்ததாகில்
வந்துதான்வயிறுவிம்மும் வலித்திடுதாகமோகஞ்
சிந்தனைமிகவுண்டாக்கும் பொசிப்பையும்பிரியதாக்கும்
பைந்தொடிவாதபித்த மென்றுதான்பகாலாமே. 25

ஏய்ந்ததோர்பித்தம்ரெண்டும் சிலேற்பமொன்றெழுந்ததாகில்
ஆய்ந்ததோர்பசியுமில்லை யடிக்கடிவயிறுவிம்முந்

தோய்ந்ததோர்நயனனீருஞ் சுத்தமாய்மஞ்சள்போலாம்
பேய்ந்ததோர்பித்தமாகில் பித்தசிலேற்பனமதாமே. 26

செப்பியசிலேற்பம்ரெண்டும் வாதமொன்றெழுந்ததாகில்
வெப்புறுங்கபமேலிட்டு யினிப்பையேமிகவும்வேண்டுந்
தப்பிலாப்பசியுமுண்டு வேனமேபற்றிநிற்கும்
இப்படிகுணங்கள்கண்டால் சிலேத்துமவாதமென்னே. 27

எண்ணியவாதம்ரெண்டும் பித்தமொன்றெழுந்ததாகில்
புண்ணெனவுடம்புநோவாம் புகையெனயெரியும்நெஞ்சு
திண்ணமாய்நாவரண்டு சிவந்துநீர்கடுத்துவீழும்
அண்ணலார்வுரைத்தவுண்மை யாயுருவேதமாமே. 28

தூங்கியேசிலேற்பம்ரெண்டும் பித்தமொன்றெழுந்ததாகில்
ஓங்கியசன்னியுண்டாம் உச்சிநோஞ்செவியுங்கேளாப்
பாங்குடநாவினித்துப் பத்தியஞ்செரியாதாகும்
பூங்கொடியணையாய்பித்த சிலேற்பனம்புகலுங்காலே. 29

மானநேய்வாதம்ரெண்டுஞ் சிலேற்பமொன்றெழுந்ததாகில்
ஆனதோர்சரீரநாவு மங்கைகால்திமிர்த்துக்காட்டும்
மூனமாம்வமுர்த்துள்ளே யூத்தையுமிகுந்துவிம்மும்
பாலனங்கண்ணுள்வாத சிலேற்பனம்பரிந்துகாணே. 30

பார்த்திடில்வாதபித்தம் பரிந்தசிலேற்பனங்கள்மூன்றுந்
தோத்திடுமரணைவால்போல் துடித்திடுவசவுகோவாம்
வேத்துடல்பட்டுதானே மெய்யெலாங்குளிர்ந்ததாகில்
சோத்தொடிவலக்கைநல்லாய் மரணமாங்குறியிதானே. 31

மேவியவகங்கையானே மிக்கதோராக்கைநாவும்
ஆவலாய்மனிதர்தம்பா லவன்புகழ்பேசிநேற்கும்
பூவையேபெருமூச்செய்தும் போனகந்தேடுமென்றும்
காவியங்கண்ணினுளே மரணமாங்காலந்தானே. 32

எடுபிடியென்றுவீழு மெழுவுடல்மயங்கிக்காட்டும்
படைபுருமூக்கில்நீறும் பொசிந்துளிவேர்வையுண்டாம்
வடுவிழிசிவப்பதாகும் வாங்கிடுவிலாவிரண்டும்
கடுருமிக்குணங்கள்கண்டால் மரணமாங்காலந்தானே. 33

கொண்டிடுமவத்தைகேளாய் கூர்விழிமூக்குங்காதுந்
திண்டிாலுக்திமார்பு செய்யுந்தான்குளிர்ந்துகாணில்

மண்டையிலனல்போல்காந்தி மயக்கமுங்கபமுங்காணில்
அண்டருமறியச்சொன்னே மரணமாங்காலந்தானே. 34

இயம்பியவிலாவிரண்டும் மூச்சதுவெடித்துக்காட்டித்
தயங்கியதொண்டைக்குள்ளே சலதிபோற்றிரையுங்கண்டு
வயங்கினமின்னேகண்ணில் மாற்றருநீருமோடில்
தியங்கிடவேண்டாமின்னஞ் செய்குணமரணமாமே. 35

உண்மையாய்வாதபித்த நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாய்சிலேற்பனந்தான் வளர்ந்ததுதுடியேபோலாய்
திண்மையாயுடல்வெளுத்து மார்பதுகுளிர்ந்துதோன்றில்
அண்ணலரான்றேசாக்ஷி கடிகைதொண்ணூறதாமே. 36

மேதினியுள்ளோர்க்கெல்லாம் மெய்யுடனுரைக்கலுற்றேன்
மூதியவழலைதாக முலர்ந்துநாவரண்டுகாணுந்
தீதுறுசிலேற்பநாடி சேர்ந்திடுமெழுந்துவீழும்
ஆதியானுரைத்தவுண்மை யடுத்தநாளிரண்டிற்சாவே. 37

வெய்யதோர்பித்தம்நீங்கி வாயுவுமிகுந்துகாட்டில்
ஐயமேலிட்டுகண்ட மடைத்திடுமசைவைநோவாம்
துய்யசெய்விழியுந்தாழ்ந்து சொரியுநீரிடமேசுத்தும்
ஐயனுருரைத்தவுண்மை யஞ்சுனனளவிற்சாவே. 38

சாக்கிரவவத்தைதானும் பிணவெடிசார்ந்துநூறும்
மேக்குறுஞ்சிலேற்பனந்தான் யெழும்பிடுமூச்சிவீழும்
நோக்குறுஞ்சூழ்த்திதானே நுவன்றிடும்பலபேச்சாக
தாக்கியதுரியந்தானே தப்பிதான்மயங்குஞ்சீவன். 39

சாவுருமுதலவத்தை தர்க்கங்கள்பேசும்ரெண்டில்
மேவிடவடப்புநூறு மிக்கமூன்றுமவத்தை
பாவகத்தெளிவுநீங்கிப் பத்தும்நாலாமவத்தை
வாவலாய்வெற்றிபேசி யசாத்தியசீதமாமே. 40

சீதமஞ்சாமவத்தை தெளிவுறமுகபொர்க்கும்
மோதரமாறுமவத்தை யுடலதுகுளிர்ந்துகாட்டும்
பேதமேழாமவத்தை போதித்துப்பொசிப்புவேண்டும்
மந்தியானுரைத்தவெட்டி காண்பஞ்சாமவத்தையென்பான். 41

தீதிலாதுடல்வெளுக்கும் சீதமாந்தீதாம்பற்றில்
வோதியவாயுள்வேதத் துரைவிதிப்படியேமுன்னோர்

பேதமாய்ப்புகலும்நீதி பெருமையையறிந்துகொண்டு
ஓதுவர்கடத்தினோர்க்கு முறையிதென்றோது நூலே. 42

முன்னோருரைத்தார்மானிடர்க்கு மொழிந்தவயது நூறென்றே
இன்னமூன் றுபங்காக வியம்புமிளமைசிலேற்பனமே
வன்னநடுவிற்பித்தமதா மப்பால்வாதமதுவாகும்
பொன்னேயிந்தகாலத்தில் மற்றரோகம்பொல்லாதே. 43

வாதபித்த சிலேற்பவேளை நிதானம்.

உதயத்தில்வாதம்பத்தா முச்சியில்பித்தம்பத்தாம்
பதனியில்சாயங்காலம் பத்துமேசேத்துமமாகும்
விதிபெருரோகிக்கேள்கை வியாதிகண்டுடையோர்கண்டு
மதியுடவயித்தியர்க்கே யுரைத்தவர்கடங்கடாமே. 44

வாதமேதளிப்புவேண்டும் வன்பித்தங்கசப்புவேண்டும்
தீதிலாசிலேற்பனந்தான் சேர்ந்திடுமினிப்புவேண்டும்
மோதியவாதபித்த சிலேற்பனதொந்தத்தோர்க்கே
காதலாய்த்துவர்த்தல்கார லுவர்ப்பொடுகருதுங்காணே. 45

வேறு.

வாதரோகிமனிதர்கள்மாமுகம்
மோதினேங்கறுப்பாயிடுமுண்மையே
வேதநீதிவிளம்பியபித்தத்தோர்
கேதுவாய்முகமஞ்சளுமெய்துமே. 46

எய்துசேத்துமமெழுந்தவர்மாமுகம்
மெய்யதாகக்கரிகிவெளுத்திடும்
வையனுருரைசெய்தவரும்பொருள்
செய்திமானவைத்தியசிரேட்டரே. 47

மலக்குறி.

மேவுவாதமுடையவர்மெய்மலம்
சிவிதாகக்கருத்திடுஞ்செம்மியே
பாவையேபித்தத்தோர்மலம்பார்த்திடில்
ஆவியேயெழுமன்னிறமஞ்சளே. 48

மன்னுஞ்சேத்பனத்தாராமல்வீழ்குறி
வின்னல்தீரவிழும்வெளுப்பொங்கியே

சொன்னக்குணமன்றிமுத்தொந்தத்தே
நின்னில்மூன்றுநிறமலமெய்துமே. 49

நீர்க்குணக் குறி.

ஓங்கியவாதத்தோற்கு நீர்விழுங்குணமுரைக்கிற்
பூங்கொடிகடுத்துநொந்து சிறுத்துடன்பொருமிவீழும்
பாங்குடன்பித்தத்தேற்கும் பசியநீர்சிவந்துகாட்டி
ஏங்கவேசுருக்கதாக யெரித்துடன்கடுத்துவீழும். 50

வீழுமேசிலேற்பனத்தோர் நீர்க்குணம்விளம்பக்கேளாய்
நாளுமேவெளுத்துறைந்து நலம்பெறவீழுங்கண்டாய்
வாள்விழிமானேதொந்த ரோகமானிடற்குத்தானே
தாளுநீர்பலநிறந்தா னென்னவேசாற்றினேமே. 51

கண்ணின் குறி.

வாதத்தோர்விழிகறுத்து வன்றிமைவாழ்ந்திருக்கும்
தீதுத்தபித்தத்தோற்கு சேல்விழிமஞ்சளிக்கும்
கோதுத்தசிலேற்பத்தோற்கு கூர்விழிவெளுத்திருக்கும்
மீதுத்ததொந்தத்தோற்கு விருபலநிறமதென்னே. 52

நாவுக் குறி.

ஊத்தவமிகுர்தவாவ நாவுயரம்போலுமுன்னதாம்
நாத்தமீரும்பித்தத்தோர் நாவுஈசர்துமஞ்சளிக்கும்
கோதல்சேஷ்மரோகிக்கும் குணங்கேள்நாவுவெளுப்பாகி
வோதவரிதாய்வழுவழுத்து நோய்தாயிருக்குமென்றுவலே. 53

தேகக் குறி.

சேரும்வாதரோகிகுணந் தேனேசீதமிகுக்திருக்கும்
பாரும்தத்தத்திரோகமதை பாற்கில்சிவச்சென்றேயிருக்கும்
கூறுஞ்சேற்பசடம்வேர்வை கொண்டேயிருக்குமிக்குணங்கள்
சேருந்தொந்தரோகடஞ் செப்புங்குணத்திலாழ்வீரே. 54

தந்தக் குறி.

விளம்பியவாதரோகித் தந்தமேவெளுத்திருக்கும்
பளம்படும்பித்தரோகி பல்லுமஞ்சளித்திருக்கும்
மூளங்கொளசிலேற்பன்றோகிப் பதிவெளுப்பாகுமுண்மை
தெளங்கிடாதொந்தரோகிக் கிதுவகைதொகுத்துச்சொல்லே. 55

திரட்டுநாடி முற்றியது ஆக செய்யுள் 152

குணவாகடத்தின் வைத்தியசாரம்.

கணபதி தோத்திரம்.

சொற்பவைத்தியசார சுருக்கமுப்பத்தாறும்
அல்லும்பகலு மறிவுணர - நல்ல
குணபதியாம்பூரணத்திற் கூடியேவாழுங்
கணபதியின்பாதமலர் காப்பு.

மருந்து கொடுக்கக்கூடாத பேர்கள்.

அன்னியதாரத் தாசைகொள்வான் வஞ்சனன கைஞ்சாகள்ளு வொட்பினுண்போன் றீமை துன்னிய சூனிபக்காரன் சண்டைக்காரன், முரும்புகிள்ளியிருந்துண்பான் றிருடன் துஷ்டன் - குன்னிய நித்திரைமிகுந்தோன் கொடாதலோபி, குணமில்லான்மதியில்லான் மானமில்லான், பன்னியபண்டிதர் பகைஞன்செவிட னூமை - யாசு மறியானைப் பார்க்கொண்ணுதே.

முன்னே பணம் வாங்கிக்கொண்டு பின்னே வைத்தியஞ் செய்யவும்.

கைச்சளிக்கையொப்புக் களவின்கூலி-கபடலோமுலைமாதர்வேசி கூலி, மெய்க்கூலிகண்கூலி வித்தைக்கூலி - வியாபாரக்கூலி மிக வுடையான்கூலி, ஒப்பரியபிணிதீர்க்குமொருவன்கூலி-யோதுவிக்கு முபாத்தியாயன் றன்கூலி, அப்போதைக்கப்போதே வாங்காராகில் ஆர்பெறுவா ரார்தருவா ரவனிமீதே.

துஷ்டர்களுக்கிம்மூன் றுஞ் சொல்லக்கூடாது.

மந்திரமும்வாகடமும்பழைய நூலும் வருவிக்கும்பெரியோரே வளமைகேளீர், தந்திரமர்ய்க்காய்ந்தமுக மூகிபற்றுடிதன் மெய்து போற்றொடர்ந்து தரிப்பாராகில், சுந்தரமாம்புகழுடைய குலமாணு லுந் துஷ்டர்களுக்கிம்மூன் றுஞ் சொன்னுராகில், அந்தரமா யெழு நரகிலமுழ்ந்திப்பின்னு மறிவிலாச்சண்டாள ராவார்பாரே.

இந்நான்குவகைகளும் அறியாமல் வைத்தியஞ் செய்பவர்களுக்கு நரகம் வரும்.

பார்க்கின் றசோதிட பிராயகாலம் பகரும் விபகாரமொடு பிராயச்சித்தம், எற்கும் வைத்தியம் இவைகள் நான்கும் வல்லோர் இதன்வழியேசிகச்சரொகைஷசெய்வாராகில் ஆர்க்குமேதோஷமில்லை

இவைகளையா யறியாதார் காஸ்திரவல்லவர்கள்போல, தீர்க்கமடி பிடியாகச் செய்வாராகில் சிவபிரமத்திலதை செய்வாரன்றே. 4

கண்கள் 3 தலைகள் 4 முகங்கள் 5 கைகள் 6 சரீரங்கள் கால்கள் 20 இந்த ஆறுவித குணங்களறியார் ரோகிகளைக் கொன்றதினால் நரகமடைவார்.

வாதுகுறிவைத்தியரே சொல்லக்கேளீர் வாகாககண்மூன்று தலைகள்நான்கு, நீதமுடன் முகங்களைந்துகைகளாறு நிலைசரீரங்களெட்டுக் கால்கள்பத்து, வீதம்இதன் பயனறிந்தார் வியாதிதீர்ப்பார் விதம்அறியார்மானிடரைப் பழியேசெய்வார், சேதமாஞ்செய் மருந்துபலித்திடாது செத்தபின்பு தீகரகிற் சேருவாரே. 5

கண் தலை கை சரீரம் கால் பிண்டநிலை விபரங்கள்.

மருந்துசுத்தி குணம்நிகண்டு கண்கள்மூன்றும் வாதபித்த சிலேட்டுமதொந்தந் தலைகள்நான்காம், அருந்தும்அறுசுவையறிதல் கைகளாறும் அஷ்டவிதிக்குறியறிதல் சரீரம்எட்டாம், இருந்த தசநாடி தசவாய்விரண்டும் இதமாகப்பார்த்திடிற் கால்கள்பத்தாம், பொருந்தியதோர் பிண்டநிலைமுகங்களைந்தாம் பொதிகைமலையகஸ்தியனார் புகன்றவாறே. 6

வாகடத்தின்பயனறியார் நாடிகாணார் வளர்கையைப் பிடித்திழுத்துவார்த்தைசொல்வார், ஆகடியமாகவே நல்லோர் தம்மை அசாத்தியநோயோரென்று அறைந்துபோவார், பேர்கிடக்கப்பேர் சொல்வார் வியாதிகட்கு பிணிதீர்ப்போ மென்றுசொல்வார் தீர்க்கமாட்டார், ஓகோகோ வைத்தியர்தாமென்றுசொல்வார்க் கொருக்காலும் மோட்சமில்லை நரகந்தானே. 7

அச்சமறவைத்தியரே நோயுள்ளோர்க்குஅசாத்தியமுமறிந்து நன்றாய், பட்சமறக்குறிகுண மெய்பரிக்ஷை பார்த்து பரிகாரமாய் மருந்துபகாராராகில், தச்சமறக்கிளைக்குலங்கள்வேரோடற்று தாணிதனில்வெகுபாவந் தலைமேற்கொண்டு, இச்சைபெறவெழுநரகி லழுந்திப்பின்னும் ஈடேற்றமில்லாம லிருப்பர்தானே. 8

தாணிதனி லவுஷதத்தின் சுத்திகண்டு தகமைபெறநோயாளின்சரீரம்பார்த்து,சுரநியாசன வகையுங்கண்டுபின்னுங்கைப்பரிக்ஷை மெய்ப்பரிக்ஷகருத்தும்நாடி, திரநிகரில்குருமுகமாய்ப் புத்தியாகித் தெளிந்தோர்கள்யோசனையும் செய்திகேட்டு, முறணினலிக்த வசைசெய்யாராகில் மூவேழுசுற்றமும்வே ரற்றுப்போமே. 9

கருத்துறவேவாதிமகன் வைத்தியஞ்செய்யில்கசடறவேநோயாளிகுருவேயெண்ணி, கருத்துறவே மருந்துக்குப்பத்தியேனுங்கைக்கண்டவைத்தியரையறிந்துநன்றாய், கருத்துறவே மனதுடனேயவரைக்காணுங் கழுதையைப்போ லிருந்தவர்க்குப் பலியாதென்றுங், கருத்துறவேயிவையறியச்சித்தர்தானுங் காட்டினாரவர்மனம்போல் நடந்துகொள்ளே. 10

நடந்துகொள்ளும்நோயாளி ராஜாவாக நாட்டினாலவர்க்கங்கே மருந்தூணுது, தொடர்ந்துமேயவரிடத்திற் பத்திவைத்தால் துரும்பாகப்போகுமடா நோய்களேது, அடர்ந்துபோயவர்வாசற் கார்த்தாராளுல் அக்கினியிற்பஞ்சதுபோல் நோய்கள்போகும், கடந்தனக்குநோய்வந்தால் குருவேயென்பார் சாத்திரியமாய்த்திரிந்தால் தம்பியாமே. 11

தம்பியென்பார் நோயெல்லாந் தீர்ந்தபின்பு தாய்தந்தைகுருவென்பார் திருமுன்னே, வெம்பியாதே ரோகங்கள் தீர்ந்தபின்பு வேணவுபசாரம் பின்னுகட்டென்பார், கும்பியே கொதித்துமிகவுள்ளம்வாடி குருவானவைத்தியர்தன் மனதுநொந்தால், சம்பியே முகம் வாடித்தான்வாளுர்கள் சாற்றினே னிவையறிந்து மருந்துவாங்கே. 12

வஞ்சமற்றுறென்ற பிணியாளர்தம்மை மகவதினும் பதின்மடங்கு மருந்துசெய்யில், நெஞ்சில் நோயாளியின் பிணிநிதானம் நிறுத்துமந்தவைத்தியற்கு நிதிகொடாமல், பஞ்சைமொழி பகரும் பாவியோரைப் பாழ்நரகிலழுத்தியெமன் பாசத்தாலே, அஞ்சயிழுத்தேயடித்துத் தள்வானென்று அகஸ்தியரும்முந்நூலி லருள் செய்தாரே. 13

பிண்ட வுற்பத்தி.

கேளப்பாமனமானவாயுவுகூடி கெடியானசித்தமாகாயம்பொங்கி, வேளப்பாஆங்காரசிங்காரமிஞ்சி மேவுதற்குப்பெண்மேலே மோகம்ஆகும், நாளப்பாஐந்துக்கும்பலமேதென்றுல் நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, தாளப்பாமனதோடே வியானன் கூடுந் தனியானநாதத்திலபானன்தானே. 14

தானென்றவிந்துதனிற் சமானங்கூடும் தனியான சித்தத்தில் வியானங்கூடும், தானென்றஆங்காரம்காச்சிப்போடேகலந்துநிற்கும் உதானனம்பாகண்டுகொள்ளு, வேனென்றபத்தும்ஒன்றாய்மனதுங்கூடி மேவியவன்கலந்துவந்து விழுகும்போது, மானென்றமௌனபாவசமேயாவன் மருவுகின்றபெண்ணுக்கும் முறைதான்கேளே.

கருதரிக்கும் விதம்.

முறையான பெண்ணுணும் மௌனமுற்றால் மோசம் இல்லை கருவங்கே தரிக்கும்பாரு, நிலையானவலத்தோடி லாணையாகும் நேராகயிடத்தோடிற் பெண்ணேயாகும், உறையான குப்பையில் சுக்கிலம்பாய வுத்தமனே சுரோணிதந்தா னுறைந்துக்கொள்ளும், கறையாகப்பாய்ந்தவெளி தமருபோலக் கழற்கொடிக்காய்ப்போற் றிரண்டு சிரசுமாமே. 16

ஆமப்பாசிரசோடே கையுங்காலும் அப்பனே தத்துவங்கள் நரம்புமூளை, ஓமப்பாஅஸ்திமுத லுரோமத்தோடு வுத்தமனேபதி னேரு வாசலுமேகாணும், காமப்பால் விழுந்தவழி சிரசினாலே கைமுறையாய்த்தாயுண்ட அன்னஞ்செல்லும், சேமப்பாகடுமையத் தொப்புளாலே சென்றதெலா மலமாகக்கழியுந்தானே. 17

தானென்றாற்பதினென்றாற் சடந்தான்முன்னே சாதமாயெடுத்துவரும்மலமெவ்வாறு, கூனென்றப்பெண்ணுக்கு மனதுவேறாய் உருக்கமுற்றுமௌனம் உண்ணாப்பாவத்தாலே, தானென்றமலடாவள் விருஷனிக்கும் கைமுறையாயிப்படிதான் கண்டுகொள்ளு, தேனென்றமொழியாட்கு பாணர்சொன்னார் ஜெகமெல்லாம் இப்படிதான் ஜெனித்தவாறே. 18

தசவாய்வுகளின் பெயர் பிராணவாயு விருப்பிடம்.

பிலத்துநிற்கும் பிராணனோடபானனெனும் வியானன் பிரியா விதானஞ்சமானனொடுகூர்மன், தலத்துகின்றநாகனெருற்கிருகரன் றானாகும் நற்றேவதத்தனொடு தனஞ்செயன்பத்தாகும், இலக்க முடன்பிராண நிலை மூலமதிற்றோன்றி யெழுத்து சிரசளவுமுட்டி யிருவிழியின்கீழாய், கலக்கமறநாசிவழியோடும்சுராறிற்கடுகியெட்டு வுட்புகுந்துக்கழியும் ஓர்நான்கே. 19

அபானன் வியானன் உதானள் சமானவாயுகள்.

உந்தியெனுந்தலத்தின் கீழபானன்நின்று உறுமிமலசலங்களை யுங் கழலச்செய்யும், விந்தையெழில் வியானன்தோ ளதனில்நின்று மிகக் களையுந்தவனமும் உண்டாகச்செய்யும், பிந்தஉதானன் செய லுண்டசனந்தன்னைப் பெருநாடிநரம்புவழி யூட்டல்செய்யும், இந்த வுடல்தனைவர்க்குஞ் சமானன்தானு மியாவையுமே மிஞ்சவொட்டா திருக்குமென்றே. 20

கூர்மன் நாகன் கிருகரன் தேவதத்தன் தனஞ்செயன் வாயுக்கள்.

கூர்மனிருவிழியில் நிமைத்திடுமேநாகன் கொட்டாவி விக்கலெனுங்கொடுமைசெய்யும், தீர்மைகிருகானீட்டி முடக்கிவைக்குந் தேவதத்தன்விழித்துமே வசனஞ்செய்யும், யுயர்மன்னுந் தனஞ்செயன்மேற் சிரசிரண்டாய்ப்பிளந்திடும்போததுவோடிப்போவதாகும், நேர்மையறிந்திடுவையினி நாடிபத்தின் நிலமைதெரிந்திட விபரம் உரைசெய்வோரே. 21

தசநாடிகளின் பெயர்கள்சுழிமுனை நாடி இடகலைபிங்கலை

சுழிமுனையாம் இடகலை பிங்கலை காந்தாரி தூயத்திசிகுவையலம்புடைபுருடன்றனும், செழுகுருவன் சங்கினியோடீரைந்தாக நின்றதசநாடிபத்தும் நிலைத்தகாமம், மொழிவதுகேள் சுழிமுனையென்பது மூலத்தில் முளைத்து நடுவெழுந்து சிரசளவும் நிற்கும், பிரிவழியச் சுழிமுனையிற்கலைகள் தோன்றிப் பிறந்துயிருநாசியிடம் ஓடிநிற்கும். 22

காந்தாரி அத்திசிகுவை அலம்புடை புருடன் குருநாடிகள்.

கண்டமதில் நின்றுகாந்தாரிநாவில் கரைந்தநீர்பொசிய வுபாயங்கள் செய்யும், அண்டசெவிதனி லத்திசிகுவைநின்று அவத்தையோர் நான்கினுக்கும் ஊ ஊ என்னும், விண்ட அலம்புடை புருடன் இருவழியில் நின்றுமெய் மறந்தபோது அசைவாகி நிற்கும், கொண்டகுரு நாடிதா னீரல்பற்றிக் குடல்புரட்டி வாயினீர் சுழற்றி நிற்கும். 23

சங்கினிநாடி விடையம் ஐந்தின் பெயர்கள் வர்ன விடையம்.

சங்கினியென்பது நாடிகுய்யம் பற்றித்தானிருக்கும் ஒன்றையுமை மிஞ்சொட்டாமல், அங்குஅதிகாரியனுடைம்பத்தொன்றும் அறிவித்தோம் வசனுதி யைந்துகேளாய், இக்குவசனங் கமனந்தானத்தோடு இருந்த எழில்விசர்க்கம் ஆனந்தமைந்தில், பொங்குவசனுதியவன் வாக்கில்நின்று பொருந்தவசனத்தையவன் பிறப்பிப்பானே. 24

வியாதிகளை அஷ்டவிதப்பரிக்ஷைகளாலும்நிச்சயித்தல்.

தரணியுள்ள வியாதிதன்னை யஷ்டாங்கத்தால் தானறியவேண்டுமது ஏதேதென்னில், திரணியடோர் நாடிகண்கள் சத்தத்தோடு தேகத்தினதுபரிசம் வர்னம்நாக்கு, இரணமலம் மூத்திரமாம் இவைகளெட்டும் இதம்படவே தான்பார்த்துக்குறிப்புங்கண்டு, பரனருளாற் பெரியோர்கள் பாதம்போற்றிப் பண்புதவறுமற்பண்டிதஞ் செய்வீரே. 25

நாடிகள் நிற்கும் இடங்களும் வாதநாடி நடையும் வருதலறிக.

செய்கின்றநாடிபெருவிரலின்மேலாய் திருந்திழை மூன்றங்குலத்தினடுவதாக, தைகின்றக்கோதும்பை யரிசிபோல சர்வம்வியாபித்திருக்கும் அதுதான்கூறல், கையடியுங்காலடியும் நாடிநிற்குங் கன்னியருக்கிடப் புறமாங்கணவர்க்கங்கே, மைகின்றவலப்புறமாம் வாதநாடி வந்துமுன்னே நடக்குமப்பால் வகைசொன்னேனே. 26

பித்தம் சிலேட்டுமம் வாதம் நாடி நடைகள்.

சொல்லுகிறேன்பித்தநாடிதோன்றும் அப்பால் தொடர்ந்துசிலேட்டுமநாடிதோன்றுமப்பால், அல்லுகிறக்குழலாளே நாடிநின்றால் ஆச்சரியநாடியென் றறிந்துசொல்லு, மல்லுகின்ற வாதத்தின் நாடியங்கே வக்கிரகதியாய் நடக்குந்தவளேபோல, நல்லுகின்ற [illegible]பட்டைதொட்டிலாட்டல் நல்லாயிப்படிநாடி நடக்குந்தானே. 27

பைத்தியநாடி நடை சிலேட்டுமநாடி நடைவாதமும் பித்தமும் தொந்திக்கநாடி நடை.

நடக்கும்பித்தியுஞ் சவலைப்பிள்ளைப்போலும் நடனமயில் அன்னம்போற்காகம்போலும், திடக்கும் சிலேட்டுமநாடி இலங்கும் பக்ஷி செய்யபுறுவூர்க்குருவிகோழிபோல, அடக்கமாய் நடக்குமது மயிலேசொன்னேன் அவ்வளவே வாத[illegible]யத்தின் தோற்றம், மடக்கின்ற காடைபோல் நடந்துப்பின்னே மஞ்சையெனநடக்குமது மதித்துக்கூறே. 28

வாதசிலேட்டுமந் தொந்தித்தநாடி அசீரணநாடி மந்திரிதயநாடி ஸ்திரீகங்கைநாடி மலபந்தநாடி சன்னிவாதநாடிகளின் வருகை.

கூறுகின்றவாதசிலேட்டுமமுங்கூடில் கோழியட்டை யென நடக்கும் அசீரணநாடி, தூறுகின்றமந்திரிதயத்திநாடிதூங்குகின்ற காகநடையென்றுசொல்வார், தேறுகின்ற ஸ்ரீகங்கை இப்படியாய் நின்று தீபரமாய்நடக்குமலபந்தநாடி, ஊறுமன்னம்போல்நடக்குஞ் சன்னிவாதம் உயர்ந்தநாடிவிதிகளையும் உரைக்கக்கேளே. 29

குடிலை சூக்ஷமவாயு சன்னிவாதம் சங்கினிகாந்தாரி நாடிகளின் நடைகளறிக.

உரைத்தவிறகின் கட்டுக்குள் மூஞ்சூறு உலவுதல்போலே விடக்கும் குடிலைவாயு, விரைத்தெழுந்தே மந்தமாயிருந்துபின்னும் நதமாகநடக்குமதுசூக்ஷம்வாயு, புரைத்தருமையிவ்வகையின்சன்னி

வாதம்பொருப்பாகக்குவிந்த முலைப்போலுங்கொங்கை, முறைத் தெழுந்த சங்கினிகாந்தாரிபின்னே முறமைய தாம்நாடியென முனை வர்தாமே. 30

தேகங்களின் பரிசங்களும் நிறங்களும்வருங்குறியறிதல்

முனைகின்ற தேகபரிசத்தைப்பார்க்கில் முன்வாதத்தேகிக்குச் சரீரஞ்சற்றே, அணைகின்றஉஷ்ணமாம்பைத்தியதேகிக் கதிகமுண் டாம் அப்பால்சீதளமாய்நிற்கும், சுனைகின்றசிலேட்டுமந்தான் சூழ் தேகிக்கு தொந்தகுணகால்விதமாம் நிறந்தான்கூறில், பனைவாத தேகநிறங் கருத்துநிற்கும் பைத்தியதேகநிறமஞ்சள்சிவப்பதாமே.

சப்த லக்ஷணம்.

தாமேசிலேட்டுமதேகநிறம்வெளுப்பு தான்தொந்ததேகம் இந் நால்விதமாய்நிற்கும், மாமயிலேசத்தமதுன்றியவேண்டில் வாத ரோகி சமதொனியாம்வார்த்தைபேசும், ஈமமுள்ளபித்தந்தான் உறக்கக்கூறும் இயம்பிடும்சிலேட்டுமரோகிக்கினச்சத்தம், நாமுறை த்தோம் தொந்ததிக்குத்தானிருந்த நால்விதமாம் மொழிந்தசத்தம் நயந்துகாணே. 32

காணுகின்றவாதரோகிக்குக்கண்கள் கருநிறமாய்நொந்துமிகத் தண்ணீர்பாயும், பூணுகின்றபித்தரோகிக்குமஞ்சள் போலிருக்கும் சிவப்புநிறப்பொலிவுதோன்றும், பேணுகின்றசிலேட்டுமரோகிக்குக் கண்கள் பீளைகட்டிவெளுத்திருக்கும் சன்னிவாதம், வாணுகின்ற சிவப்புடைத்தாய் வந்துவீங்கி வந்திடுங்காமாலையென வகுத்துச் சொல்லே. 33

வாதமலம் பித்தமலம் கபமலம் தொந்தமலம் வாதச்சிறுநீர் நிறங்கள்.

வந்தமாவாதரோகிக்குத்தானும் மலமிறுகிகட்டுபட்டுக் கறுத் துத்தோன்றும், சிந்துபித்தரோகிமலம்மஞ்சளாகில் சிவப்பாகில் சேர்ந்திருக்குஞ்சிலேட்மருக்கு, தொந்தமலம் வெளுக்கும்மலக்கட் டானந்தொந்தமலம் பலவிதமாய்த்தோற்றிக்காணும், விந்தமுளவா தரோகிக்குச் சிறுநீர்தானும் வெளுத்திருக்கும் பைத்தியநீர்விதஞ் சொல்வேனே. 34

பைத்தியர் சிறுநீர் கபநீர் தொந்தநீர் வாதரோகநாவு பித்தரோகநாவு நிறங்கள்.

விதமுள்ளபைத்தியர்தன்சிறுநீர்மஞ்சள் விதமுடைத்தாயிருக் குமல்லால்சிவப்புந்தோன்றும், நுதையுள்ளசிலேட்டுமத்தோர் நீர்

தான்மெத்த நுரைகலக்குந்தொந்தநீர் நால்விதமாய்க்காணும், சுதையுள்ள நாவிறஞ்சொல்லில்வாதந் தோன்றினர்க்கு வெடித்து முட்போற் கறுத்திருக்கும், கதையல்லாச்சிவந்தாலும் பசித்தாலுந் தான் கனமுள்ளப்பைத்தியர் நாகணக்குத்தானே. 35

கபரோகநாவு ஜன்னிரோகநாவு தொந்தரோகநாவு.

தானமொடுவாய்வெளுத்து நீருண்டாகிற் றுன்சிலேட்டுமநா வாகும் ஈரம் அற்றே, ஆளேமுற்பேறகருக்கில்சன்னி ரோகநாவாம் அதம தொந்தநாநிறம் நால்விதமாய்த்தோன்றும், ஆனயிவ்வகை யெட்டுமறிந்தபேரை அவனிதனிற்பண்டிதராய்ச்சொல்வார், ஈன மிலாப்பொறியடக்கும் பெரியோரன்றி யெப்தாது யாவருக்கும் இயம்புங்காலே. 36

குணவாகடத்தின் வைத்தியசாரம் முற்றிற்று.

ஆக செய்யுள் 160.

குணவாகடத்தின் நோயின்சாரம்.

கரிமுகக்கடவுளே கௌரிமைந்தனே
விரிகடல்வாயனே வேதவேதாந்தனே
அரிகருமருகனே யாதிசோதியை
பரிவொடுதொழுதவர்பாதம் போற்றுவாம். 1

மாதங்களில் நாடிபார்க்குங் காலங்களறிதல்.

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருதயம்பார்க்க
அத்வமாம்ஆனியாடியைப்பசி கார்த்திகைக்கும்
மத்தியானத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமாசிக்கும்
வித்தகக்கதிரான்மேற்கேவீழ்கும் வேளையிற்றுன்பாரே. 2

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
வானமாம்புரட்டாசிக்கும் வர்த்தராத்திரியிற்பார்க்க
தேனெனமூன்றுநாடி தெளியவேகாணுமென்று
கானமாமுனிவர்சொன்ன காரிகைவேதநூலே. 3

நாடிபார்க்கிற்பலித்திடா காலமறிதல்.

எண்ணெயின்தலையின்போதும் ஈரமாய்நின்றபோதும்
உண்ணும்நல்லுணவின்போதும் உண்டாம்வெம்பசியின்போதும்
திண்ணமாய்நடக்கும்போதுஞ் சிற்றின்பமூட்டும்போதும்
பண்ணியநாடிபார்க்கிற் பலித்திடாதென்றுசெப்பே. 4

நோய்நாடிபார்க்கும் விபரமறிதல்.

மருவிடுநோயிநாடிமதித்திடில் வலக்கைமைந்தர்க்
கரிவையர்க்கிடக்கைதன்னி லழுத்தியேசுட்டிக்காட்டும்
விரவதில்வாதமாகும்மிகுநாடி விரலிற்பித்தந்
தருமணிவிரலில்ஐயந் தானியல்பறிந்துபாரே. 5

வாதமும்பித்தம்ஐயம் மருவியகுணபாடத்தை
தீதறமுனிவர்நூலைத் தேர்ந்தபின் திரட்டதாக
ஓதியசுருக்கநூலை யொழுங்கொடுவுணர்ந்துகொள்ள
வாதுதிர்வைத்தியர்க்கு வல்லிருள்விளக்கமாமே. 6

மந்த சுரக்குணம்.

வாதந்தான் தனித்துநின்று வந்திடும்பந்துபோலத்
தீதறவெழும்பிநின்றூற் சிக்கியேமந்தம்பற்றும்
ஏதுவாற்சுரங்கள்கண்ட திடைவிடாநிற்குமல்லாற்
தாதுவுங்குறைந்துநின்று தக்ஷணையும்மறக்கச்செய்யும். 7

மத்தியசுரம் மலைச்சுரங்களறிதல்.

உற்றிடுவாதநாடி ஒருவிரலுள்ளேநின்று
பற்றியேசிலுப்பிநின்று பையவேநடக்குமாயின்
மத்தியசுரமேயாகும் மலைச்சுரமதுதானுயின்
அத்தியேமற்றியோடி யடங்கிடாதெழும்பிநிற்கும். 8

சகல சுரங்களும் பாஷாணத்தாற்றீரும்.

இப்படிசுரங்கள்கண்டா லெளிதல்லவேகமுண்டாம்
னப்புரநாவரண்டந்நாவினிற் பிளப்பைகாணும்
வெப்புறுமிக்காங்கள்மே விடாத்தனில்வேண்டில்
மெய்ப்படிபாஷாணத்தால் மீள்வதுதிண்ணந்தானே. 9

வனமூலிகஷாயம் மாத்திரைகற்பம் இவைகளாற்றீரும்

நாட்டினிற்சுரங்கள்கண்டு நலம்படாதிருக்குமாயிற்
காட்டினில்மூட்டியாலுங் கஷாயத்தின்வலிமையாலும்
மூட்டியகுளிகையாலும் முடிகியகற்பத்தாலும்
வாட்டமாமென்றநூலோர் வழுத்தியகுணமிதாமே. 10

பலபந்தநாடி.

வந்திடும்வாதநாடி மடங்கியேதுடித்துநிற்கில்
மூந்தியபழமலங்கள் முடுகியேசிக்குமென்க

அந்தமாய்வாதம்பித்தமிழந்து நின்றசைக்குமாகில்
பந்தியாம்வயிற்றெரிப்பும் பரப்பும்வந்தடுத்ததென்னே. 11

மந்தசன்னி.

நீருறும்வாதநாடி நின்றதிற்கோபமானாற்
பாரினிலெவர்க்கும்வயு பற்றிடமெந்தமாகும்
வேரிசேர்குழலாய்வாதம் விருப்பொடுளெடுத்துநின்றால்
கூருறுசன்னிவந்து கூடிடுமூன்றுநாளில். 12

மேற்படி சன்னிதீர அண்டத்தயிலம்.

வந்திடுமூன்றுநாளில் வாதமாஞ்சன்னிகூடிற்
புந்தியைமறந்துவாயாற் புலம்பலோடலம்பற்பண்ணும்
பிந்தியநாலாநாளிற் பிடரியிற்பின்னல்செய்யும்
அந்தமாகியவண்டத்தின் தைலமேபுகற்றிடாயே. 13

மேற்படி தோஷக்குறியறிதல்.

பரவியவாதநாடி பக்கமேதுடியாவண்ணம்
புரவியபுழுப்போலூர்ந்து புலன்கெடவமர்ந்தேயோடில்
சூரமுறும்எழாம்நாளிற் றோஷம்வந்தணுகிநாவை
யுரமுறப்பேசவொட்டா துளறியேகுளறிநிற்கும். 14

தோஷந்தீர மயிலிநெய்.

பேச்சதுகுளறிநின்று பெருகவுள்மூச்சமுண்டாம்
ஆச்சுபன்னிரண்டுநாள்தா னப்படிசெய்தபின்பு
கூச்சறமயிலிநெய்யிற் குலஷியவசம்புகூட்டித்
தேய்ச்சுமேலுள்ளுங்கொள்ளத் தோஷமுஞ்சிதைந்துபோமே. 15

வாதமெலிவு தோஷம்.

வாதமேமெலிந்துவிம்மி வறண்டதுபுரண்டுதத்தி
சேதமாயரணைவாபோல் சிக்கியேதுடித்துநிற்கில்
வாதையேபெருகிமேவில் வந்திடுந்தோஷந்தானென்
றோதினோர்முன்னோரிந்த வுகமையைக்கண்டுசொல்லே. 16

சர்வாங்கநாத சன்னிக்குணம்.

கூறிட்டவாதநாடி கோழிபோற்கிண்டிநின்றால்
வாரிட்டமுலைநல்லாளே வாதமாஞ்சன்னியாகும்
பேரிட்டெடுத்தெடுத்துப் பிரட்டத்தியங்குமாகில்
ஆரிட்டதேகம்துண்டாம் அதுசருவாங்கமாமே. 17

மேற்படி நோய்தீர மருந்து.

பதறியவாதநாடிப் பாய்பரிபோலவோடிற்
சிதறியமூன்றும்நாளிற் சேர்ந்திடுங்குதிரைவாலி
மதறியாய்த்தொண்ணூற்றாறு நாழியில்மரிக்காவிட்டால்
விதறியாய்வேம்பினெண்ணெய் விஷமுஷ்டித்தைலங்கூட்ட. 18

வாதக்கதிப்பால் வருநோய்கள்.

வாதமேகதித்தபோது வாயுவுமெழும்புங்கண்டீர்
வாதமேகதித்தபோது வந்திடுஞ்சன்னிதோஷம்
வாதமேகதித்தபோது வந்திடும்வியாதிமேலும்
வாதமேகதித்தபோது வல்லுடல்மெலிந்துக்கொல்லும். 19

இருநாழிகையிலும் ஒருநாழிகையிலும் சாகுங்குறி.

மந்தமாய்வாதநாடி மயில்ரூபம்பேன்போலோடில்
இந்தமானிடர்க்கிரண்டு நாழிகையிருப்புமில்லை
வந்தவன்முகமும்வேர்த்து மஞ்சளிநிறமெய்யாகில்
முந்தவோர்நாழிகைக்குள் முடிவதுதிண்ணந்தானே. 20

வானியம் நோயும் வலிகுன்மமும் மரணமும் வருகுறி.

வாதந்தான்தனித்துநிற்க வாயுவுந்தனித்துநிற்கும்
வாதந்தானுதறிநிற்கில் வலிகுன்மம்வந்துசேரும்
வாதந்தானற்றுநிற்கில் மரணமும்வந்துசேரும்
வானத்தின்திரட்டதெல்லாம் இவ்வகைவடிவுதானே. 21

கர்ப்பந்தரித்த நாடிக்குணம்.

காரிகைதமக்குப்பிள்ளை கருப்பையைப்பற்றிநின்றால்
கூறியவாதநாடி குண்டலப்புழுப்போலூரும்
வீரியமூன்றுந்திங்கள் விட்டில்போற்பதைத்துநிற்கும்
பாரியயெட்டாந்திங்கள் பையவேயுறுப்போலூறும். 22

மாதர்கைப்பிடித்தபோது வந்திடும்வாதநாடி
தீதுறவெடித்துப்பாய்ந்து சிதறியேகிலும்பிநின்றால்
பேதைதன்வயிற்றினுள்ளே பெருகுசுரோணிதமேதங்கி
வாதைகள்பண்ணிமால விடைகாலம்வருத்தஞ்செய்யும். 23

கர்ப்பந்தரிக்கக் குழம்பு.

இடுப்பொடுகடுகடுத்துநொந்து இடைவிடாக்குத்தலுண்டாய்
தடுத்திடக்கர்ப்பந்தன்னை தங்கடாவண்ணஞ்செய்யும்

அடுத்தகோராவின்செய்பி லானதோர்திருகுகள்ளி
கொடுத்திடாத்தும்மட்டிக்காயின் குழம்பதுகொடுக்கத்தங்கும். 24

சூதகத்தில் வாயுதங்கிய குணம்.

மாதர்கைபிடித்தபோது வந்திடும்நாடிமூன்றும்
சேதமாயிற்றுநின்று சேரவேபதிந்துநிற்கில்
ஓதுமேசூதகத்தி லோங்கியவாய்வுநின்று
பேதமாய்வாதைபண்ணி பிணிகளைவிளைக்குந்தானே. 25

எரிகுன்மவரலாறு, தீருமருந்து.

வாதமும்பித்தங்கூடி வன்பெலத்துடனேயோடிற்
றீதறுவயிற்றினுள்ளே திரண்டதோர்மந்தம்பற்றி
வேதனையெறிப்புங்கூடி விரண்டிடுமெரிதக்குன்மம்
ஆதிசேர்சீனிகூட்டி அஷ்டசூரணந்தான்கொள்ளே. 26

சூலைநோய் வரலாறு.

திருத்தமாம்வாதத்தோடே தீங்கொடுபித்தஞ்சேரிற்
பொருட்புகள்தோறும்நொந்து போதமேபிடிக்குஞ்சூலை
பெருத்திடவாயுகொள்ளும் பேசியவயிறேபோகுங்
கருத்தினலறிந்துநன்றாய்க் கண்டிடாய்மனிதர்க்கெல்லாம். 27

காலன்பிடிக்கும் நாடி.

அறவின்றன்நாவைப்போல அடிக்கடியுதறிவாதம்
உரம்பெறநின்றுபித்தம் ஓடியேயொளிக்குமாகிற்
றிரும்பிடாக்காலன்றானே தீங்குடன்பிடித்தானென்று
வரம்பெருமுனிவர்தானும் வாக்கொடுசொன்னார்தேர்ந்தே. 28

மூலாதாரவாதையர்சாதலும்பைத்தியம்பிடித்தலுமறிக

பிறந்திடும்பித்தநாடி பிரண்டுமேநிற்குமாகில்
வறண்டிடுமூலாதாரம் வாதையால்மடிவுசெய்யும்
கறண்டதுபித்தநாடி கதிப்பொடுதுடித்துநின்றால்
அறண்டிடும்பைத்தியந்தான் அடைவொடுவந்துகூடும். 29

பேச்செழும்பலும் அங்கலும் குளரலும் வருகை.

உற்றிடும்பித்தநாடி யொழுங்கொடுயெழும்பிநின்றால்
வற்றிடாப்பேசுகின்ற வசனமுமெழும்பிநிற்கும்
மத்திமம்பித்தநாடி மடங்கியேதுடித்துநின்றால்
உத்தமப்பேச்சுதானும் ஒடுங்கவாய்குளறிப்போகும். 30

பைத்தியநோய் வரலாறும் தீருமருந்தும்.

பித்தமாய்நாடிதானே பெலத்தொடுதனித்துநிற்கில்
மத்திமப்பைத்தியத்தை வளர்ந்திடும்வரக்ஷிசேரும்
உத்தமமூளைதன்னில் உருகியேகுறைந்துநிற்கும்
சிற்றுமுத்தாடுஎண்ணெய் சிரசிற்றேய்த்துவப்போமே. 31

கிறுகிறுப்புத் தீரக்கஷாயம்.

உதறியேபித்தநாடி உழுவப்போற்றுடித்துநிற்கிற்
பதறியேயுடம்பழுத்துப் பாய்ந்திடுஞ்சிறுநீர்வற்றும்
முதலியபுத்திமாறி கிறுகிறுத்துழலையுண்டாம்
நிதவியபயறும்பச்சை நெல்லிக்காய்கஷாயங்கூட்டே. 32

சுரத்தோடு கபாலக்குத்துவரலாறுந் தீரும்வகையாம்.

நாவிரற்பித்தமற்றும் மந்தமாய்நடக்குமாகில்
வடிவுளவுடம்பழுத்தி மந்தித்துச்சுரமுந்தோன்றி
இடியிடித்ததுபோலோடிச் சிரசினிலிடித்துக்குத்தும்
படியவேசாதிலிங்கப் புகையுண்ணப்பறந்துபோமே. 33

வரக்ஷிசுரம் பிரமேகம் வரலாறு.

வளர்ந்திடும்பித்தநாடி வலமிடம்பிசகாவண்ணம்
பிளந்ததுதனித்துப்பச்சை புழுனுடங்கதுபோலோடில்
உளந்தனில்வரக்ஷிதங்கி யுடம்புலர்ந்தஸ்திதன்னில்
விளைந்திடுஞ்சுரங்கள்வந்து வளர்பிரமேகமாமே. 34

மஞ்சள்நிற நீர்க்கடுப்பு உடல்தளர்ச்சிதீர வங்கபற்பம்.

சலம்நிறம்மஞ்சள்போலாய்க் கடுத்திடுந்தளர்ச்சிசெய்யும்
உலவியமூன்றுமாதம் பற்றியின்னுடம்புதன்னிற்
குலவியேதங்கபற்பங் கொடுக்காமலூறுமாகில்
விலகிடாச்சூலைவந்து வெடித்துப்புண்ணாகுமென்னே. 35

பித்தத்தாலுண்டாகும் நோய்கள் வருதலறிக.

பித்தமேஜெனித்தாற்சூடு பெலத்துடனுலரச்செய்யும்
பித்தமேமிகுந்தலீளை யிருமலும்பெலத்துநிற்கும்
பித்தமேமிகுந்துதானாற் பெலன்குறைந்துடம்பழுத்தும்
பித்தமேதிரட்டிநூலிற் பேசினார்பெரியோர்தாமே. 36

பெருவாதம் உதரவாயு பைத்தியமுதலான பிணிகளுற்பவித்தல்.

பித்தமேகதித்தபோது பெருந்திடும்வாதமுண்டாம்
பித்தமேகதித்தபோது பெருத்திடும்வயிற்றுவாயு
பித்தமேகதித்தபோது பிதற்றிடும்பித்தேகேளு
பித்தமேகதித்தபோது பிறந்திடும்பிணியனேகம். 37

சன்னிவாதம் பின்னற்றல்பித்தல் நினைவிழப்பு வருகை.

பித்தந்தான்வாதத்தோடு பிணைந்துநேர்தோன்றுமாகில்
மத்திபசன்னிவாதம் வந்திடும்பினற்றலுண்டாம்
உற்றிடும்வாதத்தோடு வுறவதாய்ப்பித்தம்மீறில்
நித்தமும்பிதற்றிப்பேசி நினைவிழந்திருப்பரென்னே. 38

நோய்கள் தீரமருந்தும் க்ஷயரோகமும் வரலாறும்.

முற்றுமிக்குணங்கள்கண்டால் முயிறதன்முட்டைதன்னை
கத்தகப்பாலினேடுங் கலந்தருந்திதமானபின்பு
பித்தந்தானையத்தோடு பெருமுகந்திரும்பிநிற்கில்
மத்திபக்ஷயரோகத்தை வரவெனவழைக்குந்தானே. 39

சீழும்விடாத சுரமுங்காணும் க்ஷயரோகந்தீர குக்கிலாதி நெய்யுஞ்சாறும்.

இருமியசீழும்வீழ்ந்து இடைவிடாச்சுரமுங்காயும்
பருவமாய்நெஞ்சில்பற்றி பதறியேயிரத்தம்வீழும்
குருநிலைக்குலைக்கிலாதி கிருதத்தாற்குடிபோம்பின்பு
வருநெரிகண்டந்தோடை வணையதனீரைக்கொள்ளே. 40

அசாத்தியசுர நாடிக்குறியறிதல்.

அய்யமாம்நாடிதானே யரணைவாலாற்றுநேர்ந்து
பய்யவேதந்தம்பற்றிப் பதறிடாதிருக்குமாகிற்
செய்வதொன்றில்லாக்காலன் தேடுவதுண்மையென்று
கையிணைப்பிடிக்கவேண்டாங் கழற்றிக்கொண்டப்பாற்சொல்லே. 41

இருமலிளை இளைப்பு கோழைதீர.

உற்றிடும்ஐயநாடி யோங்கியேதுடித்துநின்றூற்
பற்றிடும்இருமலீளை பதறியேயிளைப்புண்டாக்கி
சொத்தவேகோழைவாயு மிகுத்திடில்கறகத்தோடு
சுத்தமாய்தூதுவேளை கோடகைக்கண்டங்கூட்டே. 42

தொண்டையும் நெஞ்சுங்கட்டி மழைகாலத்தி லுபாதித்தல்தீரக் குக்கிலாதி நெய்.

இதமொடுயிறுதிநாடி இலகிடா திருகினின்றூர்
பதமொடுதொண்டைகட்டும் பழுத்துநெஞ்சதனிற்கட்டும்
விதமொடுமழைநேரத்தில் மிகுதியாய்வாதைபண்ணும்
நிதியெனக்குக்கிலாதி னெய்யினல்மாறுந்தானே. 43

பீனசமூக்கு நீர்ப்பாய்ச்சல் மண்டலச்சிலே தலேகனப்புத்திர நண்டுநெய்.

ஒடுக்கமாஞ்சிலேட்டுமநாடி யொழுங்கொடுபதறிநின்றூல்
நடுக்கமாய்ப்பீனசங்கள் நாசிநீர்ப்பாய்ச்சலாகும்
பிடித்திடும்மண்டைச்சூலே பெருத்திடுந்தலேகனப்பு
தடுத்திடும்நண்டுநெய்யைத் தலேயினித்தப்பத்தீரும். 44

ஓர் பகலுக்குள்ளிறக்கு நாடிக்குறி.

மத்தியஐயநாடி மந்தித்துஉழன்றுநின்று
முத்தியஊசல்போல முடுகியேபதறுமாகில்
நித்தமோர்பகலுக்குள்ளே நில்லாதுமரணம்வந்து
சுத்தியேமரிப்பரென்னச் சொல்லுவார்நல்லோர்தானே. 45

குத்தங்கோழை வாயுமரண நிச்சயக்குறி.

சிலேட்டுமம்நாடிதானே தெளிவோடுநிற்கிற்றீதாம்
சிலேட்டுமமந்தம்பத்தில் சேர்த்திடும்கோழைவாயு
சிலேட்டுமமிகுந்துநின்றூல் செப்பிடுமரணந்திண்ணம்
சிலேட்டுமத்திரட்டதெல்லாந் தெளிவொடுகண்டுகொள்ளே. 46

சாகக் குறியறிதல்.

ஐயந்தான்பித்தந்தன்னே யணேத்தெடுத்தேறுமாகில்
நையவோர்நாளிற்காலன் நாடியேவருவதுண்மை
பையவேஐயம்பாய்ந்து வாதத்தைபற்றிநின்றூல்
செய்யும்வாறென்னசாவோர் நாழிகைதிண்ணந்தானே. 47

வியாதிதோஷம் ஐயசன்னிமரணங்கள் வருகை.

ஐயமேகதித்தல்போது அணுகியேவியாதியுண்டாம்
ஐயமேகதித்தபோது யறிந்திடும்தோஷமாகும்

ஐயமேகதித்தபோது வையமாஞ்சன்னியாகும்
ஐயமேகதித்தபோதல் வையமேமெலிந்துகொல்லும். 48

சரீரகுத்தலும் நெஞ்சுநோக்காடுமாய்க்காணும் மேகமறிக.

பார்த்திடுமூன்றும் பதிந்ததுமெலிந்துநிற்கில்
தேர்த்திடுமேகம்வுள்ளே தோன்றியேபொருந்திமெய்யில்
ஆர்த்திடாக்குத்தலுண்டா யதனேடுநெஞ்சும்போகும்
தோர்த்தமாயுறகுணங்கள் தெளியவேயறிந்திடாயே. 49

பிணி வாராமையும் வருகையுமறிக.

வாதபித்தையமூன்றும் வண்பலத்துடனேதத்தம்
பேதமொன்றில்லாவண்ணம் பேசியதானந்தன்னில்
நீதியாய்நிலைத்துநின்றால் கெடும்பிணிசிக்கவில்லை
தாதுவுமொன்றேடொன்று தாவிடிற்பிணிகள்தானே. 50

கழல்வாதம் மூலம் சாவு வாழ்வுருகை.

மூவருமுரத்துநின்றால் முதிர்ந்திடுங்கழல்வாதங்கள்
மூவருமந்தமானல் முளைத்திடுமூலமெல்லாம்
மூவரும்பதுங்கிநின்றால் முடிவதுதிண்ணங்கண்டாய்
மூவருந்தன்தன்காலந் துடித்திடில்வாழலாமே. 51

ஆறுமாதத்திற் சாகுங்குறியறிதல்.

காலையில்மூன்றுநாடி கதிப்பொடுநடக்குமாகில்
வாலையாமுச்சிகாலம் வன்பித்தமழுத்துமாகில்
மாலையில்வாதந்தானு மையத்திலுறையுமாகில்
நீலகண்டத்தாரானை நிலைச்சாவுமாதமாறே. 52

மலசலவடைப்பும் விடுப்பும் வருதலறிக.

பெருவிரலிரண்டுபக்கம் நாடிதான்பிசகியோடில்
மருவியஜலமலங்கள் மந்தித்தேயடைத்துக்கொள்ளும்
பெருகலையடிவயிற்றிற் பிடித்துமேலெழும்புமாகில்
தடையில்லைமலஜலங்கள் தானதுகழன்றுபோமே. 53

தொப்புளில் மலஜலம் வாயு இடதுசந்து இடதுமுதுகு இருத்தலறிக.

நடுவிரலிடதுபக்கம் நாடிதானடக்கும்போது
மடையதாமுந்திதன்னில் மலசலம்வாயுஞ்சேரும்

வடநிலைமூலையுன் மாதே வாகொடுமிடந்துசந்து
இடமுதுகழுத்துநிற்ப தென்பதுமுன்சொன்னோமே. 54

தொப்புளின்கீழேஐயமும் பித்தமும்சேருங்குணமறிக.

நடுவிரல்வலதுபக்கம் நாடிதானடக்கும்போது
அடைவொடுவுந்தியின்கீ ழையொடுபித்தஞ்சேரும்
கடகரியுரித்தோன் றன்னைக் கருத்தினிலிருத்திக்கொண்டு
வடுவறநாடிபார்த்து வந்தநோயறிந்துசொல்லே. 55

கால்கைவலிப்பும் உடல்நோக்காடுமாய்வருஞ் சூலைநோய்க்குறி.

சிறுவிரலிரண்டுபக்கம் நாடிதான்சிதறிபோடில்
மருவியகாலுங்கையும் வலித்துடல்மிகநோவுநோகும்
ஒருபொருளாகிநின்ற உமையொருபாகம்வைத்த
திருச்சடைசிவனைநோக்கி செப்பினேன்சூலையாமே. 56

சூலைநோய் சகத்தவாய் நீர்மயக்கம் வாந்தி அடிவயிற்றுச் சூலைவருகை.

மோதிரவிரல்வலத்தே முடிகியேநாடியோடில்
காதியுங்சூலைநோயுண்டாம் கைத்திடும்வாய்நீரூறும்
வாதியாளருளினாலே மயக்கமும்வாந்தியுண்டாம்
ஆதியேயடிவயிற்றிற் சூலையுமமர்ந்துநிற்கும். 57

கால்கைகடுப்பு சோமம் உந்திநோய் தலைவலி வருகையும் சிகிச்சையுமறிதல்.

மோதிரவிரலிடத்தே முடிகியேநாடியோடில்
கால்களுங்கைகளுந்தான் கடுத்துப்பின்கோபமாகி
ஓதியேயுந்திநொந்து வுறுதியாய்த்தலைவலிக்கில்
ஆதியானருளினாலே யவர்கட்குசுகியம்பண்ணே. 58

இரண்டாம் நாளிலும் எட்டாம்நாளிலும் சாகுங்குறி.

வெள்ளநீரோடும்போல சிலேட்டுமமீறியோடில்
வள்ளல்தானறியச்சொன்னோ மறிப்பதுமற்றுநாளில்
தெள்ளியவாதந்தானுஞ் சிதறியேயோடுமாகில்
எள்ளியநாளோரெட்டி லுறுதியாய்ச்சாவாரென்னே. 59

3-நாள் 15-நாள் 40-நாளிற் சாகுங்குறி.

பித்தமிப்படியேயோடிற் பிதற்றிநாள்மூன்றிற்கொல்லும்
முத்தியவாதபித்தம் முயங்கியப்படியேயோடில்

பற்றறச்சொன்னேன்கண்டீர் பதினைந்துநாளிற்கொல்லும்
நற்றியஐயங்கூடில் நாற்பதுநாளிற்கொல்லும். 60

உடனேயும் 3 மாதத்திலும் சாகும் நாடிக்குறி.

அரணைவாற்றுடிபோலாடி லாங்கவன்பிழைப்பதில்லை
பரவுதேட்கொடுக்குப்போலும் பதைத்திடிற்சாவதின்னங்
கரையெறும்பதுபோலோடிற் கண்டிடாய்திங்கள்மூன்றில்
வரையணிமுலைநம்மாதே மரணமென்றறிந்துகொள்ளே. 61

மரணநாடிக்குறியறிதல்.

ஐயமாஞ்சிலேட்டுமத்தி லாகியநாடிதானும்
தொய்யவேதவளைபோலத் தொங்கியேகுதித்திட்டாலும்
பையவேபுரண்டுபுத்துப் பாம்பெனநடைகொண்டாலும்
மைசெறிகுழலினாளே மரணமென்றறிந்துகொள்ளே. 62

ஒருமாதத்திற்குச்சாகும் நாடிக்குறி.

தேளெனத்தெரிந்துச்சற்றே திரிநாடிசெய்யுமாகில்
மாளவேமரணவாதை வந்திடுஞ்சன்னியுண்டாம்
மீளுவதில்லைமுன்னாள் விதிப்படிவந்ததீது
நாளறிதிங்கட்குள்ளே நாசமாய்க்கொல்லுந்தானே. 63

ஏற்றியதீபத்தன்னி லெரிசுடர்த்தீயைப்போல
போற்றியநாடிதானும் பொலிவரத்தோன்றுமாகில்
மாற்றரும்வாழ்வுநாளு மாளுமோர்மாதத்தென்று
நாற்றிசையுள்ளோர்க்கெல்லாம் நாடிநயந்துசொல்லே. 64

இரண்டரைநாளிலும் எட்டுநாளிலும்சாகும் ஐயநாடிக்குறி.

பாண்டதுவுருண்டுமேலே பொருந்துசீர்நடக்குமாகில்
இரண்டரைநாளினிற்று னியல்பதாமரணமென்க
சுருண்டமென்குழலினாளே சொல்லுநாளெட்டினிற்றான்
மரணமேவருகுமென்று வாகொடுவழங்குவேனே. 65

பிராணன்விடும் நாடிக்குறியறிதல்.

நிறைபுரவட்டம்பூண்டு நின்றிடுமரணைவால்போற்
குறைபடாபித்தமொன்றுங் குறைந்துமேகிற்குமாகில்
உரைவிடும்பிராணனென்று உண்மைசொல்வாகடத்திற்
பறையதுகட்டிச்சாற்றும் பண்டிதர்க்கெல்லாம்பாரே. 66

குணவாகடத்தின் நோயின்சாரம் முற்றிற்று ஆகசெய்யுள் 257.

காவியத்தின் நாடி.

காப்பு.

பாகுடன்கணேசன்பாதம் பணிந்துமுக்குணங்கள்வாய்ந்து
வாகடத்தொகுதியெல்லாம் வகுத்தசூத்திரமதாக்கி
யாகமவிதியில்ஞாலத் தடர்ந்திடும்நோய்களெல்லாம்
போகநல்மருந்துசெல்வோம் புலத்தியாபொருந்திக்கேளே. 1

நூல் - நாடிவகை.

பொருந்திக்கேள்பொருந்திக்கீழே புகன்றேறுஞ்சுழியைப்பற்றி
எழுந்ததோர்நாடிதானு மெழுபத்தீருயிரந்தான்
தெரிந்ததோரிவற்றில்பத்துத் தெசநாடியிவற்றுள்மூன்றும்
மறிந்ததோர்வாதபித்தம் படரையுமறிந்துபாரே. 2

அறிந்துதானிதற்குநாம மறைந்தனராறிவுள்ளோர்கள்
தெரிந்ததோரிடைதான்வாயு மியன்றபின்கலைதான்பித்தஞ்
செறிந்துகொள்சுழிதானையஞ் சேர்விடமெங்கேயென்னில்
பிரிந்துகொள்மலமாம்வாதம் பேர்பெறுமோம்பித்தம். 3

பித்தத்தின்கீழேஐயம் பெரியதோர்விந்திற்சேருங்
குத்தமேசேருமையங் குறிதனைக்குறித்துக்காணும்
பித்தத்தைபிரிந்துநன்றாய் பேசுவோம்பேதம்போக்கிப்
பத்தத்தைக்குறியாயெண்ணப் பரிவுடனறிந்துபாரே. 4

பாரப்பாயிடையிடைக்கால் மாறியேகபாலஞ்சூடி
சாரப்பாவலக்கரத்திற் சார்ந்திடும்பின்கலைதான்
சேரப்பாயிடதுகாலிற் சென்றுதான்கபாலத்தேறிப்
போரப்பாவிடக்காரத்திற் பொருந்திப்போஞ்சுழிமுனைகேளே. 5

கேளப்பாபுருவமத்திச் சுழிமுனையாமிடைபின்மூன்றில்
நாளப்பாநவதாதாகி நடத்திடும்நாடிபாரு
கேளப்பாநாடிபத்துந் தசவாயுவுடனேசேரும்
சூளப்பாதசதானங்கள் சொல்லுவேன்சொல்லுவேனே. 6

வேறு நாடிஸ்தானம்.

சொல்லுகிறேன் காமியந்தான் குதிகால்சந்து சொற்பெரியவுந்திகர மார்புகண்டஞ், சொல்லுகிறேன்புருவமத்தி காதுமூக்கு தொகைபத்தில்வாழ்ந்திருக்குந் தாதுமூன்றுஞ், சொல்லுகிறேன் சுரத்

தெழுந்தநாடிமாறில் சோதிக்கில்தசானந் துடிப்புக்காணில், சொல்லுகிறேன் சாகான்பிணிதான்தீருந் துஞ்சுகிரவிபாமதைச் சூட்டுறேனே. 8

துஞ்சியெழும் வாதபித்த முயிர்தானப்பா சூக்ஷமாய்த்துன்றியது சுழன்றுதேய்ந்து, மிஞ்சியே அஸ்திபற்றிக் குறுகித்தம்மில் மேவியே மார்புள்ளே வாங்குமாகில், அஞ்சியேபட்சமொன்றிலடங்குஞ்சிவன் அரகரா அவத்தையது அறிந்துயிக்தப், பஞ்சியே சூஸ்திரமாம் வாதபித்தம் பக்குவத்தை நன்றுய்ப்பார்த் தறிதல் நன்றே. 9

வேறு சமதாது.

அறிவதுவாதந்தானு மாத்திரையரைதானேடில்
செறிவதுபித்தமப்பா சேர்சமனென்றுபின்னும்
பிறிவதுஅய்யந்தானும் பிரண்டதுகால்தானேடி
மறிவதுசமனதாகில் மயக்கமுமில்லைகாணே. 10

வாத குணம்.

காணப்பாவாதமீறில் கால்கைகள்பொருந்திநோகும்
பூணப்பாகுடல்புரட்டும் மலஞ்சலம்பொருமிக்கட்டும்
ஊணப்பாகுளிருங்காச்ச லுடம்பெல்லாம்குத்தவாய்வு
வீணப்பாகுதமிருக்கில் வேர்வையும்வேர்க்குந்தானே. 11

பித்த குணம்.

தானென்றபித்தமீறில் சடமெல்லாங்காந்தல்காணு
மூனென்றவாந்தியாய்நீ ரூறியேவொழுங்குஞ்சாவான்
வானென்றமட்டில்வேகும் மண்டையில்குத்துண்டாகும்
தேனென்றவிக்கல்மூர்ச்சை செவியடைப்புண்டாம்பாரே. 12

சேத்தும குணம்.

பாரப்பாஅய்யமீறில் பாசத்தினனல்தான்மீறும்
நேரப்பாயிளைக்குந்தேகம் நெஞ்சுடன்விலாவுநோவாந்
தாரப்பாசுரமுங்காயும் சாதமூமொருக்குநாளில்
ஓரப்பாரெத்தங்கக்கு முடல்வற்றுஞ்சுரம்பேருமே. 13

நாடி நடை.

ஆமப்பாவாதந்தானு மன்னடைகோழியாமை
தாமப்பாபித்தந்தானும் தவளையைப்போலேபாயும்

போமப்பாஅய்யந்தானும் சர்ப்பம்போலோடுமோடும்
நாமப்பாகண்டுசொன்னோம் நரம்பெனுநாடிமூன்றே. 14

நாடி நிறம்.

மூன்றுபேர்நிறமுஞ்சொல்வேன் முதல்வாதங்கறுப்புச்செம்மை
மான்றியபசுமைபச்சை மஞ்சளாயிருக்கும்பித்தம்
தோன்றியவெண்மையப்பா சோர்வில்லாவையதாகும்
ஊன்றியநிறங்கள்சொன்னேன் உத்தமரறிவார்தானே. 15

பஞ்ச பூதவகை.

தானென்றபஞ்சபூதஞ் சதையெல்லாம்பிருதீவாகு
மானென்றரெத்தந்தண்ணீர் மைந்தனேயப்புவாகும்
தேனென்றவெதுப்புதானும் தேயுவின்கூறேயாகும்
மானென்றவாசிதன்னில் வருநெந்தமறிதல்வாய்வே. 16

அறிந்திடுமெல்லாமொன்று யாலிக்குந்திறவானந்தான், பிறிந்
திடும்பூமிதானும் பேரெழுநாசிதன்னில், செறிந்திடுமப்புத்தானுஞ்
சேர்ந்திடும்நாவிலேதான், முறிந்திடுவன்னிதானுமூன்றிடுங்கண்ணி
லேதான், அறிந்திடும்வாய்வுதானும் பரிசிக்குமெங்கும்பாரே. 17

பாரப்பாகாதிலேதான் பரிசிக்கும்வானமைந்தா
யோரப்பாவஞ்சுபேர்க்குள் பொல்லாதபேர்தான்மூவ
ராரப்பாவாதம்வாயுவு அப்பனேபித்தம்வன்னி
நேரப்பாவையமப்பு நிறந்தவையிதுமூன்றுமே. 18

ஆமப்பாமூன்றுபேர்க்குள் ஆதாரம்வாய்வேயாகும்
ஏமப்பாவாய்வுசேரி லெண்பிலமுடைத்தாய்நிற்கும்
வேமப்பாவன்னிகூடில் வெந்துநீருகமாளும்
நோமப்பாசிக்கிநின்ற நோயெல்லாந்தணிக்குந்தானே. 19

தோஷகுணம்.

தானென்றவன்னிவாய்வு தாண்டிமேற்கொண்டுதானல்
தானென்றசுரத்தாற்றோடம் கனதாபமிகுதியாகுந்
தானென்றவன்னியோடு அப்பவுஞ்சாறுமாகில்
தானென்றசீதேதோஷஞ் சார்ந்திடுந்தப்பில்லாதே. 20

தப்பில்லாததோஷந்தானுஞ் சார்ந்திடும்வாறுகேளாய்
கப்பில்லாவன்னிதானங் காடுந்தோஷஞ்சாத்தியமாகும்

செப்பில்லாப்பித்தத்தோடு சேரனல்வெண்மையாகிச்
செப்பில்லாவையத்தூடுஞ் சிவப்பெனும்வாயுவாகம. 21

வாய்வுதானடங்கிற்ருனல் மைந்தனேதோஷம்போகும்
வாய்வுதான்பெருத்துதானல் மண்ணொடுநீருமொன்ரும்
வாய்வுஞ்சலந்தான்ரெண்டால் மைந்தனேவன்னிமாளும்
வாய்வுதானண்டஞ்சிரசில் மண்டலவோசையாமே. 22

தோஷக்குறி.

ஆமப்பாவோசையேழு மலரொளிவிழியஞ்சாகும்
நாமப்பாநாடிமூன்ரும் நாவினிலிரண்டதாகும்
ஓமப்பாவிந்தநீர்வை யுணர்ந்தவர்யோகியாகும்
வேமப்பாநாசிதன்னில் விழுகுறிவிளம்பக்கேளே. 23

மரணக்குறி.

கேளப்பாதினந்தான்மூன்று கெடியிடைகலேதான்பாயில்
வாளப்பாவருடம்ரெண்டில் மறலியூர்புகுவான்பண்பாய்
நீளப்பாதினமிரண்டும் பின்கலேதானேபாயில்
மூளப்பாதேசந்தானு மூவாண்டில்மரணமாமே. 54

மரணமாங் தினமாம்பத்து வுபாயத்தில் வாங்குமாகில், மரண மாந்திங்களொன்றில் மைந்தனே கண்டுகொள்வாய், மரணமாமூக்கு விட்டு வாய்வழிவாய்வுபாயில், மரணமாங் தினந்தான்மூன்றில் வளம்பெறவறிந்துபாரு, மரணமாமலங்கள்மூன்று மவற்றினல் பட்சமொன்றே. 24

வேறு.

ஒன்ருகவாய்நீ ரூறிரவிமேலுமியத்
தன்ருகத்தானுமிரவி மறைந்திருந்தாக்கால்
ஒன்ருகமூன்று திங்கள் பொருத்தவுடன்பொன்றிடுவார்
நன்ருகநிழலலேயில் வீழ்வர்காண்பட்சம்ரெண்டே. 25

வேறு தோஷவகை.

காணப்பாதோஷங்கள் பிறக்கும்போது காணுநீகுறிசொல் வோம்கருதிப்பாரு, தோணப்பாவுண்ணுக்குவுதடுகெஞ்சு சுகமான காதுபல்குறிகுமாகில், வீணப்பாதினம்மூன்றில் மரணமாகும்மே லானவன்னிக்குத் தோஷமென்பார், ஊணப்பாவற்றிநின்றபித்தத் தோர்க்கு உடம்புபருத்தூ தினு லுரைக்கக்கேளே. 26

கேளப்பாமதியாறில் சாவுண்டாகும் தேடிலையத்தால் விளைந்த தேகமானல், நாளப்பா திங்களென்றில் சாவார்சாவார் நலமான சிவகளைநாட்டங்கேளு, வேளப்பாமேபேறிநடந்துதானல்மேன்மையுடன் சிவகளைவிடுபடாது, தாளப்பாகீழ்நோக்கி நடந்துதானல் தவறுவருஞ்சிவகளை நாடிதானே. 27

வேறு.

தானென்றநாடிகீழே தாண்டியே வாங்குமாகில், தானென்றவுயிர்தான்மாளும்சாதகமின்னங்கேளு, தானென்றமூன்றுநாடிதன் வசங்குறைந்துபின்னுர், தானென்றவாதபித்தம்பித்துஅய்யமீறில் தானென்ற திடங்கொண்டாலுஞ் சாவதுதிண்ணமாமே. 28

தோஷ நிவர்த்தியறிய

ஆமப்பாவாதபித்தத் தாண்மையையறிந்துக்கொண்டு
நாமப்பாமருந்துசெய்ய நலமுறுதோஷந்தீரும்
வேமப்பாபித்தமானல் வெம்பிடுமுயிர்தான்காணும்
போமப்பாவாதநிற்கிம் பொருந்தியமருந்துநல்கே. 29

நல்கியமூன்றுநாடி நரம்பெலாங்குதித்துப்பொங்கி
இலங்கியமேவின்மேலே யேறித்தானேடுமாகில்
மல்கியமரணமில்லை மறிந்ததுகீழேநாடி
னுல்கியவுயிருக்கீன முற்றுநீயறிந்துகொள்ளே. 30

அறிந்திடவுந்திக்கீழே யமளியாய்குதிக்குமாகில்
எறிந்திடவுயிரையுண்ணு மெய்யுமாதோஷமப்பா
செறிந்திடதுந்திதாலுஞ் சேறிடம்வாய்வுக்கப்பால்
மறிந்திடாதசநாடிக்கு மகத்தானவீடாம்பாரே. 31

பாரப்பாநோயுள்ளோர்கள் பக்குவம்பார்த்துநீயும்
வாரப்பாவுமிந்திட்டாக்கால் மைந்தனேணீரப்போகில்
காரப்பாதாக்கித்தானல் குறைந்தவன்சாகான்கேளு
சாரப்பாகிட்டவீழிற் சாவதுசடுதிகாணே. 32

மந்தம் வருமாறு.

காணப்பாமுறைபாடெல்லாங் காண்பதுமந்தத்தாலே
பூணப்பாமந்தமானல் புகுந்திடும்வாய்வுதானும்
வாணப்பாநோய்களெல்லாம் வாயுவால்விளரும்பாரு
மூணப்பாவப்புவன்னி முத்தோஷம்மூன்றும்பாரே. 33

பாரப்பாமந்தமுண்டாம் பரிசனமுரைக்கக்கேளு
காரப்பாமிகுந்துமெத்தக் கபளிக்குமன்னத்தாலே
வாரப்பாவிறைச்சியாலும் மாப்பண்டத்தாலுந்தானுஞ்
சேரப்பாமேதிப்பாலால் சேர்க்திடுமெந்தந்தானே. 34

தானென்றவன்னத்தாலே தலைப்பட்டவுடம்பிதப்பா
தானென்றவன்னமப்பா தனிப்பழிகொண்டுமீறில்
தானென்றவன்னமெல்லாஞ் சகலவித்தாகும்பாரு
தானென்றதானுக்கெல்லாந் தத்துவமரைக்கக்கேளே. 35

கேளப்பாவெட்டைபித்தங் கெடியானவாதம்வாய்வு
வாளப்பாஅய்யஞ்சீதம் வாந்திடுமன்னத்தாலே
பாளப்பாவன்னந்தானும் பகையுடன்பழியுங்கொள்ளும்
கேளப்பாஅன்னத்தாலே மேகங்கள்பிறப்பைக்கேளே. 36

மேகம் பிறக்கும் வகை.

மேகங்கள்பிறந்துநின்ற விதங்களைவிளம்பக்கேளு
ஆகங்களிழந்தபோதும் அப்பனேதினமுஞ்சென்று
போகங்கள்செய்யும்போதும் புகழ்மந்தங்கூடும்போதும்
பாகங்கள்பசியினோடும் பலருஞ்சையோகத்தாலே. 37

சையோகஞ்செய்யும்போதுந் தனினின்றசுழியேயோடும்
ஐயனேஅமுதந்தன்னை அடக்கியேஅனல்தான்கொள்ளு
மெய்யடாவிந்துகாணில் விழவிழவிண்ணுங்காணும்
மையடாமேகத்தாலே வளர்ந்ததுகிரந்திபாரே. 38

கிரந்தியால்விரணமுண்டாம் கெடியதிற்சியாமேகம்
முராந்தியவிரண்டினாலே மலைவாயில்சூலைகாணும்
பராந்தியமூன்றினாலே பலபலமேகங்காணும்
தூரந்தியலிங்கத்தாலே தொல்லைநோயெய்துங்காணே. 39

தொல்லையாஞ்சுரத்தினாலுஞ் சூழ்கின்றவாயுவாலு
மல்லையேசெய்யுமாகி லன்னத்தைக்காட்டிடாதே
வல்லையேவன்னிராஜன் வழியதுசெய்வேயானால்
தொல்லையேதில்லையப்பா சூழ்நோயும்வாய்வுதானே. 40

வாயுவேமிகுந்ததானால் மைந்தனேமேல்மூச்சேரும்
வாயுவேமிகுந்துதானால் மலர்ந்திடும்விரணமெல்லாம்
வாயுவேமிகுந்துதானால் மலஞ்சலமிரண்டுங்கட்டும்
வாயுவினாலேயப்பா வளருத்திரரோகமாமே. 41

ருத்திரரோகம்.

ஆமப்பாருத்திரரோகத் தாண்மையையுரைக்கக்கேளு
வேமப்பாவென்பிற்பாய்ந்து மிகநெஞ்சிக்குத்துண்டாகி
போமப்பாபித்தந்தன்னைத் தப்பித்துப்போகொட்டாமல்
பாமப்பாபேசும்போது பதையாமற்சாவார்பாரே. 42

வேறு சுகஜன்னி.

புதையாமல் செய்கின்ற சன்னிமார்க்கம் பாய்கின்ற விதங் கேளுபண்பாய்நீயும், நிதையாமலெண்ணெயுடன் தீர்த்தமாடி நிறம்பவே தயிர்கூட்டிப் பொசித்துப்பின்னுங், குதையாதமந்தமுடன் புணர்ச்சிகூடில் கூட்டியேவாயுதான் கபாலத்தேறி, அதையாமல் போக்குமோகஞ்செய்யும் அப்பனேசதியொடு சன்னியாமே. 43

வேறு.

சன்னிதான்றேன் றும்போதுஞ் சடமெல்லாம்வேர்வைகாணும்
கன்னிதன்சுகத்தால்மைந்தா கண்கள்தான்சிவப்பேயாகும்
மின்னித்தான்காற்றலையா மகத்தானதோஷமாகு
வன்னிதான்சுகத்தில்நன்றாய் விழுந்திடுங்காயந்தானே. 44

மூலரோகம்.

காயத்தில்மூலரோகங் கண்டிடும்விதங்கள்கேளாய்
பாயொத்தபசியில்லாமல் பட்சிக்கிலடக்கில்வாய்வு
மாயத்திலிருத்திக்கொண்டு மலமறையடக்கும்போதும்
ஓயத்தகுண்டலிக்கு ளூட்புகும்வாய்வுதானே. 45

காணப்பாவாயுவாலுங் கனந்தந்தவபானன் றன்னைப்
பூணப்பாமலத்தைக்கட்டிப் புகையெனக்கருக்கிநாளுந்
தோணப்பாமுளையைப்போலச் சுருக்கிமுன்மலந்தான்விழில்
ஆணப்பாவபானந்தன்னை அழுந்தவேயிறுக்கும்பாரே. 46

இறுக்கியமூலமொன்று எழுமண்டலமுமொன்று
வறுக்கியேபுண்ணுப்சிழ்தான் வடிகின்றமூலமொன்று
உறுகியவாயுவாலே யுதிரந்தான்கட்டிநின்று
தருக்கியகிறுச்சினங்கள் தான்ரத்தமுலமாமே. 47

மூலமேயெழுந்தபோது மூலத்தில்கனல்தான்மாளும்
மூலமேயெழுந்தபோது முளைவிந்துநாசமாகும்

மூலமேயெழுந்தபோது முழங்கவேயிரைச்சலாகும்
மூலமேயெழுந்தபோது முகிலில்லாக்கழிச்சல்தானே. 48

வேறு.

கழிச்சலென்ன கிராணியிலே விதமாறப்பா கண்டபித்த மனல் வாதம்வாயுவாகும், அழிச்சலென்ற ஐயமீர் மூன்றுங்கூடி அப்பனே பேதிக்கும் பிலந்தான்போகுங், தெழிச்சலென்றவாய்வுதான் மேக பேதி திறமானமூலத்தின் தோஷபேதி, பழிச்சலென்றசங்கான பேதியொன்று பாரப்பா வாயுவொன்று ஆறுமாச்சே. 49

வேறுமேகத்தின் குணம்.

ஆச்சப்பாமேகங்கேளு அப்பனேமூன்றதாகும்
நீச்சப்பாமேகந்தன்னை நிசஞ்சொன்னேன்காணுகாணு
காச்சப்பாமஞ்சள்போலக் கவிசனர்தன்னிற்கண்டால்
வீச்சப்பாபித்தமேகம் விளம்பினர்விரும்பிக்காணே. 50

விரும்பியேசிலைதானும் வெளுத்திடில்வாதமேகம்
மருவியகவிசனந்தான் மயிலதினிறமேயானால்
திரும்பியஐயத்தாலே சேர்ந்திடுமேகமாகும்
சுரும்பியமூன்றுலப்பா தோன்றிடுங்குணங்கள்கேளே. 51

கேளப்பாபித்தம்வாய்வு கெடியுடன்சேருமாகில்
தாளப்பாஞானமான தமரிலேயெரித்துவேகும்
வீழப்பாநீரைகட்டும் விஷம்போலக்கசியும்பாரு
பாரப்பாசிலநேரந்தான் பளிச்செனப்பிறக்குந்தானே. 52

தானென்றவாய்வொதுங்கில் தண்டினில்நோவுகாணும்
வானென்றமந்தத்தாலே வாயுவுட்புகுந்தேசாடும்
கானென்றவெரிச்சல்காணுங் கல்லடைப்பாகும்பின்னே
மானென்றவாதம்வாய்வு மருவிடில்வெள்ளைகாணே. 53

வெள்ளைதான்மெத்தவீழில் மேனியும்பொருமிக்காணும்
கள்ளமேசரீரமெல்லாங் கறுப்புடன்றழும்புமோடுந்
தள்ளவேதாதுநட்டந் தாகமுமிகுதியுண்டா
முள்ளதுசொன்னோம்நாமு முற்றுணர்ந்தறிந்துகொள்ளே. 54

அறிந்திடவாயுவோடே ஐயம்வந்தெய்துமாகில்
பிறிந்துநீர்பொசிந்துயாது பிறவெள்ளைவீழ்ந்திடாது
எறிந்திடுந்தீயைபோல இளைப்புடனிருமலுண்டாம்
மறிந்திடும்புகைச்சல்காணும் வலிந்திடுமேகந்தானே. 55

வலித்திடும்வாதந்தானும் வளரையம்பித்தந்தானு
மொலித்திடுமகத்தாமேகம் மொழுங்கிடுஞ்சரந்தான்மாறி
சலித்திடுதாகமீறுஞ் சாப்பிட்டாலுடனேகாந்தும்
வலித்திடும்வாய்நீரோடி மழுங்கிவாயினிக்கும்பாரே. 56

இனித்திடும்வாதமேகத் தியல்புநல்லெண்ணெய்போலும்
பனித்திடுங்கள்ளுப்போலும் பதியில்நீர்போல்தானேடும்
கனித்திடுமேனியெல்லாங் காய்ந்திடும்வெளுத்துப்போகும்
தனித்திடுமேகந்தானும் சாத்தியமையந்தானே. 57

ஐயமும்பித்தமுந்தா னணைந்திடுங்காலந்தன்னில்
கொய்யுறுரெத்தந்தானும் கொப்பளித்தோடுந்தண்டில்
மையுறுங்கண்ணினுட்கு மகோதரம்பெரும்பாடாகும்
தொய்யுறுமேகமுண்டாந் துடர்ச்சியைமுறையாய்க்கேளே. 58

முறைகேளுவொன்பதப்பா முயற்சியால்வந்தமேகந்
துறைகேளுகெற்பத்தாலுஞ் சூழ்கின்றமேகமொன்று
நறைபூத்தகூந்தல்நல்ல நாயகன்மோகத்தாலு
மறைபோற்றுங்கெற்பத்தாலும் வளர்ந்ததுமேகந்தானே. 59

வளர்ந்திடுங்கெற்பத்தாலு மருவியமேகமஞ்சு
முளந்திடுதந்தியாகு முள்ளத்தில்மேகந்தானே
யளந்திடும்வெள்ளைகொட்டு மாகாதமாமேகந்தான்
தளர்ந்திடுமத்துமீறித் தணலெரும்புறுக்கியாமே. 60

தணம்போலக்காயுமேகந் தண்ணீர்தான்பகையாமேகம்
முணக்கவேமுழுகுமாறி முறுக்குமாமேகந்தானும்
பிணங்கவேபசிதான்கேட்டு பேரெழுமேகந்தானும்
வணக்கவேசையோகத்தை வர்ச்சிக்குமேகமாமே. 61

ஆமப்பாகடுவெஸ்துண்டா லாகியமேகம்பின்னு
போமப்பாபாஷாணத்தா லுற்றிடுஞ்சிலமேகங்கள்
நாமப்பாசொன்னேமிந்த நாடியாஞ்சூத்திரந்தன்னில்
ஓமப்பாவிதுதானேழு மஞ்சுமுன்னேன்பதாமே. 62

குன்மவரலாறு.

ஆகியமேகந்தானு மப்பனேயிருபத்தொன்று
மேகியகுன்மந்தானு மெழுந்ததோர்விதங்கள்சொல்வோம்
பாகியபித்தத்தோடு வாதமும்பரிந்துசேரில்
வாகியவாய்நீரூறும் வாந்தியுமாகும்பாரே. 63

பாரப்பாவாய்வுவாதம் பரிவுடன் அபானத்தோங்கில்
ஓரப்பாகும்பிதன்னி லுநண்டுதான்மிகவேநோகுங்
கோரப்பாநெஞ்சுகுத்துங் குடலையுமுறுக்கிக்கொண்டு
வாரப்பாவலிக்குமெத்த வாதமாய்வழங்கும்வாய்வே. 64

வழங்கியஅப்புவோடு வாதமுமொன்றேயானல்
தழங்கியஅன்னசாரம் சந்திக்கவொட்டாதப்பா
புழங்கியநிதானந்தப்பிப் பிடியன்னமேறில்குத்து
முழங்கியமுறுக்குமேறில் உயிரையும்வதைக்கும்பாரே. 65

வகையுறுவாயுவோடு மேகமுமருவுமாகில்
பதையுறுமலஞ்சலங்கள் பரிவுடன்கட்டிக்கொள்ளு
மதையுறுமிடதுபக்க மைந்தனேவலதுபக்கம்
பிதையுறுமுறுக்கிக்குத்தும் பெருஞ்சூலைகன்மமாமே. 66

சூலை வரலாறு.

குன்மமோரிதுதானுவில் கூறிதெண்விதமாம்பாரு
வன்மமாம்நோய்கட்கெல்லா மகாநோய்தான்பொல்லாதாகும்
கன்மமாஞ்சடத்துக்கெல்லாங் காணுங்காணிந்தரோகம்
நன்மையாந்தன்மத்தோர்க்கு நடந்தாலும்நாட்டிடாதே. 67

நாட்டியபித்தசூலை நடத்தியவுறவைக்கேளும்
ஊட்டியவன்னமுண்ண ருசிதப்பிவாந்தியாகும்
மாட்டியகைகால்சந்து வகையுந்தன்மேலும்நோக்கு
நீட்டியவங்கங்கேதான் நின்றெரிந்தூறுங்காணே. 68

காணப்பாவாதசூலை காட்டுந்தான்குறியேதென்னில்
காணப்பாகைகால்சந்து குளேச்செலாங்கடுத்துநோகும்
காணப்பாவயிறுவிம்மிக் கனத்துடன்சுரப்புங்காணும்
காணப்பாதேகமெத்தக் கனத்திடுமிளைப்பதன்றே. 69

இளைத்திடும்வாதசூலைக் கெய்தியகுணங்கள்செய்வோம்
குளைந்திடுங்கைகால்நெஞ்சி குத்துடன்வாண்டிருக்கும்
தளைத்திடுமார்பில்சென்று தாக்குமேமேலெறிவெட்டு
மளைத்திடும்சீதானகக்கு மாகாதவையமாமே. 70

ஆகாதவாதபித்த மனைத்திடுஞ்சூலைமீகளு
வாகானகால்கள்கையில் வளமுடன்கரடுகட்டும்
காகானமேனியெல்லாந் தடிப்புடன்வெடிப்புண்ணுகி
போகாதவசாத்தியமாகிப் புணர்ச்சியால்செல்லுந்தானே. 71

சொல்லியவையத்தோடெ பித்தமுங்கூடிற்றானல்
வல்லியம்போலக்குத்து மைந்தனேயெலும்புதோறும்
மல்லியசரீரம்நோகும் வரிசையாய்சுரமுங்காணும்
மெல்லியதனுத்தான்வற்றும் விடங்கக்குமிருமுந்தானே. 72

தானென்றவையத்தோடு சமவாகசூலைகேளு
தானென்றகாலிலாணி யெலும்பெலாங்கறுத்துக்கெட்டு
கோனென்றகழிச்சல்வாங்காக் குளிர்சுரமாறலாகி
மானென்றதாதுநட்ட மறுசூலையாறும்பாரே. 73

ஆறுகுஞ்சூலையப்பா வதிலொன்றில்மூன்றுசோலை
வேறுகும்பதினெட்டாகும் வெவ்வேறுசூலையில்லை
கூறுகவிதனலப்பா குணங்கள்தான்கோடியாகும்
பேறுகுமிவர்கள்பேரைப் பிரித்துரைசெய்வோம்பாரே. 74

பாரப்பாகெர்ப்பாகாரம் பரிவுடன்வாய்வுநீதய்வு
சேரப்பாபுந்தியோடு சென்றிடிற்கருததான்மாளும்
வாரப்பாபுழுத்தானுண்ணின் மலடெனச்சொல்வாரப்பா
ஆரப்பாவிதனைப்போக்கி லாண்பிள்ளைஜெனிக்குந்தானே. 75

செனிக்கின்றகுழவிதானுந் திடத்துடன்பிறக்கும்போது
கனிக்கின்ற சீழ்நீர்போல கலந்துள்ளேகட்டிநிற்கும்
பனிக்கின்றவிடுப்புக்கைகால் பரவியேநொந்துகுத்துந்
தனிக்கின்றபசிதான்போகுந் தடித்திடுமமுதம்பாரே. 76

பாரியவாய்வுதானும் பரிவுடன்குழிதான்சேறில்
தாரியகழிச்சலாகிச் சதாநித்தமுறுமிச்சாடும்
வாரியதேகமெல்லாம் வலியேழுமிடைதானேகும்
மாரியனெனக்குச்சொன்ன னய்ந்தவர்சித்தர்தானே. 76

தானென்றகெற்பத்தோடு தரித்திடுஞ்சோறைகட்டில்
வானென்றமத்துப்போலே வாயுவுமுருளும்பாரு
ஊனென்றபசிதான்போகு முளைத்துதானிரைச்சதுண்டாம்
மானென்றகழிச்சல்மீறும் வருஞ்சூதவாயுவாமே. 78

சூதானகெர்ப்பகாலஞ் சுற்றியேவிக்குமெகாள்ளில்
வாதானமேகமீறி வழங்கியேசெனிப்புங்காண
போதானவுடம்பதெல்லாம் புண்போலேமிகவும்நோகும்
நீதானமயக்கமாகி நிற்சீவனுகுவானே. 79

ஆகின்றவாரசூலை கெர்ப்பத்திலடர்ந்தநோய்காண்
பாகின்றவகைதான்சூழில் பலித்திடாக்கருவுமப்பா
வாகின்றதிதுதான்போக்கில் மலடிதான்பெறுவாள்பிள்ளை
யாகின்றநோய்கட்கெல்லா மறைந்திடுமுறைபாடாமே. 80

கெர்ப்பசன்னி.

முறையானகெர்ப்பந்தன்னில் முயன்றதோர்சன்னிகேளு
முறையானசெய்நீர்க்குள்ளே யுரைத்திடில்வாய்வுமீறில்
விறையானதேகம்வேர்க்கு மெய்யலாமயக்கமாகும்
துறையானமலந்தான்கட்டுஞ் சோபிக்குந்துணிந்துபாரே. 81

பாரப்பாமாதர்க்கெல்லாம் பச்சுடம்பாகுங்காலம்
தாரப்பாவனுபோகிப்பன் தனிப்பழங்காடியுண்பாள்
ஆரப்பாமாங்காய்தின்பா ளப்பனேமாவுதின்பாள்
கூரப்பாசன்னியெய்துங் கொண்டிடுஞ்சன்னிகேளே. 82

கொண்டிடுமலடிக்கப்பா கூடுடுமட்சென்னி
வண்டிதான்ருதுகாலத்தில் மாத்தின்பாள்மோர்தானுண்பாள்
தண்டியேயணைவாள்பின்னாக தனிச்சூதக்காயுந்தின்பாள்
ஒண்டியேபெண்களுக்கு ஒரெட்டுச்சன்னியாமே. 83

ஓரெட்டுச்சன்னியங்கா யுற்றதோர்பெண்களுக்கு
வாரெட்டுப்புருடனுக்கு மாத்தானசுகசன்னிதான்
நேரெட்டுப்பார்க்கும்போது நெகிழ்ந்ததுவெவ்வேறாகும்
பாரெட்டுமஞ்சவேதான் பகர்ந்திடுங்கண்ணோய்கேளே. 84

கண்ணோய் வகை.

கேளப்பாபொடிச்சூடாலுங் கிளர்வெய்யிலதுகாய்ந்தாலும்
வாளப்பாமின்னார்தம்மை மருவியேநித்தநித்தம்
காளப்பாமுழுக்கிலாதால் கண்ணினால்கனல்தான்பார்த்தால்
தாளப்பாபாஷாணத்தால் தாளெழுங்கண்ணோய்பாரே. 85

கண்ணினோய்தானுண்டாகுங் காரணமின்னஞ்சொல்வோம்
பண்ணான்மேகத்தாலும் பகர்வெட்டைவாயுவாலும்
தண்ணானயப்புவாலுந் தனிமலக்கட்டினாலும்
புண்ணானவிரணத்தாலும் பொருந்தினகாரத்தாலே. 86

காரமாஞ்சாரத்தாலுங் கடுரசத்தூமத்தாலும்
நீரமாஞ்சாரக்குகட்ட நிலையுறுபகையினாலும்
பாரொத்தமேதியாலும் பலபலதண்ணீராலும்
வீரமாமிவற்றில்கண்ணில் செழித்திடும்வியாதிதானே. 87

குஷ்ட வகை.

வியாதிகள்மூவாறுக்கும் விளங்கியகுட்டங்கேளு
சுயாதியாமேகத்தாலும் சூழ்கின்றகிரந்தியாலும்
பயாதியாமாறதாகும் பலவண்டினாலெயெட்டாம்
வியாதியாம்புழுவானாலும் ஐபமாம்பதினெட்டாமே. 88

ஆமப்பாநோய்கட்கெல்லா மாசிதான்மூன்றுநாடி
காமப்பாவளர்ந்தென்னாளும் கருவியேகலந்துசேர்ந்து
வேமப்பாவெந்துநீறி விடமெல்லாம்பிளந்துபின்னும்
சாமப்பாபிறக்குதந்தத் தாதுவின்வீக்கங்காணே. 89

காணப்பாநாடிசொன்னேன் கலந்திடுங்கருவுஞ்சொன்னேன்
தோணப்பாநோயுஞ்சொன்னேன்சூட்சமும்வகுத்துச்சொன்னேன்
பூணப்பாயவத்தைசெய்யும் பூட்டையும்விரித்துசொன்னேன்
வீணப்பாசொல்லவில்லை விதிமுறைவணங்கிக்கேளே. 90

கேட்டிடும்நாடிபத்தில் கெடியேழுநாடிதள்ளி
நாட்டிடுநாடிமூன்றில் நயம்படுமிடையேவாதம்
மாட்டுபின்கலைதான்பித்த மையதுசுழிதானாகும்
வாட்டிடுமவமேவாத மருவிடும்பித்தநீரே. 91

பித்துற்றஐயம்விந்து பிரிந்தநற்பூதங்கேளு
உத்தநல்வாதம்வாய்வு ஓங்கியபித்தந்தேய்வு
சுத்துற்றஐயந்தண்ணீர் சோர்வில்லைபின்னல்வாதம்
பத்துற்றபிராணன்பித்தம் பகையுறுசமானனேயே. 92

ஐயமாநாடிமூன்று லழிக்கவுமாக்கலாகும்
நையவேயொன்றில்மூன்று நாடியாம்நல்லதாகி
மையுறுங்கருவிற்கெல்லாம் வாசல்காப்பவரேயாகிச்
செய்யுறுதொழில்கட்கெல்லாஞ் சித்துடன்சித்துமாமே. 93

ஆமப்பாயெழுபத்திரா யிரநாடிபத்தில்மூன்றாய்
சோமப்பாவுந்திக்கீழே சுழிதனைப்பற்றிநிற்கும்
காமப்பாவிளைந்தென்னாளுங் கருவியவத்துப்பின்னும்
சாமப்பாவிளைக்குமந்தத் தாதுவின்விளக்கந்தானே. 94

வளர்ந்திடுந்தாதுதன்னை வசையதில்துகையேசொன்னேன்
வளர்ந்திடும்வியாதிக்கெல்லாம் மணியொடுமருந்தைச்செப்ப
வளர்ந்திடுஞ்சாக்குக்கெல்லாம் வகைவகைசுத்திகேளு
வளர்ந்திடும்நோய்களெல்லா மருந்தினாலொழியுங்காணே. 95

காவியத்தின் நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 352.

வல்லாதியின் வயித்திய நாடிப்பரிட்சை.

நோய்வரும் வரலாறு.

நாடுவாய்நோய்வருவ தேதென்றுக்கால் நவிலுவோமதிபோகச் சையோகத்தால், சூடுவாய்மேகமுண்டாய்வாய்வுசேர்ந்து சோவே நோதாச்சிதிடமும்போச்சு, கூடுவார்கெற்பத்திற் புணர்ச்சிமீற கொல்லுமடாநோய்பாகங்கூறக்கேளு, தேடுவார்தேகமது யெண் சாணீளம் செப்புவோமங்குலந்தான் தொண்ணூற்றாறே. 1

நாடி நிதானம்.

தொண்ணூற்றாறங்குலத்தின்மூலந்தன்னிற்சொல்நாடியெழுப த்தீராயிரந்தான், தண்ணூற்றுமுதில்நாடிபத்துமாகுந்தப்பாதுயிது மூன்றுந்தூக்கிப்பாரு, விண்ணூற்றியெழுபத்தீராயிரந்தான்மிகுத் த நோய்தனிற்சுருக்கம்விரைந்துபாரு,எண்ணூற்றித்தொண்ணூறு ஐயஞ்சிலேற்றும மிதுகையிற்றசநாடிபகுத்துக்காணே. 2

தச நாடி.

காணுவாயிடைசுழிமுனைபின்கலையினோடு காந்தாரிசிங்குசங்கினிய சனியினோடு, பூணுவாயலம்புருடன் சிங்குவையுமல்லாற்புகழுமிவர் செய்தொழிலும் பொருந்துமிடங்கேளு, காணுவாயிடதுகாலங்குட் டத்திருந்துகத்திரிமாறுயிடது நாசிதனிற்பாயும், பேணுவாய்பின் கலைதானிடதுகாலின் பெருவிரலிலிருந்துகத்திரிமாறலாமே. 3

தச வாய்வு.

ஆறுனவலதுநாசியினிற்காரு மப்பனேசுழிமுனைமூலத்திருந்து மேலே, வீறுன ஆக்கினையுமட்டும்பாய்ந்து விதுதானு முச்சிலஞ் சிறு வாணியாகும், பேரான சிங்குவை யுண்ணாக்கில்நின்றும் பேணியுண்ணு மன்னத்தைக்கீழப்போச்சுஞ், சோறுனபுருடனது வலதுகண்ணிற் சோதியுடன் பார்வைகொடுந்தொழில்கண்டீரே.

தொழிலானகாந்தாரியிடதுகண்ணிற்சோதியுடன்பார்வைதரு ஞ்சூட்சமாகும், தெழிலான அசனையதுவலதுகாதில் நிற்குமடா அலம்புருடனிடதுகாதில், குழலானசங்குனி லிங்கத்தில் நின்று கொடிபோலசுற்றுமடாகூறினேனுன், எழிலானகுருதன் பானத் தைக்கொள்ளு மியம்பவேதிசைவாய்வையிசைந்துகேளே. 5

இசைந்துகேள் பிராணனுடனபானந்தானுமெழிலானவியான னுமுதானன்கூர்மன், அசைந்துகேள்தேவதத்தின்சமானநாகன் ஆன திரிகரணன்றனஞ்செயனிவர்கள்பத்தாம்,பிசைந்துகேள்பிராண ன்மூலத்திருந்துபின்கலையோடிடைநடுவாய்கையில்மட்டும்,பிசைந்து கேள்முடியாதுநாசியூடு பன்னிரண்டங்குலம்பாயும்பாழாம்நாலே.6

சுவாசத்தொகை.

நாலேதுபத்தெட்டு வுள்ளேபாயும் நாழிகைக்கு முன்னூற்றி யிருபதாகும்,ஏலேதுநாளொன்றிசுவாசந்தானுமிருபத்தோராயிரத் தியறுநூறப்பா,மேலேகும்பிராணநெஞ்சில்நின்றிபோகும்விளங்கு மேதிரிகன்றும்பலையுண்டாக்கும், காலேகுகுராங்குதனுடன்கான்பா ன்றுக்கழிக்குமே மலசலத்தைக்கருதிப்பாரே. 7

பாரடாநாடிதனிற்சமானநின்றும்பருகியதோரன்னத்தைச்செ ரிக்கப்பண்ணு, ஊரடாவதானகண்டத்தில்நின்று உண்டவனபான த்தைக்கீழேபாய்ச்சும், வீரடாநாகன் விக்கலையுண்டாக்கும் வியான மேலோங்கிவந்த தைலமல்லால், வாரடாவிருத்திதனையுறுப்புக்கெல் லாம் வளமாகப்பாய்ந்துமே யிருக்கும்பாரே. 8

பார்க்குமேகூர்மனதுகண்ணைமூடிகண் திறக்கச்சிமிட்டலுடன் பண்ணுவான்பார், ஊக்குமேதேவதத்தின் செயுக்கொட்டாவியுடம் புமுறுக்குண்டாகு முண்மையாக, கார்க்குமே தனஞ்செய்தானுயிர் போனுச்காற் கபாலத்தில்நின்றுடம்பையூதப்பண்ணும், ஆர்க்குமே மண்டைதனைச் சிறிப்போவா னப்பனேசொல்லிவிட்டே னறிந்து கொள்ளே. 9

திரி நாடி.

கொள்ளடா திசைநாடிதன்னில்மூன்று கூறுவேனிடைசுழினைப் பின்கலைதானென்றும்,விள்ளடா திடகலைகானிமிரமாறிமிருந்தாக்கா லங்குட்டத்திருந்துயேறி, கள்ளடாகண்டத்தில்மாறியோட்டிகபால வரைதனில்முடிமார்பிற்பாய்ந்து, தள்ளடாவலதுகரம் பின்கலைதா னேடுங் தனித்தயிடையிடதுகரஞ்சாருந்தானே. 10

சாகுமடாசுழிமுனைதா னடுமெய்யத்தில் தாதுயிதுமூன்றாலே தாக்கிப்பாரு, பேருமடாயிடையதுதான்வாதமாச்சு பின்கலைதான் பித்தமடாபேணிப்பாரு, சேருமடாசுழிமுனைதானையமாகுஞ்செப்பு வேன்திசைவாய்வில்மூன்றுவாய்வு, ஊருமடாவாதபித்தஞ் சேத்து மத்திேடு வொன்றுகச்சேர்ந்திருக்க வுரைக்கிறேனே. 11

திரிநாடி விபரம்.

உரைக்கிறேன் அபானனதுவாதஞ்சேருமுற்றுப்பார் பிராண னதுபித்தஞ்சேரும், நிரைக்கிறேன்சமானனது ஐயஞ்சேரும் நேர் வாதம்வாய்வுபித்தம்நெருப்பதாகும், தரைக்கிறேன்சிலேட்டுமமது தண்ணீராகுஞ் சாணுமுதலித்திமட்டுவாதம்வீடு, விரைக்கிறேன் வுத்தியின்மேல்மார்புகட்டும் மிக்கபித்த மிருப்பிடமாய்விளங்குந் தானே. 12

தானென்றமார்பின்மேலுச்சிமட்டுந் தான்கபமேயிருக்குமடா சல்லிபோலே, வானென்றவாதமது துவக்கிற்சேதி மயிலோணுன் கோழியன்னமாகுமபோலுந், தேனென்றபித்தத்தை நோக்கிமேலே சென்றேறிசாயலன்றித்தெளிவாய்நிற்கும், நானென்ற பித்தநடை யாமையட்டை நல்லபுருபோற்சாயல் நாடிப்பாரே. 13

நாடி நடை.

நாடிப்பார் வாதத்தைநோக்கிப்பாயும் நன்றாகசிலேட்டுமந்தா ணகம்போலுஞ், சூடிப்பார்மண்டூகம்போலேயேறிச்சுருக்கில்லைகன மில்லைமெலிந்துநிற்கும், ஆடிப்பார்வாதமொன்றுபித்தம்பாதிஐயங் கால்பங்கானுல்சடமோயில்லை, தேடிப்பார்மூவிரலுஞ்சமனுயோடிற் றீராதுயிவைசன்னி வாதந்தானே. 14

வாத நிதானம்.

தானென்றவாதமது கோழிபோலே சாவலைப்போல்பித்தமது தாண்டுமாகில், சோனென்றவாதபித்தந்தொந்திப்பாகும் குறுதி யாம்வாதமது வோணன்போலும், கானென்றஐயமதுசர்ப்பம்போ லுங் கதித்திடுமேவர்த்தம்யாம் தொந்திப்பாகும், ஊனென்றபித்த மதுஆமைபோலு மோடுமேஐயமண்டூகமெண்ணே. 15

பித்த நிதானம்.

எண்ணுமே பித்தமையாந்தாந்திப்பென்று யிருக்குமேஅளவி டைதானின்னங்கேளு, பின்னுமேமணிகட்டின்கிழதாகப் பெருவிர லால்ரத்திலப்பா மூவிரலைவைத்து, மண்ணுமேமூவிரலிலிடையில் நெல்லைவைக்கு மிடம்விட்டுநீநாடிப்பாரு, முண்ணுமேமணிக்கட்டு தனக்குமேலே மூன்றுவிரற்கடையளவில் துடித்தாற்காணே. 16

ஐய நிதானம்.

காணுநீவாதத்தின்கோபமாகக் கருதுநால்விரற்கடைதான் பி த்தகோபம், ஆணுநீஐந்துவிரற்கிடையில்தாண்டி ஐயத்தின்கோப

மெனவறிந்துகொள்ளு, பேணுநீமயிலதுபோல்வாதமோடில் பெருஞ்சாரைப்பாம்பதுபோலேயமேறில், ஊணுநீபித்தமது அட்டைபோலு முட்சுருங்கற்சாவாமென் றுரைத்திடாயே. 17

மரணக்குறிப்பு.

உரைத்திடவேவாதமது பித்தத்தைநோக்கி யோடவேபித்தந்தாஐயத்தேறில், நிரைத்திடுமே ஐயமதுகண்டத்தேறில் நின்றுமேயுண்ணாக்கின்வழியைமூடி விரைத்திடுமே வாசலேந்துமடைந்துகொள்ளுமேலானசீவகலை மெலிந்துபோகு, மறைத்திடவேகடிகைஐந்தில்மரணமாவார் மழுவெடுத்தானுமக்குரைத்த வசனந்தானே. 18

வசனமென்னவாதமொடு சிலேட்டுமம்ரண்டும் வலுவாகிப்பித்தமதுமாய்ந்துபோகும், அசனமென்னதொண்ணூறுகடிகைதன்னிலவர்மரணமாவதுண்மையறிந்துகொள்ளு, பிசனமென்னபாவமொடுஐயம்பாய்ந்து பித்தந்தான் புருவென்ன தனிந்துநின்றால், விசனமென்னநாலு நாழிகையிற்சாவார் மெய்யென்றுபுலத்தியனே வறிந்துகேளே. 19

கேளடாவாதபித்தங்கீழேநோக்கிற்கெடியான துடிநாதம்வீணைநாதம், நாளடாபாம்பரணை வாலுபோலு நடுங்கினும்நா வெழும்புகளைக் கவ்வியோடிற், சூளடாகீழிட்டுக் கடிக்கும்போதுஞ் சுத்திவரும்போலவுமே சுழன்றிட்டாலுங், கேளடாபித்தஞ் சேத்துமத்தினுலேறி சினத்திட்டால்மெய்குளிர்ந்துதெரிக்குந்தானே. 20

தெரிக்குமேவயற்றுவலி நெஞ்சுவீக்கஞ் சிவந்திருக்குமஞ்சள்நிற்குங்கருகும்நாக்கு, எரிக்குமேமுகங்கோணுமிரவுக்கப்பா எரிச்சலுண்டாகப் பகல்குளிருந்திரேகந்தானு, முறுக்குமே டிக்கடிதான் பெருமூச்செய்து முழிபிரட்டுந்தா றுமாறுகப்பார்க்கும், குரிக்கையுள்ளங்கையுள்ளங்காலுங்குளிர்ந்திருக்கு முண்ணாக்குங்குறியைப்பாரே. 21

குறிகேளுமேற்சுவாசந்தானும்பாயுங் குளிர்ச்சிகண்டுமூக்கன்றிவாயிற்பாயும், மறிகேளுமுடல்நடுக்கு மறிவழிக்குமையா மைந்தனேவாடா திருக்கிலசைவுண்டாகும், வெறிகேளுவுச்சிதனிற்சூடுண்டாகு மீள்வதில்லைவீழ்ந்திடுதல் மெய்யென்றெண்ணு, துறிகேளுபொரியதவந்தரித்தவீசன் சுந்தரிக்குஞ் சொன்னதிந்தசுருதிதானே

நாடிமாத்திரை நிதானம்.

தானென்றவாதமாத்திரைதான்ரெண்டுதப்பாதுபித்தமதுதானென்றேறில், வேனென்றவாதபித்தந்தொந்திப்பாகுமிகுவாதமிர

ண்டுஞ் சிலேட்டுமமொன்ருகில், ஊனென்றவாதமையங்தொந்திப் பாகுமுற்றபித்தம் ரெட்டிக்குரைகமொன்றுசேரில், கோனென்ற பித்தமுடன்வாதஞ்சேர்த்துகொண்டதிந்தரோகமென கூறுவாரே.

கூறுவேன் பித்தமர்த்திரை ரண்டாகில் கொடிய சிலேற்பன மொன்றுகுதிக்குமாகில், தூறுவேன்பித்தசிலேட்டுமந்தானென் றுந்துலங்குசிலேட்டுமமிரண்டுவாதமொன்றுங், தேறுவேன்சிலேட்டுமவாதந்தானென்னுஞ் சிலேட்டுமமேநாடிபித்தமொன்றுசேரில், வேறுநீ நினையாதே செலுத்தும்பித்த மிகுந்திடுமே சுரம்பேதி மிகுதிதானே. 24

மிகுதியென்றஜயத்தில்வாதஞ்சேரில் மேலெலும்புநாகத்தின் பிலேச்சல்போலே, தகுதியென்றவாதமுடனையஞ்சேரில் தாரணியில் மயிலிரகுபோலேயாகும், திருதியென்ற பித்தமுடனையஞ்சேரில் சேற்றிலூர்தவளையொடுஅட்டைபோலாம், திருதியென்றஜயத்தில் பித்தஞ்சேரில் சீரடவுவாயில்பட்ட எலியுமாமே. 25

ஆமப்பாவாதமதுதனித்தபோது அப்பனேமயிற்சாயலாகிறிற் கும், தாமப்பாபித்தநடை பெருகவோடுங் தனித்துநின்றஜயமது அமர்ந்துமீளும், ஓமப்பாமூவிலுஞ்சரியேயாகிலுபர்ந்துநின்ற வாத பித்தமுற்றுப்பாரு, வேமப்பாமலசலங்கள்கட்டேயானல் மிச்சடா வாதமதுவிளங்கக்கேளே. 26

மேலாகுகுடெழும்பிற் மிக்கமிச்சங்கெடியாகக் குளிர்ச்சிகண் டாலேயமிச்சங், தாளடாவாதமதுபித்தஞ்சாரில் தப்பாதுசிலேட்டு மத்திற்பித்தஞ்சாரும், வேளடாஐயமது மேலேயேறில் மேலவத் தைக்கடையாளமார்புமூக்கு, கேளடாபுறங்கைகள் செவிகளோடு குளிர்ந்துமேவெதும்பிஐயமீறுந்தானே. 27

மீறிலோகடிகையந்தில் மரணமாவார் வெடிவெடித்தபித்த மதுமீறினக்கால், கூறுவேன்வாதமையங்குளிர்ந்ததானல் கொள்ளு மடாபித்தசன்னிஅறிவுபோகும், வாறுகேள்வாதமையமீறிற்றுனல் வகுத்தபித்தமழிந்துதானல்மரணசன்னி, சீறியேயுட்புகுந்து பிற விச்சாகிக்ஷணத்திலேயிசுவுவருந்திண்ணந்தானே. 28

திண்ணமுடனையத்தில்வாதஞ்சேரில்செப்புவேன்சன்னியொடு தோஷமுண்டாம், எண்ணமுடன்மெய்ப்பிக்குஞ்சோவமுண்டா மா ழில்மூர்ச்சைசோகையுடன் பாண்டுகாணும், வண்ணமுடன் பித்த த்தில்வாதம்வந்தால் வரும்வாறுபீனிசங்கள் மண்டைக்குத்து, சண்ணுமடாபவித்திரங்க ளரையாப்புண்டாங் தப்பாதுநவமூலஞ் சாருந்தானே. 29

சாருமடாபித்தமந்தவாதத்தேறில் களஞ்செய்யும்பாண்டுகா மாலைதானுஞ், சேருமடாசீரம்பல்மகோதரங்கள் கவுசிசெப்பரியமக வைவெப்புப்பார்வைதானும், வாருமடாஐயமது தத்தஞ்சேரில் வாயூரல் சுரம்பேதிவாந்திகாணுஞ், சேருமடா ஐயமது மீறிற்ருனல் தோன்றுமடாசயகாசம் சுருக்குந்தானே. 30

அவஸ்தைபத்து.

சுருக்கான அவஸ்தைபத்துஞ்சொல்லக்கேளு துடியானமுதலவஸ்தைபிணமேநாறி, முருக்கானவிரண்டுநலம் வேற்றுமைகூறுமூன்றுக்குந்தெளிவதநாற்றமாகும், அருத்தானநாவிளைமேலிளைப்புகாணு மைந்துக்குமுகம்வேர்க்குமாறுக்கப்பா, நருக்கானயுடம்பதுவுங்குளிருமேழில் நன்ருன அன்னத்தைநாடும்பாரே. 31

நாடுமேயிருநான்கில் கண்பஞ்சாடும் நலமாகவொன்பதிலேயுடம்புவேற்கும், ஓடுமேபத்துக்குமரணமாவார் உத்தமனே அவஸ்தைபத்து முரைத்தேன்பாரு, தேடுமேபலநூலுமறிந்துகொண்டு தேசத்தில் வைத்தியந்தான் செய்யவேண்டுங், கூடுமே அசாத்தியமசாத்தியத்தின் குணங்குறியுங்கண்டுமே கூறினேனே. 32

கற்ப கருவுற்பத்தி.

ஆண்மையென்றுமங்கையர்கள் பூர்க்குங்காலமன்றுமுதல்பதிஞறுநாளுமந்த, தாண்மையன்றிப்பதிஞறுயிதழாய்நின்ற தாமரைபோல்மலர்ந்திருக்குஞ்சாற்றக்கேளு,ஈாண்மையன்றிதினமொன்றுயிதழ்தாஞென்று தருவானகருக்குழிதான்மின்ஞட்குள்ளே,பாண்மைஎன்றவித்தங்கேயூறும்போது பாயும்பாவன்னியோடி வாய்வுதானே. 33

வாய்வோடுவிந்துசென்று மலர்க்குட்சேர்ந்தால் மலரிலுள்ளயிதழ்களெல்லாமூடிக்கொள்ளு, தேய்வோடுவாய்வுநின்று திரட்டும்பாரு செப்பியதினமொன்றில் கடுகுபோலாம், காயுமடா ஙாளிரண்டில் மல்லிபோலாந் தப்பாமல்நாள்மூன்றில் கடுகுபோலாஞ் சேயுமடா நாலாநாள் வரைவிரைபோலாகுஞ் சேர்வைந்தாநாள்குமளிபோலாகுமே. 34

ஆகுமேஆருநாள் நெல்லிக்காய்போ லானநாள்யேழுக்குப்பின்னைக்காய்போல், எகுமேயெட்டாநாள்பஞ்சபூதமீதிலுண்டாம்பஞ்சவர்ணமிதிலேதோன்றும், போகுமேநவதினத்தில் காக்கைமுட்டைபோலாகும்பத்துமுதலைந்துநாளும், வேகுமேகோழியண்டவடிவதாகும் விள்ளுகிறேன் திங்களொன்றில் வாழைப்பூவே. 35

பூவிலேயிரண்டுதிங்கள்கறுத்துண்டாகும் புகழ்சிரசுமுறுப்பாமுமூன்றுந்திங்கள், தாவிலேசங்துக்கவகையுண்டாக்கி சட்டகம்போல்வடிவாகிவிரலுமுண்டாம், நாவிலே வாய்நாக்கு மூக்குமுண்டாம் நவிலுகிறேன் மாதமைந்தில் செவியுண்டாகும், பாலிலே ஆறுதிங்கள் குயத்துவாரம் பாலுக்குமேழுச்கும் நரம்புதானே. 36

நரம்புதானெழுபத்திராயிரந்தான் நாடிபெட்டாந்திங்களுக்குளுயிருண்டாகும், உரம்பவேதாய்பொசிக்குமன்னசாரமுச்சிவழிதானிறங்கியுடல்பெருக்கும், வரம்பெறவேயொன்பதிலே உயிர்தான் வந்துமறைஞானமுண்டாகு முச்சிவழிமூடும், நிரம்பவேதனுசமாதம்சென்றுலிந்த நெருப்போடு வாய்வுமிஞ்சிக்கவுழ்ந்துந்தானே. 37

தானடாசிரந்திரும்பிபிறந்தபிள்ளை தனக்குபிர்மசிருஷ்டி நூராண்டுதன்னில், ஏனடாவாலையதுவேரைந்தாகு மிருபதுதானுகுமட்டும் வளரும்பிள்ளை, நானடாவெளிபோகும் முப்பதாண்டில் நாற்பதுக்குளழகுபோம் நாடிப்பாரு, வேனடாஐம்பதுதான்வயதுதன்னில் விரைந்து பிரிதிவிண்ப்புமேவும்பாரே. 38

மேவையிலேயுடல் தளராமப்புச்சென்று விளங்குமணல்தனை நோக்கிவெளுக்கும்ரோமம், தாவையிலேயறுபதாம் வயதுதன்னில் தண்ணீருமன்னுடனே சார்ந்துகொள்ளும், பாவையிலேகண்ணொளியுங் குறைந்துகாட்டும் பாகனேநடக்கில்வேகு தடைதான்பண்ணும், கூவையிலேயெழுபத் தென்றவ்யதிற்றேவு கொண்டலைத்தானெருக்கு மணல்தாறிற்காணே. 39

காணவேதாதுலரு மறிவுகுன்றும் கருதிப்பாரெண்பதென்றவயதிற்றனும், தோணவேவாய்வுவந்துவெளிவிற்பாயுஞ் சுவாசமேல்போகுமடாதொண்ணூற்றாண்டில், பூணவேயாகாசஞ்சீவனோடு புலன்களைந்து வசமாகப்பொருந்திக்கொள்ளு, நாணவேயிந்திரியமற்றுப்போகும் நலமில்லைநூறுண்டில் மாணந்தானே. 40

தானென்றபிர்மகிருஷ்வயதுநூறில் தந்தைதாய் தான்செய்த கருமந்தன்னல், வேனென்ற அபமிருத்து வந்துகூடிவிஷகடிகள் வெட்டுகுத்துமிகவுண்டாகி, கானென்றமிருகத்தால்நஞ்சைதின்று கனவயதுகுன்றுமப்பாகருதிப்பாரு, நானென்றபிர்மசிருஷ்டிகாண்பிக்கவில்லை நாதனருமக்குரைத்தார் நாம்சொன்னோமே. 41

வல்லாதியின் நாடி முற்றியது.
ஆக செய்யுள் 352.

வைத்திய சதகநாடி.

காப்பு.

அருவுருவாய் ரூபமுமா யடங்காதபொருளாகி யடங்களாகி, அருவுருவாய்புறமாகி யண்டபகிரண்டமுமாயுள்ளுமாகி, ஒருவுருவா யுயிர்க்குயிரா யுயிரில்நிறைந்தியங்கி நிற்குமொப்பிலானே, கருவுருவாய்வைத்தியத்தின் சதகமிதைவழுத்தவும்நீ காப்புத்தானே. 1

காப்பான சிவமுடனேசத்திகூடி கருவானவாய்வியங்கித் தனையெழுப்பி, தாப்பான அனல்கூடி விளைந்துபொங்கிச் சம்போகவேளையிலேசாடும்விந்து, நேர்ப்பான அருகுறுனி பனிபோல்வீழ்ந்து நிறைந்தோங்கியுதானனங்கேகாவலாகி, கோப்பானதேசமாதவரையில்நின்று குவலயத்தில் வீழ்ந்தாப்போல் வீழுந்தானே. 2

தானனவாயுவினாற் பிறந்துஞானந்தனைமறந்துகர்மங்கள்தனக்கீடாக, தானனவாதபித்தஞ் சேத்துமமூன்றாய் தத்துவங்கள்தொண்ணூற்றாறுகவுண்டாய், தானாகவியாதிநாலாயிரத்துச் சார்பாகநானூற்றுநாற்பத்தெட்டு, தேனாகவளர்ந்தங்கே கருவிலுற்றுச் செனித்தமுதல்மரிக்கும்வரை தழைக்கும்பாரே. 3

பஞ்ச பூதமறிய.

பாரப்பாபூதமஞ்சுமண்ணீர்தேயு பரிவாயுவாகாசமஞ்சினாலே, சேரப்பாசடாமாஞ்சுமண்ணின்கூறு சேறிமயிர் தோலெலும்பிறைச்சி நரம்பஞ்சாகும், நேரப்பா அப்புவின்கூறுதிரமச்சை நீர்மூளை சுக்கிலமோடஞ்சதாகும், சாரப்பாதீக்கூறுபயங்காரங்கா ரங்கடுஞ்சோம்பு நித்திரைமைதுனங்களஞ்சே. 4

அஞ்ஞானவாயுவின்கூறிருத்தலேடலவை நடத்தல்கிடத்தலுடனிறுத்தலஞ்சாம், மஞ்சாருமாகாசக்கூறுகாமமதிற்குரோதலோபமோகமதமஞ்சாகும் பிஞ்சாறுவிழிமானேயிவைகளெல்லாம் பிறக்கருவிபிருபத்தஞ்செனவகுத்து, துஞ்சாததத்துவங்கள் தொண்ணூற்றாறும் சொல்வதுகேள்பொறியஞ்சு தானுண்டாச்சே. 5

இந்திரிய வகை.

உண்டானபொறியதுவே தோத்திரதொக்கு வுறுதியுள்ளசட்சுசிங்குவையாக்கிராணம், கண்டாயோசெவியுடம்புநயனம் நாக்குகந்தமுறுமூக்குமிவைதானஞ்சாகும், விண்டாயோபுலனைந்து விள்ளக்கேளுவிரிந்த சத்தபரிசமுடன்ரூபரசகெந்தம், திண்டாடுஞ்சத்தமது செவியிற்கேட்குந் தேகமதுசுக்மறியும் பரிசமாமே. 6

பரிசமுள்ளரூபமெல்லாம் விழியிற்காட்டும் பண்பானரசமது வே யினிப்பைக்காட்டும், பிரியமுள்ள கெந்தம் நாசியினிற்காட்டும் பேசிலுயிர்கூறுகன்மவிந்திரியந்தான், வரிசையுடனஞ்சாகும் வாக்குப்பாதம் வளர்பாணிபாயுருவோடுமஸ்தமஞ்சாம், விரிவதற்குவாக்குவாய் பாதங்காலாம் வியன்பாணிகையாம்பாயுருக்கண்ணுமே. 7

கண்ணுனவபஸ்தமென்பதுவேலிங்கங் கருதுமிவையஞ்சாகும் ஞானேந்திரியம், தண்ணுனவஞ்சாகுவெசனமுடன் கெடந்தான மொடுவிசற்கமானந்தமஞ்சு, ஒண்ணுனவசனமனுவாத்தைவாய்க்கு கூறுகெமனம்நடைக்காலிற்ருனம், திண்ணுனமென்ருர் கொடுக்க வாங்கச் செய்யுமிருகைக்கு முயிர்க்கூறதாமே. 8

கூருனவிகற்பமது அபானவாய்விற் கொழுகிமலம்விடுத்தனுயிர்க்கூருமென்று, வீருன ஆனந்தலிங்கந்தன்னில் மேவிநீர்விந்துவிடுங்கூருமென்றும், பேருனகரணமினிநான்குகேளீர்பெரியமனம் புத்தியாங்காரஞ்சித்தம், வாருனமனநினைக்கும்புத்திவிசாரிக்குமாங்காரங்கொண்டெழும்புஞ்சித்து மொன்றுவிக்கும். 9

ஒன்ருன அறிவொன்று அதனிற்கூடி யுள்ளமதைக் கண்டு மகிழ்ந்திருக்குமென்று, நன்ருனதத்துவத்திற்பூதமஞ்சு நல்லபொறியஞ்சுபுவனஞ்சியொடு, கண்டாயோஞானவிந்திரியமஞ்சு கன்மவிந்திரியமஞ்சுகரணம்நான்கு, ஒன்ருனவறிவோடேழுப்பதாச்சு உத்தமனேதெசவாய்வு பத்துங்கேளே. 10

வாய்வு விபரம்.

பத்தானவாய்வுதான்பிராணனேடுஅபானன்பதிவானவியானனுதானன்சமானன்,சித்தானகூர்மனுடன்நாகன்கிரிகரனுந்தேவதத்தனுடனே தனஞ்சயன்பத்தாகும், ருத்தானபிருனின்மூலத்தைச்சேர்ந்து மேல்நோக்கிச்சிரசின்முட்டின்விழியின்கீழாய், செத்தாகநாய் வழியொடுமீருறில் திரும்பிஎட்டு முனப்புகுந்து நாள் வீண்போமே. 11

பச்சுப்பதேகனடிகையொன்றிற் சுவாசந்தானும் புகழாகமுன்னூற்றியறுவதாக, ஏச்சுதேநாளொன்றிலிருபத்தோரு யிரத்தருநூருமூன்றிலொரு கூறுவானுகில், ஆச்சுதேசமானமது ஈருருகுமம்புவியில் நடைகொண்டால் பதினுருகும், வாச்சுதேஒட்டமதுலாறஞ்சாகும் வரிவிழிகண் துஞ்ச முப்பத்தாறுவீரே. 12

வீணப்பாபெண்போகத்தாலெண்ணஞ்சு விருதாவிற்போமதனல்நோயுண்டாகும், தோணப்பா அபானனுந்திக்கீழேநின்று சுக

மாக சலத்தைக் கழித்துநிற்பன், காணப்பாவிபானன் பொருததி டங்களெல்லாங் களைப்புடனேதவனமுமுண்டாக்குவிப்பன், ஊணப்பாவுதானனுண்டவசனந்தன்னை யருநரம்பிலூட்டியுடல் வளர்க்குந்தானே. 13

வளர்க்குமந்தச்சமானன் வாய்வதற்குத்தானே விழிகாட்டி மிஞ்ச ஓட்டாதிருப்பன்கூர்மன், விளங்கிநின்று ஒளிவாக்கி மயக்கமாக்கி மிரட்டிமுழித்திடும்நாகன் தொண்டைக்குள்நின்று, குளிக்கின்றகபத்தோடு சேர்ந்துகெட்டி கொட்டாவி விக்கலெனுங்கொடுமைசெய்வன், பளிக்குள்வருங்கிரிகாலு முடக்கம்மீட்டல் பாங்கான அசைவுதனில் நிற்பன்தானே. 14

நிற்பானே தேவதத்தன்சத்தத்தோடேநின்றுகுரலோசைசெய்துபிலன்கள்செய்வன், மொய்ப்பானதனஞ்செயனுந்தேகமாண்டு மூன்றுநாள் சிரம்வெடிக்கிலோடிப்போவான், இப்பாற்கேள்நாடிபத்திடையினொடுபின்கலை யிதமானசுழிமுனையுஞ் சிங்குவையும்புருடன், தப்பாதகாந்தாரி அத்தியலம்புடையுஞ் சங்கினியூடேகுவனிவைபத்தாமே. 15

ஆங்காணிமிடைவக் கால்விரலில்நின்று அசைந்திளகியில்நாசியளவுபற்றி, பாங்கானபின்கலைதானிடதுகாலில் பருவிரலில்நின்றிளகிவள்நாசிபற்றி, தீங்கானசுழிமுனையும்பிராணவாய்வைச்சேர்ந்து சிரசளவுமுட்டித் திடன்செய்வான்கேள், ஓங்காணுஞ்சிங்குவையுள் நாக்கில்நின்று வுண்டவண்ணஞ்சாறமுற விழுங்குந்தானே. 16

தானமுள்ளபுருடனுமே வலதுகண்ணில் தானிப்பான்காந்தாரியிடதுகண்ணில், யீனமறவத்திவலக்காதிருப்பனிடக்காதிறகுகுவன்றானிருப்பன்கண்டாய், கானஅலம்புடை கண்டத்தில்நின்று காவிற்கசிந்துநீர்பொசிய வுபாயங்கள்செய்வன், ஊனமற்றசங்கினி குய்யம்பற்றி யொருவரைமிஞ்சவொட்டா திருப்பன்றானே. 17

ஆசயவகை.

தானானமலசயமுஞ்சலாசயமும் மாசயமிகுந்தசுக்கிலமூத்திரமோடைந்தும், பானான அமாசயம்முன்னந்தன்னிற்பருகுதுடந்தன்னிற்நிற்பன் சலாசயந்தான், பானான அன்னமொடுதண்ணீர்தானே வகுத்திறங்குமிடத்தில்நிற்பன் சலாசயந்தான், தானானமலஞ்சேருமிடத்தில்நிற்பான் சலஞ்சேருமிடஞ் சலாஞ்சமனிற்பானே. 18

கோசவகை.

நிற்பாடின்சுக்கிலவாசயந்தான்விந்து நிறைந்திருக்குமிடத்தில் நிற்பன்கோசமைந்து, தள்ளாத அன்னமன்றே ணமயமென்றுஞ் சார்வானவஞ்ஞான மனோமயந்தானென்று, நற்பானே ஆனந்தமய மோவைந்து நாடுமன்னமயந்தனிலே பிராணமயந்தோன்றும், ஒப்பானபிராணத்தின் மனோமயந்தான்தோன்று முண்டானமனோ மயத்தில் விஞ்ஞானமயமாமே. 19

மயமானவிஞ்ஞான மயமானந்த மந்தோன்றுந்தத்துவங்கள் முப்பதாச்சு, செயமாகமுன்சொன்னமுப்பதோடே சேர்ந்ததப்பா அறுபதையந்திரமாய்ப்பாரு, நயமானவாதார மாறுஞ்சொல்வேன் நாலுமூலாதாரமொடு சுவாதிட்டானம், தயவானமணிபூரக மனா கதமாம்வித்தி சார்வானவாக்கினையோ டாறுமாமே. 20

ஆறானமூலமது குய்யத்துக்கு மறிவானகுதத்துக்கு நடுவே யாச்சு, வீறானசுவாதிட்டானந்தான்கேளு வீணாத்தண்டுற்றவிடந் தானேயாச்சி, வாறானநாபியெனுங் கமலந்தன்னில் மணிபூரகஞ் செறிந்தவிடமேயாச்சு, கூறானவிதயகமலந்தானே கொழுத்தவனா கதமெனவே குறிக்கலாமே. 21

மண்டலமூன்று.

குறிப்பானவிசுத்தி கண்டத்தானமாகுங் கூண்டதொருபருவ மையமாக்கினையாகும், பிறப்பானவாதார மாறுஞ்சொன்னோம் பேறானமண்டலந்தான் மூன்றுங்கேளாய், பொருப்பானவக்கினி மண்டலந்தானென்று பொருளானவாதித்த மண்டலந்தானென்று, முறுப்பானசந்திரமண்டலத்தினோடே மூன்றாச்சு அக்கினியமூலத் தாச்சே. 22

மும்மலம்.

மூலமதிலக்கினி மண்டலந்தான்சேர்ந்து முனிந்திளகிநாபி மட்டுமுயற்சிசெய்வான், சீலமுறுமாதித்த மண்டலந்தானெஞ்சிற் சேர்ந்துகண்டத்தானமட்டுந் திறமேசெய்வான், கோலமறுஞ்சந்திர மண்டலந்தானெற்றிக் குறிப்பறிவை மலமூன்றுங்கூறக்கேளு, சாலவேயாணுவகாமியமுமாய்கை தயவானவாணுவத்தின் தகை மைகேளே. 23

முத்தோஷம்.

ஆணுவந்தானுடம்பைநானென்றிருக்கை யருங்காமியங்கண்ட தெல்லாமாசைகொள்ளல், நீணிலத்தில்மாய்கையது தனக்குவாற

நிலைதானேயறியாமற்கோபங்கொள்ளல், பூணுவதுதோஷமூன்றத னைக்கேளு புகழ்வாதபித்த சிலேற்பனமேமூன்றில், பேணுகின்ற வாதமதுவாய்வின்கோபம் பித்தமது அக்கினியின் கோபந்தானே.

ஈஷணாதிரயம்.

சோபமுள்ள சிலேற்பனந்தான் அம்பின்கோபங்குணமூன்று கோபமதாற்கொழுநோயெல்லாம், தாபமுறும்ஏடணைமூன்றத்தனைக் கேளாய்தாரஏடணைபுத்திர ஏடணைதாமென்று, சோபவுலகேடணை மூன்றதனைக்கேளு சொல்லுந்தாரஏடணைதான் பெண்ணாசையா தல், சாபமுறும்புத்திர ஏடணைதான்புத்திரர் தனைத்தேடியாசை கொள்ளல் தயவுதானே. 25

கொண்டவுலகேடணைதா னுறவுகொள்ளில் கொள்வதற்கு வாசைகொள்ளல் முன்மூன்றேகேள், தண்டமிழோரறியும் ராசத தாமதமுஞ் சாத்மீகமூன்றினுடதகைமைகேளாய், கண்டபடிராசத மாங்காரமாகிக் காசினியில் அமூர்தகுணமாயிருப்பன், உண்டி பெருத்திடுஞ்சோம்புதாமதந்தான்உன்மத்தமதவெறியாயிருப்பன் தானே. 26

அஷ்டவிராகம்.

தானமுள்ளசாத்மீகங் குளுந்தசொல்லாய்ச்சகலருக்கும் அமு ர்தகுணமயமிருக்கை, ஏனமுள்ளராகமெட்டுஞ் சொல்லக்கேளா யியல்காமங்குரோதமுடன் லோபமோகம், ஆனமதமாச்சரிய மிடும் பைவெட்கமாகவெட்டிற்காமமதுவாசையாச்சு, ஈனமுறுங்குரோத மதுகுணக்குலோபமியல்பான பிடிபாடுதானுமாச்சே. 27

இருவினை.

ஆமிந்தமோகமதுபிரியமாச்சு அடுததமதுமாவதுவே கிருபை யாச்சு, ஓமிந்தமாச்சரியவாரமாச்சு வுறுமுடும்பைதானு முதாசின மேயாச்சு, வேமந்தவேதமதுகொடூரமாச்சு வேறுஇருவினையிரண் டும் விள்ளக்கேளு, தாமந்தநல்வினை தீவினைதான்ரண்டு தயவான புண்ணியம் நல்வினைதானச்சே. 28

பஞ்சாவஸ்தை.

புண்ணியமேயல்ல தீவினையேபாவம் புனிதமுறுமவஸ்தை யஞ்சு சொல்லக்கேளாய், திண்ணமுறுஞ் சாக்கிரஞ்சொற்பனஞ் சுழுத்திசேர்ந்ததுரியந்துரியாதீதமஞ்சில்,வண்ணமுறுஞ்சாக்கிரமே லலாடத்தானம்வரும்பெரியசொற்பனமேகண்டத்தானம், எண்ண முறுஞ்சுழுத்தியிரு தயமாந்தான மிதமானதுரியமது நாபிகாணே.

காணப்பாமூலமதில்துரியாதீதங்கலந்துநிற்குமஞ்சோடேமுப்பத்தாறு, தோணப்பாமுன்மொழிந்த அருபதோடேசொன்னோமே தத்துவங்கள் தொண்ணூற்றுறால், ஊணப்பாவுடலாச்சுவுயிருமாச்சு உயிர்போனுற்பிணமாச்சு வுயிர்போமுன்னே, பூணப்பாவாத பித்தசேத்துமத்தாற் பூண்டெடுத்ததேகவளம் புகலுவேனே. 30

தேகவளம்புகலப்போகிறேன் தொண்ணூற்றுரு தேர்ந்தவிரல் நீளமவர்கையினுலே, வாகுபெருமெண்ணுன்குழறுப்புமாகும்வளர் ரோம மூன்றுமரைக்கோடியாகும், தோகையரேசிலேஷ்மந்தான் குணமுமொன்பான் தூக்குநிறைதேகமெட்டுத்துலாமேயாகும், ஆகமெல்லாம்நரம்புஎழுபத்திரண்டுஆயிரமேசெறியுமெனவறியலாமே.

அறிவானநாடிஎழுபத்திரண்டு வாயிரமேபொருநரம்புபரியின் கேசம், நெறிநேர்மையாயிருக்குமிடங்கடோறும் நீட்டிமுடக்கிடயாக்கைபோலேகட்டும், பிறிவாக முடச்சிடந்தில்திரண்டுகூடிப் பின்னல்கொண்டுபறந்தோங்கித் தேகமெல்லாம், செறிவாகவிருக்குமதிலொருநரம்பில் திரிதோஷமுஞ்சேருமது தெளிந்துசொல்லே. 32

முத்தோஷநாடி விபரம்.

சொல்லுகின்றவாதபித்தஞ்சிலேட்டுமந்தன்னில்சுகமானபித்தமதுபூதநாடி, வெல்லுகின்றகுருநாடியாத்மநாடி வெகுரோயை அகற்றிநலங்காட்டும்நாடி, பல்லுயிர்க்குந்தானுகயிருந்தநாடி பலகோடியண்டமெல்லாம் நிறைந்தநாடி, அல்லலறுமாங்காரம் பிராணநாடி அக்கினியைச்சேர்ந்தெழுந்த நாடிதானே. 33

நாடியென்றுல்நாடியல்ல நரம்பில்தானே நலமாகத்துடிக்கின்றதுடிதானல்ல, நாடியென்றுல் வாதபித்தச்சிலேற்பனமுமல்ல நாடி எழுபத்திராயிரந்தானல்ல, நாடியென்று லண்டரண்டமெல்லாம் நாடி யெழுவகைத்தோற்றத்துள்ளாய்நின்ற, நாடியது ஆராய்ந்து பார்த்தாராறுல் நாடியுறும்பொருள்தெரிந்து நாடுவாரே. 34

தெளிந்திட்டநாடியது ஞானம்போலேசிறப்பானபுரிமூன்றும் ஒன்றுய்க்கூடி, மொழிந்திட்டவாதபித்த சிலேற்பனமென்று முன் கையிலேபூண்டிருக்கு முறைமையாக, தெளிந்திட்டவாதம் அபானத்தைப்பற்றி நிறைந்திடைவைச்சேர்ந்துந்திக்கீழேநின்று, குளிந்திட்ட மூலத்தூடெழுந்துநாமக் கொடியிடையைப் பற்றியெழுங்குணத்தைப்பாரே. 35

குணமானவெலும்பைமேற்றெருக்கைநாடிகுழாமாகும் எழுபத்தீராயிரத்தைச்சேர்ந்து, நிணமானபொருந்திடமும் ரோமக்காலும் நிறைவாங்கிமாங்கிஷமெல்லாம்பறந்து, மணமானவிந்துவிழமலரீர்ப்பெய்ய விழிகாட்டிக்கால்நாட்டி வாதமெங்குங்கலந்துதானே. 36

சாணனபித்தம்பின் தலையைப்பற்றிச்சாய்வான பிராணவாய்வுதன்னைச்சேர்த்து, ஊனனநீர்ப்பையில் அணுகிமூலத்துதித்தெழுந்த வக்கினியை உறவுசெய்து, மானேகேளிருதயத்திலிருப்புமாகி மயலாகிநினைவாகி மயக்கமாகி, காணனசிரந்தனிலே இரக்கமாகிக்கொண்டு நின்றபித்தநிலை கூறினேமே. 37

கூறினேஞ்சிலேஷ்பனமதுசமானவாய்வைக்கொழுகியடாசுழிமுனையைப்பற்றிவிந்தில், சீறியேசிரசிலாக்கினையைச்சேர்ந்து சிங்குவையண்ணுக்குநிணமச்சைரெத்தம்,மீறியேநிறங்கோணம்நரம்பெலும்பில் மேவியதோர்மூளைபெருங் குடவிற்கண்ணில், தேறியதோர் பொருந்திடங்களெல்லாஞ்சேர்ந்து சிலேஷ்பமது வீற்றிருக்குந் திடங்கண்டாயே. 38

வாதத்திலெடுத்ததேகம்.

ஓர்விரலில் முனையிடமும்வாதம்போலாம் உற்றநடுவிரலுமது போலாகும், சீர்பெறவேமூவிரலுமதுபோலென்னச்சிற்பரமாய் நடுநிலையேபித்தந்தானாய் வார்பெரியசிலேற்பனந்தான் வலமும்பின்னும் வழுவாமல்மூவிரலு மப்படியேகாணும், பேர்பெரியகுருநாடி யெங்குந்தானே பின்முன்னாய்நாடிபத்தும் பொருளிதாமே. 49

வேறு.

உற்றதோர்குடலிற்கூறு உறுப்புடன்விரவிநின்ற
முற்றுமேநோய்களெல்லா முதிரவேதோன்றும்போது
வற்றுவாம்வாதபித்தஞ் சிலேற்றுமந்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்று பகர்ந்தனர்முனிவர்தானே. 50

மன்னியமுழங்கைபுக்கி மணிக்கடைதான்பிரண்டு
பின்னியேபிரிமுறுக்காய்ப் பிலத்துமுக்குணமுந்தோன்றி
சென்னியும்பிடருஞ்சுத்தி திசைதொருங்கவர்போல்வீசி
உன்னியேதுன்றிநிற்கு மெழுபத்தீராயிரமுந்தானே. 51

உத்ததோர்வாதந்தன்னி லுறுதியாய்க்கீழுமேலும்
பத்தியேமுன்னும்பின்னும் பதிநறுவசலைவச்சார்ந்து
சுத்தியேவிசையினூடே சுழிமுனைதன்னைநோக்கிக்
குத்தியதம்பூர்வீணை குறியெனக்கொள்கையாமே. 52

நாடிடும்தம்பூர்தன்னில் நரம்பிசைநாலுதந்தி
கூடிடுந்தன்னைப்பற்றிக் குறியெனத்தெரிக்குமாபோல்
ஓடிடுமசைநாடி யுன்னியேபதியுமொத்துச்
சாடிடும்நாடி தானுந் தன்குருநாடிதானே. 53

நந்திக்குவெவ்வேறென்ன நாதமும்பலமும்போலக்
குந்திக்கும்வாதபித்த மையமுங்கொள்கைபோக்கும்
வந்திக்கும்விதங்களெல்லாம் வகைவெழுதம்பூர்நாதம்
விந்தைக்குள்விதங்கள்நாடி விபரந்தானறிந்துபாரே. 54

மந்தமுஞ்சுழுக்குஞ்சாய்ந்த மதித்தெழுகோபமோசம்
இந்திவைநாதம்போல யிசைக்குமன்னாடிகண்டாய்
முந்தியவாதநாடி முழுதுமேசாந்தமாகும்
மந்தமாம்பித்தநாடி யதிர்ந்திடுஞ்சேற்பனமதாமே. 55

மந்தமுஞ்சுறுக்குத்தானே வகையுடன்வாதபித்தம்
முந்தவேசாந்தமோகம் முற்றிடில்வாதசிலேற்பம்
பந்தமாம்பதமுஞ்சாந்தம் பகிர்ந்திடில்சிலேற்பனபித்தம்
விந்தமாங்கோபரோகம் விளங்கிடில்பித்தசிலேற்பம். 56

நளினமாஞ்கார்ந்தகோபம் நாடியில்சிலேற்பனவாதம்
விளினமாமதிர்ந்தசாரதம் மேவிடில்பித்தவாதம்
குளினவேகூடிமேவுங் குணந்தனைப்பிரித்துப்பாற்கில்
தெளினமாம்நரம்பினோசை சென்னியுங்கூர்ந்துபாரே. 57

இப்படிஒன்றுமூன்று அஞ்சுடன்வழுமாகில்
செப்பினேந்திசையில்நாடி செயல்பெருங்குணங்களெல்லா
மொப்புடனுரைகள்செய்தோ ருல்கினிலறியவேண்டி
தப்பிலாபொதிகைவாழும் அருள்முனியுரைசெய்தாரே. 58

குருநாடிஒன்றுந்தானே குறிப்புடன்பதிதானகுங்
திருநாடிசொல்லக்கேளீர் சிவனயன்மாலுமாகும்
வருமோடில்பஞ்சநாடி வகையுடைங்தெழுத்தஞ்சாகுங்
தருமோடிதரணிசத்த நாடியிலுரைத்தவாறே. 59

இப்படிதிசையில்நாடி யெழும்பியேயிமையினூடு
சொற்படிகலையுமாறி சுழினையுஞ்சுத்திமாறி
முற்படிவினையினேடே மண்டலமுப்படியெங்கும்
அத்திசிங்குவைகாந்தாரி ஆகியபுருடனாமே. 60

ஆகியநாடிதானு மருங்கொடுமிரண்டுமாகில்
ஏகியேயெழுபத்திராயிரமெனும் காம்பைச்சார்ந்து
மூகியேவினையோகாக்கு மூடிமண்டலமுமேவி
கூவியேபம்பாம்போல் குறுகியேயிசைவைப்பாரே. 61

வேறு.

குருநாடிதிரிநாடி குறியைமேலுங் கொண்டபஞ்சநாடியென்று ஞ்சத்தநாடி, பொருமோடியானதொருதிசையாம்நாதப் பிரிவுடனே ஐவகையும்பேணிப்பார்த்து, திருநாடியானதுவே திறமாய்த்தேர்ந் துச்சித்தாந்தக்குருநாடி சீரைபார்க்கில், கருநாடி குருநாடியாகக்கா ணுங்கண்டவர்க்கு மெய்ஞ்ஞானங் கருதலாமே. 62

பம்பாம்போல்குருநாடி கிருகிபென்ன பற்றிநிற்கும்வாதபித்த ம்நடுவில்தானே, அம்பாம்போல்குமுறி யழும்வாதபித்தம் ஐயமெ னும் நாடிமுதலாடியோடி, கம்பமுதல்மண்டலங்கள் மூன்றுஞ்சுத் திக் கத்தரிகைமாறலெனக்கட்டச்சேர்ந்து, தம்மமுடன்வாதபித்தம் நடுவில்வந்து தமரகம்போலாடிநிற்குந் தன்மைதானே. 63

தொண்டையிலேகோவிறங்குங் குரலைப்போலச் சூட்சமுடன் சயமற்றுச்சுகமாய்ப்பார்க்கில், கொண்டெனவேவாதமதுநாடிதானு குறிக்குரலைப்பார்த்தாலு மதுவேவாதம், மண்டையிடிக்காரதலை கையைத்தாக்கல் வகையுடனேதெறிப்பதுதான்பித்தமாகும், மண் டையிலேவேளைதனை பாம்புயென்று கருதியுடன் நின்றுப்போல் தோன்றுஞ்சேட்மம். 64

முன்னுரைத்தநூல்களெல்லாமறிந்துசொன்னேம்முதுமொழி தான்கற்றவர்களறியலாகும், நன்னூலாங்குருநாடிதோய்ந்தபேற்கு நடுவெளிபோல் திறந்துசொன்னேம் நாடியென்னும், பின்னூலாய் ஒருகோடிபிரித்துச்சொன்னேம் பெருமூலஆருய்ந்துபேசப்போகா தென்னூலேகுருநாடி தேர்ந்துசொன்னேம் பொருளதனைநீயறிந்து போற்றிக்கொள்ளே. 65

குருநாடிவாதத்தில் நிற்கும்போது கோழிநடையன்னமயில் குறியாமென்னவருநாடிபித்தத்தில்சுற்றிநிற்கும்வளராமையட்டை யெனவகுக்கலாகும், திருநாடிசிலேற்பனத்தில்சேரும்போதுதெறி த்துவிழும்விட்டலைப்போல் மெலிந்துகாணும், பெருநாடிசாத்திரத் தில் அலையவேண்டாம் பிரித்துடனே யறிந்துபொருள் பேணிப் பாரே. 66

மரணமது அறிவதற்குக்குறியைச்சொன்னேம் வழுவாதவிஷ நரம்புகுளிர்ந்துதானே, விரணமெனும் பொறிகளெல்லாம்தளர்ந்து மெத்த விசநரம்புதான்குளிர்ந்துவிரைந்துவாங்கி,நரணமெனப்பல் கடித்து மணியும்கட்டு நாவுலர்ந்துமூச்சடர்ந்து நடுங்கிக்காணுந், துரணமென வாதபித்தஞ்சிலேற்பமெல்லாந் துடித்துவிழும்விட்டி லைப்போல் துடிக்குந்தானே. 67

சன்னியெழும்போதிலந்தநாடிமூன்றுஞ் சாதகமாச்சுழல்வண் டுதண்ணீர்மீசே, உன்னியதுபாபரத்துச் சத்தம்போலஓடிநிற்கும் வாதபித்தச்சிலேற்பனமெல்லாம், சன்னியதுசாதகமாம்வருமேயா கில் கதிப்பாகும்பம்பரம்போல்வாதபித்தம், பின்னியதுவிட்டிலைப் போல்தெறித்துவிழில்பேசிலதில்மரணமென்றுபிரித்துச்சொல்லே

நீர்மேகமானவர்க்கு நாடிதானும் நிண்ணயமாய்நாடியெல்லாம் பொன்மைகெட்டு, கார்மேகம்போலவந்த பொறியின்மீதே காண்டு விழும்புழுப்போலேயோடிக்காணுஞ்,சீர்மேகஞ்செனித்ததென்றல் சுருதிநூல்போல் சிறிநிற்குங்குருநாடிசேர்ந்துதானும், போமேகம் தொடுத்திடுகில் வாதபித்தம் பின்னியதுதுடித்துவரும் பிறிவு தானே. 69

கெற்பிணிக்குவாதபித்தம் கிளர்ந்துகாணும் கிறுணியதிசார மென்கல்தளர்ந்துகாணும், முற்பவித்தசயமீளைகாசரோகம் உற்றி டில் சிலேற்பனந்தான் மீறுக்காணும், அற்பமென்றுநினையாமல் நாடிக்கோர்வை அகமகிழ்ந்துபார்த்திடிலோ அறிவுதோன்றும், சொற்பமுள்ளநாடிதிசையறியவல்லார் செகதலத்தில்மெத்தவுண் டுதெளிந்துபாரே. 70

சீழ்ரோகமானாலும் வாதபித்தம் செறிந்துநிற்கும்நாடியது சீறித்தானே, வீரோகங்கிரந்தி குட்டமானபேர்க்கு மீறிநிற்கும் பித்தமென்றுவாதமென்று, தாரமொடுவாதரோகமஞ்சதாகும்சாற்றிடுகில் வாதபித்தந்தளர்ந்துகாணும், பாரோகம்வாயுவென்றல் வாதங்காணும் படிப்படியின்னதென்று பகுந்துபாரே. 71

உற்றதொருகபந்தனக்குச் சேரப்பித்தம் உறுதிபெறும்விக்கலுக்குசிலேற்பனமதாம், மற்றதொருசுபந்தனக்கு வாதபித்தம் வகையானகணைதனக்குவாதஞ், சித்தமுறுபதரிக்கும்பித்தமாகுஞ் சிராக விரோசனமாந்தனக்குபித்தம், குற்றமில்லைபிதுமுறையைப் பகுந்துசொன்னோம் கும்பமுனி அருள்தனையே கூர்ந்துபாரே. 72

கரணிகத்தின்வாதமென்றால் சிலேற்பனவாதம் கறனஞ்சூலையானாலுஞ்சிலேற்பனபித்தம், விரணமுடன்மணமுரைக்கும் வாதபித்தம்வெச்சனவாம்பீனிசத்தில்சிலேற்பனபித்தம், தூரணமுடன் நீர்ப்பாடு கொளப்பாடானால் செல்லுமதுநாடியெல்லாந்தளர்ந்துகாணும், தரணமதுபாம்புவிஷங்கொண்டபேர்க்கு தாதுவெல்லாங் காணமல் தளர்ந்துபோமே. 73

கரணிதத்திற்சுரோணிதத்தின் வாதமாகில் கதித்துநிற்கும் பித்தமதுசேற்பமாகும்,விரணமொடுவெடிசூலைமண்டசூலை விருப்பமுடன் விஷநீர்கள் வறட்சிகாந்தல், கரணமுடன் மூச்சடைப்பு தொந்தரோகஞ் சதையடைப்புச்செவிப்புத்துபற்பமேறுகம், மரணம் வரும்போதளவில் போகாதென்று வயித்தியரேயிந்நூலைமகிழ்வித்தோமே. 74

முன்னாளில்செய்தகுறைகடினத்தாலே முறையானதொகுப்பு வாதமுறைமைகேளாய், நன்னாளில்சிலஇரும்புமுற்பாவந்தான் நாடிவந்தகாமத்தால்சிலந்திவண்டு, இன்னாளில்விஷமூச்சி சேரத்தானும் இசைந்தவிஷ அட்டையுட எரும்புதானுந், தன்னாளில்மிகுந்தபுழுவிருந்தசெங்கோன் தான்கடித்தவிஷத்தோஷம் சாற்றக்கேளே. 75

கால்தனிலேகடித்தாக்கால் திமிருண்டாகும் கைதனிலேகடித்தாக்கால் விரல்குறுகும், மேல்தனிலேகடித்தாக்கால்தடித்துகாணு மெய்கழுத்தில் கடித்திடுகில் பொரிந்துகாணுஞ், சொல்பெரியதலைதனில் கடிக்கப்புண்ணாம் சிறந்தவிருதுடைதொடுசில் பொரிந்துகாணும், தோல்பெரியவிஷபூச்சி கடித்ததோஷஞ் சொல்விடுகில் குறைநோவு தொகுக்கலாமே. 76

பழவினையால்குறைமுடிக்கவந்ததோஷம் பாரிலுள்ளோர்பரிகாரஞ்செய்வதேது, உள்வினையாலூடாடிச்சொல்லவந்தஉகமையது

யறியாமல் ஊக்கஞ்செய்தால், கனவினைபூட்டறிவதில்லை கூட்டிமன மாகுங்கற்றறிந்தபெரியோர்கள் கண்டுசொன்ன, அளவினையால் நீ யறிந்து மெள்ளகண்டு அரனருளை ஆராலுமறியாதாமே. 77

விரல்குறுகும்கால்திமிரா விஷம்போலேலும் மெய்யருந்ததலை சுழலும்வெளுக்குமேனி, பரபரெனத்தேகமெல்லாங் தடித்துக்கா ணும் மதகரிப்போல் வெடித்துமிகப்புண்ணுமாகுஞ், சாசமுடன் சொறிகரப்பன்போலதோன்றுஞ் சந்தையரும்விந்துகெடுந்தடித்து வீங்கும்,நாருலகிலிச்சைசெய்யவேண்டாஞ்சொன்னேன் நாடிவந்த குன்மநோயு நவிலலாமே. 78

கற்புடையமங்கையரை விருப்பமுற்றுக் காயமறுந்திட்டுமிகக் காரஞ்செய்த, முற்பிழையசல்குறைசெய்த கருமத்தாலே முழுது மதுபாவந்தான்சிலந்திபோல, துப்புடனே தொடர்ந்துவந்து கடித்த தோஷம் தொல்லுலகிலாராலுந் துலைக்கப்போமோ, நற்புடனேயி துவறிந்துபரிகாரங்கள்நன்மையுடன்வந்திறங்குந்தவங்கள்செய்யே

காசுபோல்திரேகமெல்லாந்தடித்துக்காணுங் கணத்துநடுவுளக் குளித்தடித்துச்சுற்றும், ஆசுபோல்நரம்பெல்லாம் வெந்துபோகும் ஆக்கையுறுப்பதுவுமிகவசைந்துபோகும்,கூசுமதுகால்கரங்கள்நடக் கில்மெத்தக்கொடியநிறவிஷகரப்பன்கொள்கைபோல, பேசுவதுமு ற்புனையால்மிகுந்தபாவம்பெரியோரைத்தூஷணித்தபேதந்தானே.

நல்லோர்கள் பெரியோர்கள் நடக்குஞ்செய்கை நாட்டிலுள்ள துற்சனர்கள் நகைத்ததாலே, பொல்லாதவிஷகடிநீர் புக்கும்பொன் போல்புதுமையுள்ள திரேகமெல்லாங்குட்டம்போல, சொல்லாதகடி விஷங்கள் குன்மபாண்டுதீராதகர்மவினையாகும்பாரு, எல்லோருங் காணவிது புவியின்மீதே இணங்கிவந்தகடிவிஷங்களியம்பலாமே.

ஆரறிவார் பெரியோர்கள் செய்கையெல்லாம் அபுரூபமான பொருளறிந்ததாலே, ஊரறியும்பேரறியுமுலகமெல்லா முடல்நகை த்துசிறக்கவென்று அவரையேய்ப்பார், சீரறியார்சிறியோர்கள்பெ ரியோர்தம்மைச் சிரித்துநகைத்திட்ட விந்தக்கர்மந்தானே, நேரறி யாவிஷகடிநீராகவந்து நேர்ந்தபலவிதமான நேசந்தானே. 82

உலகுதனில்செவிடுமைகுருடுதானும் ஒழுக்கமில்லாசப்பாணி மூக்கில்லாதான், நலருமதுவிஷகடிநீர்குன்மப்பாண்டு நாற்றிவரும் பெத்தயருகவுசியினை, பிலகுமதுபெரியோரை கற்புள்ளோரைப் பேதமில்லாசிவஞானம் வழியுள்ளோரை, துலகுடவர்தம்மைமிகத் தூஷணித்தாக்கால் துற்சனர்க்கு இந்நோயைத் தொகுக்கலாமே.

வன்னியேமிகுந்துதானும் வாயுவைநெருக்கும்போது
உன்னியேவுதரவிம்மி யுறுகுடல்வெந்துபின்னும்
பின்னியேயங்கசூலை பொருந்துடனுதாஞ்சார்ந்து
துன்னியேவாய்வுமோதுஞ் சுரோணிதங்கெடுதியாமே. 84

கண்டத்தில்வாய்வுபுக்குக் கபாலத்தில்சூழ்ந்துகட்டி
துண்டத்தில்பித்தவாய்வு துள்ளியேசாய்ந்துநின்றால்
விண்டித்தகாலம்பற்றி வினைவியேசிரசுமுற்றும்
கொண்டுற்றசுரோணிதவாதம் கூறினேன்குறியிதாமே. 85

நல்லதோர்நாடிதானு மிடையொடுசுழியும்பற்றிச்
சொல்லியகுய்யத்தினூடுஞ் சூட்சமாம்வீணையோடு
வல்லபச்செய்துவன்னி வாய்வொடுகபமுஞ்சேரில்
சொல்லியேமருந்துசொன்னேன் சேர்த்திடும்தங்குரோகம். 86

அக்கியேயெரிந்துசூடு மாதரமாறும்பத்தி
புக்கியேபுறம்புதானும் பொன்மயங்கெட்டுதாது
தொக்கியகபாலமுட்ட துண்டமும்பறந்துமேவி
கக்குமாஞ்சளிரோகங்கள் கருத்துள்ளோர்கண்டுகொள்ளே. 87

தாக்கிய அன்னந்தன்னி லகற்றியவாய்வினூடே
தோச்கியவன்னிதானும் துவளவேனுதாஞ்சார்ந்து
தீக்குமாமலமுங்கட்டிச் சிறுத்துநீர்சுவரவாங்கில்
வாக்கியவேதஞ்சொன்னே மயக்கமாம்லட்சையாமே. 88

வேறு.

சங்கையில்விஷகரப்பன் வருமாறேது சாரமுடன்கிறுமிவிழுந் தன்மையேது, பொங்கியங்கேயூனுருகுங்கிறாணியேது பூராயமான தொருபவுத்திரமேது, தங்குமுளமூலமது தளர்வதேது தாராளமாய்மலமுந்தளர்வதேது, கங்குலதுபோல்வருத்துற்காந்தலேதுகருத் துடனே யிந்தவகைக்கருமங்கூறே. 89

உட்டினமே அதிகம்வருமிந்திரிபோகத்தா லூனுருகியத்தியிலேவேவுகொண்டு, நட்டணமாய்வெந்தவொரு மச்சைதன்னில் நாட்டமிட்டகிருமியதுயணுகும்போது,மட்டுடனேகருமியெல்லாம் பறந்தங்கேறிவகையுடனேமாங்கிஷத்தை துளைத்துமேவும், திட்டமுடன்விஷகரப்பான் பறந்துமேலேதினவுடனேபரபரத்துச்சொரியுண்டாமே. 90

சுக்கிலந்தானுஷ்டிணத்தால் வேவுகொண்டு சுதமானவலமது தான் கட்டுப்பட்டால், அக்குலத்தில்மலமதிலே நாற்றமுண்டாம் அழியங்கேவெந்துருகிவாளும்போது,சிக்கிமலந்தான்புழுத்துக்கிரிமியுண்டாந் தீவனங்கள்சென்றதினால்கிரிமியெல்லாம், புக்கிஅங்கே பார்த்ததிரிச்சரீரமெல்லாம் பரபரத்துஊத்தோரும் பசுமையாமே.

வயல்தனிலேபூணுகமண்ணைத்தானேவருந்தியதுபுத்துப்போல வத்தையாகும், பயல்மொழியீர்திரேகத்தில்கிரிமிதானேபரந்துரிகி குட்டம்போல்பள்ளிக்காணும், மயலதுவுகிரிமியுந்தா நடந்துபுக்கில் மேனியதுசரசரெனவெடித்துப்புண்ணும், கயல்பெருகுங்குழல்மடவீர்சொல்லக்கேளீர் காகாத்துசொரிபெருகும் கரப்பன்தானே. 92

கிரிமியால்வந்ததோஷம்பெருகவுண்டு கேட்கிலதின்பிரிவுதனை கிரமமாகப், பொருமிலகும்வாய்வெல்லாம் கிரிமியாலே புழுக்கடிப் போல்காணுமதுகிரிமியாலே, செரிமிவரும்பவுத்ரங்கள்கிரிமியாலே திரேகமதில்சோகக்குட்டம் கிரிமியாலே, துரிமிவரும்சுரோணிதங் கிரிமியாலே சூட்சமுடன் கிரிசைப்பால் தொழில்செய்வீரே. 93

பவித்திரந்தான்வருங்குறியைப்பகரக்கேளீர் பாரினுள்ளஉஷ்ணத்தால்மலந்தான்சிக்கி,குவிந்துநின்றுசீரடக்கிக்கொளிகையாலே கொண்டிறங்கிசிருநாதன்கிருமியாலே,தவிந்திருக்குங்கிருமிசென்று மூலந்தன்னில் தட்டகத்தில்தண்டு முதல்குத்திருக்கும், குவிந்திருக்குமுதரமட்டுமலர்ந்துநின்று குழங்குலாயரிகுமதன்குறியதாமே.

பத்திநின்றகிரிமிசென்று அறிந்ததாலேபவுத்திரந்தான் பிலக்காயின்முள்ளுப்போலே,குத்துடனேநொந்துளேந்துகிரிமியுண்டாங் கொப்பளித்துச்சீழிரத்தஞ்சலமுண்டாகும்,தத்துவமும்மமர்சிறிது நாளிலேதான் தவமுமதுகிரிமியெல்லாந்தட்டில்புக்குஞ்,சுத்திநின்ற மூலத்தில் முளையேபோலத் தோன்றிநிறவிருத்தியினால் சலமுண்டாமே.
95

குட்டமதுவிஷகரப்பான்விஷநீர்சூலை சுரோணிதத்தால் தாது கெட்டுதுடிப்புண்டாகும், மட்டறவேகிருமிசென்று மருவும்போது வகையாய்கிருமியுடவிஷநீர்சென்று, குட்டமுடன் திரேகமெல்லாம் பறக்கும்போது குழிகுழியாய்க் கிரிமியினிற்கொள்ளும்புள்ளி, தட்டறவேகிரிமியுடநீரால்வந்த சகலகுஷ்டம் விஷகரப்பான் சாற்றலாமே.
96

கேளுமினிகிருமிவந்தகிருணியைத்தான் கிருபையுடன்மூலத்தில்வேவுகொண்டு, நாளுமதுகிரிமியதின் குடலைச்சுற்றிரத்தமுண்

டாஞ்சுரோணிதத்தால் வலமுங்கட்டி, மீளுவதுவாய்வுசென்று விர
வித்தானும் விரவியங்கேகலந்திருக்கில்கிரிமியெல்லாங், கோளுமது
பலவிதமாய்க்கழியும்பாலக் குடிகெடுத்தகிரிமிசெய்தகிருணிதானே

சுக்கிலத்தைத்தானறிக்குங் கிருமிச்சென்று துமக்கையுடன்
பரபரத்துச்சொரிந்தவூறும்,சிக்கிமலஞ்செரித்துவிழும்கிரிமியாலே
சிரானமூலமெல்லாம் மழுக்கிப்போகும், தொக்குகின்றவிஷகரம்பு
வீணுந்தண்டு சூழ்ந்திருக்குங்கிருமிசென்று துன்னித்துன்னி எக்கி
நின்றபிரமேக மெழும்புந்தானே. 98

விதமுடையவன்னியொடுகாலுங்கூடு வீரானயிடைநாடி கலையு
ஞ்சுத்திப், பதமுடனேசுழிமுனையில் தீயுங்காற்றும் பற்றிடுக்கில்
தந்தத்தில் பதிக்கும்நோய்கள், இதமுடனேசீழிரத்தஞ் சலமும்
விழு மிருகண்ணில்பீளையிசைந் திருக்கும்நோய்கள். குதமுடனே
குடோரியது செய்யுஞ்சீலை குதரியதுகாமன்மிகை கூறினோமே. 99

தாணுருஞ்சிலையைப்போன்று தயங்கியசிலையைப்போல
ஊனுறுவுடம்புக்கெல்லாம் வொத்திடநரம்புநிற்குங்
கானமாமாராதாரங்கலந்துமே யவனிதன்னில்
தானமாமேகநீரை மதங்கெடத்தணிப்பதாமே. 100

மலங்கிடக்குடலைச்சுற்றி மண்ணுமூச்சந்துநோக்கிப்
புலமரக்குடிகைமேலே தாக்கியேயபானம்நோக்கும்
நலம்பெறகரம்புதானும் நரம்புக்கீழ்நரம்புபற்றிச்
சலம்பயிலூறிவீழுந் தன்மையில்விழுகும்பாரே. 101

குருநாடி முற்றியது.

ஆக செய்யுள் 709.

அகத்திய முனிவர்

சூடாமணி கயறு சூஸ்திரம்.

காப்பு.

கமலக்கைமணிக்கையில் கயறுசூஸ்திரம்
விமலனேநோக்கியே வேடமாமுனி
திமிலாய்பிணியது சேரச்செப்பியே
அமலனுமுனிக்குமுன் னருளிச்செய்ததே. 1

வாசன்றேவரு மாமுனிவோர்களுந்
தேசமறிந்திடச் செப்பிடுஞ்சூஸ்திரம்

ஈசனேகரிமுகா யிக்கயிர் நூலுக்கு
மோசமில்லாமலே முன்வந்துகாப்பதே. 2

நோயின் சாரம்.

மணிக்கடைநால்விரல் தள்ளிவண்மையாய்
தணிக்கடைகயறுபோட் டளர்ந்துபார்க்கையில்
கணித்திடும்வில்தனை கண்டுசொல்லவே
பிணித்திடுநோய்களை பிரித்துரைக்குமே. 3

குறைந்துவிரக்கிடை யிசைந்துகாண்கிடில்
உரைந்துவெண்பிணி வுடம்பிற்சார்ந்திடும்
நிரைந்தகாலுங்கை யுடல்நெருஞ்சிடும்
நிறைந்தவயிற்றினில் திரளுங்குன்மமே. 4

ஒன்பதேமுக்கால்.

ஒன்பதுமுக்கா லுகந்துகாண்கையில்
என்பதுபுரையரை யாப்பேபெய்திடும்
வன்பொடுயிருமலும் வறட்சிதோன்றிடும்
பின்பதோர்வருஷத்தில் பிளிகைதோன்றுமே. 5

ஒன்பதரை.

ஒன்பது அரையது உகந்துகாண்கையாம்
வென்பொடுஉடம்பெல்லாம் வெளுத்துச்சூடதாம்
துன்படுமயிரு விழிகாய்த்துமுன்சுரம்
நன்பதுமசனம்விட் டேலுவத்துமே. 6

ஒன்பதேகால்.

தீட்டியஒன்பதுகா லுகந்துதிண்ணமாம்
ஈட்டில்சிருகரீ ரித்துசூழ்ந்திடும்
சூட்டியகண்விழி துயிலுமில்லையே
வாட்டியபீனிசம் வந்துதோன்றுமே. 7

ஒன்பது.

கழிந்திடும்ஒன்பது விறக்கடைகாண்கையால்
வழிந்திடுஞ்செவிலுள்ள குத்துமந்தமாங்
குழிந்திடுங்குருக்கினில் கோரைவாயவே
அழிந்திடுமிருதுடை யயர்ந்துசூழுமே. 8

எட்டேமுக்கால்.

எட்டினில்முக்கால்காணில் யிலக்கியவுடம்புகாயுக்
தொட்டியகுட்டம்போலே சிலவிஷம்பலவுந்தோன்றும்

முட்டியவயத்தினுள்ளே முளைபோலேவாய்வுகுத்தும்
வெற்றியகண்வாய்கைகள் வெளுத்திடும்பித்தரோகம். 9

* * * *

விட்டடனிருமலும் வெதுப்புமேலெலாம்
கிட்டிடுஞ்சிலையுங் கிரந்திகாணுமே. 10

எட்டேகால்.

காட்டியயெட்டொடு கால்விரற்கடைக்
கூட்டியபித்தவாய் குரைசுரமெயில்
நாட்டியபிரமிடும் நவிலுங்காமியம்
வாட்டியசிரசில்நோய் வருமோருண்டிலே. 11

எட்டு.

எட்டெனும்விரக்கடை வயதுமாறிடில்
கற்றெனும்வயிற்றினில் கதைத்துடல்வீக்கமாந்
துட்டியபிணிசந் தொண்டைனேதலால்
கொட்டியவயிற்றினில் குணமிதுவாமே. 12

ஏழேமுக்கால்.

ஏழினில்முக்கால்காணில் எழுப்பிடும்கீழ்மூலம்
தாழ்வதுரெண்டுக்காலுந் தலைபாடுமகத்துநிற்கும்
தோளதுவருஷமாண்டாய் தோன்றிடுங்கண்டமாலை
நாளதுசெல்லச்செல்ல நாசியில்ரத்தங்காணும். 13

ஏழரை.

ஏற்றமேழரையுங்கண்டால் எலும்பதுஉருகிக்காணும்
காற்றதுவயிற்றில்விம்மும் முகமெலாமெரிவுகாணும்
ஊற்றவளுற்றுக்கண்ணு முடம்பெல்லாங்காச்சலுண்டாய்
தூற்றியகாலில்நோவுத் தொடையில்விப்புருதியாமே. 14

ஏழேகால்.

ஏழதுகாலுங்கண்ணு மிடுப்பிணில்வலியுமுண்டாம்
மீளவுஞ்சிரசில்பித்த மிகுதிகொண்டிருக்குங்கண்டாய்
சூளதுவினையினாலே தடறவெபாண்டுமூண்டு
ஆளதுகாலுங்கையும் அசந்துநித்திரையும்பாழாம். 15

ஏழு.

திட்டமாவழுகண்டால் சிரசிலேபித்தமேறி
கட்டமாம்வாயில்ரத்தம் நவிலுறச்சயமுமாகும்
மட்டவிற்காலுங்கையும் வந்திடுஞ்சிலர்திதோணும்
உட்டினமிகுதியுண்டாம் உலர்ந்திடுமலம்வியாதி. 16

ஆறேமுக்கால்.

ஆறுடன்முக்கால்கண்டால் அண்டத்தில்வாய்வுண்டாகும்
தேருமேகண்கள்ரெண்டுஞ் சிவந்திடுமயக்கமுண்டாம்
கூறிடுவருஷமூன்றில் குருக்கரீடைப்புண்டாகும்
விறிட்டகைகால்நோவாம் விரைந்திடுமுகத்தில்தானே. 17

ஆறரை.

அன்புடனுறினி லரையுங்காணவே
வெம்பியவுடம்பெலாம் வெதுப்பபுத்தாகுமாங்
கும்பியும்பொருந்திடுங் குத்தல்மேலெல்லாம்
வம்பினிலரைத்திடு மரணதேகமே. 18

ஆறேகால்.

அன்னமேஆறுட னமர்ந்துகால்கண்டால்
முன்னமேமூலமா மித்திரகிருணியாம்
பன்னமேதுயிலில்லாப் படுங்கழிச்சலாம்
வன்னமும்வேறலாம் வலதுடைவினையே. 19

ஆறு.

ஆறதாமங்குல மானதில்கண்டிடில்
தேறுதலன்றியே சிலறபனம்நெஞ்சினில்
ஊறவேஅடைத்திடும் யுள்ளமயங்கிடும்
மாறும்வேறாகவே மரணம்வந்திடும். 20

ஐந்தேமுக்கால்.

அஞ்சுடன்முக்கா லளந்துபார்க்கையில்
மிஞ்சியேசன்னிநோய் மிகுதியாகிடும்
அஞ்சதேமயக்கமும் அஸ்தியாகிடும்
கஞ்சியேகுடித்திடில் காலன்போலுமே. 21

ஐந்தரை.

அஞ்சரைகாண்கையா லமர்ந்தரோர்நோயெலாம்
மிஞ்சியேசிரசினில் விஷமதாகிடும்
பஞ்சிபோல்மூக்கும் வெண்பல்கரிகிடுங்
தஞ்சமாம்பத்துனாள் சாவதுதிண்ணமே. 22

ஐந்தேகால்.

அஞ்சினில்கால்விர லதிகங்கண்டிடில்
மிஞ்சிபொற்பாதமும் மெய்யெலாங்குண்ணியே
துஞ்சுவார்போலவே துயிலும்பொருந்திடும்
வஞ்சமும்ஆறுனாள் மரணமுங்கிட்டுமே. 23

ஐந்து.

அஞ்சுதான்விரலது அளந்துகாண்கையில்
மிஞ்சியேஉடலது வெளுத்துகுளிர்ந்திடும்
தஞ்சியேசிலேற்பனந் தடுத்துத்தொண்டையில்
நஞ்சிபோலடைத்துபல் பதரியேசாவதே. 24

நாலேமுக்கால்.

நால்விரல்மேலேமுக்கால் நவின்றிடக்கண்டில்
ஆவுடல்தன்னையா மறிவதுக்கெட்டிடும்
நாவுடன்வறண்டிடும் நடுநடுங்கிடும்
சாவதுயேழுநாள் தன்னியல்பாகுமே. 25

நாலரை.

நன்னறிவுலரை நாடிகாண்கையால்
பன்னறிபோவுடல் பத்திவீங்கிடும்
வன்னெறிகண்களும் வளைந்துமுள்விழும்
அன்னறிஒன்பதி லாகுஞ்சாவதே. 26

நாலேகால்.

நாலுடன்கால்கண்டால் நடுக்கலுமாயுல
காலுங்கைஅசந்திடு கருக்குமென்முகம்
காலவேநெடுமூச்சது தாண்டிவாங்கிடும்
ஏலவேசாவதுரெண்டு ளுளில்சாவதே. 27

நாலு.

தேட்டியனுவது திட்டமாங்கண்டிடில்
வாட்டியேமுகத்தினில் மயங்கிடுங்கண்களும்
மீட்டியகாலுடன் வீக்கமுமுற்றிடும்
தேட்டியாவது திண்ணமுமஞ்சிலே. 28

பதினொன்று.

நண்ணிப்பதினொன்று நாடிக்காண்கையால்
உண்ணியமருத்துட லியம்பவில்லையா
அண்ணல்செய்விதியன்றி அளவதில்லையா
நண்ணியகாலனு நமனுமில்லையே. 29

வெண்பா.

இந்தமுறைமுனிவ னியம்பினுரெந்தனுக்கு
சுந்தரம்சாஸ்திரத்தில் சூக்ஷமா—மிந்த
தரணிலுள்ளோர்நோய்குணங்கள் தானறியவேண்டி
அரனுரைத்ததென்றேஅறி. 30

சூடாமணி கயறுசூஸ்திரம் முற்றியது.

ஆக செய்யுள் 736.

அகத்தியனுர் நாடிக்கோர்வை முற்றிற்று.

சிவமயம்.

இரண்டாவது திருமூலநாயனர் நாடி கூறுகின்றூர்.

மூலநாடி 72த-த்தில் தசநாடி.

உற்றவிவர முறுதியாமெந்நந்தி, பற்றியமூலம் பகர்ந்திடுகோடி தான், எற்றியேஎண்ணிடி லெழுபத்திரூயிரம், மற்றதிற்பத்து வளமானநாடியே. 1

தசநாடியில் தசவாயு திருநாடியும் 9-சக்கரமும் 3-மண்டலமும்.

வளமானபத்தில்வழங்குதசவாயு, உளமாமிடையின் சுழியென மூன்றுண்டு, களமானசகரங்காட்டியதானுண்டு, தளமானமண்டலந்தான் மூன்றுபாருமே. 2

பாருமிடைகலை பிங்கலைமாறியே, தாரும் பெருவிரற் காலொடு தானேறி, காருங்கழுத்திற் கபாலவரைநின்று, வாருமிடமாய்வலக் கரஞ்சாறுமே. 3

வலக்கரந்தனில்வளமானபிங்கலை, நிலைக்கவிடக்கரநின்றநிடை கலை, துலக்கநடுமையஞ்சுழிமுனையோடிடும், பிலக்கவிதவமூன்றூற் பிறந்த தாதுவே. 4

மூலவகைநாடியில் மூவகைத்தாது.

தாதுமுறையே தனியிடைவாதமாம், போதுறுபிங்கலைபுகன்ற துபித்தமாம், மாதுசுழிமுனை வழங்கிடுமையமாம், ஓதுதற பார்த் துணர்ந்தவர் சித்தரே. 5

மூலவகை வாயுநாடி.

உணர்ந்தவபானனுறுமந்தவாதத்தில், புணர்ந்தபிராணன்புரு வந்தப்பித்தத்தில், அணைந்தசமானனடக்குங் கபத்தோ, டிணைந் திமைமூன்றுக் கொடுத்தகுறியொன்றே. 6

மூவகை நாடியறியும் விவரம்.

கிறியாம்வலக்கரங் குவிந்தபெருவிரல், வறியாதவன்கீழ் வை
த்திடுமூவிரல், பிரிவாய்மேலேறிப் பிலத்ததுவாதமாம், அறிவாய்
நடுவிரலமர்ந்தது பித்தமே. 7

பித்தத்தின்கீழேபுரண்டுதையமாம், உற்றுற்றுப்பார்க்கவோர்
நரம்பேயோடும், பந்தித்தமூவரும் பாய்கின்றவேகத்தால், மத்தி
த்ததாளம்போல் வழங்குநரம்பிதே. 8

மூவகை நாடியறியு மாத்திரை.

வழங்கியவாதமாத்திரையொன்றுகில்,தழங்கியபித்தந்தன்னி
லைவாசி, அழங்குங்கபந்தா னடங்கியேசாலோடில், பிலங்கியமூவ
ர்குப் பிசகொன்றுமில்லையே. 9

மூவகை நாடிநடப்பு.

இல்லையேவாதமெழினடைகோழியாம், எல்லையேபித்தமெழு
ம்புந்தவளைபோல், ஒல்லையேயைய முயர்ந்திடும்பாம்புபோல், அல்
லேகண்டறிந்தவர்கள் சித்தரே. 10

வாதபித்த சிலேத்தும மிருப்பிடம்.

அறிந்திடும்வாதமடங்குமலத்தினில், பிறிந்திடும்பித்தம்போரா
ஞ்சலத்தினில், மறிந்திடுமையம் வாசிக்கும்விந்துவில், வுரைந்திடு
மூன்றுக்குறவாந்தலமீதே. 11

வாதபித்த கபவர்ணம்.

உறவாங்கறுப்புஞ் சிவப்புறுகள்வாதம், நிறைவானபச்சைப்
பசுமைகொடுப்பித்தம், நிறைவாடவெண்மையாய் நின்றதுநல்லே
யும், அறைவானவர்ணம தாகுந்தலமதே. 12

தேக பஞ்சபூதம்.

சலங்காட்டியிந்தச் சடமாதனவைம்பூதம், நிலங்காட்டி நீர்கா
ட்டிநின்றிடுந்தீகாட்டி, வலங்காட்டிவாயுவால்வளர்ந்ததேயிருந்தது,
குலங்காட்டிவானிற்குடியாயிருந்ததே. 13

இருந்தவிவ்வைந்தாலெடுத்தசடமது, பிரிந்திடுமாமிசம்பிருது
வின்மயமாகும், சொரிந்திடுமெயிர்தநீர்சொற்குறியப்புவாம், வருந்தி
யவன்னி வளமாய்வெதுப்புமே. 14

வெதுப்பதுடனே விடுபட்டுநாசியில், எதுப்புற்றுநிற்குமிது காணும்வாயுவாம், கதுப்பொத்தேயெல்லாங் கவளத்திடமிட்டு, மதுப்பொத்துநிற்கும் வானின்வளப்பமே. 15

வளப்பங்கேள்பூமி வாசிக்குநாசியில் களப்பமாம்வன்னிதானுறுங்கண்ணினில், அளப்பமாமரப்போ வடங்கிடுநாவினில், மளப்ப நல்வாயும் பசிக்குமெங்குமே. 16

ஏங்கியகாதி விருந்துறுமாகாசங், கோங்கியரைந்துக்குட் பொல்லாம் மூன்றுதான், தங்கியவாயுச்சுமர்த்தன் மகாவாதம், பங்கிய வன்னியர் பகுந்ததுபித்தமே. 17

பகுந்தசலத்திற் பரிசிக்குநல்லையம், வகுந்தவிம்மூன்றால்வுளர்ந்ததுநோயெல்லாம், அகந்தானறிந்தளவிடயோகிகள், மகிழ்ந்தே யிதினின்ற மயக்கமறிவரே. 18

வாதகுணம்.

அறியவிம்மூன்றில்தாண்மை சொன்னார்நந்தி, எறியநல்வாத மெறிங்குணங்கேளு, குறியெனக்கைகால்குளேச்சுவிலாச்சந்து, பறிபெனநொந்துடற்பச்சைப் புண்ணாகுமே. 19

புண்ணாகவலிக்கும்பொருமிங்குடலோடித், சண்ணுமலத்தைத் தம்பிக்கும்போக்கா தொண்ணனவாசன குறலைசுருக்கிடும், பண்ணார்குளிர்சீதம் படுத்திடும்வாதமே. 20

பித்தகுணம்.

பகுத்திடும்பித்தம் பலபலசிந்தையாம், வகுத்திடும்வாந்தியும் வாய்நீர்மிகவூறும், மகுத்திடுமேனியின் மாட்டியெரிப்பேறும் மிருத்துத்தவனிக்கு மிகவிடங்கைக்குமே. 21

ஐயக்குணம்.

விடங்கியவைய வேவிரைப்பேற்றிடுங், தடங்கியிருமிடுங் தனிவிலநலிரண்டுநோவும், அடங்கிச்சுரங்காயு மளவற்றகோழைநீர், இடங்கிடல்வற்றி யிரத்தமுங்கக்குமே. 22

கக்கியமூவர்களிற்பலன்கேளு, ஒத்தியவாயுவுடல் கூடிடிற்பெலன், தக்கியவாயுசகலத்துக்காதாரம், சிக்கியநோயைச் சிறக்கவிளக்குமே. 23

தாபச்சுரமும் சீதச்சுரமும்.

விளக்கியவன்னியும் வாயுவுமேற்கொண்டாகல், தளக்கிய தாபச் சுரங்காணுந் தோஷமாம், வளக்கியவப்புவும் வன்னியும் மேற் கொண்டால், இளக்கியசீதச்சுரங் காணிதன்போரே. 24

தோஷநிறக்குறி.

போானதோஷம்பிறக்குமுறைகேளு, வாறுனவாதமும் வன் னிகருந்தோஷம், தாறுனபித்தமூந்தழலூடில்வெண்மையாம், சேறு னவையமுஞ் சிவப்பேறும்வாய்விலே. 25

வாயுவடங்கினுல் வலுவானதோஷம்போம், வாயுவெழும்பி னுல் மண்ணுநீறேன்றாகும், வாயுவுநீரால் வழங்கியவன்னியாம், வாயுமாகாசமண்டலவோசையே. 26

ஓசையிலேழுமொளியினிலோரைந்தும், நாசியின்மூன்று நாவி னிலிரண்டும், தேசியுந்தேசனுஞ் சேர்த்துபிரிந்திடம், மாசிலாதந்தி மகிழ்ந்துரைத்தாரே. 27

ஓராண்டிலு மீராண்டிலும் சாகுங்குறி.

உரைத்தநாசி யுருதிக்குறிகேள், விரைத்திடப்பிங்கலைவிடா தோடின்மூன்றுநாள், இரத்தசடமாண்டிலெய்திடுமாகாசம், பரத்தி லிரண்டுநாட்பாசிவீராண்டெண்ணே. 23

மூவாண்டிலும் ஆறுதிங்களிலும் சாகுங்குறி.

எண்ணியொருநா ளியக்கிடிற்பிங்கலை, தண்ணியமூவாண்டிற் றப்பாதுமரணம், ஒன்றியபுயத்திலோடிடிற்பத்துநாள், மண்ணின் மதியாரின் மரிப்பாண்குறியிதே. 29

நாள்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி.

குறிகேளுமூக்கன்றிக்குலவிவாய்வழியோடில், மறிகேளுமூன் றுநாள்மறித்திடுவன்றப்பாது, தெரிகேளுமும்மலமுந்திரண்டுமிகக் குறைந்துவரில், பரிவாகப்பட்சத்தில் பாருயிர்தான்றப்பாதே. 30

ஆறுதிங்களிலும் உடனேயும் சாகுங்குறி.

தப்பாதுவாய்நீர் தான்றுக்கிற்றனிமேல்விழிலே, ஒப்பாகத் தனுமறைய வெழுந்திடுவன்மதியாரில், செப்பாகத்தானிருக்கச் சேர்ந்த நிழலைக்திடினும், அப்பாகேள் சாவுநிசமறிந்துகற்பங் கொண்டிடே. 31

கொண்டிடுந்தோஷக்குறிசொன்னேனந்தி, கண்டிமுதடுந்த னிப்பல்லுநாக்கொன்றாய், மண்டிந்தாது வளமாய்க்கறுப்பேறில், ஒண்டிடுமாறுநா ளூறுதியாய்ச்சாவானே. 32

உறுதியாம்பித்தமுடம்பிளேப்பதாகும், பொறையாகத்தூலு க்கிபோவான்மதியொன்றில், அறுதியாதமச நல்லத்தியுலர்ந்ததே, உறுதியோர்மதியி லொடுங்குஞ்சீவனே. 33

சாகாக்குறியும் சாவுங்குறி.

சிவகளையாய்ச் சேர்ந்திடுநாடியில், ஆவடுமாம்வைத் தழுத்தி டின்மேலேறும், தாவொத்துமேனேக்கிற் சாகாதெருநாளும், பா வொத்துக்கீழ்நோக்கிற் பதையாமற்சாவானே. 34

அமிர்தமுண்டும் சாகுங்குறி.

பதைக்கின்றமூவரிற்பக்குவந்தப்பியே,நிதைக்கின்றவாதமும் பித்தமுநீங்கிடில், வதைகொண்டிருந்தாலுந் தோற்றியவுயிர்விடும், பிதைக்கொண்டவாத பித்தம்பெலனுமே. 35

கைவிடுங்குறி முதலியன.

பித்தமடங்கினுற்பேசாதேபோய்விடும், எத்தியவையமெழும் பிடிற்கிட்டாதே, எத்தியவாத மெழும்பின்மருந்துசெய், எத்தியிம் மூன்றி னியல்பையறிந்திடே. 36

சாகாக்குறி சாகுங்குறி.

அறிந்திடிம்மூன்றிமடங்கியேமுட்டினும், எரிந்துமிகவோடினு மெய்தாதசாவுதான்,பரிந்துநற்றாகப்பற்றற்றுக்கீழ்நோக்கில்,வழிந் தேயுயிர்சென்றுமறலிகைப்புக்குமே. 37

மகாதோஷக்குறி.

புக்கியந்திகை பொருந்தவொருவிறல், எக்கியுயரலெழும்பின் மகாதோஷம், அக்கியவுந்திதானுதாரம்வாயுவிற்குவைக்குந் தலமெ ன வகுத்தனர்சாதுகாள். 38

தசநாடிகளிருப்பிடம்.

சாதுமுறைசேடணித்தகுதிச்சந்தோ, டோதுனகாமிய முந்தி நெடுமார்பு, காதுநெடுமூக்குக்கண் சங்காம்புருவம், போதுறுமுச்சி புகழ்பத்தும்பத்திடே. 39

சாகாக்குறி சாகுங்குறி.

பார்க்கின்றதசநாடிப் பதைப்புண்டாய்நின்றிடில், ஏற்கிற்சில நாளிருப்பானிறந்திடான், காக்கிடுங்காமிலங்கழன்றுசுழித்தோடில் ஆர்க்கிலெமனால கடைவதுவுண்மையே. 40

உண்மைகேளின்னமுமிந்திடநோயுள்ளோன், தண்மையாய்த் தூரம்போய்த் தாக்கிடிற்சாவில்லை, கண்மையாம்வாயுக்கழன்றிடிற் கிட்டிடும், வண்மையாய்ப்பார்க்க வகுத்தனர்நந்தியே. 41

வாயுநோய்சுரம் திரிதோஷம்.

வகுத்தமுறைப்பாடு மந்தத்தால்வாயுவாம், மிகுத்தநல்வாயு வான் விளைந்திடுநோயெல்லாம் பகுத்திவையிரண்டாற் பாரச்சுர முறும், முகுத்திவைமுன்றான் முத்தோஷங்காணுமே. 42

மந்தம் வருதல்.

காணுமேமந்தங் கவளிக்குமன்னத்தால், காணுமேமந்தங்கடு மாமிசமீறில், காணுமேமந்தங் கலந்தமாப்பண்டத்தால் காணுமே மந்தங் கருமேதிப்பாலுக்கே. 43

மேவியவன்னத்தால்விளங்கியதிச்சடம்,பாவியேகொன்றுபழி யுறுமன்னத்தான், ஆவின்மிதந்தப் பிலையுற்றுநோயாகும், காவிலி வையெலாங் கண்டுகொள்ளன்னமே. 44

அன்னம்பிறந்ததனைத்துவிதையிலும், தின்னியவெட்டைமகா சீதமிரண்டினால், பன்னியறிந்திதைப்பார்ப்பார்பெரியோர்கள் கன் னிமயக்கத்தாற் கண்டுமேகமே. 45

மேகம்பிறக்கும் விதம்.

மேகம்பிறக்கும்விதஞ்சொன்னாரெந்நந்தி, ஆமமிளந்தைப்பரு வமதில்மோதித்தும், போகந்தினஞ்செய்யிற் புகழ்மந்தத்தேகூடில் வாகப்பசியால் வழங்குசையோகமே. 46

சையோகஞ்செய்யத் தனித்தசுழியோடும், ஐயாவமிர்தமடக் கிக்கனலேறும், மெய்யாகவிந்துவிழப்புண்ணாகும், மையானமேகம் வளருங்கிரந்தியே. 47

சீமேகம்வாயுச்சூலை பலமேகம்பலநோய்.

கிரந்தியிரணங்கிளர்ந்திடுஞ்சீமேகம்,குரைந்திவையிரண்டாறு வாய்வுசூலையாம், பரந்திவைமூன்றாற் பலபலமேகங்கள், துரந்தி வைதொட்டுச் சூழ்நோய்களுற்றதே. 48

இலங்கன மிடுதல்.

குற்றசுரத்துக்கு முறுதியாம்வாயுவுக்கும், அற்றேவருமட்டு மன்னத்தைக்காட்டாதே, முற்றக்கனலாசுமுன்வழியேவரில், ஓத் தேநிறைந்தோடி வெறேறுக்குமஞ்சாதே. 49

காயசித்தி.

அஞ்சியுகத்திலழியாமற்காயந்தான், மிஞ்சியங்கம்விளம்பிஞே னூற்றெட்டுத், தஞ்சமுறவே தான்றின்னவல்லோர்க்குப் பஞ்சாகை ரைபோய் பதித்தோங்கிவாழ்வரே. 50

வளமானபித்தத்தின் மருவிக்கபங்கூடில், தளமானவாயுவற்று வேவெதுப்பேறிக், களமானகன்னற்றிற் கட்டியேமூலமாம், குளமா ஞ்சுரத்தி லுருகின்றவாயுவே. 51

ரோகங்கபத்தி லுழைந்தேறிவாயுதான், வாகுற்றநெஞ்சில் வலித்தேமயங்கிடும், பேகுற்றபித்தத்தைப் போகாமற்றப்பித்துப் பாகுற்றுப்பேசையிற் பதையாமற்கொல்லுமே. 52

சுகசன்னி.

பதமாஞ்சுகசன்னியாயும்விதங்கேளு, நிதமாகமூழ்கிநிறைய வேசாப்பிட்டுக், குதமாகமந்தத்திற் கூடிடிற்வாயுவால், அதமாமனு போக மணைக்கிடிற்சன்னியே. 53

வியர்வை கண்சிவப்புமாக தோஷம் காயமழிதல்.

சன்னிசுகத்தினூற்றானேனூம்வியர்வைதான், கன்னிசுகத்தினூற் கண்கள்சிவப்பேறும், வன்னிசுகத்தினூல்வலங்குமகாதோஷம், அன் னசுகத்தினூ லழிந்திடுங்காயமே. 54

மூலம்.

காயத்தின்மூலங்கண்டவிதங்கேளு பாயொத்ததீபனம்மரிந் தேயடக்கினுமாயைமயக்க மலத்தையடக்கினும் ஓயுற்றகுண்டலிக் குப்புகும்வாயுவே. 55

மூளைமூலம்.

வாயுபகுந்துமலத்தோர்பானத்தைத் தெசிவைக்கூட்டித்திரட் டிக்கருக்கிடும் தோயும்மலம்வரிற்கருக்கிமுன்னேநின் றுயுமூளைபோ லபான்னிறுக்குமே. 56

இரத்தமூலம்.

இருக்குஞ்சிலமூல மெழுமண்டலம்போய், மறுக்காணங்கொண்டுகருகுஞ்சிலமூலம், உறுகிவாயுவாலுதிரமுந்தான்கூடி, தறுக்கிவிழுக்காட்டும் தான்ரத்தமூலமே. 57

பசிகெடும்விந்துநாசம் இரைச்சல்கழிச்சலாம்.

மூலமெழுந்திடின்முன்னம்பசிபோகு, மூலமெழுந்திடின்முனைவிந்துநாசமாம், மூலமெழுந்திடின் முழங்குமிசைச்சலந்தான், மூலமெழுந்திடின் முசியாக்கழிச்சலே. 58

கிருணிக்கழிச்சலில் ஆறுவிதம்.

கழிச்சல்கிருணிக்கழியும்விதங்கேளு, அழிக்கியபித்தமனல்வாதமையமாம், செழுச்சிவாயுசேர்ந்திவைமூன்றால், பழிச்செனம்பேதிக்கும் பார்பெலம்போகுமே. 59

பெலமானமேகத்திற் பிறந்ததொருபேதி, குலமானமூலத்திற்கொடியதொருபேதி, சலமானவாயுவாற்சஞ்சித்தொருபேதி, வளமானவாறும் வகுத்துறையாமே. 60

பித்தமேகநிறக்குறி.

முறையானமேக முழங்குமிருபதும், துறையானதெல்லாஞ்சொன்னுரெந்நந்தி, தறையாகுஞ்சிலையிற் கண்டின்மஞ்சள்போல், பறையானபித்தத்தாற் படுகின்றமேகமே. 61

வாதமேகவையுமேகநிற்குறி.

படுகின்றசிலைதான் பாங்காம்வெளுப்பாகில், அடுகின்றவாதத்தாலாகுங்காணம்மேகம், மடுகுந்தபீனத்தின் மயினிறம்போர்பட்டால், விடுகின்றவையத்தால் விழுகின்றமேகமே. 62

தமரேரிமேகம் நீர்த்துளிமேகம்.

மேகமேமூன்றில் வெவ்வேறுகுணங்களும், வாகியபித்தமும் வாயுவுங்கூடிடில், தாகியநாளத்தமரிலெரிந்திடும், போகுநீர்கட்டிப்பொசிந்துதுளித்தேவிழும். 63

சிக்காநீர்மேகம் கல்லெரிப்புமேகம்.

விழுகுஞ்சிலநோம் விடுபட்டுநீரோடும், ஒழுகியவாயுமொதுங்கினுனேகாது, வழுதியமந்தத்தாய் வாயுவந்தேபுகில், கழுகிமுதிர்ந்திடுங் கல்லெரிப்பாகுமே. 64

மேகமிகும் மேகநிகருகும் தாதுநஷ்டமாம்.

ஆகியவாதமும்வாயுவுங்கூடில், தாகியவெள்ளைதடையற்றுமெத்தவாம், போகியமேனிபொருமிக்கறுப்பேறும், வாகியதாதிவலங்காதுநஷ்டமே. 65

வெளியாக்காணு தெலும்பாயிருமிடுமேகம்.

வழங்கியவையமும்வாயுவுங்கூடிடில்,பிழச்சுகிப்பொசியாதுபிற வெள்ளைகாணாது, தழங்கியிளைத்துத்தா னஸ்திபோலாவான்,இழங்கிப்புகழ்ந்தே யிருமிடும்மேகமே. 66

இருமியபித்தமும்வாதமுங்கூடிடில், மருவச்சலமேகம்வாரிதிபோலாடும், உளவம்வேருக்கு முண்டவுடற்காய்ந்திடும், உருத்தேயூனோடுறிஞ்சியினிக்குமே. 67

மதமேககுணம்.

இனிக்கின்றவாதத் திடைசேரியலைந்தான்,பணிக்கின்றள்ளுப் பதனிபோனீரோடும், கனிக்கின்றமேனி கரைந்துவெளுப்பேறும் தனிக்குமதுமேகந் தப்பாதேயையமே. 68

இரத்தமேகம்.

ஐயமும்பித்தமு மணைந்திடுங்காலத்தில், கொய்யுறுமிரத்தங் கொப்புளிக்குந்தண்டில், மையுறுங்கண்ணுட்கு மகத்தாம்பெறும் பாடம், வையறும்மேகம் வரிசைமுறைகேளே. 69

முறைகேட்கவொன்பது முயற்சியாய்வந்து, துறைகேட்கிற் சம்பத்திற்றுவக்கியமேகங்கேள், நறைபூத்தகொங்கையாணைக்கண மோகத்தால், மறைபோற்றுங்கற்பத்தில் வளர்ந்ததுமேகமே. 70

வளர்ந்ததுகற்பத்தில் வகுத்தமுறையைஞ்சாம், உளர்ந்தியவுத்தியிலுற்பத்தியாமேகம், அழுந்திப்படும்வெள்ளை யாகச்சுரமேகம், தளர்ந்திட்டவஸ்தியைத் தணலாயுருக்குமே. 71

தணற்காயுமேகந் தண்ணீர்ப்பகைமேகம்,உணத்தான்முழுக்கற்றுலுருகுஞ்சிலமேகம், பிணக்காற்பதிகெட்டாற் பெற்றபெருமேகம், வணக்காற் சையோகத்தால் வருங்கடுமேகமே. 72

கடும்பசிதோன்றிடிற் காணுஞ்சிலமேகம்,அடுவுற்றபாஷாணத் தாலாஞ்சிலமேகம், அடுவுற்றிறையேழு மஞ்சுயமுன்னென்பதும், எடுவுற்றிருபத்தொன் றேறறினூர்மேகமே. 73

ஏற்றியகுன்மம் எழுந்தவிதங்கேளு, தேற்றியபித்தமும்வாய்வுங்தொந்திக்கில், சேற்றியவன்னஞ் செருக்கில்வலிப்பேறும், மாற்றியநீரும் வாந்தியாம்பாருமே. 74

வாத குனமம்.

பாருமேவாதமும் வாயுவுங்கூடிடில், ஒருமேகும்பியி லுழன்று மிகநோகும், கோருமேகுத்துங் குடலைமுறிக்கியிடும், வாறுமேவாதத்தில் வழங்கியகுன்மமே. 75

ஐய குன்மம்.

வழங்கியவையமும் வாயுவுங்கூடிடில், தழங்கியவன்னத்தைச் சந்திக்கவொட்டாது, யுழங்கியவன்னம் புளிப்புக்கொடுத்தேழி, உழங்கிமுறுக்கி யுடலைவலிக்குமே. 76

மேக குன்மம்.

வலிக்கியமேகமும் வாயுவுங்கூடிடில், பலிக்கியமலசலம்பதையாமலகட்டிடும், இலிக்கியவிடப்புறமியல்பாம்வலப்புறம், வலிக்கும் முறுக்கும் வருசூலைக்குன்மமே. 77

குன்மமிவைகாவில் கூறினுரெனவிதம், வன்மையாநோய்க்கு மகாநோய் காண்பொல்லாது, கன்மமேசெய்ததடத்துக்கிதுவெய்தும், நன்மையாந்தர்மஞ்செய் நாட்டோர்க்கும்வாராதே. 78

பித்தசூலை.

நாட்டியபித்தமாஞ் சூலைமுறைகேளு, மாட்டியவன்ன ருசிகெட்டுவாந்தியாம், ஆட்டியகைகாலதன்சந்துபின்றண்டு, நீட்டிவலித்து நிலையாயெரியுமே. 79

வாதசூலை.

நிலையானவாதத்தினின்றிடுஞ்சூலைதான், குலையானகைகாற்குளிச்செல்லாம்புண்போல, கலையாய்வலித்துத்தனத்திடுங்கீழ்வயது, தலையானமேனி தானிளைத்திடுமே. 80

கொல்லையவையமும் பித்தமுங்கூடிடில், மல்லியெனும்பில்வளமாய்த்தொளைத்துநோய், அல்லிச்சுரங்காயும் மதிகதாபமுமாகும் எல்லியிருமிடு மிதுகாணுஞ்சூலையே. 81

மலசலங்கட்டி மேல்மூச்சு இரண்டும் உருத்தரவாயு.

வாயுவினாலே மலசலங்கட்டிடும், வாயுவினாலே வாங்கிடுமேல்மூச்சு, வாயுவினாலே மலகுமிரணங்கள், வாயுவினாலே வரும்ருத்திரரோகமாமே. 82

ஐயச்சூலை.

உளைத்திடுமேனியிருமிவறண்டிடும், குளைத்திடுகைகால்குத்தி மிகநோகும், தத்திடும்மார்பிற் சளிமிகத்தாக்கிடும், அளைத்திடுமை யத்தா லாகாதசூலையே. 83

வாதபித்தசூலை.

ஆகாதவாதமும் பித்தமுஞ்சூலையாம், வாகானகைகால் வள மாய்க்காடோறும், தாதானமேனிதனில் வெடிப்புண்ணாகும்,நோகா மனின்று புணர்ச்சியாய்க்கொல்லுமே. 84

ஐயபித்தசூலை.

காணுமேயையத்திற்கணவாதசூலைகேள், ஈணுங்கபாலம்பதை த்துவெடித்திடும், ஆணிமூலையமடங்காக்குளிர்சுரம், பேணியெலும் பெலாம் பெலன்கெட்டுநோமாறே. 85

ஆறுவகைச்சூலையிலறுமூன்றுபேர்சொல்வார், தேறுமிதையல் லால் வெவ்வேறுமொன்றில்லை, கூறுமிரணமங் கோடிகுணஞ்சொல் வார், யேறுமறுசூலைப் பேர்சொன்னரெங்கந்தியே. 86

ஆறுவிதகர்ப்பநோயால் ஸ்ரீமலடு.

நந்தியுரைத்தது நலமானகற்பத்தில்,அந்தியநோய்தான் அறு வகைகேளு, புந்தியில்வாயுவுந் தேயுவுங்கூடிடில், மந்திமலடாவாள் மாணவரைக்கென்னே. 87

மலட்டுபுழுவால் மலடு.

வரையானகர்ப்பத்தின் மலட்டுப்புழுவிருந்து, விரையாஞ்சுக் கிலத்தை விரைந்ததுவுண்டிடும், கரையாமலடியாங் காணதைப் போக்கிடில், துரையானபிள்ளை சுகமாய்ச்செனிக்குமே. 88

செனிக்கின்றபிள்ளைத்திறமாய்ப்பிறக்கையில், கனிக்கின்றசீநீர் கலந்துள்ளேசிக்கிடில், பனிக்கின்றகைகால்பரவுயெளைத்திடும், தனி க்கும்பசிபோகுந் தான்வயிறும்பாரிப்பே. 89

பாரிவாய்வுபரிந்துகுழிப்புகில், காரிக்கழிந்துசதகித்தங்கூப்பி டும், வாரியுடம்பெலாம் வலிக்குமிடைநோகும், ஆரியன்சொன்னன றிந்தவர்சித்தரே. 90

சித்தானகர்ப்பத்திற்சேர்ந்திடுமிரத்தந்தான், மத்தாயுருண்டு வாயுபோலாடிடும், உற்றபசிபோகு முழன்றேயிசைந்துமே, வற்றக் கழிச்சலாம் வன்சூதகவாய்வே. 91

சூதானமாமிசஞ் சுழித்திடிற்கற்பத்தில், வாதானமேகத்தால் வழங்கிச்செனிப்பிக்கும், போதாமுடம்பெலாம் புண்போன்மிகநோகும், நீதான்மயக்கமாய் நிர்ச்சீவனுவளே. 92

ஆகின்றநோய்க ளறுவிதங்காண்கற்பத்தில், பாகொன்றிநின்ற பலியாது கர்ப்பந்தான், வாகின்றதைப்போக்கிடில் மலடிபெறும் பிள்ளை, ஆகின்றநோய்க்கெலா மறைந்தமுறைபாரே. 93

கர்ப்பசன்னி குணம்.

அறைந்திடச்சன்னிக ளாகாதுகர்ப்பத்தில், இறைந்திடுஞ்சீவனுட்புகும்வாயுவால், விரைந்துமிகவியர்க்கு மெய்யின்மயக்கமாம், துறந்திடுபற்கிட்டுஞ் சோபிக்கும்பாருமே. 94

பாருமேபெண்டான பச்சுடம்பாங்காலம், பாருமனுபோகந் தனிக்காடிபுண்ணுதல், ஆருக்குமாப்பண்டமாகாதுமாங்கனி, கோருமேகொண்டிடிற் கொண்டிடுஞ்சன்னியே. 95

கொண்டமலடிக்குக்கூடிடுஞ்சன்னிதான், மண்டியிருக்கையின் மாத்தின்பாள்மோருண்பாள், தண்டியணைவானிச் சூதக்காய்தான் தின்பாள், ஒண்டியபெண்களுக் கோரெட்டுச்சன்னியே. 96

ஓரெட்டுச்சன்னி யுழண்டதுபெண்ணுக்கும், வாரெட்டுமாணுக்கு மகத்தாஞ்சுகசன்னி, யுழண்டதுபெண்ணுக்கும் வாரெட்டுமாணுக்கு, மகத்தாஞ்சுகசன்னி நேரிட்டுப்பார்க்கி னிகழ்ந்ததுவெவ்வேறு பாரெட்டுமெச்சப் பகுத்தமுறைபாரே. 97

கண்ணோய்.

பாரேபொடிச்சுடல்பருவெயின்மேற்கடல், வாரேறிகொங்கையாள்மாவைமிகச்செய்யல், காரேமுழுக்கறல்கண்ணுலனல்பார்த்தல் சேரேறுபாஷாணந் தின்றதாற்கண்ணோயே. 98

கண்ணோய்வருகின்ற காரணமுன்னுங்கேள், பண்ணுனமேகத் தாற் பருவேட்டைவாயுவால், தண்ணுமலக்கட்டால் தன்மலக்கட்டினுல், புண்ணுமிரணத்திற் போடுங்காரத்தாலே. 99

காரச்சுறுக்காற் கடுசிரசத்தூமத்தால், நேரொத்தசாரநின்ற மூக்கன்வாசத்தால், பாரொத்தபேதியாற்பலபலத்தண்ணீரால், சீரொத்தகண்ணிற் சிறக்கும்வியாதியே. 100

குட்டநோய் பதினெட்டான காரணம்.

வியாதியுன் மூவாறுவிளங்கிய குட்டங்கேள், சுயாதிக்கிரந்தி சுழன்மேகத்தாலாறும், பயாதியமண்ணுனிப் பலவண்டினுலெட்டு, நீயாதிப்பழநாலாய் நின்றிந்தக்குஷ்டமே. 101

திருமூலநாயனர் நாடிக்கோர்வை முற்றிற்று.

ஆக செய்யுள் 940.

உ

சிவமயம்.

மூன்றாவது

தன்வந்திரிபகவான்

நாடி கூறுகின்றார்.

நந்தீஸ்வரர் தன்வந்திரிக்குபதேசித்தது.

செனனமாம்மனிதர்தாமுஞ் சென்மிக்கும்வாலாறுந்தான்
பின்னுமாம்சுக்கிலத்திற் பிராணவாயுவுதான்சென்று
பின்னமாமபானவாய்வு சென்றதுகெற்பமுத்தி
உன்னுமாம்ரெத்தம்சூழ்ந்து வுதானவாய்வுவளர்க்கும். 1

முதல்மாதக்குறிப்பு.

சூழ்ந்ததுசுக்கிலத்திற் சுரோணிதங்கலக்குமென்று
பூந்திடும்வியாதிமுண்டும் பொருந்தியகுமிழிபோபு
ஐந்திடுந்திரளுமேனி ஈனுந்தனிலுவர்க்கும்
மாய்ந்தநாளிருவத்தைஞ்சில் அருகுருமுளைப்போல்தோன்றும். 2

2-3-4-வது மாதக்குறிப்பு.

முந்தியதிங்கள்தன்னில் முளைத்ததுகட்டியாகும்
பிந்தியதிங்கள்தன்னில் பிடரிதோள்முதுகுமாகும்
உந்திக்குமூன்றாந்திங்கள் வுடல்விரல்அரைக்காலாகும்
முந்திக்குநாலாந்திங்க ளுத்ததோர்மூக்குண்டாமே. 3

5-6-7-வது மாதக்குறிப்பு.

அஞ்செனும்திங்கள்தன்னி லாகிடும்செவிநரம்பும்
யோஞ்சிடுமாறுந்திங்கள் பொங்கிடுநகமேயெய்து
உஞ்சியமலசலங்கள் ஒத்ததோர்நரம்புமுண்டாம்
தஞ்சமாந்திங்கள்ஏழில் தான்வருங்குணங்கள்கேளே. 4

8-வது மாதக்குறிப்பு.

நரம்புடனுடிசைந்து நண்ணியகுடல்கள்தொப்புள்
பரந்தகால்சுரங்களுண்டாய் பத்தியயெட்டாந்திங்கள்
சிரந்தனில்மயிருமுண்டாய் சிக்கெனப்பிலமுமுண்டாய்
நிரந்தர அன்னசாரம் தொப்புளில்சலம்பெருக்கும். 5

9-வது மாதக்குறிப்பு.

ஒன்பதாந்திங்கள்தன்னில் வுணர்த்தியுமறிவுமுண்டாம்
வன்புறுகெற்பந்தன்னில் வருக்கநோபிலமுமுண்டாம்
தம்பிரான் தனைநினைத்து தவமுறுநிலையாய்நின்று
அன்புடன்கைபெடுத்தே அரும்பதமருள்வாயெங்கும். 6

10-வது மாதக்குறிப்பு.

ஆரவேபத்துமாதம் ஆதித்தன்அருளினாலே
சீர்பெறுமபானவாய்வு சிரமதுகீழதாக
பார்தனிற்கொணர்ந்துதள்ளும் பயின்றுமுன்னறிவதெல்லாம்
சேரவேமறதியாகி திகைத்துநொந்தமருமென்றே. 7

ஆண் பெண் அறிகிற சரக்குறிப்பு.

கெற்பஸ்தானங்கள்செய்ய கெணந்தனிற்சரங்கள்நாசி
விற்பெனப்பிராணவாய்வு வலத்திலேயோடிலாணும்
சற்பெனயிடத்திலோடிச் சிறந்ததுபெண்ணேயாகும்
உற்கரவுதையமாகில் அலியிலாக்குருடீஷமை. 8

பிள்ளை வளரும்குறிப்பு.

இப்படிச்சடலமானதிதில் வீடுமென்னந்தண்ணீர்
முப்பன்னாழிகைத்தான் மூன்றுகூறுய்பிரியும்
மெப்படிபிரண்டுகூறு மமோச்சலமலங்களாகி
செப்புமோர்கதிரின்ரத்தம் சேர்ந்துடல்தனைவளர்க்கும். 9

சரீர எடைக்குறிப்பு.

முயன்றெழுரத்தந்தண்ணிற் மூன்றரைக்கோடிரோமம்
துயங்கெழுந்துவார்ந்தானுஞ் சொல்லுமும்பண்டதென்ன
உயர்ந்ததோர்சடலந்தன்னில் ஒப்பிருபலமதென்ன
துயன்றெழும்பித்தத்துக்குச் சிரேட்டுமமுறியதாமே. 10

அங்காதி பாதம்.

செய்யதாமரையுள்வேதா செப்பியவியாதிக்கெல்லாம்
பையவேபடைத்தமெய்யிற் பத்தியநரம்புசோறி
துய்யவேண்பிறைச்சிமற்றுந் தொகுத்தனர்தெரிந்துமுன்னோர்
ஐம்மதக்கலசஞ்சொன்னார் ஐங்கதிபாதமென்றே. 11

அங்குலந்தொண்ணூற்றாம் அவரவர்கையால்மெய்தான்
இங்கதிற்குறையாதாமும் இறைச்சிநூற்றறுபத்தைந்து

பங்குகள்பலமாமென்பார் பாவைசேர்ரெண்டுகண்ணுங்
கங்குல்போலழகுமாதே களஞ்சிரண்டாகுங்கண்டாய். 12

கண்ணுறுநாசிமூக்கு கழஞ்சிநாற்கழஞ்சிநாக்கு
நண்ணுறுகன்னஞ்சேர நாற்களஞ்சாகுமென்க
நுண்ணிறைபெயலும்பெல்லாம் நூற்றொருபத்தைம்பலமாமென்பர்
எண்ணுறுமீரலான தெண்பலமெண்ணலாமே. 13

எண்ணுமுப்பலமேழூளை யினிற்சிறுகுடலிளேம்
முண்ணுமுப்பத்திரண்டு முழமெனச்சொல்லலாகும்
பண்ணுமுன் தாமரைக்காய்பலம் அஞ்சுஎண்ணலாகும்
பண்ணுநாற்களஞ்சிபித்து பைம்புறம்பார்வைகண்டாய். 14

பாய்ந்தமூக்கைமுன்னுழி பத்துமூவுழக்கிரத்தம்
ஆழ்ந்தகானுழிநுறும் அறிவிநோய்குறியாமாண்பர்
எய்ந்ததோரெழுபத்திரா யிரமவைஎறும்பைப்பின்னி
தேய்ந்தனவியாதியாக திறமுடன்விளங்குந்தானே. 15

வைத்திய சாஸ்திரமும்.

செந்தமிழ்நூலையாய்ந்து செப்புவேன்புவியிலிந்த
மந்திரமருந்துஞான மகாமுனிமகிழ்ந்துயீசன்
தந்தனம்பதத்தைநாடித் தவருமாமுனிவர்கூற
அந்தாத்திசர்போற்ற அருளியவடநூலாமே. 16

வேறு.

வடநூல்தனைமிகவாய்ந்து மகிழ்ந்தேமுனிவரிஷிகளுடன்
திடமாயிதனைக்கலைபகுத்துச் செய்யும்புவியிலுலகோர்க்கு
அடவாய்த்தானும்பிணிமுறைபும் அங்கக்குறியும்சாத்தியமும்
மடமாநயனவிதிநூலை வகையாய்வழுத்தவரிதுவே. 17

அறிவு (வேறு)

வாரிதுஆறதென்றும் வகையிதுதன்னையிந்தப்
பேருமெஞ்ஞானநீதிப் பெருகியவுலகுள்ளோர்க்கு
கூரிடவாரிலொன்றுக் குணவிதிதானநூலை
மீறிடவிதனையேயும் வியம்பிட்டுயிருந்துகேளே. 18

நாடிக்குறிப்பு.

அறிந்தேகொள்நாடிதானும் ஆண்பாலின்வலப்பக்கந்தான்
செறிந்தேமாதர்க்கிடக்கை ஜென்மித்துவிட்டபின்னம்

குறிங்தேவுந்தனிடக்கையாற் கூடமூன் றுவிரலில்வைத்து
தெரிங்தேவாதமருள்பித்தம் சேட்பக்குணமும்பாரீரே. 19

அஷ்டவிதக் குறிப்பு.

பாரேநாடியறிந்துணர்ந்து பரமன்செயலும்பிணிமுறையும்
நீரேஓடுஞ்சலமலமும் நிறமுங்குணமும்முகக்குறியும்
காரேயிளகுங்குழல்மடவீர் காலதிரேகவயதிளமை
நேரேயுறியுமுகநாடி நெறிவும்தெளிவும்செலவாமே. 20

நாடி நிதானம்.

சொல்லியவுந்திதன்னில் செருத்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்திராயிரத்தில்
வல்லவர்வழுத்துச்சொன்ன வளம்பெறுநாடிபத்து
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிவாய்பாரே. 21

நாடி சொற்குறிப்பு.

கைதனைப்பிடித்துநீயுங் கடவுளைக்கருத்திலுன்னி
உய்வதோரல்லவென்று வுத்தறிநாடிபார்க்க
பையவேதொட்டுதொட்டு பதைப்பதுகண்டபோதே
மெய்தனிற்குணங்கள்கண்டு மேவிநீவிளம்புவாயே. 22

மூவகைநாடி சொற்குறிப்பு.

விளம்பியவாகடத்தில் விரித்தனவிதங்களெல்லாம்
தெளிந்ததில்வாதபித்தம் சேஷ்பனங்கொள்கையோடு
களம்பளில்ஜன்னிதோஷம் தானுறுவாரதெல்லாம்
வளம்பெறத்தெளிந்துயிந்து மனதினுற்கருதுவாயே. 23

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனில்நாடிகாண்கில்
பெருவிரலிடையேதொட்டுப் பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரல்ஓடில்வாத மிருவிரல்பித்தமோடும்
திருவிரல்மூன்றுமோடில் சிலேட்டுமநாடிதானே. 24

வாதக்குறிப்பு.

அங்கையைமுறிக்கிநெட்டி அடவுடன்மேலேவாங்கி
செங்கையாற்பிடித்துநாடித் திறத்துடனுரைக்கக்கேளும்
முங்கைபிற்மகுத்துநாடி மெள்ளவேயோடுமாகில்
மங்கையேவாதமென்று மனத்தினுலுரைத்திடாயே. 25

பித்தக்குறிப்பு.

உத்தறிநாடிநொந்து வியந்ததுபதறியோடும்
பித்தமாம்நாடியென்றே பிசகறவறிந்துகொள்மின்
மெத்தவேயிரண்டொழுங்கி விரகெனதெறிக்குமாகில்
சுத்தமாஞ்சிலேற்பமென்று சொல்லுமெஞ்ஞானமீதே. 26

சிலேற்பனக்குறிப்பு.

ஞானமேவிடலந்தன்னில் நயல்பிணியில்லாதாற்கு
காலமேவாதமோடும் கடும்பகல்பித்தமோடும்
மாலையிலையமோடு மென்னவெமகிழ்ந்துநாளும்
சாலவேவைத்தியோர்கள் தாமிதுதெளிவர்தாமே. 27

பதார்த்தநாடிக்குறிப்பு.

தெளிந்தவர்கைக்குள்நாடி செய்யவெள்ளரிக்காய்தின்ன
குளிர்ந்திடில்வாதமாகும் குலவியவறையோடென்ன
விளங்கியமேனிதானும் வெச்சனில்பித்தமாகும்
வளம்பெறத்துவரைப்பூண்டு வழுத்திடுஞ்சேஷபமொன்றே. 28

சேஷ்பமுமுதித்தபோது தித்திப்புநாவிற்றேன்றும்
மேஷ்டியாய்க்கசப்புமீற பெருத்ததுரத்தமாகும்
எஷ்டியபுளிப்புமீற எழுந்ததுவாதமென்க
நாஷ்டமுத்திதனையெல்லாம் நயம்பெறநாடிசெப்பே. 29

நாடி நிற்குங்குறிப்பு.

செப்புவாய்தன்னில்வாத தீயதுகாற்றைப்போல
பித்தமாமுற்பவித்துச் சிவனதுஜடலந்தன்னில்
ஒத்தபல்சீலமொத்து வுடற்கரிவுப்பதாகும்
நெற்புறயிதனையெல்லாம் நிலையறயறிவர்தாமே. 30

நாடிபார்க்கின்ற மாதக்குறிப்பு.

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருதையந்தன்னில்
அத்தமாஆனிஆடி அற்பசிக்கார்த்திகைக்கும்
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமங்கிரிக்கும்
வித்தகன்கிழக்குமேற்கு விழிக்கின்றநேசந்தானே. 31

தானதுபங்குனிக்கும் தனதுநல்லாவணிக்கும்
மீனமாம்புரட்டாசிக்கும் அர்த்தராத்திரியிற்பார்க்க
தேனேமூன்றுநாடித் தெளியவேகாணுமென்று
கானமாமுனிவர்சொன்னார் கருதியேகண்டுபோரே. 32

நாடி நிலை அறிவு. (வேறு)

செய்யமாதுக்கிறை முனிசெப்பிய
துய்யவாவுமறைந் துலங்கிய
மெய்யைமாதருக் கோதியமெய்ப்பொருள்
அய்யன்றன்வந்திரிக் கருளலாயினன். 33

ஓதுநாடித் தொகையுமதிலுறும்
வாதபித்த சிலேற்பனவண்மையும்
பேதமானவியாதியின் பெயர்களும்
நீதியானநெறிகுண மோதினன். 34

விருத்தம். (வேறு)

திருவுறைமுனிவன்கூறும் வாகடச்செய்கைதன்னில்
வரும்பலவியாதிமீட்கும வகைப்படியாகுமென்னில்
உறுவுறுநாடியாலும் உன்முகமலநீராலும்
தெரிவுளநாவுநாசி திக்கயஞ்செய்களெட்டே. 35

நாடி மூலக்குறிப்பு.

உரைத்திடுந்தாரமெட்டுஞ் செய்குறியுரைக்குங்காலை
வருத்தியநாடிசெய்கை மங்கையேவழுத்தக்கேளாய்
உருத்தெழுங்கருவின்மீதே ஓமெனுமுந்தியாலே
பருத்தகுண்டடியேமூலம் பரந்தெழும்நாடிப்பத்தே. 36

72000-நாடி நரம்புக்குறிப்பு.

பத்தும்பேரிடையினேடு பின்கலைசுழினைபாரில்
அத்திசிங்குவைகாந்தாரி அலம்புருத்தமேசங்கி
உத்தெழுநாடிபத்துக் கப்பதாய்வந்திக்கீழ்மேல்
துத்தியவெழுபத்தீராயிர நரம்பென்றுசெப்பே. 37

செப்பியஎழுபத்தீராயிர சென்மமுடலிற்சேர்தல்
எப்படியெண்ணவென்றால் எழும்வாலம்விழுதுபோல
மைப்பெறுகுழல்நன்மாதே வளர்சிரமடியீராக
ஒப்புடநாடிநிற்கு முந்தியினுணர்ந்துசொன்னேன். 38

உந்தியேமூலமாக வுறிவென்றுகீழுமேலாய்
வந்திடும்நாடிதானே வுடம்பினில்வகுக்கக்கேளாய்
முந்தியஜன்னிமீதே யாயிரமாகுமுண்மை
தபந்தொடிசெவியிரண்டும் பத்துமுந்நூறுதானே. 39

வரிவிழியிரண்டும்நாலா யிரமதாய்மானேமூக்கில்
உரியமூவாயிரத்து மூந்நூற்றுமுப்பதாகும்
ஒறுவுறுபிடரிதோள்மே லுறையாராயிரமதென்னக்
கருவினில்முளைத்தநாடிக் கண்டதைக்கருதுவேனே. 40

வேறு.

கண்டத்திலாயிரமதாகும் கையிரண்டில்மூவாயிரந்தோள்
உண்டகக்கீழதாக தொப்புளின்மேலதாக
தண்டோடிகேளாயெண்பத் தாயிரத்தொருபத்தாரில்
அண்டத்துள்முனிவன்கூறு மாயுறுவேதமாமே. 41

குறித்திடிற்பிடரியின்கீழ் கூரெண்ணுயிரமதாகும்
கறுத்திடில்லிலாவில்நாடி வளர்மூவாயிரமதாகும்
ஒறுத்திடிலிங்கமீதில் அடிவயறுத்தநாடி
சிறுத்திடுங்கிரிமியேழா யிரமதாமென்றுசெப்பே. 42

பேசியமூலநாடி பேர்முனையிரமதாகும்
காசியமூலமாஞ்சந்திக் கருதிரண்டாயிரமாகும்
வீசியபாதந்தன்னில் விளம்புமாயிரத்திறேடு
ஓசைசேரந்நூற்றம்பாம் நவிலவென்றோதுநூலே. 43

மெய்குழல்மானேகேளாய் மூடிக்களதடங்கள்கைகால்
எய்தியகோசமுந்தி யிதையமோடின்னங்கேளாய்
பையரஅல்குல்மூலம் பகர்பிடர்முடிச்சோடிச்சி
வையுறுமெழுபத்திரா யிரமதாய்வகுக்குங்காலே. 44

இப்படியெழுபத்திரா யிரநரம்பெலும்பைக்கண்டு
ஏப்புடநாடிநிற்கும் விடந்தனையுரைக்கக்கேளாய்
வெப்பறுவாதபித்த சிலேத்துமமென்றுமூன்றில்
தப்பிலாதறிந்துகொள்ளுங் குறிகுணஞ்சாற்றலாமே. 45

வேறு.

இயம்பியபுருஷர்க்கெல்லாம் வலக்கரம்நாடியாகும்
தயம்பியமின்னாளுக்கு இடக்கரம்நாடியென்க
நயம்பெறநெட்டவாங்கி நல்குலங்குஷ்டமூலம்
பயங்கியவசவைத்தள்ளி பார்ப்பதுநாடியாமே. 46

நாடி நிற்கும்நிலை.

செந்திருவுமையேகேளாய் செழுநரம்பினிலேமுந்தி
வந்துறுநாடிமூன்று வணிக்கரம்பிடித்தபோது

முந்தியவாதநாடி மொழிந்தவத்திகையிற்பித்தம்
பைந்தொடிகரம்பிற்சேஷ்ப மென்றெனப்பகராலாமே. 47

வாதக்குறிப்பு.

தந்திரிபோலமூன்று தானமுமறிந்துகொண்டால்
முந்தியவாதநாடி குணங்குறிவுரைக்கக்கேளாய்
கொந்துசேர்குயிலேயன்னம் குக்கிடமயிலேஒனுன்
வந்ததேநடக்கக்கண்டால் வாதத்தின்குறிப்பதாமே. 48

பித்த சிலேற்பனக்குறிப்பு.

தாக்கியபித்தநாடி தான்செய்யுங்குறிகுணங்கள்
வீக்குவார்மூலேயேயட்டை ஆமைபோல்நடக்குமென்ன
ஊக்கமாய்சிலேற்பநாடி வுகர்ந்திடும்தவளைபாம்பு
போக்குறுநடையதாக லென்முனியரைக்கவாறே. 49

சிலேற்பனக்குறிப்பு.

வாளுசேர்மானேகேளாய் வாதமும்பித்தமொன்ருய்க்
கோளுறநடக்கும்வண்ணங் கொடுஞ்சுன்மைதலைமேற்கொண்டு
நாளுறநடப்போனுக நடுவெனச்சளியாதோடும்
மூளுறப்பித்தம்ரண்டு மொழியக்கேள்சிலேற்பனமொன்றே. 50

வாதபித்த சிலேற்பனக்குறி.

வடுவிழிமானேபிள்ளை வளர்தொட்டிலாட்டல்போல
அசிவுறவகைதல்போலாம் ஆடுசோபனமிரண்டாம்
இடுவுறுவாதமொன்றும் எழும்பிடிவிதனையாக்கும்
கடுகியபுணர்ச்சிபோல நடப்பதுகண்டுகொள்ளே. 51

கொள்ளுகவாதம்ரண்டு சிலேற்பனமொன்ருய்க்கூடில்
அன்னிலேநெடுவேர்கண்ணுப் அரணைவால்முறிவுபோலும்
துள்ளிமூழ்வண்டுபோலாம் சோவுறுளத்தபாண்டு
ஒள்ளியவாதமொன்றுங் கூடியேயுரைக்கக்கேளாய். 52

துடியிடையடித்தாற்போலத் தொடுத்திடும்சிலேற்பம்ரண்டும்
கடுகியபித்தம்ஒன்றும் நடப்பதுகாணவேண்டி
படவரவல்குலாளே மஞ்ஞைபாம்பென்னஓடும்
அடவிலேஅறிந்துக்கொள்ளு மாயுறவேதந்தானே. 53

வாகடக்குறிப்பு.

வேதமேயுரைத்தவண்மை மெய்ப்பொருள்வுந்திதொப்புள்
ஓதியபித்தத்தாலும் வுயர்கண்டசிலேற்பனந்தான்

ஆதியாமிதையத்தின்மே லாருமேவாகுமென்றும்
தீதில்லாமுன்னோர்பேசும் வாகடச்செய்கையாமே. 54

மலக்குற்றம்.

மேவியவாதஞ்செய்யும் குணத்தினைவிளம்பக்கேளாய்
தாவியவயறுமந்தம் சந்துதாட்பொருந்திநோவாம்
சீவியதாதுநாசம் சிறுத்துடன்சிறுநீர்வீழும்
காவியங்கண்ணினாளே மலமதுகரிகிவீழும். 55

பித்தசெய்கை.

ஏவலார்குழலாய்பித்தஞ் செய்குறியியம்பக்கேளாய்
கோலவேல்விழிகள்ரண்டு குளிர்ந்துமேகடிக்குமல்லால்
சீலநீர்க்கடுத்துநொந்து சிறுகெனவீழுமின்னம்
ஞாலமேயறியச்சொன்னோம் நவின்றிடுமுண்மைதானே. 56

சேத்துமச்செய்கை.

சேத்துமச்செய்குணங்கள் சில்லெனவுடம்புவேற்கும்
ஏத்தமாயுமிநீரூறி யினித்துமேவமுவழுத்து
நாத்தநீரழிந்துவீழும் நலம்பெறவமுக்குமேனி
தோத்துமிக்குணங்கள்கண்டால் சிலேற்பனத்தொகுதியாமே. 57

பதார்த்தக்குற்றம்.

அந்தவாதங்கள்ரண்டும் அடுத்திடும்பித்தமொன்று
தொந்தித்துநடக்குமாகில் தோன்றிடுங்குணத்தைக்கேளாய்
வந்துமேநொந்துவிம்மி வதைத்திடுமாதர்மோகம்
சிந்தனைமிகவுமுண்டாய்த் தின்பதும்தெரியாதென்னே. 58

பித்த சேத்துமக்குறிப்பு.

செய்யதோர்பித்தம்ரண்டுஞ் சிலேட்டுமமெழுந்ததானல்
அய்யதோர்கசியுமில்லை அடிக்கடிவுதாம்வீழும்
துய்யதோர்நயனநீரும் சுத்தமேமஞ்சள்போலாம்
பேய்கள்போல்பித்தம்பேசில் பித்தசேற்பனங்களாமே. 59

சிலேற்பமும் வாதமும்.

ஒப்பியசிலேற்பமொன்றும் வாதமுமிரண்டதாகி
வெப்புருக்கனவிசிட்டு யினிப்பையேமிகவும்வேண்டும்

தப்பிலாப்பசிரிமுண்டால் தவனமேபற்றிநிற்கும்
இப்படிக்குணமோண்டால் சிலேற்பனவாதமெண்ணே. 60

பித்தமும் வாதமும்.

எண்ணியபித்தம்ரண்டும் வாதமொன்றெரிந்ததானல்
புண்ணெனவுடம்புநோவாம் புகைந்தெழுவறிக்குநெஞ்சில்
திண்ணமாய்நாவரண்டு சிருத்துநீர்க்கடுத்துவிழும்
அண்ணலாருரைத்ததுண்மை ஆபுறுவேதமாமே. 61

சிலேற்பன பித்தம்.

தாங்கியசிலேற்பம்ரண்டும் தனிப்பித்தமெழுந்ததாகில்
ஓங்கியஜன்னியுண்டாம் வுச்சிநோய்செவிகேளாது
பாங்குடன்நாவினித்துப் பத்தியம்செரியாதாகும்
பூங்கொடிபித்தசேற்பமென்றுதான்புகலுவாறே. 62

வாத சிலேற்பனக் குறிப்பு.

மானேகேள்வாதம்ரண்டும் வருத்தசேற்பனமுங்கூடில்
ஆனதோர்சரீரம்நோவாம் அங்கைகால்திமிர்த்துக்காட்டும்
மூனமாமுதரத்துள்ளே வூத்தையும்மிடிந்துவிம்மும்
பானலங்கண்ணினூர்கேள் வாகுசேற்பனமாம்பாரே. 63

அசாத்திய நிதானம்.

பார்த்திடில்வாதபித்தம் பதிந்துசேர்ப்பனங்களங்கே
தூர்ந்திடிலதனைவால்போல் துடித்திடுமசவைநோவாம்
வேர்த்துடற்பட்டுத்தாமே மெய்யெலங்குளிர்ந்ததாகில்
கோர்த்தொடிமங்கைநல்லால் மரணமாங்குறியிதாமே. 64

அசாத்திய மரணக்குறிப்பு.

மேவியபுறங்கையாலே மிக்கதோர்முகத்தைவீங்கும்
ஆவலாம்மனிதர்தன்பா லகவறயேங்கிநாகும்
பூவைபெருமூச்செய்து போளகத்தேடுமென்னின்
காவியங்கண்ணினூர்கேள் மரணமாங்காலந்தானே. 65

புயம்பியவிலாவிரண்டு புருபுருவெனவகித்து
சயம்படுதொண்டைக்குள்ளே ஜலமடைத்திரையுங்கண்டால்
வயக்கிளேமின்னே கண்ணீர் தந்தருநீருமோட்டில்
தியங்கிடவென்றுமிந்தச் செய்குறிமரணமாமே. 66

எசிபிடியென் றுவீழும் மெழுமுடல்மயங்கிக்காட்டும்
படையுறுமூக்குநீரும் பொசித்திடும்வேர்வையுண்டாம்
வடுவிழிமாந்தருக்கு வாங்கிடும்விலாவிரண்டும்
கடுகவிக்குணங்கள்கண்டால் கண்டுகொள்மரணமென்றே. 67

அசாத்தியக் குறிப்பு.

உண்மையாய்வாதபித்தம் நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாம்கெற்பத்தாலே வளர்துடியடியேபோலத்
திண்ணமாய்வுடல்வெளுத்து மார்குளிந்ததென்னில்
அண்ணலாரறியச்சொன்னே மறிகுறிதொண்ணூற்றுரே. 68

7-வது கிழமையில் மரணக்குறிப்பு.

ஆடியேமஞ்ஞைகோழி அன்னம்போல்நடந்துவாதம்
நீடியஅட்டைபோல நீண்டதுதியங்கியோடில்
கூடியகிழமைஏழில் கொள்வதுதிண்ணமென்ன
நாடியேமுனிவர்தாமும் நயம்பெறவறிந்துசொன்னர். 69

3-வது நாளில் மரணம்.

சொன்னமூன்ருண்மையட்டை துலங்கியபித்தநாடி
வன்னமாமரவுபோல வளைந்ததுபிரிந்தேயோடில்
அன்னைநாளைந்துமூன்றில் அறிந்துகொள்மரணமென்ன
இன்னமும்அறிந்துசொன்னே மியம்பினர்குறிப்புள்ளோரே. 70

1-வது மாதத்தில் மரணம்.

கூத்தடுதவளைபாம்பு குலவியநடையைப்போன்ற
தோத்தறிந்துரைத்துச்சொன்ன சிலேற்பனங்கொடியநாடி
போர்த்தொழில்திடமன்போலப் புடைத்ததுபிரியக்கண்டால்
தூர்த்தறித்தொழிவரென்று தெகுத்தனர்மாதமொன்றே. 71

2-வது நாளில் மரணம்.

மேதினிவுள்ளோர்க்கெல்லா மெய்யிதுவுரைக்கலுற்றேன்
ஓதியவுடலைச்சந்து வுழன்ருேடிநாவரண்டி
தீதில்லாக்கற்பநாடி செருமியேயெழுந்துவீழும்
ஆதியாமுறைத்ததுண்மை அடுத்தநாளிரண்டிற்சாவே. 72

5-வது நாளில் மரணம்.

மெய்யதோர்பித்தநீங்கி வாயுவதுமிகுந்துகாட்ட
அய்யமேலிட்டகன்று மடைந்திடுமிளப்பமாகும்

துய்யதோர்விழியுமந்தஞ் சோருநீரிடமேகத்தில்
ஐயனுர்உரைத்ததுண்மை அஞ்சாநாள்மாணந்தானே. 73

இறப்புக்குறிப்பு.

துன்னியவாதபித்தஞ் சேற்பனம்துடர்ந்தஜன்னி
இன்னமுங்குணமுஞ்சொல்வேன் இயல்புடனிருந்துகேளாய்
பின்னியபாம்புபோலப் பிரிந்துதானடந்தநாடி
தன்னியதவளேதத்தித் தயங்கிடிற்சாவுமாமே. 74

1-வது நாளில் சாவு.

என்னவேவித்தைதன்னை யியல்புடனிணங்கச்சொல்வேன்
உன்முகமார்புஜங்கள் மூக்குடன்செவிகள்கண்டம்
சென்னகங்குளிர்ந்துதானும் மூக்குடன்செவிகள்கண்டம்
சொன்னநாள்ஒன்றிற்சாவான் சொகுத்தறிந்துரைத்துசெப்பே. 75

மரண நிச்சயக்குறிப்பு.

கண்டம்நொந்துந்திவீங்கி கண்சிவந்தளர்ச்சிதோன்றி
அண்டமும்பொருமிவிம்மி அதைத்துடவிறுக்கமென்ன
முண்டகமும்பொன்போல மூண்டுமேமூச்செறிந்து
தண்டிளங்கந்தமேவி சாவதுதிண்ணமாமே. 76

சேத்தும பித்தக்குறிப்பு.

சில்லெனச்சேத்துமத்தில் சேற்பனமதிலேதோன்றில்
சல்லெனச்சரீரம்வேர்த்து தானுடல்குளிர்ந்துதோன்றி
சொல்லதுகுளரிப்பேசித் தூக்கமும்சுழண்டுவீழும்
செல்விதன்பித்தந்தானுந் தீர்ந்திடாரோகமெண்ணே. 77

சேத்தும வாதக்குறிப்பு.

மெய்யதோர்சுகம்விரும்பி விரவுதானுழலேமேவிச்
செய்யதோர்நாவரண்டு சிலேற்பனநாடியோடில்
துய்யவேகண்பரந்துகாண்கில் நாளிரண்டினில்தான்சாவே
வெய்யகண்பரந்துகாண்கில் நாளிரண்டினிதான்சாவே. 78

வாதபித்த சேத்துமக்குறிப்பு.

சாலவேவாதபித்தஞ் சிலேற்பனந்தனித்தொன்ருகி
சாலவேபோஜனங்கள் சமித்திடாதாட்சிசெய்யும்
சாலவேஜன்னிசேர்ந்து தலைநொந்துவாய்திறக்கில்
சாலவேஅசைவைதிட்டம் தன்னினேவில்லாதென்றே. 79

கால்வளைந்துயருமூக்குங் கருவிழிசிவந்துநிற்கும்
மேல்வெளுத்தங்கந்தன்னில் முழிதணிந்தொடுங்கக்கண்ணீர்
கால்பெருத்துதிரும்வாயுந் தான்கதுத்திருக்குமிந்த
நால்வகைக்குறியுஞ்சொன்னோம் நமதுயிர்போகும்வாறே. 80

பருவமேவட்டமாகிப் புயமெலிந்திருக்குஞ்சோனை
பருகினீர்தாகம்போதப் பஞ்சிடுங்கண்ணும்வாயும்
அருவியசேட்பந்தானு மடர்ந்துதானிருக்குமானால்
மருவுமிக்குணங்களெல்லா மரணமென்றுரைக்கலாமே. 81

அசாத்தியக்குறிப்பு.

போர்விழிமருண்டுநாளும் புனல்விருந்தயர்நாளஞ்சிற்
சார்விழிசெவியிலேறுந் தரித்திடாதேழுநாளில்
பார்விழிமொழியும்நாவில் பயின்றதுசுவையுங்கூரான்
கூர்விழிநாசிவாசம் குறையுநாள்மூன்றிற்சாவே. 82

மரண அடையாளக்குறிப்பு.

போசனம்வெறுத்தல்விக்கல் பொருமுதல்புடைத்துச்சேர்தல்
ஆசனங்குளிர்ந்துவூதல் அங்கைகால்புறத்தேவீங்கல்
கோசமுமேறவாங்கல் குளிர்ந்திறங்குளிரவாங்கல்
நாசிவன்கருவிளண்டேநவின்று நீர்விட்டுப்போவேன். 83

மரண அடையாள நாடிக்குறிப்பு.

விட்டநீரடைத்தல்போல விழியிநீர்சிதுறச்சிந்தல்
அட்டமுங்குளிர்ந்துகாணல் அங்கைகால்புறத்தேவீங்கல்
உட்டணம்பிரவேசித்தல் வுறவுதலிப்புச்சோர்தல்
நட்டமாஞ்சாவுதிண்ணம் நாடியேகைதொடாதே. 84

பஞ்சநாடி குறிப்பு.

கைதொடிற்புண்போல்நோகல் கறுத்துடன்வழவழத்தல்
மெய்தொடிவுதிரம்நீலம் விழிதனிற்சிகப்புப்பூனை
செய்யொழிக்கமலம்புந்தி சிறுமுகம்குறுவேர்சிந்தல்
ஐவருமொடுங்கிநித்த மாடுவாராடாதொன்னே. 85

அசாத்திய சேஷ்டைக்குறிப்பு.

சிரமதுகனகனத்துச்செவி யடைத்திருமலாகி
சுரமதுவெகுவதாத சோரைபோற்சிறுநீர்வீழும்

சரமதுசிதறிவீசித் தாகமும்வெகுவதாகி
விரயவேவிழிதியங்கி முழியாதுமிடையமென்றே. 86

மருந்திடவிரும்பிடாதே மறுபிறப்பிட்டுமேலும்
தருந்தரிநிகங்கள்வீங்கித் தானடிக்கீழேகட்டி
பருந்துநீர்பெறவேவாங்கிப் பார்வையுமிகுதியானால்
மருந்திடவென்றேயீயு மரணமென்றறிந்துகொள்ளே. 87

மரண லக்ஷணக் குறிப்பு.

மீன்றுவாய்வழவழத்து மேனியும்வெளுக்குமாகில்
தான்றியபேச்சைத்தானும் சவண்டிடாராகமட்டும்
மீண்டியமரணமாக விரண்டரைக்கடிகைமுன்னே
கூண்டனவிளப்புங்கூடக் குறைந்திடுமுயிரையெண்ணே. 88

வந்ததோர்சுரமுள்ளோர்க்கு யிணங்கவேவேர்வைதோன்றி
வந்ததோர்பெருமூச்சுண்டாய் வாதநாடியுமேயானாற்
தேய்ந்ததுபிராணனென்று செப்பலாந்தெளிந்தோரெல்லாம்
கந்தழங்கையால்தாமன் கறுகஅப்புருவங்கண்டீர். 89

சாத்திய மரணக்குறிப்பு.

கண்ணிலேநாவுமெத்தக் கறுப்பதாய்நாக்குழக்கும்
தன்னிலேகுணமும்மாறித் தவ்வியக்குணமுமிஞ்சல்
எண்ணவேகுணமிதானால் இதற்குநீரினிமைகூர்ந்து
உன்னியமருந்துசெய்தால் ஒழிந்ததுமரணமென்றே. 90

பதார்த்த அசாத்தியமரணக் குறிப்பு.

உண்டவூன்செறியாதாகில் வூன்மிகச்செல்லாதாகில்
கொண்டதோர்வாய்வுமுத்திக் குடல்வலிப்புரளுமாகில்
பண்டுசொல்மருந்துசெய்யில் பார்க்கவேயெண்ணவென்றால்
வண்டுசேர்குழலினாரே மரணமென்றிதனைச்சாற்றே. 91

7-வது நாள் மரணக்குறிப்பு.

சாலவேஜலத்தினூடே தானமிழ்ந்துழலுமாகில்
ஏவலார்குழலினாரே யேழுநாளையிலேகொல்லும்
காலமேகதிரோன்னில் கருதியதிங்கள்தானும்
மாலையினிணங்கறன்று மரணமாம்திண்ணந்தானே. 92

1-வது மாதத்தில் மரணக்குறிப்பு.

கானொருநாட்குநாள்தான் தன்பலங்குறையுமானால்
ஆனதோர்வதனந்தானு மறவெளுத்திருக்குமானல்

ஈனமாம்பெருமூச்சுண்டா யிருக்குமேபாதமொன்றில்
ஊனமாமரண மென்று வுறுதியாயுடைக்கநன்றே. 93

கைவிடுங்குறிப்பு.

முதுகொடுவயிறுவீங்கி மூலமுந்தாதுகெட்டு
செதுசெவிக்கண்ணும்வாயும் சோர்வறப்பறிவுகுன்றி
முதுந்தனவாறுமூன்று முதியவஞ்சினைப்பளாகி
விதியவன்வசமேதென்று விட்டுநீயகன்றிடாயே. 94

நாவுக்குறிப்பு.

இத்தியமலஜலங்கள் மற்றுளசெவிகண்ராசி
வத்ததோர்கன்னம்நாக்கு வுறுதிகள்பலதுமற்று
இத்தனைக்குணமுங்கெட்டு இருந்தனவியல்புங்கண்டால்
வித்தகர்முன்புசென்று வினவதுவறிவதாமே. 95

மயக்கக்குறிப்பு.

பொங்குறிஅதத்தைதானே புனலொடியசந்துாறும்
ஏங்குறிசிலேற்பந்தானே எய்தியமுடிச்சுவீழும்
ஓங்கருசுழிதானே துவந்திடும்பலமேபச்சாகி
தாங்கருதுாரியந்தானே தப்பிடுமயக்கம்தீர்ந்தே. 96

8-வது நாளில் மரணக்குறிப்பு.

தீதுறுஅவத்தையஞ்சில் தெளிவுறுமுகடுபோற்கும்
ஓதியஅவத்தையாறில் வுடலதுகுளிர்ந்துகாட்டும்
நீதிபோம்அவத்தைஏழில் நினைவுற்றுபொசிப்போனென்று
மாதியாருரைத்தஎட்டில் முகமும்பஞ்சடையுமென்றே. 97

5-வது நாளில் மரணக்குறிப்பு.

கொண்டிடுமவத்தைக்கேளாய் கூர்விழிமூக்குகாது
உண்டொடிவுசகிவுந்தி உள்ளங்கால்கைகளெங்கும்
விண்டிடவெளுத்துக்காட்டி மிகர்குளுஞ்சேற்பமென்று
அண்டருமறியச்சொன்னேம் அஞ்சாநாள்மரணமென்றே. 98

7-வது நாளில் மரணக்குறிப்பு.

தன்னுடைசைகைதானும் தனக்கதுதோன்றுமாகில்
முன்னுரைஅறிதல்கேட்கல் முயன்றுரைப்பதற்குவந்து
என்னனதுன்றறிதல்யேங்கி இளைப்புடன்திகைப்பத்தோன்றல்
சொன்னம்போல்வறண்டுமெய்யுந் தோன்றிடலேழ்நாட்சாவே. 99

2-வது நாளில் மரணக்குறிப்பு.

பிரண்டதுமருண்டுமேலே பொருமிநீர்கடக்குமாகில்
இரண்டரைநாளதென்ன இயம்பினர்மரணமென்று
சுண்டமெய்குழலினளே சுரத்தினாட்டதாகுந்
திரண்டநாள்வந்ததொன்று சிக்கெனத்தெரிந்துசொல்லே. 100

90-நாள் கையில் மரணக்குறிப்பு.

அரிந்திடாப்பித்தநின்று வாதமும்சேத்துமமெங்கே
பிரிந்திடாதோடுமாகில் பொய்வளமாதேகேளாய்
இரிந்ததோர் ஆகமத்தின் நேர்பட்வொத்தேயோடில்
மரிந்திடாக்கடிகைதொண்ணூ ரளவினில்மரணமென்றே. 101

வேறு.

சேருமுமிருக்கண்டோங்கும் சோங்கும்கைகள்காலுடனே
ஊருமுழன்றேநெஞ்சுழலும் வுள்ளேசேத்துமகேதண்டம்
நீருமிருக்கும்கண்சிவக்கு நேரேயிருகலடாது
பாருங்கிரிகைக்குணங்கண்டால் பரமன்மீட்கமாட்டாரே. 102

மரணக் குறிப்பு.

எடுக்கும்படுக்குமெழுந்திருக்கு மிளைத்தேமூச்சுதணைவாங்கும்
வடுப்போகிமிரும்விழியிரண்டும் மலாவிழிக்கும்வழிபார்க்கும்
தொடுக்குஞ்சேத்மமிகவெழுந்தே தொண்டைதனிலேநீண்டுழலும்
அடுத்தநாளிதென்றறிந்தே அகலப்போகக்கடவீரே. 103

காலுங்கையும்புறம்வீங்கிக் கண்டஞ்சோர்ந்துநாவறண்டு
மேலுங்கனத்தேயிளப்பெய்தி மிகுந்தேதாகமுண்டாகி
தோலுஞ்சதையும்படபடத்து ஆய்யநெஞ்சில்குலேந்திடிகில்
மாலும்பிரமர்வந்தாலும் மரிக்கும்பிழைப்பதரிதாமே. 104

வைத்தியன் கைவிடுங்குறிப்பு.

ஊசிபோல்முகமும்நொந்து வுடம்பெலாநரம்புதோன்றி
பாசிபோல்நாவுங்கண்ணும் பாண்டமும்வெளுப்பதாகில்
கூசிடவேண்டாமிந்த குணங்களுண்டானபோது
ஊசியேமரணமென்று வுடையநீவிட்டுநீங்கே. 105

நாடி நீதிநூற்குறிப்பு.

நீதில்லாவுடல்வெளுக்குந் திரவியபத்திற்சாவாம்
ஆதியவேதஞ்சொன்ன வரைவிதிப்படியேமுன்னோர்

பேதியாய்க்கண்டநீதி பெருமையாய் ஆய்ந்துகொண்டு
மூதுவர்கடைசிக்கெல்லாம் முறையிதென்றோது நூலே. 106

ஓதியேவேதஞ்சொன்ன வுரைவிதிப்படியேபார்த்து
மூதுவற்கடைக்குறித்த முனிவருமருளிச்செய்த
வாதிகொள் நூலுக்கெல்லாம் வறைசிந்தாமணிவிளக்கம்
ஆதிநான்மூகனுமாலு மணிமுடியளவுநின்றே. 107

சிந்தாமணி நாடிக் குறிப்பு-முற்றிற்று.

(இதுவுமது) காவியம்நாடி கூறுகின்றார்.

சாத்துகிறேன்நாடியுட புருவமோடு காக்கானநாக்குமலமூத்திரமுமால், சாத்துகிறேன்கண்ணோடுபேச்சுத்தாலுங் காரிமாயெட்டுவகைபரீட்சைதன்னில், ஆத்துகிறேன் அவையிலுள்ளகுணங்களெல்லாம் அசாத்தியமறிந்து அவையம்பார்த்து, நாத்துகிறேன்நாடியுடன் நன்மையெல்லாம் நலமறிந்துகுணத்தோடு நயந்துபாரே.

நயந்துநீநாடிதான்பார்க்கும்வாறுநலமானபருவமூச்சிகண்டம்நெஞ்சி, நயந்துகையில்காலடியில் முழங்கைதன்னில் கணுக்காலில் முழங்கால்கைக்குளிதலாகுந், தயந்துதானகங்கள்தான்பரிக்கும் நாடிசகலநரம்பெழுபத்திராயிரமுஞ்சார்ந்து, இயந்துநிற்கும்இவ்விடங்கள்நாடிபார்க்கில் திரேகத்தின்பரீட்சையெல்லாம் இயம்பிடாயே.

இயம்பிடவே அங்குட்ட விரலுக்கப்பால் யேத்தமாய்நெல்லிடைவிட் டப்பால்பார்க்கில், முயம்பிடவேமூவிரலால்நாடிதொட்டு மும்மூர்த்திநாடியினில் மூக்கம்பாரும், பியம்பிடவேபிரமமதுவாதநாடிப் போனபித்தந்தான்விஷ்ணுநாடி, பியம்பிடவேசேத்மமதுருத்திரநாடி செயலெல்லாஞ்செப்புநீ தெளிந்திடாயே. 110

தெளிந்திட்டகாலமே நாழிகையைப்பத்துந் திறமையாய் வாதத்தின்சிறப்புமாகும், பொழிந்திட்டவுருவத்தின் பத்துநாழிப் பித்தத்தினடியிப் பிரதாபந்தான், கழித்திட்டசந்தியினிற்பத்து நாழிசேத்துமத்தின் செயலாகுங்கங்குல்போ, வழிந்திட்டவாதத்தின் நாடியாகும் வலித்தறிந்திசிலேத்தின்மேல் பித்தமாமே. 111

ஆமென்றவகையறிதல் சேத்துமமாகும் அம்மூன்றுநாடியது அடங்கியேயெழுந்தால், நாமென்றவாதத்துக்கிருப்பிடமேகேளுநாவிலக்குங்கிழென்றுநவிலலாகும், போமென்றபித்தத்துக்கிருப்பிட

மேகேளு போனகண்டத்தின் கீழதாகுந், தேமென்றசேத்துமத் திட்சிறந்திருக்குந் தனஞ்சயனே உச்சிக்குங்கீழதாமே. 112

கீழானபெருவிரல்கீழ் தற்சனியாம்விரலில் கிளந்தெழும்பும் வாதத்தின்நாடிதானே, மாளானமத்தியத்தின்விரல்தான்பித்தமக த்தானஅணுவிரல் சேத்துமமாகும், வாளானமன்னனுக்கு வலது கைநாடி மங்கையற்குயிடதுபக்கம் வகுக்கலாகும், காளானகைகளி லேநாடிபார்க்க கருவிகள்தான்கணக்கறிந்து கருதிப்பாரே. 113

கருதியேநாடிகள்தான்காணுநேரம் கதிருதயஞ்சித்திரைவை காசிக்குந்தான், அருதியே ஆனியொடு ஆடிஐப்பசி யமிர்தமாங்கா ர்த்திகைக்குமத்தியானம், மருதியேமார்கழியுந்தையுமாசி மாலைநே ரதனில்பார்க்கலாகும், சிருதியேபுரட்டாசி ஆவணிபங்குனியும் போனகங்குலர்த்தராத்திரியுமாமே. 114

அத்தமாம்நாடிதெரியாதபேர்கள் அற்பிங்கணஞ்செய்தோற்கு அன்னந்தண்ணீர், குற்றமாமிகுதியேயுண்டபேர்கள்குதிரைகரிவெ ய்யில்விடாய் சிற்றின்பத்தோர், மத்திபமாமதுகெஞ்சா அபினிமா ங்கிஷமச்சங்கள்மிகவுண்டோர் வாய்வுபக்கும், சித்தமாய்நிறுத்தி னேரிவர்கட்கெல்லாந் திசைகலங்கிநாடியது தெளிந்திடாதே. 115

தெளிந்திட்டவாதத்தின்நாடி குணந்தான்கேளு சிறுபிள்ளைத் தூங்குதொட்டி லாட்டம்போலும், வளிந்திட்டு வளைந்து வளைந்தே நடக்குமண்டூரந்தாது வதுதவிர்ந்துவெயிலினிற் குருவிப்போலும், அளித்திட்டஆமையின் நடையைப்போலும் ஆதியாம்வாதமதுநட க்குந்தானே. 116

நடக்கின்றபித்தத்தின்நாடிகேளு நாகரிகமாகுமன்னநடையை ப்போலும், தாராப்போலும்மாடைபுறூஊக்குருவி தமர்போலுமாகி மெனக்கின்ற, மெத்தனவாய்மீண்டுமீண்டு மேன்மையாய்மிடுக்காக விளக்கமாகி,தெடக்கின்றகெருடன்போல் பெலத்துஓங்கிக்கேசரம் போல்றூமமது பித்தந்தானே. 117

தானென்றசேத்துமத்தின் தாதுகேளு தயங்கியேதொத்து வதுந்தோற்றுதாகில், கோனென்றகோழியின் நடையைப்போலும் கொக்கினிட ஊக்கம்போலும் ஊக்குருவிபோலு, மா னென்றமங் கைநல்லாள் மயக்கில்சிக்கி மருகினவன்தாதுபோல்மசகமாகி, தே னென்றசிலந்தியின் பூச்சிப்போலும் சேத்துமமாம்நாடியது தெளி வாய்ப்பாரே. 118

தெளிவானவாதத்தின் நாடிசேதி செப்பவேசிறுகுருவிபோல் நடந்து, விளிவானமயில்போலே நடப்புகாணும் மருவியபின் ஓந்தியினின்மார்க்கமாகும், கனிவானவாதசேத்துமத்தின்நாடி கானகத்தில்கோழியதுபோல்நடக்கும், அளிவான அட்டையின்மார்க்கம் கண்டால் அதிகமாய்முன்சொன்ன நாடியாமே. 119

நாடியேபித்தஞ்சேத்துமத்தில்தானுநண்ணியேநடக்கும்வகை நன்மைகேளீர்,பாடியேபாம்புபோலலைந்துபின்னைப்பருந்தவளைகுதித்துவரும்பருவம்போலாம்,மாடியே அசீரணமாம்நாடிதானும்அனந்தமதவாளைபோல்நடைநடக்கும், தேடியேதீபனத்தின்நாடிதானும் சிறுகாக்கைதாங்குதல்போற் றுடிக்குந்தானே. 120

துடித்திட்டுஅசைந்துமேநாடிநின்று துரிசானவிறகுகட்டுசுமந்தநடையாகி, கிறுத்திட்டுகிறுகிறென்றேசுந்திநாடிக் கீழோடிவளைந்துமேபதறிச்சுற்றி அழித்திட்டுஅன்னம்போலட்டைபோலும்அதிகமாத்தாகவுமேமெலிந்துதானால்,தடித்திட்டுக்குடிலமாய்ச்சிக்கென்றுதானால் சன்னிதனிநாடியென்றே சாத்தலாமே. 121

சாத்தியேமந்தமாய்நாடிதானுந் தனித்தருக்கிடம் நடைநடந்தாப்போலும், மோத்தியேமூஞ்சூறுப்போலவாகிமுளையாகிசுடராகிக்கொழுந்தேயோடி, அத்தியேஅடங்கினின்று யெழும்பினுக்கால் அப்பிங்கனஞ்செய்தோரிவையணுகினர்க்கு, தேர்த்தியேசுகசன்னியென்னும்நாடி சூட்சாதிசூட்சமாய்த் துஞ்சும்வாறே. 122

துஞ்சியேவாளைமீன்போலேபாய்ந்துதுடித்துமேதடித்துதான் தான்சிக்கலாகி, அஞ்சியேசற்பம்போல் அடங்கினின்றுஆனைமும்மதம்போல்ஆற்பரித்து, நெஞ்சிநெறிநேகின்றுன் னிமிஷந்தானும் நிலைவிட்டுநீங்கியேமீண்டுபிக்கும், வஞ்சியர்மேல்விகாரமாய்கனவேபூண்ட வாதசுரநாடியென்றே வகுக்கலாமே. 123

வகுக்கவேவாதத்தின்நாடிதானும் வளைந்துமேமின்னேடிப்புரண்டுதாகில், தருக்கவேமந்தமது மெத்தவாகில் மயில்தார அன்னநடைபூண்டுநின்றால், நிருக்கவேநின்றுநின் றுநேரோடாமல்நிலைதப்பிமுன்பாச்சல்பின்பாச்சலாகில், செருக்கவேசெடந்தானும் யெட்டானுளிற் சிவபுரத்துக்கெய்திவிடுந் திண்ணந்தானே. 124

திண்ணமாம்பித்தத்தின்நாடிதானுந் தேள்கொடுக்குத்தெறிப்பதுபோல்தெறிக்குமாகில், வண்ணமாம்வாதத்தின் மாணமென்ன அல்லூருசற்பமதுவளைந்துகாணி, பண்ணியேபட்சத்தில்மாணமெ

பாரு அறணைத்துடிசெய்யில் யெட்டுநாளாம், மின்னியபித்தமது மீண்டுமீண்டு மிரட்சியாய்மீண்டுவந்தால் மீளாதாமே. 125

மீளவேவுந்தியினிற்சுழியைப்பத்தி விளங்கியதோர்வாதபித்த சேத்துமந்தான், ஆளவேஐயமென்றநாடிதன்னில் ஆதித்தன்சுடரொளிபோல் தோன்றுமாகில், காளவேகாந்தத்தின் அனலாய்க்காணில் கலங்கியேதான் கைவிட்டுக்கடுகியேகில், புரளவேபம்பரம்போற்சுழலுமாகில் பரமபதமடையுமென்றே பகரலாமே. 126

பகரவேவாதத்தின்நாடிதானும் பருகியதோர்பித்தத்தின்வீடுசேர்ந்து, பிகரவேபித்தத்தின்நாடிதானும் போரானசேத்துமத்தின் வீடுசேர்ந்து, அகரவேஐயமென்றநாடிதானும் அதின்வீட்டைவிட்டுமேஅப்பாலேகி, திகரவேகண்டத்தில்சேருமாகிற் றிடமலைந்து சிவலோகஞ்சேருமாமே. 127

சேரவேவீணைபோல் தெரிக்குமாகில் சித்தமாய்பதின்மூன்று நாளிலுய்வா, ஞாரவேஐயமாம்நாடிதன்னில் அதிர்ந்துமேதவளைபோற்குதிக்குமாகில், பேரவேபாம்புபோல்பிரண்டுளர்ந்து பொறியரவம்தன்னுடைய நடைகண்டாலும், மாரமாந்தன்னில் கொடிபின்னல்போல் வந்திடுமேமரணமென வகுக்கலாமே. 128

வகுக்கவேமானிடவன்வலக்கைபற்றி வளையன்றிமுடக்கன்றிநெட்டைவாங்கி, முருக்கவேமூவிரலால்தொட்டுப்பார்க்கில் மூன்றுடிவாதபித்தமென்னலாகும், சிருக்கவேஆழிவிரல் சேத்துமமாகுஞ் செயலெல்லாம் அறிந்துணர்ந்துசேதிகேட்டு, நருக்கவேநோய்தன்னின்நன்மைகண்டு நாடியினின்செயலறிந்து நாடிடாயே. 129

நாடியேயெறும்புமுத லூர்தல்போலும் நல்லமைஅசைவதுபோல்வாதநாடி, கூடியேகுளுத்தியாய்மெதுவும்போன்று குடிலங்களில்லாததோன்றுமாகில், வாடியேமங்கையற்குக்கோபமாகும் மகத்தானபஞ்சுபோல்மெதுவாயுத்துப், பீடியேகின்னரத்தின்பொலிவேயானால் பூத்தமங்கைநாடியென்றே புகலலாமே. 130

புகலவேபுழுப்போல நிமிருமாகில் பொறுகாவல் வண்டினிடபொலிவைப்போலும், நிகலவேகாசமத்தின்நெய்தான்வீழ்ந்துநேர்ந்தெழும்பும்அக்கினியின்நிறமேபோல, திகலவேகிளியெழும்புஞ்செய்கைபோலதிரையெழும்பிலங்குதல்போல்பித்தநாடி, விகலவேபடபடத்துத்தோன்றுமாகில்விகாரத்தின்நாடியென்றேவிளம்பலாமே.

விளம்பவேமேதினியில்கல்லெறிதல்போலும் மிகப்பரவிஆட்டுக்கிடாபாச்சல்போலுந், திளம்பவேசெக்கினிட திருகல்போலுஞ் சீறுகின்றமூஞ்சூறின்சிலலைப்போலும், இளம்பவேபந்தடியின்னெழும்பல்போலும் யேத்தம்போலேறியிழிந்திடுதல்போலும், புலம்பவேபித்தத்தின்நாடிதோன்றில் பூதத்தின்நாடியென்றேபேசலாமே.

பேசவேபின்கலையின்நாடிதானும் பேணுநாள்முழுதோடிப்பிரளாமற்றான், வாசவேமூவாண்டில்மரணஞ்சொல்லு வாதமாம்நாடியதுவலுமையாகி, பேசவேயிரண்டுநாள்முழுதுமோடில் யீராண்டில் மரணமென்றேயியம்பலாகும், நாசவேநாள்மூன்றில் வழுவாதோடில் நமனுக்குயிரையாவன் நாடிதானே. 133

தானென்றபித்தத்தின்நாடிதானுந்தரியாமல்நாளொன்றில்தயங்குமாகில், ஆனென்றஆறுதிங்கள்மரணஞ்சொல்லும் அசையாமலிரண்டுநாள்ஓடுமாகில், மூனென்றமூணுதிங்கள்முடிவுகாணும்முயங்கியேநான்குநாள்ஓடுமாகில், நாளென்றநாற்பதுஅஞ்சுநாளில்நசித்துமே நமனிடத்தில்நல்குவானே. 134

நல்கவேசேத்துமத்தின்நாடிதானும்நாள்மூன்றில்கடிந்தோடில் அஞ்சுநாளாம், அல்கவேயிரண்டுநாள்ஓடுமாகில்மரித்திடுவனீரைந்து நாளில்தானும், ஒல்கவேவொருநாளும்வோடுமாகில் ஒருசீவன்பதினைஞ்சுமட்டுநிற்கும், பல்கவேபத்துநாழிகையேநின்றால் பயமில்லை பார்தனிலே பாலிப்பாரே. 135

பாலித்தபித்தத்தின்நாடிதானும்பதட்டியேமூன்றுநாள்பிரளுமாகில், ஆலித்தஅரவின்னாக்கசைதல்போலும் ஆடியேஅமர்ந்துதாநிற்குமாகில், மாவித்தமணியசைத்தவோசைபோலும் மகத்தான உடுக்கையினின்தொனியைப்போலும், கோலித்தநாடியினின்குறிகள்போலுங் கொடுமறலின்காதளையேகுடிகொள்வாரே. 136

கொள்ளவேவாதத்தின்திரேகந்தானுங் குளுந்துமேசிறுதிடத்தேயூஷ்ணமாகி, துள்ளவேதுடிதுடித்து இருக்கும்பித்தந் தேகந்தான திகஉஷ்ணமாகிநிற்குந், தெள்ளவேசேத்துமத்தின்தேகந்தானுஞ் சிக்கனவேகுளிர்ந்திருக்குந்தொந்ததேகம், பள்ளவேபலவிதந்தான்பெற்றிருக்கும் பரிந்துதொட்டு திரேகத்தைப் பார்த்துச் சொல்லே. 137

தேகத்தினிறந்தானுஞ்செப்பக்கேளு செழுமையாவாதந்தான் கறுத்திருக்கும், பேதத்தின்பித்தத்தின்நிறம்மஞ்சளாகும் பெருஞ்சேத்துமந்தேகிக்குவெளுப்புமாகும், பாதத்தின்தொந்ததேகிக்குத்

தானும் பலவர்னமுகமாகிநிற்குமப்போ, வீக்கத்தின்நிறம்பார்த்து நாடிபார்த்து அஷ்டவிதபரிட்சையெல்லாம் அடவாய்ப்பாரே. 138

பார்வததேகிக்கு வார்த்தைதானும் பக்குவமாய்சமசத்தமாயிருக்கும், பேர்பித்ததேகிக்கு வார்த்தைதானும் பேசிடிலோபித்துமே உரைத்திருக்குஞ், சேர்சேத்மதேகிக்கு வார்த்தைதானுஞ் சிறுத்துமேயீனகுரலாயிருக்கும்பாரு, வேர்தொந்ததேகிக்குவார்த்தைதானும் வெகுவிதமாயிருக்குமென்று விரித்திட்டாரே. 139

விரித்திட்டவாதமென்றதேகிக்குத்தான் மீறியேகண்கறுத்துதானீர்பாயும், பிரிந்திட்டபைத்திய தேகிக்குத்தானும் பச்சென்றுசிவந்திருக்குஞ் சேத்துமதேகிக்கு, பிரிந்திட்டபீளைசாறும்வெளுத்திருக்கும் பெருஞ்சன்னிவாததேகிக்குக்கண் தான், தரிந்திட்டுச்சிவந்திருக்கும் பச்சென்றேதான் காமாலைதேகிக்குப்பசுமஞ்சளாமே.

மஞ்சளென்றவாத தேகிக்கித்தானும் மலபந்தமாயிருக்குங் கறுத்திருக்கும், பிஞ்சலென்றபித்ததேகிக்குத்தானும் பெருகியேபச்சென்றுவந்திருக்குந், துஞ்சலென்றசேத்துமதேகிக்கித்தானுஞ் சிதறியேமலம்வெளுத்தது சீதமாகும், பஞ்சலென்ற தொந்ததேகிககுத்தானும் பலவர்ணமாயிருக்கும் பண்புமாமே. 141

பண்பானவாததேகிக்கிமூத்திரம் பாரித்தும்தெளிந்திருக்கும் வெண்மையாகும், பண்பானபித்த தேகிக்கிமூத்திரம் மார்க்கமாய் மஞ்சள்நீற்றுப்பசுந்திருக்குந், திண்பானசேத்தும தேகிக்கிமூத்திரஞ் சேறுபோல் பொருமியேனுரைத்திருக்கும், கன்மானதொந்த தேகிக்குமூத்திரங் கண்டபலநிறமாகுங் கருதிடாயே. 142

கருதியேவாததேகிக்குநாக்குக்கறுத்திருக்கும்முள்ளுபோலேயிருக்கும்பாரு, பருதியேபித்தேகிக்குநாக்கு பச்சென்றுதானிருக்குஞ்சிவந்திருக்கும், வெருந்தியேசேத்துமதேகிக்குநாக்கு வெளுத்துமே தண்ணீருண்டாயிருக்குந், துருதியேதொந்த தேகிக்குநாக்கு சூட்சாதிப்பலவர்ண மாகுந்தானே. 143

வண்ணமாமெட்டுவகை பரிட்சைபார்த்து வகையானநாடியுட்குணமுங்கண்டு, திண்ணமாந்திரோகத்தின் செயலும்பார்த்து தேசதேசப்பேதச் செயலறிந்து[illegible], கண்ணமாங்காலாகாலங்கள் பார்த்துக் கனமான அத்தினியின் கணக்கறிந்து, பண்ணமாம்பலகலவாம்[illegible]லைதேர்ந்து பரிகாரப்பயனறிந்து பார்த்துச்சொல்லே.

தன்வந்திரி காவியம் நாடி முற்றியது.

ஆக செய்யுள் 984.

உ

சிவமயம்.

நான்காவது

சிவவாக்கியர்

நாடி கூறுகின்றார்.

வாதமானதேவனே யாதியாகிநின்றவன்
வாதமானதேவனே வையகமமைத்தவன்
வாதமானதேவனே யறுதொழில்வகுத்தவன்
வாதமானதேவனே வண்மைகண்டுகூறுமே. 1

வன்னியோர்மிகுத்தவன் வரையெழுந்தமாருதி
தன்னையொத்திருக்கவே சமத்திலேமிகுத்தவன்
மின்னையொத்தகாமகாரன் தன்னிலேமிகுத்தவன்
தன்னையொப்பிமெச்சிலான் சமத்தன்பித்தராசனே. 2

ஐயமானதேவனே யனாதியாகிநின்றவன்
ஐயமான்தேவனே யறிவுளர்ந்தேங்கிடும்
ஐயமானதேவனே அட்சரத்தையோதியே
ஐயமானதேவனே யறிந்துணர்ந்துகூறுமே. 3

வாதபித்தசேற்றும மருவியொக்கஓட்டியே
லாசைமிக்கசீவலை லலங்கரித்துநின்றிடும்
வாசமுற்றவாதமு மனமிகுத்தபித்தமும்
சூசியொக்கநின்றிடில் சுறோன்மிகுத்தபித்தமே. 4

மட்டிலாதவாதபித்த மருவியொக்கவோடிடில்
மட்டுலாவுசீவனார் மருவியங்குஆன்றிடும்
எட்டுமென்றவிழ்ந்தபோ திருந்தவன்தனஞ்செயன்
கட்டவிழ்ந்தகாரணங் கணக்கறிந்துகூறுமே. 5

மயங்கிநின்றசீவனார் வந்திடுவதெப்படி
திறங்களுந்தபித்தமு நீதியொத்தவாதமுந்
தலங்களிற்பொருந்திநின்று தங்களுக்குள்கூடியே
கலந்திடில்கலந்திடாது கண்டுகொள்ளுமுண்மையே. 6

உண்மையானவாதபித்த சேற்றுமமறுகிடி
லுண்மையானசிவனு ரோசைகொண்டேயெங்குவார்
பொண்மையாகவாழுமிந்த பூதலத்திலுள்ளவர்
வெண்மையானசிவனுர் விட்டிடம்விளம்புமே. 7

கோத்தநாடிமூன்றிலே கஞ்சுமாலுமென்றதாய்
போற்றியேபுகழ்நிறைந்த போதுபோதுஙன்றன
யேற்றுதீபநாடியு மெல்லையில்மதித்திட
காத்தகாண்டுருள்மயக்கங் காரணங்கள்காணுமே. 8

விடங்கெரித்தநாடியில் விகண்டுநாடிவாதமாய்
யடங்கிநின்றபித்தம்போ யடுத்தமாருதத்துள்ளே
துடங்கிநின்றவாதமுஞ் சூத்திரத்தையெட்டியே
மடங்கலைமறியடித்த மாயமென்னமாயமே. 9

அங்குலத்தடங்கியே யனலையப்புச்சீரியே
பொங்கிநின்றவுதகமும் பிரளயப்படுத்தியே
துங்கவன்கரியமூர்த்தி கழித்திடக்கொழித்ததும்
அங்கினின்றதேயபான வாய்வுநாடியே. 10

மின்னுகின்றவன்னியு மிகுந்துவாதமீறியே
உஞ்சல்கொண்டிரங்குராய பிலுஒங்குநாடிஐயமாய்
அஞ்சுமிஞ்சதிறற்குழ லஞ்சலைமலைக்கவே
துஞ்சுவன்தொடுத்தமாயந் தோற்றும்வாறதெங்ஙனே. 11

உதித்தகாலைமாலையி லோடுநாடிமூன்றிலே
கதித்தநாடியின்னதென்று கண்டுகொள்ளவல்லிருய்
கெதித்தெழுந்தவாதமுங் குறைந்துழன்றபித்தமும்
சதிக்குவந்ததெவ்வைந்த தண்மையென்ன தண்மையே. 12

மூண்டகாலைஉச்சியில் முயன்றமாலைமூன்றிலே
பூண்டகங்குளிருள்மயக்கப் புக்குயாரமைங்ஙனே
மீண்டுமையம்வாதபித்த மிடறியற்றபோதிலே
தாண்டிருந்ததனஞ்செயன் தடங்கறுத்தகாதலே. 13

தீதுசெய்தவாதநாடி சேர்ந்துவிண்டலத்துளே
மேதியங்கெழுந்தபோதில் ஓசைகொண்டவன்னியே
மாதியானநாடிகெட் டலைந்துமேயமர்ந்தது
தீதுசெய்தநாலநாடி தொண்டுவாறதெங்ஙனே. 14

நல்லவாதபித்தமும் நலங்குகின்றவையமும்
தொல்லையுற்றுதுடர்வருத்து சூதுசெய்தபோதிலே
கல்லையுற்றுநாணறுத்து காலனையடுத்திடில்
எல்லையுற்றுநாடிதானு மில்லையில்லையில்லையே. 15

இசைந்தநாடிமூன்றுதா மெழுந்தவோசைபோன்றதாய்
அசைந்தசைதவாதந்தன்னை விட்டகன்றவையமும்
பசைந்திருந்துநின்றகெவ்வும் பத்தலத்திலுற்றபோ
தசைந்தவன்னிபேரிடி லப்புவோசைஐயமே. 16

மாயமாலைவாதமு மரிதேவன்னிஐயமும்
காயமானவஞ்செழுத்திற் கண்டநாடியொன்றுமாய்
ஆயனயன்மாலுட னடுத்தநாடிமூன்றுமாய்
ஆதியானவாதநாடி யலங்கரித்துநின்றதும். 17

நீதியானகாயமும் நிறைந்திலங்கிநின்றதும்
ஓதியங்குதித்தவன்னி வாதமுமுடுகியே
சூதுசெய்தகாலநாடி லொண்டிடும்வாறதாகுமே
காயம்விட்டகன்றபோது காலமென்னகாலமே. 18

அக்கரத்திலுந்தியி லடுத்தநாடிமூன்றுமாய்
கக்கரத்திலுந்தியி லமர்ந்துஓடில்நன்றென
அக்கரத்திலுந்தியில் கண்டுருண்டுகுன்றிடில்
கக்கரத்திலீசனேவ லடுத்தநாளதாகுமே. 19

உறுமையானவாதநாடி ஓடியங்தொடுத்ததும்
உலாவிநின்றவன்னிவிண் நிலத்துளேமதித்ததும்
அறுமையானவிண்டில மடுத்தமாருதத்துளே
பரைந்துமோதவப்பினோசை யற்றுளேகழித்ததும்
குருகிநின்றமாருதங் குலவியங்கெழுந்ததும்
குரைந்துநின்றவன்னியுங் கொதித்தெழுந்துபொங்கியே
மருகியேகொதித்தெழுந்த மாருதப்பினோசையால்
மாயமாறமரணம்வந்த வாறேதுயீசனே. 20

வன்னிபொங்கிமாருதம் வளைந்துவிண்டலத்துளே
மருவிநின்றபோதுவன்னி யற்றுளேசுழித்ததும்
பன்னிநின்றவாதமான பண்பதானதனஞ்செயன்
பதரியங்கெழுந்தபோதில் பண்புவன்சிதைந்திடு

மின்னிநின்றவன்னிபோல ஐயமுற்றபோதிலே
　　விரிந்தெழுந்தமந்தவாய்வால் விரண்டெழுந்தசன்னியு
முன்னியுன்னிகாலனை யுலாவிசெய்ததோன்றலே
　　ஓதுமாதிவேதநூன் உன்மையிதுஉண்மையே. 21

ஆதியானநாடியே யடுத்தமாருதத்துளே
　　அமிழ்ந்துநின்றவாதமுன் னடங்கியங்கெழும்பியே
ஓதுகின்றவையமு மச்சலத்தினோசையால்
　　மூலநாடிவாயுவு மூண்டெழுந்தபோதிலே
தீதுசெய்தவச்சலத்தில் அபானநற்கயத்துளே
　　சேர்ந்திருந்தமூவரால் திரண்டெழுந்தகாலமும்
சூதுசெய்தவப்பினோசை சுக்கிலத்தைப்பற்றியே
　　துடர்ந்துகாலைநாடியொன்றி சொல்லிநூலிலுண்மையே. 22

உண்மையானவாதநாடி ஓங்குதுங்கெழுந்திடில்
　　ஓசையத்துவன்னியே லுலாவிநின்றவையமும்
வண்மைகொண்டமும்மலத் தடாகமுற்றுபொய்கையில்
　　மயங்கிநின்றமூவரால் வந்தடுத்தகாலமும்
திண்மைகொண்டவப்பினால் சேர்ந்திருந்தவையமும்
　　தியக்கமுற்றடுத்தபித்தஞ் சேர்ந்திருந்தபோதிலே
வண்மைகொண்டவாருக மீறவைப்புசேரிடில்
　　இசைந்தகாலநாடியொன் றியல்புகண்டுகூறுமே. 23

கூறுகின்றவாதஓசை கொண்டெழுந்தவன்னியால்
　　கொதித்தெழுந்தவப்பினோசை கொட்டிவிண்டலத்துளே
மாறுகின்றவன்னிலோசை மாருதத்தைசூழ்ந்தபின்
　　மாயமானமூலவாய்வு வண்டியங்கெழுந்திடும்
சீரியேசினத்தெழுந்த வாய்வுஅபானத்தில்
　　சேர்ந்துநின்றவோசைகெட்டு செய்தொழிலிலமைந்திட
மாறுகின்றவன்னிவோசை பத்திமாங்கிஷத்திலே
　　பதைத்தெழுந்தவப்பினால் பகைகடுத்தகாலமே. 24

மூன்றெழுந்தவாதமு முடுகிநின்றவன்னியு
　　முனிந்தமாருதத்துளே முறிந்துநின்றஐயமும்
பூண்டமச்சைதோலெலும்பு போர்வையானமூலமும்
　　பொரிகள்பத்திலோசையான புகழ்நிறைந்தவாதமு

மீறுமச்சுரோணிதத் திசைந்தசுக்கிலங்களா
விரத்தமோடுமூளைகட் டெலும்புகண்டபூண்களே
தூண்டெழுமத்திலே துளக்கமற்றவோசையுந்
துடர்ந்திருளுனின்றடர்ந்த தோதகங்கள்கூறுமே. 25

காலமையவன்னிவைத் துதித்தெழுந்தமாருதம்
கனல்புனல்நிறைந்தயோசை கண்டமோடுவுச்சியும்
சீலமானசையினில் சிரத்தினில்மரத்தினில்
சேர்ந்தலிங்கமோடுவண்டஞ் சேர்ந்துதாழமரத்தினில்
கூலமானவுந்தியில் குறித்தபேழுபத்தினில்
சொட்டிங்கொள்ளுகொள்ளிரண் டாயிரங்களானவோசையும்
தாலமாய்நிற்கவே தனஞ்செயன்கலந்ததும்
தம்மைகொண்டவாழ்வினோரை தாதுயேதுமீசனே. 26

காலமானபித்தமுங் காலணையடுத்ததுங்
கண்டுநின்றவாதமுங் கலங்கியங்குநின்றதும்
தாலமாய்கொதித்தெழுந்த தனஞ்செயன்சலித்ததும்
தண்மைகொண்டவாய்வினாலே சஞ்சரித்துநின்றதும்
ஞாலமென்றபோதிலே உறவுகொண்டவையமும்
யோங்கியங்கெழுந்தபோ துறவிகொண்டவாதமும்
வேலைகொண்டமுப்புரம் தகைந்தெழுந்தவன்னியு
விணையடுக்கயேகிவந்த வீரின்கண்டுகூறுமே. 27

ஓங்குகின்றமாருதத் தெடுத்தவையமந்திபாம்
ஓசைகொண்டபித்தமு முலாவியங்கெழுந்திடில்
பாங்குகொண்டமூவரும் பதரியங்கிளம்பிடில்
படிந்தெழுந்தவாதமும் பரிவுகொண்டபோதிலே
தூங்குநின்றிருள்மயக்க டந்துடர்ந்தவேளையில்
துன்பவின்பமுங்கடந்து சூழ்ந்தகாலவன்னியே
பாங்கரித்துகொண்டிடில் வுடுத்தகாயந்தன்னிலே
பகைக்கடுத்தவப்பினோசை பாங்குகண்டுகூறுமே. 28

உரைப்பதற்குவாதபித்த முண்மைகண்டவையமும்
ஓங்குகின்றமாருதத் துலாவிநின்றவன்னியும்
நிரைப்பமாகநின்றவாய்வு நின்றவன்னியுற்றதும்
நின்றவன் குருகிவந்த நேர்மைகொண்டுநின்றதும்

பரைப்பதாகவேயடா பாங்குகொண்டபோரிலே
பண்புகொண்டமூவரும் பதரியங்கெழுந்து
மிரைப்பதாகநின்றமூவர் கொல்லையிற்சுழண்டது
மிருவர்போயொருவனு மிறந்தகாலமாகுமே. 29

ஓடுகின்றவாதமு முற்றபித்தமையமாம்
ஓசைகொண்டபோதிலே யுலாவிநின்றபித்தமும்
கூடுகின்றரெத்தமாங்கிஷங் கொதித்தெழுந்தங்கே
குளாங்துநின்றநாடியின் கொள்கைகண்டபோதிலே
ஆடுகின்றபித்தமு மசைந்தபோதுவையமும்
மாதியானநாடியோ டமர்ந்திடும்பரிசிலே
வாடுகின்றவாய்வினைசை யாலுமுண்டுமெண்ணதாய்
மாயமானகாலதூதன் வருவதானகாலமே. 30

அந்தவுந்திதன்னிலே யமர்ந்தெழுந்தமூலமா
யாதியானமூலநாடி யமர்ந்திடும்பபரிசிலே
வந்திடும்தவப்புவியின் வளமைகொண்டவாதமும்
வன்னியையெழுப்பியே வனைந்தடுத்தபோரிலே
சந்துசந்துஓங்கியே தடம்புனல்சுழியிலே
சண்டமாருதத்திலே சடங்கறுக்கும்போதிலே
வந்துவந்துதாவியே மாருதப்புனலினு
லயைவுகொண்டகாலதூதன் வருவதானகாலமே. 31

சிவவாக்கியர் நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1015.

சிவமயம்.

ஐந்தாவது

வியாசபகவான்

நாடி கூறுகின்றார்.

ஆயுர்வேதத்தின்படி பண்டிதன் ஆசாரம்.

காப்பு.

ஆயுறுவேதந்தன்னி லடைவுளவட நூல்தன்னைத்
தாயெனக்கண்டுகொண்டு தமிழினால்விரிப்பதற்கு
மாயன்மாமருகோன்மிக்க வல்லபையிடத்தோன்மங்கைக்
காயமாம்பானதந்தக் கரிமுகக்கடவுள்காப்பு. 1

சீலனுசாரனாகில் சிறந்தவிற்பன்னனாகி
வாலஞானியுமாய்மண்ணில் மக்கள்பால்வியாதிதன்னை
கோலமாயிதன்பாலுள்ள குணாகுணந்தோஷங்கண்டு
பால்தருமன்னைப்போலே பண்டிதனாவான்தானே. 2

நேயமாயசுரர்தேவர் நிறைந்ததோர்பசாசுமற்றும்
மாயவிக்கினங்களுக்கு அலிபெலியர்ச்சித்தேத்தி
தீயற்கோடனுக்குச் சிறப்புடன்சாந்திபண்ண
பாரினிருலகுதன்னில் பண்டிதனாவான்தானே. 3

தானமந்தணருக்கீய்ந்து தருமமுமிகவேபூண்டு
ஊனமில்சிவபதங்க ளுறுதியில்பண்ணுவித்து
கானகச்சருகுதன்னைக் கரியகொள்மருகர்க்கீய்ந்து
மானிலந்தன்னைக்காப்பான் வைத்தியனாகுந்தானே. 4

என்றுமோர்சீலனாகி வியன்றவாசாரனாகிக்
கண்டியவியாதிதன்னைக் கண்டுதானருச்சியாமல்
ஒண்டியதக்கைதாய்போல் உத்தநெஞ்சிரக்கம்வைத்து
நன்றிசெய்பவனேமண்ணில் நர்ப்பரிகாரியாமே. 5

ஆனபண்டிதரைக்கண்டா லவர்கள்தன்சீஷன்போலே
மானிலத்தவர்கள்சொன்ன மருந்துகள்பாகமாக

மோனமன்றியிலேகற்று முசிவரப்பரிகரிப்பான்
கானமாங்குழலினளே கனபரிகாரியாமே. 6

கண்டுதான்வியாதிதன்னைக் களங்கமேயறவேபேசிப்
பண்டிதர்தம்மைக்கண்டால் பத்தியும்பரிவுங்கூர்ந்து
அண்டியாசனத்தில்வைத்து அடைக்காயுமிலையுமீய்ந்து
ஒண்டெனமறையோர்க்காவல் ஒரோதளமென்னலாமே. 7

ஆமெனக்கடையிற்கொள்ளு மவிழ்தமேலுணர்ந்தாலொன்றே
கோமிருமருந்துதன்னைக் குறிஞ்சிபாலையிலேவெட்ட
ஏமமாமீரமாகில் இரட்டிப்புயெடுத்துக்கூட்டு
மாமுகில்அளகத்தாளே மருத்துவத்தொழிலிதாமே. 8

வேறு.

உண்டேபண்டிதன்திடவானு யுயர்ந்தேவவனும்வல்லபனுய்
பண்டேவேதனூல்படிக்குத் தவாகடம்பலன்களையும்
கண்டேகாலம்பகர்காலங் கருத்தில்காணவல்லவனுய்
கொண்டேயனுபானமறிந்துக் கொடுப்பன்காலனைத்தடுப்பானே.

வேறு.

பண்டுதான்மாந்தர்செய்த பாவத்தால்வந்தநோய்கள்
கண்டுதான்ரோகம்தீர்க்கும் காவலர்தம்மைநோக்கி
விண்டுதான்குறைகள்சொல்லி மேவியதூபங்காட்டி
கொண்டுதாம்பூலமேந்தி குருக்கள்போல்நினைப்பார்தாமே. 10

மாதமாதம்விரோசனவாந்தியு மாதர்தங்கள்பிடம்போக்குமட்டிலே, போகவுண்டுகுருநடைகொள்வதும் பூரணப்படபாலேபருகுவாம், வேதமுன்சொல்லும் வென்னீர்குளிப்பதும் மீனுண்ணுமவிருப்பதுமுண்டென்னில், வாதபித்தசிலேற்றுமம்பத்தறும் மாணிடற்கு மறலியுமில்லையே. 11

பண்டிதனையழைத்தல்.

நோயறிகின்றான்தன்னை நொய்யுமிட்டழைத்துவந்து
பாய்தனிலிருக்கவைத்து பரிவுடன்பரனைநோக்கி
தூயத்தைபோலெண்ணி தன்கையில்நாடிகாட்ட
ஆவியைச்சொல்லவல்ல னவன்தந்தைகுருவுமாமே. 12

நீட்டியேகையைகாட்டி நேருடன்வாங்கிக்கொண்டு
வாட்டமுற்றிருந்துபார்த்து மனதிலேமகிழ்ந்துகொண்டு

நாட்டியநாடிமூன்றில் நடுவிரல்தன்னைப்பற்றி
கூட்டியேசொல்லவல்லான் குருவவனென்னலாமே. 13

தூது லக்ஷணம்.

வயித்தியன் தனையழைக்க வந்தவன் தன்னைப்பார்த்து
திருத்தமாய்கிழக்கிலிந்திரன் செப்பியநல்லதாகும்
எரிக்குமக்கினியிர திக்கு பிப்போதுமரணமென்கப்
பருத்திடுயெமனின் திக்கு பயமொடுமரணந்தானே. 14

நிருதியில்வந்தழைக்க நீர்ச்செயம்சாவுசொல்லும்
வருணனில்வந்தழைக்க மத்திபம்வாய்வுமூலம்
திரமொடுவந்துசொல்லில் தீர்ந்திடாரோகந்தானு
மிருமைசேர்குபேரனென்றும் மீசானியம்நல்லதாமே. 15

தண்ணிக்குடமும்மாங்கிஷமும் தயிர்பால்மீனசத்தம்பூவும்
வண்மைப்படியேதான்காண வருந்துஞ்சாத்தியமாகும்
நண்ணுங்கைகால்முகஞ்சுளித்து நற்பூசைசயனஞ்செய்யில்
எண்ணியிருக்ககருமமெல்லா மியம்புசாத்தியமாமே. 16

அந்தரந்தனைப்பார்த்து அழைத்தால்மரணமாகும்
விந்தைகைகால்பிடித்து வேண்டவேவியாதிமாறு
முந்தவேமுகம்சுளித்து முன்கையம்பின்முட்டாக
வந்தவனழைத்தாலப்போதே மரணமென்றறிந்துக்கொள்ளே. 17

தலைதனைவிரித்துக்கொண்டு தடியனைக்கையில்பத்தி
கலகலன்றழைக்கும்போது கனமெனச்சாவசொல்லும்
நிலைமையாயுடல்சொரிந்து நுகந்தனைக்கையிற்கிள்ளி
துலைவிலாவயித்தியந்தான் சொல்லிடுந்தாணியோர்க்கே. 18

சுவரிதூண்பிடித்தழைத்தால் சொல்லக்கேள்சாத்தியந்தான்
விபரமாய்பயந்துதும்பி மிருந்துகொட்டாவிநெட்டை
கவரெனுமூதநொக்கு கடித்துமேயழைக்கில்தீதாம்
புவனமேபுகழும்வியாசர் பூமியிற்சொன்னதூதே. 19

வெண்பா.

கைகால்சொரிந்து கருதுபல்லுந்தான்குத்தி
மெய்யிற்வடுப்பு கலைமேலுடுத்தி-நய்ய
வைத்தியனுக்கெண்ணே யிடும்போதேயழைக்கில்தான்
சைத்தியத்தில் சாவானேதான். 20

வியாசர்நாடி முற்றுப்பெற்றது.

மேற்படியாரது சரீர சூத்திரம்.

சரீரமாஞ்சூத்திரத்தை தமிழினாற்சாத்தவேண்டி
சீரிடைவடநூல்தன்னை தெரிந்ததிலாய்ந்தெடுத்து
பாரினில்மானிடற்கு பரவுபகாரமாக
நேர்மையாய்செப்புகின்றேன் நிட்சயமாகத்தானே. 1

ஆணுவம்காமியமாய்கை யதுவந்தேபெண்ணுமாணும்
மாணுவம்வாதியாசை மடுத்திடும்திரேகமாகும்
நாணமேவஆளுதாரக் கலையதுசடமேயெண்ணும்
பூணவேமுனிவர்தானும் புகன்றனர்வுரைத்ததாமே. 2

வாதம்.

வாதமும்பித்தமைய மருவிடில்திரேகம்நன்றாய்
வாதமும்பித்தமெல்லாம் வகையதுகண்ணினாலே
வாதமேபித்தமாமா சயத்தினில்மருவிலப்போ
வாதமேபித்தமூறும் வகையிதுகண்டுகொள்ளே. 3

ஆகாரம்சயனங்காம மதுகளீயொன்றுெவ்வாமல்
மோகமாய்மாயசத்தில் முனிந்திடச்சத்ததாகில்
தேகமாம்தூதுதன்னில் சிக்கிடில்மோகியாவான்
வேகமாய்பதினாலென்னு வியாதியிற்பலிக்குந்தானே. 4

சதிரதசவேக்கர்தானும் சயலிற்றியாலேரோகம்
விதித்திடும்வாதம்தும்பல் மேவுனீர்வலங்கொட்டாவி
கதித்ததீபனமும்தாகம் காசம்நித்திரையிளப்பு
மதித்திருமசத்திகண்ணி லல்லருஞ்சுக்கிலசுவாசம். 5

வாதத்தைனிரோதம்பண்ண மார்நோவுகுன்மவாய்வு
பேதித்தவுதரவாதம் பெருகிடுமூடம்புநோப்தல்
வாதைகள்திரட்டிவில்லை மலசலங்கட்டுபட்டு
பேதயக்கினிமாந்தங்கள் பெருகியமலிக்கையுண்டோ. 6

தும்பல்.

தும்பலைநிரோதம்செய்ய தொகுத்திடும்தலைநோவுண்டாம்
இன்மையிந்திரமுமெல்லா மியல்புடன்தெரியலாகும்
செம்மையில்முகம்வலித்தால் தீர்தயரைவாதங்கள்
வெண்மையால்வாய்வுகொண்டால் விதித்திட்டகுணமிதாமே. 7

நீர்.

நீர்தனைநிரோதம்பண்ண நீர்க்கட்டுகலப்பிபுக்கும்
பாரிபஞ்சந்துசந்து பண்பியநோவதாகும்
நேரிலம்வயருங்காமி நிச்சயம்மேனைய்தல்செய்யும்
பாரினிலபானவாய்வு பண்புறச்சேருமென்றே. 8

மலம்.

மலமதைநிரோதம்பண்ண மலந்தனைவாய்வுதள்ளல்
சலதோஷமுழங்கால்கீழில் தண்மையாய்நோய்வுண்டாகும்
சூலைவலிமிகவுண்டாகும் சத்தமாமபானவாய்பு
பிலமதுகுறைக்கும்வந்து பெருத்திடும்வியாதிதானே. 9

கொட்டாவி.

கொட்டாவிதனையடக்கிற் குறுகிடும்முகம்பல்விக்கை
திட்டவாயன்னந்தானும் செரித்திடாமேகம்தாங்கும்
வெட்டையிற்பிறமைசாட்டி மேவுந்தும்பல்குணங்கள்
அட்டியேயில்லாநோவு தந்தனைக்கிடமதாமே. 10

தீபன தாகம்.

தீபநிரோதம்பண்ண திரேகத்தையங்கபங்கம்
மேவுசூலைபிரமை மிகவுடலிளைப்புண்டாகும்
தாவுமுகமேவாடி சந்துகள்நோய்தல்செய்யும்
சீவமக்கினிக்காதாரந் தேவருமுரைத்ததாமே. 11

விழி நீர்.

விழியினில்நீரடைக்கில் விதமானஇறுத்தரோகம்
வழிபடப்பீனிசங்கள் வந்திடும்நேத்திரரோகம்
அழிகிடுஞ்சிரசில்ரோக மதனுடன்வாதங்கூடில்
பழுதுபல்லிக்கைகுன்மம் பற்றிடுங்குணமுமுண்டே. 12

காசம் இளைப்பு.

காசத்தைநிரோதம்பண்ண கதித்திடுமிருமல்மெத்த
வாசமாஞ்சுவாசமுண்டா மருகிடும்ருத்திரரோகம்
பேசியபீளைபடக்கம் பெருத்திடுமேகங்குன்மம்
நாசஞ்செய்மூர்ச்சையோடு நளிர்தும்பல்கணமுமுண்டே. 13

நித்திரை.

நித்திரையடக்கிப்போக நின்றிடுங்கருமங்களும்
நித்தமுந்தலைகனப்பு நின்றகண்ணேய் தலாகி
சித்தத்தில்செவிடுண்டாகி வெளிவரப்பேச்சுமண்டி
வைத்ததோருறக்கந்தன்னி லுண்டதோர்வாய்வின்கூறே. 14

சத்தி.

சத்தியையடக்கியப்போ தடித்திட்டகடிக்குஷ்டங்கள்
மெத்தவுந்தினவுபாண்டு மேவுகண்ரோகமுண்டாய்
பித்தமில்விஷபாகங்கள் பெருகிடும்சுவாசம்காசம்
பத்தியகாசமாகில் பகர்ந்தவிக்குணங்களுண்டே. 15

சுக்கிலம்.

சுக்கிலந்தனையடக்கில் சுரமுடனீர்க்கட்டாகி
பக்கமாய்கைகால்சந்து பாரநோய்வழியிரங்கும்
மிக்கமார்நோவுண்டாகி மிகுத்திடும்பிரமேகந்தான்
தக்கதோர்போத்துமாகி தரித்திடும்வாய்வின்கூறே. 16

சுவாசம்.

சுவாசத்தையடக்கிலப்போ தொடர்ந்திடுமிருமல்மோவு
பவசமாய்வயர்பிரமி பண்புநாக்கரோசிகமேயாகில்
கவசமாங்குலையிடிப்பு காச்சலும்வெட்டையாகி
தவசமாய்வாய்வுதன்னில் தருங்குணமிவைகளாமே. 17

சரீர சூத்திரம் முற்றிற்று.

ஆக செய்யுள் 1052.

உ

சிவமயம்.

ஆ ரு வ து.

யூகிமுனி

நாடி கூறுகின்றார்.

நாடிப்பரிட்சை.

நயந்துதிசைநாடிதனைப் பார்க்கும்பாரு
நயமானபுருவமுச்சி கண்டம்நெஞ்சு
கயந்துகையில்காலடியில் முழங்கைதன்னில்
கணுக்காலில்முழங்கால் கைக்குழியில்லாதல்
தயங்குகானங்கள்ளர் பரிக்கும்நாடி
சகலநரம்பெழுபத் தீராயிரமுஞ்சார்ந்து
இயங்கிநிற்கில்மிவ்விடங்கள் நாடிபார்க்கில்
தேகத்தின்பரிட்சையெல்லா மியம்பலாமே. 1

இயம்பிடவேஅங்குஷ்ட விரலுக்கப்பால்
யேத்தமாயநோக்கிடை விடப்பால்பார்க்கில்
முயம்பிடவேமூவிரலால் நாடிதொட்டு
மும்மூர்த்திநாடியினி முழக்கம்பாரு
மியம்பிடவே பிரமமதுவாதநாடி
பேரானவிஷ்ணுத்தான் பித்தநாடி
தியம்பிடவேசேத்துமம் உருத்திரநாடி
செயலறிந்துசெப்பிடவுந் தெளிந்திடாயே. 2

தெளிந்திடவும் மதிநாயிங்கடிகைபத்து
திரமானவாதத்தின் சிறப்புமாகும்
பொளிந்திட்டஉருமத்தில் பத்துநாழி
பித்தத்தின்நாடியுட் பிரதாபந்தான்
வெளிந்திட்டஅந்தியினிற் பத்துநாழி
சேத்துமத்தின்செயலாகுங் கங்குல்போது
வளிந்திட்டவாதத்தின் நாடியாதல்
வலிந்தநசிபத்தின்மேல் பித்தமாமே, 3

ஆமென்றவையக்கறையில் சேத்துமமாகும்
அம்மூன்றுநாடியது எழும்புங்காலம்
நாமென்றவாதமதுக் கிருப்பிடமேதென்றால்
நாபிக்குங்கீழெனவே நவில்வதாகும்
போமென்றசேத்துமமது பொலிந்துஓங்கி
பொல்லாதகிருகிருப்பு உழலையுடம்பு
தேமென்றசேத்துமத்துக் கிருப்பிடமேதென்னில்
செயலானஉச்சியின்கீழ் காச்சனியாம்விரலிற்றானே. 4

கீழானபெருவிரல்கீழ் காச்சினியாம்விரலிற்
கிளர்தெழும்பும்வாதத்தின் நாடிதானும்
பாழானமத்திபத்தில் விரல்தான்பித்தம்
மகத்தானஅனுமிவிரல் சேத்துமமாகும்
வாழானபுருஷருக்கு வலக்கைநாடி
மங்கையர்க்கிடதுபுறம் மருக்கலாகும்
காழானகைகாலில் நாடிபார்க்கில்
கருவிகள்தான்கணக்கரிந்துக் கருதிப்பாரே. 5

கருதியேநாடிகள்தான் காணும்நேர்மை
கதிருதயம்சித்திரைதன் வைகாசிக்கும்
அருதியேஆனியோடு ஆடிஅற்பசியும்
அமூர்தமாம்கார்த்திகையு மத்தியானம்
மருத்தியேமார்கழியும் தையுமாசி
மாலைநேரந்தனிலே வார்க்கலாகும்
பிருதியேபுரட்டாசி ஆவணிபங்குனி
போனகங்குல் ராத்திரியுமாமே. 6

அத்தமாய்நாடி தெரியாதபேர்கள்
அப்பிங்கனம்செய்தோர்க்கு அன்னந்தண்ணீர்
குத்தமாமிகுதியே யுண்டபேர்கள்
குதிரைகரிவெய்யல்விடாம் சித்தன்பத்தோர்
மத்திபமாம்மதுகெஞ்சா அபினிமாங்கிஷம்
மச்சமிகவுண்டோர்க்கு வாய்க்குபித்தம்
தித்தமாம்நிரித்திருந்து மிவர்கட்கெல்லாம்
திரைகலங்கிநாடியதும் தெளிந்திடாதே. 7

தெளிந்திட்டவாதத்தின் நாடிதானும்
சிறுபிள்ளைதூங்கும் தொட்டிலாட்டம்போலும்
வளைந்திட்டவளைந்ததுதான் வளர்ந்துசெல்லும்
மண்டூகங்கத்துவது ஒணன்போலும்
தளிந்திட்டசர்ப்பம்போ லட்டைபோலும்
தவிர்ந்துவிடுமேக்குருவி காடைபோலும்

அறுத்திட்டஆமையதின் நடையைப்போலும்
ஆதியென்றவாதமது நடக்குந்தானே. 8

நடக்கின்றபித்தத்தின் நாடிதானும்
நாகரிகமானமன்ன நடையைப்போலும்
மடக்கின்றமயில்போலும் தாராப்போலும்
மாடபுராஊர்க்குருவி யதுதான்போலும்
மெடக்கின்றமெத்தனவாய் மீண்டுமீண்டு
மேன்மையதாய் மிடுக்கமாகிவிளக்கமாகி
கெடுக்கின்றகெருடனைப்போ லதிர்ந்துஒலங்கி
கேசரம்போலசையுமது பித்தந்தானே. 9

தானென்றசேத்துமத்தின் நாடிதானும்
தங்கியேதொத்துவதும் தோய்ந்தாப்போலும்
கோனென்றகோழியதின் நடையைப்போலும்
கொக்கினிடவுரக்கம்போ லூக்குருவிபோலும்
மானென்றமங்கைநல்லாள் மயக்கில்சிக்கி
மருவினவன்தாதுனிட மயக்கம்போலும்
தேனென்றசிலந்தியதின் பூச்சிப்போலும்
சேத்துமமென்றநாடியிதில் தெளிந்துபாரே. 10

தெளிவானபித்தமது நாடிசெய்து
செப்பசிறுகுருவினடை நடையைப்போலும்
வளிவானமயிலதின்போல் நடைப்புகாணும்
மருவியபின்ஞெந்தியதின் மார்க்கம்போலும்
களிவானவாதசேத்தும நாடிதானும்
கானகத்தின்கோழி நடையைப்போலும்
அளிவானஅட்டையதின் மார்க்கம்போலும்
அதிகமாமுன்சொன்ன நாடியாமே. 11

நாடியேபித்தசேத்தும தாதுதானும்
நண்ணியேநடக்கும்வகை நண்பாய்க்கேளீர்
பாடியேபாம்பதுபோ லசைந்துபின்னி
பருந்தவளைகுதித்ததுபோல் பருவம்போலாய்
ஆடியேஅசீரணமாம் நாடிதானும்
அசைஞ்சமதவானையைப் போல்நடக்கும்
தேடியேதீபனத்தின் நாடிதானும்
சிறுகாக்கைதூங்குதல்போல் துடித்தல்தானே. 12

துடித்திட்டுஅசைந்தசைந்து துஞ்சுநாடி
துருசானவிறகுகட்டு சுமந்தாப்போலும்
கிடித்திட்டுகிறுகிறென சுழன்றுநாடி
கீழ்நோக்கிவளைந்து கெர்ச்சித்தேகி

அடித்திட்டுகுலமதாய் தனியேசென்றும்
சன்னியென்றநாடிதானும் சாத்தலாமே. 13

சாத்திடுதல் அதிகமது தமர்போல்நாடி
தனித்துகுக்கிடம்நடந்து நரம்புபோலாம்
மோத்திடுதல்மூஞ்சூறு வதுபோலாகில்
மூச்சுடாபோல்சடமாகிக் கொழுநீர்வாடி
ஆத்திடுதலடங்கிநின்று எலும்பிணுக்கால்
அப்பிங்கனம்செய்தருவை யணுகினர்க்கு
கோத்திடுதல்சுகசன்னி யென்னும்நாடி
சூக்ஷாதிசூக்ஷமாய்த் துஞ்சும்பாரே. 14

துஞ்சிடுதல்வாளைமீ னதுபோல்பாய்ந்து
துடிதுடித்துமலமதுதான் சிக்கலாகில்
அஞ்சிடுதலன்னம்போ லடங்கிநின்று
ஆனைமுகம்மதம்போலே ஆற்பரித்து
நெஞ்சிடுதல்நெறநெறென்று நிமிஷந்தானும்
நிலையைவிட்டுநீங்கியே நிமிஷம்புக்கில்
வஞ்சியர்மேல்விகாரமதாய் மனதேபூண்டு
வாதசுரநாடியென்று வகுக்கலாமே. 15

புகலவேபுழுப்போலே நிமிருமாகில்
பொருகாலவண்டினுட ஒளிவைப்போலும்
நிகலவேசுடர்கூத்தின் நெய்தான்வீழ்த்து
நொங்தெழும்புமக்கினியின் நிரத்தைப்போலும்
திசலவேகினியெழும்பும் செங்கைபோலும்
திரையெழும்பி ஒடுக்குமப்போபித்தநாடி
விகலவேபடபடத்துத் தோன்றுமாகில்
விகாரத்தின்நாடியென்றே விளம்பலாமே. 16

விளம்பவேமேதினியிற் கல்லெறிந்தாப்போலும்
மிகப்புரவிதருக்கிடாய் பாச்சல்போலும்
கிளம்பவேசெக்கினிட திருக்கல்போலும்
சீருகின்றமூஞ்சேரின் செயலைப்போலும்
மிளுப்பவேநாடியது உழும்பல்போலும்
பேத்தபோலேரியிழிந் திடுதல்போலும்
புலம்பவேபித்தத்தின் நாடிதோன்றில்
பூதத்தின்நாடியென்றே பேசலாமே. 17

பேசவேபிங்கலையில் நாடிதானும்
பேணுனுள்முழுதோடி பிரளாமல்தான்
வாசமேமூன்றுண்டில் மரணம்சொல்லும்
வாதமாம்நாடியது வலுமையாகில்

பேசவேயிரண்டுநாள் முழுதுமோடில்
யிரண்டாண்டில்மரணமென்று யியம்பலாகும்
நாசவேநாள்மூன்று வழுவாதோடில்
நமனுக்குயிரையாவார் நாட்டில்தானே. 18

தானென்றபித்தத்தின் நாடிதானும்
தரியாமல்நாளொன்றுத் தயங்குமாகில்
ஆனென்றஆறுதிங்கள் மரணம்சொல்லும்
அசவில்லாயிரண்டுநா ளோடுமாகில்
மோனென்றுமூன்றுதிங்கள் மரணம்சொல்லும்
மூர்க்கமாமூன்றுநா ளோடாதோடில்
நானென்றநாற்பத்து அஞ்சுநாளாம்
நசிந்துநமனிடத்திலே நல்குவானே. 19

நல்கவேசேத்துமத்தின் நாடிதானும்
நாள்மூன்றுகடிந்தோடில் ஐந்துநாளில்
மல்கவேஐந்துநா ளோடுமாகில்
மரித்திடுமேயீரைந்து நாளில்தானும்
ஒக்கவேஓர்நாழி யோடுமாகில்
உயிர்சிவனெருபட்ச மட்டாய்நிற்கும்
பல்கவேதிசைநாள்தான் கைபின்நின்றால்
பயமில்லைபார்தனிலே பாவிப்பாரே. 20

பாலித்தபித்தமதின் நாடிதானும்
பகட்டியேமூன்றுநாள் பிரளுமாகில்
ஆலித்தஅரவின்நாக் கசைதல்போம்
ஆடியேஅமர்ந்ததுநா னிருக்குமாகில்
மாலித்தமணியசை தல்லோபோலும்
மகத்தானஉடுக்கையதி னோசைபோலும்
கோலித்தநாடியினிற் குறிப்பேகண்டால்
கொடுமாலின்காதலனைக் குடிகொள்வாரே. 21

கொள்ளவேவாதத்தின் தேகந்தானும்
குளுந்துமேகுசித்திடத்தி லுஷ்ணமாகில்
துள்ளவேதுடிதுடித்து யிருக்கும்பித்த
தேகம்அதிக ஊஷ்ணமாய்க்காணில்
தெள்ளவேசேத்துமத்தின் தேகந்தானும்
சிக்கென்றுகுளிர்ந்திருக்குந்தொந்ததேகம்
பள்ளவேபலபலவா யோடிநிற்கும்
பரிந்தெட்டுதேகமதின் பரிட்சைசொல்லே. 22

தேகத்திநிறந்தானும் செப்பக்கேளு
செழுமையாய்வாதமது கறித்துக்காணும்

பேதத்தின்பித்தநிறம் மஞ்சளாகி
பெருஞ்சேத்துமரோகிக்கு வெளுப்பேயாகில்
பாகத்தின்தொந்த ரோகிக்குத்தானும்
பலபலவாம்வர்ணமதாய் பகர்ந்துநிற்கும்
ஆகத்தின்நிறம்பார்த்து நாடிபார்த்து
அஷ்டவிதபரிட்சையறிந் தடவாய்ப்பாரே. 23

பார்வாதரோகிக்கு வார்த்தைதானும்
பக்குவமாய்சமசத்தம் பலமாய்க்காணும்
பேர்பித்தரோகிக்கு வார்த்தைதானும்
பெருந்தொனியாய்முடுகிமிக பேசல்காணும்
சேர்சேத்துமரோகிக்கு வார்த்தைதானும்
சிறுத்தகுரலீனசுரத் தியக்கங்காணும்
வேர்தொந்தரோகிக்கு வார்த்தைதானும்
வெகுவிதமாயிருக்குமென்றே விரித்திடாயே. 24

விரித்திட்டவாதமென்றே ரோகிக்கேதான்
வீரியேகண்கறுத்து சலநீர்பாயும்
பரித்திட்டபயித்தியமாம் ரோகிக்கோதன்
பச்சென்றுசிவந்திருக்கும் சேத்துமரோகி
பெருத்திட்டுபீளைகட்டி வெளுத்துக்காணும்
பெருஞ்சன்னிரோகிக்கு யிருகண்தானும்
கரித்திட்டுச்சிவந்திருக்கும் பசுமையாகும்
காமாலைரோகிக்கு மஞ்சளாமே. 25

மஞ்சளென்றவாதரோ கிக்குத்தானும்
மலவந்தமாகியபின் கறுத்துக்காணும்
பிஞ்சலென்றபித்தரோகிக்குத்தானும்
பெருகியேமலம்பசுமை சிவந்துகாணும்
துஞ்சமொன்றெசேத்துமரோ கிக்குத்தானும்
துரிதமலம்வெளுமையதாம் சேர்க்குஞ்சீதம்
பஞ்சலென்றதொந்தரோ கிக்குத்தானும்
பலவர்ணமாயிருக்கும் பண்பதாமே. 26

பண்பானவாதரோகிக்கு மூத்திரம்
பாரித்துதெளிந்திருக்கும் வெளுமையாகும்
வண்பானபித்தரோகிக்கு மூத்திர
மஞ்சளதிநிறம்போலும் பசுமைபோலும்
திண்பானசேத்துமரோகிக்கு மூத்திரம்
சோறுபோல்பொருமியே நுரைதான்காணும்
கண்டானதொந்தரோகிக்கு மூத்திரங்
கண்டபலநிறமாகும் கருதிடாயே. 27

கருதியேவாதரோ கிக்குநாக்கு
கறுத்திருக்கும்முளப்பாய்ந்து வெடித்துக்காணும்
பருத்தியேபித்தரோ கிக்குநாக்கு
பசுமைநிறங்காணும்சிவந் திருக்குமாகில்
வெருதியசேத்துமரோ கிக்குநாக்கு
வெளுத்துசலம்பெருகிகண்ணீர் விதமாயோடும்
துருதியேதொந்தரோ கிக்குநாக்கு
சூட்சமலவர்ணமதாய் தோன்றுந்தானே. 28

வர்ணமென்றவஷ்டவகை பரிட்சைபார்த்து
வகைவகையாய்நாடியுட குணமுங்கண்டு
திண்ணமாந்தேகமதின் செயலும்பார்த்து
தேசதேசாதிபதி செயலைப்பார்த்து
கர்னமாங்காலாகா லங்கள்பார்த்து
கனமான அக்கினியின் கணக்கறிந்து
பண்ணமாம்பலபல நன்னூலைத்தேர்ந்து
பண்டிதத்தின்பயனறிந்து பார்த்துச்சொல்லே. 29

வருக்கமேவாதசுர நாடிதானும்
வளைந்ததுவுமுன்னோடிப் புரண்டதாகில்
மருத்துவமாய்மந்தமது வலுவாய்க்காணும்
மயில்தாராவண்டையது போலநின்றால்
நிருக்கவேநின்றுநின்று நேரொட்டாமல்
நிலைபிசகிமுன்பாச்சல் பின்பாச்சலாகில்
செருக்கவேசெடந்தானு மெட்டுநாளிற்
சிவபுரத்துக்கேகிவிடுந் திண்ணந்தானே. 30

திண்ணமாய்பித்தத்தின் நாடிதானும்
தேள்கொடுக்குத்தெரிப்பதுபோல் தெறிக்குமாகில்
மண்ணமதாம்வாதத்தில் மாணமென்க
வல்லூறுதவளைசற்ப மதுபோல்காணில்
பண்ணிடுதல்பட்சத்தில் மரணமென்னப்
பருவானைபோல்துடித்த வெட்டுநாளாம்
மின்னியேபித்தமது மீண்டுமீண்டு
மிகட்சியாய்மீண்டுவந்தால் மீளாதாமே. 31

மீளவேயுந்தினிற் சுழியைப்பற்றி
விளங்கியதோர்வாதபித்த சேத்துமந்தான்
ஆளவேஜயமென்ற நாடிதன்னில்
ஆதித்தன்சுடரொளிபோல் அனல்தான்மீறி
காளவேகாந்தத்தின் கனவாய்காணில்
கலங்கியேதானம்விட்டுக் கடசியேகில்

பாளவேபம்பரம்போல் சுழலுண்டாகிப்
பரமபதமடையுமென்றே பகரலாமே. 32

பகரவேயாதித்தன் நாடிதானும்
பருகியேபித்தமதின் வீடேசேர்ந்து
பகரவேபித்தமதின் நாடிதானும்
போனசேத்துமத்தின் வீடேசேரில்
அகரவேஐயமென்ற தாதுதானும்
தன்வீட்டைவிட்டுமேதற் கப்பாலேகி
திகரவேயண்டமதில் சேருமாகில்
ஜெடத்தைவிட்டுச்சிவலோகம் சேர்வார்தாமே. 33

சேரவேவீணையைப்போல் தெறிக்குமாகில்
சேகரமாந்தினமூன்றில் மரணமென்றே
ஆரவேஐயமென்று நாடிதானும்
அதிர்ந்ததிர்ந்துதவளையைப்போல் குதிக்குமாகில்
பேரவேபாம்பதுபோல் பிரண்டுஊர்ந்து
பெரியவரம்தன்னுடைய நடைகண்டாலும்
மாரவேமரத்தின்கொடி பின்னினாற்போல்
வந்திடினும்மரணமென்றே வகுக்கலாமே. 34

வகுக்கவேமானிடவன் வலக்கைப்பற்றி
வளவன்னிமுடத்தென்னி நெட்டைவாங்கி
முகுக்கவேமூவிரலாற் தொட்டுப்பார்க்கில்
முன்னாடிவாதம் பின்னாடிபித்தம்
சிகுக்கவேஅநாமிவிரல் சேத்துமமாகும்
செயலெல்லாமறிந்துணர்ந்து செயலேகேட்டும்
நகுக்கவேநோயதுவின் நேர்மைகண்டு
நாடியதின்செயலறிந்து நயந்துபாரே. 35

நாடியென்ற பெரும்பது விருதல்போலும்
நல்லாமையசைவதுபோல் நாடும்பாரு
கூடியேகுளித்தியதாய் மெதுவாப்போன்று
குடிலங்களில்லாமல் தோன்றுமாகில்
வாடியேமங்கையர்க்குக் கற்பமாகும்
மகத்தானபஞ்சதுபோல் மெதுவாயத்தி
ஆடியேகின்னரியன் பொலிவேயானல்
பூதமங்கைநாடியென்றே புகலலாமே. 36

நாடிபரிட்சை முற்றும்.

தத்துவம்.

காப்பு.

ஆனைமுகவன்பாதம் முருகர்பாதம் அத்தியுரித்திடைதரித்த ஐயர்பாதம், வானவுமையாள்பாதம்மாலின்பாதம் வைரவர்தம்பாதம்மகாலக்ஷ்மியின்பாதம், காணனையநாதாக்கள்ரிஷிகள்பாதம் கலமத்தில்வீற்றிருக்கும்வாணிபாதம்,கோனனையாங்குருமுனிதன் பாதம்போற்றிக் கூறுகிறேனாயுறுவேதத்தைத்தானே. 1

தானானகால்வேதத்தொகுப்பாய்நின்ற தாக்கான ஆயுறுவேதத்தோடைந்தாம், தேனானசிருஷ்டிகுலத்துற்பவித்த தேவனுந்தன் மந்திரிசொன்னநீதி, வாமீனயாகமத்தின்மேதினிக்குள் மருவியேயுரைத்திடவேவண்மையாக,வேனானவயித்தியசிந்தாமணியின் விவரமெல்லாம்வெளியாக விளம்பச்சொல்வாம். 2

அடவான ஆயுருவேதந்தனைத்தா னையருமேயம்மைக்கு அருளிச்செய்ய, நலமான அம்மையுமேநந்திக்குச்சொல்ல நந்தியுமேசீஷருக்குஅருளிச்செய்ய, தடவானதன்மந்திரி அசுவினிதேவர் சமர்க்கமாம்அகத்தியமுனிதேவன் தானும், நிடவானரிஷிதேவர் சொன்னநூலின் நேர்ப்பெல்லாம்விவரமதாய் நிகழ்த்தினேனே. 3

நிகழ்ந்தசீர்பிரிதிவியுமப்புத்தானும் நேரானதேயுவொடுவாயுமாகும்,மகிழ்ந்தவாகாசத்தோடைந்துபூத மரிதானபிரிதிவிதானும் மண்ணுமாகும், தகுந்தவப்புஜலமாகுநெருப்புத்தேயு தாக்கானவாயுதான்காற்றுமாகும், மகிழ்ந்தவாகாசமதுசத்தமாகும் மேத்தமாம் பிரிதிவிபொன்னிறமுமாமே. 4

ஆமேதானப்போதுபளிங்குநிறமாகு மக்கினிதன்னிறந்தானுஞ்செம்புநிறமாகும்,காமேதன்வாயுவுங்கறுப்புநிறமாகும்கார்மேகப்புகைநிறமாகாயந்தான், போமேதான்பிரிதிவிக்குத்தேவன் பிர்மா பெரியசுவாதிஷ்டானமிருப்புமாமே, நாமேதான்கண்டபடி சொல்வோமெய்யா நலமாகசதுர்முகமேன் இருப்புத்தானே. 5

இருப்பானவீடதுநல்வட்டமாகு மிதழாறுபிரிதிவியின்பீஜம் நவ்வாம், மறுப்பானமயிரெலும்புதோல்நரம்புதசையாம் மாசற்ற அப்புவிக்குவிஷ்ணுதெய்வம், சிறுப்பானமணிபூரவீடுமாகும் சிறுபிறையாம்வடிவம்போல் பத்தியந்தான்சுத்தி, அருப்பானவப்புவுக்குப்பீஜமவ்வா மதினுடையகூறதுதானுதிரஞ்சீழே. 6

சீழானநீரோடுமூளைமச்சை தேயுவுக்குருத்திரன்தான்தெய்வமாகும், மூவானமுக்கோணமனகத்தின்வீடு முயற்சியதாமீராறு

இதழ்தான்சுத்தில், வேயானசிவ்வதுவுமதேயுபீஜம் சிதையாமலித
முக்குள்சேர்ந்துநிற்கும்,மாயான ஆகாரம்துஞ்சல்போகமவருடைய
கூறதுதான்பயமுஞ்சோம்பே. 7

சோம்பானவாயுவுக்குமஹேஸ்வரன்முன்தெய்வம் சோடசமா
மிதழோடேசுத்திவீடு, ஆம்பானவாயுவுக்குவவ்வுபீஜ மவருடைய
கூறதுதானடத்தல்நீத்தல், வாம்பானவாடலொடு இருத்தலோடல்
வகையானவறுகோணம்குடியிருப்பு, தேம்பானயாகாசமுமக்கினியி
னுள்ளே சிதையாமலிரண்டிதழோடிருக்கும்பாரே. 8

இருக்கின்றஆக்கினையின்கூறைக்கேளுமேத்தமாங்காமக்குரோ
தலோபமோகம்,சருக்குகின்றமதமுமாச்சரியத்தோடுவானுவுக்குத்
தெய்வம்சதாசிவமுமாமே, பெருக்குகின்றவாகாசம் பீசம்யவ்வாம்
பேரானபஞ்சபூதப்பிரிவுமாகும், செருக்குகின்றதிசைநாடிச்செயலை
யெல்லாம் செப்புகிறேன்தெளிவாகச்சிறந்துகேளே. 9

சிறந்தஇடைபிங்கலையுஞ்சுழிமுனையினோடு சிறப்பானகாந்தாரி
அத்திசிங்குவையும், பிறந்தயல்புருடனோடுகுகுதன்றானும்பேரான
சங்கினியும்வைரவன்றான், சிறந்தவிவைபத்துந்தான் திசைநாடியா
கும் திரிமூன்றுநாடிதனிலொடுங்கும்பாரு,மறந்தஇடைபிங்கலையுஞ்
சுழிமுனையுமூன்றும் வாதத்திலொடுக்கமெனவகுக்கலாமே. 10

வகுக்கவேயிதின்குணங்கள் மந்தமொடுகொளுத்தி மலக்கட்டு
ஜலக்கட்டுவாதத்தின்கூறும், அடுக்கவேகாந்தாரி அத்திசிங்குவையு
மலம்புருடன்நாலும்பித்தத்தின்கூறு, வகுக்கவேயிதின்குணங்களு
டனேதாக முயர்மோகமொழலைவாயதுமேல்நோக்கும், நகுக்கவேநா
டிபடபடத்துநிற்கும் நாசமாம்பயமொடு கோபமாமே. 11

ஆமேதான்குகுதனொடுசங்கினிவைரவனறிதானசேத்துமத்தி
லடங்கும்பாரு, வாமேதானிதன்கூறுவாயலத்தான்பரியும் மலர்க்
கண்தான்குழிந்திருக்கு முகமும்வேர்க்கும், தேமேதான் நெஞ்
சடைக்குந் திசைகலந்திருக்கும் சிறுகாலுந்தண்ணீர்தானுறைத்து
விக்கும், பாமேதான்பத்தினுடபண்புமாகும் பரிகாரஞ்செய்பவர்க்
குப் பரிசமாமே. 12

பரிசானயிடையினொடு பிங்கலையுமொக்கப் பயின்றதோர்க்கு
தயத்தானடிமூலம்பற்றி, துரிசானயாகங்கள்மாறிமாறிச் சுழிமுனை
யின்றன்னோடேநெட்டிட்டேறும், திருசானதிருவலைக்கால்போலே
மாறிச்சிரசளவுமுட்டியேதிரும்பிமீண்டு, முரிசானமூக்குநடுபுருவம்
நெற்றி மூண்டுமேதிரும்பியந்தமூலம்புக்கும். 13

புக்குகின்றகாந்தாரிநாபிப்பற்றிப் பொருநரம்போடோடிநிற்
கும் ரூபமாகி, சிக்குகின்றதிசைதாதுமேலேயோடிச் சிரசளவுநீக்கி
யேகண்டம்புக்கி, நக்குகின்றகாவடியில்சிறந்திருக்கும் நலமான

அத்திசிங்குவையிரண்டும், முக்குகின்றமூலத்தின் மேலேபற்றி மேலேறி இரண்டுசெவிதனத்தொட்டாமே. 14

தொட்டேறிநரம்பெல்லாங் கலந்துவீசிச் சொல்லறியநயனமிரண்டினிலேநிற்கும், மட்டேறியலம்புருடன்வயிரவன்தான் வாசற்றஅடிமூலந் தன்னைப்பற்றி, கட்டேறிவிரண்டுகன்னங் தனிலேநிற்கும் கனமன்னசங்கினியுங்குருதந்தானும், தட்டேறிநாபிதான் காதில்தோன்றி நலமானகுதமளவும் நாட்டிப்பாரே. 15

ஜனனக்கூறு.

பார்க்கவேசெடலந்தானுஞ்சென்மிக்கும்வாறுபரிச்சுக்லசுரோணிதமும்தம்முட்கூடில், மூர்க்கமேபவளப்பையில்முத்துதிர்த்தாப்போல முனையருகேநுனிபோல்சுரோணிதத்திற்சேர்ந்து, தார்க்கவேசுரோணிதந்திரண்டு தன்ரூபமாகித்தமர்வாசலதனைமூடும்வாயுதானும், வேர்க்கவேவேலிபோல் வளைந்துகாக்கும் விந்துவுடன் பிராணவாயுவிளக்கலாமே. 16

விளக்குகின்ற அபானவாயுவெளியினிற்கும் விந்துவுடன்பிராணவாயுவிளங்கலாகும், கலங்குகின்றஉதானனதுகருவளர்க்குங்கருவதற்குள் வினைமூன்றும் கலங்கும்பாரு, இலங்குகின்றவஞ்சாநாள் கருப்போலாகு மீரஞ்சாநாள்தனிலேதிரளும்பாரு, முளக்குமூமஞ்சாநாள் முட்டைபோலாம் முதல்திங்கள்கம்பதுவின் முனைபோலாமே. 17

ஆகுமேயிரண்டாந்திங்கள் தலைமுழுகுமேதோன்றும் அடுத்தமூன்றாந்திங்களிலே யறைவிரல்கைகாலாகும், நாகுமேநாலாந்திங்கள் பாதமூக்குண்டாம் நலந்தவஞ்சாந்திங்கள்தனில்நாபிசெவிகண்ணும், வாகுமேயாறாந்திங்கள் வருநிகங்களீறும் மேவியேயேழாந்திங்கள் மயிரெலும்புநரம்பாம், தாகுமேஜடமோடு சலவலங்கள் தயங்கியதோர்தாதுவொடு மூச்சுண்டாமே. 18

மூச்சுண்டாமெட்டினிலே தாயுண்டசாரம் முனையான கதிர்போலே அருவிப்பாய்ந்து, தோச்சுண்டாங்கபாலத்தின் வழியேசென்று சுத்தசஜலம் பிள்ளைக்குத்தொடர்ச்சியாகும், பேச்சண்டாமொன்பதிலே யறிவுதோன்றிப் பிறப்பித்தோன் தனைநினைத்துதவமேசெய்து, கூச்சுண்டாம்கும்பிட்டு அருள்தாவென்று கொடியபத்தாம் திங்களிலே குருபார்வையாமே. 19

பார்வையாம்அபானத்தின் கீழேநோக்கிப் பாலகனும்பார்தனிலே பயின்றபின்பு, ஆர்வையாமுன்னறிவு அசதியாகி அழுதுகொண்டு ஆத்துமத்தின்கருவிபாசம், பார்வையாமிச்சாகத்திகிரியாசத்தி மயக்கத்திலறிவழிந்து நல்வினைதீவினையாம், கோர்வையாம் வியாதிவந்துற்பவித்து கொடிபரந்தசுரையதுபோல்ஜனனமாச்சே.

ஜனனமாம்சரீரமது தொண்ணூற்றாறங்கும் செய்கின்ற அவரவர்தன் கையால்மெய்தான், தன்னமாம்ரத்தமாங்கிஷமேமேதை தசைமச்சைசுக்கிலத்தொடேழதாகி, உன்னமாமுருவென்னுஞ்சரீரமாகி வுயர்சட்டைரசஞ்சேர்த்துரோகமாகி, வன்னமாம்வாதபித்த சேத்மமாகி வருகின்றஜெடத்தினிட வண்மைகேளே. 21

வண்மையாம்வாதமது முப்பதாண்டு மட்டுக்கும் வளக்குகின்றகாலமாகும், பெண்மையாம்பித்தமது முப்பத்துமூன்று பேணியேவளக்குகின்ற காலமாகும், திண்மையாஞ்சிலேத்மமது முப்பத்தேழுசீயலொடுவளக்குகின்றகாலமாகு, முண்மையாஞ்சடத்துக்குநூறேயாண்டு, யுகந்துமாங்கருவிகளின் உறுதிகேளே. 22

உறுதியாம்பூதாதி யோரைந்தாகு முபர்கின்றபொறியைந்து புலனைந்தாகும், கருதியாங்கனம் இந்திரியமைந்து கடிதானஞானவிந்திரியமைந்தாகுந், திருதியாமந்தக்காணமிதனாலாகுந் திறமான அறிவொன்றுதிசைநாடிபத்து, மறுதியாந்திசைவாயு பத்துமாகு மகத்தான விஜயமஞ்சுகோசமஞ்சே. 23

அஞ்சவேயாதாரமாறுமாகு மரியமண்டலமூன்று மலமூன்றாகும், தொஞ்சவேதோள்மூன்று வூஷ்ணமூன்று தோதகமாங்குணமூன்றுவினைகொண்டாகும், தஞ்சவேறாகமெட்டு அவத்தையஞ்சு தயங்கியதோர் கருவிகள்தான் தொண்ணூற்றாறு, ஒஞ்சவேயொவ்வொன்றாய்விரித்துச்சொல்வேனுறுதியாம் பூதாதியுரைக்கக்கேளே.

உரைக்கவே பிரிதிவியுமப்புத்தேயு வுருட்டியாம் வாயுவொடு வாகாசமாகும், புரைக்கவேபூதமது வஞ்சமாச்சு பொறியைந்தின் விபரமிதைப்புகலக்கேளு, துரைக்கவேதோத்திரந்தான் தொக்குச் சட்சு சிங்குவையுமாக்குராணமதுவோடைந்து, திரைக்கவேதோத்திரந்தான்செவியுமாகுந் தொக்காவதுடம்பென்றே சொல்லலாமே.

சொல்லவேசட்சுவதுதான் கண்ணுமாகுஞ் சிங்குவைதானாக்காகுமாக்கிராணமூக்கு, புல்லவேபுலனைந்தும் புகலக்கேளு பேரான சத்தமொடுபரிசரூபம்,நல்லவேரசகெந்தம்நாகவஞ்சி நலமான சத்தமதுகேழ்வியாகும், சொல்லவேவசவியினுட கூறுமாகுஞ் செப்பரிசஞ்சுகதுக்க மறிதல்காணே. 26

காணவேதேகத்தின்கூறுயாகுங் கனரூபமாவதுதான்காண்பதாகும், நாணவேகண்ணினுடகூறுமாகும் புகழ்கெந்தம் துர்க்கந்த மறிதலாகும், பூணவேநாக்கினுட கூறுமாகும் புகழ்கெந்தம் துர்க்கந்த மறிதலாகும், தோணவேமூக்கினுட கூறுமாகுஞ் சுகமான பொறியைந்தின் சூட்சந்தானே. 27

தானான கர்மவிந்திரியமைந்தின் சாரவனைக்காத்திடவேவாக்கு பாதம், பானானபாணிபாயுருஉபஸ்தம் பகரைந்தின் விரிதாவதுன்

வாக்குவாயாம், கானானபாதமதுகால்தானாகுங் கனமானபாணியது கையுமாகும், மூனானபாயுதா னபானமாகு முபஸ்தமது லிங்க மென்றே யுரைக்கலாமே. 28

மூவென்றகர்மவிந் திரியமைந்தின் அடைவெல்லாம் சொன்ன பின்புஅப்பால்கேளு, நாமென்றஞான இந்திரியமைந்துனவின்றிட வே வசனமொடு கெமனமேயாகும், தாமென்றதாமொடு விசர்க்க மானந்தம் தாக்காக விதுவைந்தும் ஞான இந்திரியம், பாமென்ற விதினுடைய விபரமெல்லாம் பகர்ந்திட்டு ஒவ்வொன்று யுரைக் கிறேனே. 29

உரைக்கவேவாக்கது தான்வசனிப்பாரு முறுதியாம்பாதமது நடத்துவிக்கும், பறைக்கவேபாணிகைகால் வழங்குவிக்கும் பாயு ருத்தான் மலந்தனையேபிரித்துவிக்கும், துறைக்கவேயுபஸ்தமதுஞ் சுக்கிலமூத்திரந் துருசாக விடுவிக்குஞ் சுபரமாக்கும், நரைக்கவே ஞானவிந்திரியமைந்தன் நயமதனைநவின்றிடவே நண்பாமென்னே.

எண்ணவேகிரணமது நாலதாகு மேற்றமாமனம்புத்தி யாங் காரஞ்சித்தம், நண்ணவேநாலினுடவிபரங்கேளும் நலத்தமனமாவ தொன்றைத்தானினைக்கும், பொண்ணவேபுத்தியதுமதனைவிசாரிக் கும் பேரானவங்காரங்கொண்டெழுப்புவிக்குந், தெண்ணவேசித்த மதனையேசெய்து முடிப்பிக்குஞ் சிறந்த அந்தக்கரணமது நாலு மாச்சே. 31

அச்சுதேயறிவொன்றின் விசாரணையைக்கேளு அனைத்தையு மேபார்த்திருந்துஅசடர்தானாய், தோச்சுதேகுருவாகித்தத்துவங்க ளாகிக் கொடியதீவினையாகிநல்வினையுமாகி, போச்சுதே பெண்ணா ணாப்பிரபஞ்சமாகிப் புகழரியநிர்க்குணமாய்நிர்மலமுமாகி, தீச்சு தேசிவமாகிச்செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச்சிறந்தவாறே. 32

வாறானமுப்பதுதத்துவமுந்தானும் மன்னியதோராத்துமதத் துவமுமாகும்,நாறானநாடிபத்தின்விபரங்கேளு நயந்தயிடைபிங்கலை யுஞ்சுழிமுனைகாந்தாரி, ஆறான அத்திசிங்குவையலம்புருடனருங்கு குதன் சங்கினிவைரவனிறைஞ்சு, மூறான இதின்விரிவ முன்னே சொன்னேன் மூர்க்கமாய்வாயுபத்தின் முறைமைப்பாரே. 33

முறைமையாம்பிராணனொடு அபானன்வியானன் மூர்க்கமாம் உதானனொடுசமானனாகன், திறமையாங்கூர்மனொடு கிரகரந்தான் தேவதத்துவனொடுதனஞ்செயனேயாகும், பேர்மையாமிதன்விரிவு பிராணவாயு பெருமூலாதாரத்திற்கட்டோவித்து, ஓர்மையாம்சபை யென்னுமந்திர த்தினாலே ஓங்காரமுதலெழுத்து உன்னிப்பாரே.

உன்னியேமுதலெழுத்து பனிரண்டு அங்குலமுயர்ந்தயெட்டங்குலமாய்மீளவாங்கி, நன்னிலங்குலந்தான் பாழிற்பாயும் நலமானகுணமெல்லாம்பிராணவாய்வு, பன்னவேநீலவர்ணந்தேவதைதான்சந்திரன்பலபலவாம் பொசிப்பெல்லாம்சீரணமேபண்ணும்,முன்னவேநாழிகைக்குமுந்நூற்றறுபதுதான் சுவாசம்முயர்ந்தனுளொன்றுக்கு மூச்சுகேளே. 35

நாளொன்றுக்கிருபத்தோருயிரத்து அறுநூறுநலமானசுவாசமதுவெழுந்திருக்கும், கோளொன்றிப் பதினுலாயிர்த்தினுநூறுவாசம்குவிந்தமூலாதாரத்துள்ளொடுங்கும்பாரு, பாளொன்றியேழாயிரத்துநூறுசுவாசம் பாழிலேபாய்ந்திடுமென்றறியப்பின்னை, ஏனென்றிதனையே ஊச்சாதித்தாலெப்போதும் பாலகனுயிருக்கலாமே.

இருக்கவே அபானத்தின்னியமங்கேளு மத்தசுவாதிஷ்டானத்துற்பத்தியாகும், மருக்கவேகீழ்நோக்கி மலசலத்தைத்தன்னும் மாகானநிறந்தானும் பச்சையாகும், அருக்கவேஆசனத்தைச் சுருக்கிவிக்கு மன்னசாரத்தையெல்லாம் செருப்பிக்கும்பார், திருக்கவே தேவதையும்வாதராசன் திறமானவியானனுட சிறப்பைக்கேளே.

சிறப்பானவியானனதுதொப்புளிலேநின்று திகழெழுவத்திருயிரம்நாடியிலுஞ்சென்று, தறப்பானசறுவசந்துதனிலேநின்று தாணியால்முடக்கல்பண்ணிபறிசங்களறியும், மறப்பானஅன்னசாரந்தன்னைத்தானங்கேசமிப்பித்து ஆக்கையறநசிக்கும், பறப்பானவியானனதுபார்வர்னமாகும் பார்தனிலேதெய்வந்தான்எமனுமே. 38

எமனும்முதானனுடயேத்தங்கேளு யெழிலானவுதிர அக்கினியையெழுப்பும், பூமனுமன்னசாரந்தன்னைத்தானன் பொருந்தவேசமிப்பித்துநிறுத்துவித்தும், காமனுயெழுப்பிவித்துங்கலக்கிவித்துங்கசக்கியேவருத்திவித்தும் வளப்பமாகும், வீமனும்மின்னினுடவர்ணமாகும் விளங்கியதோறக்கிரான்தெய்வமாமே. 39

ஆமென்றசமானனுட ஆண்மைகேளும் அடிமுபிப்பாதங்கள் சமன்கொண்டேகி, வாமென்றவாய்வுகளைமிஞ்சொட்டாமல் மடக்கியேசமன்செய்துமருவப்பண்ணும், தாமென்றவறுசுவையுந்தண்ணீரன்னன் சமன்செய்துசரீரமெல்லாம்சாறப்பண்ணும், போமென்றவர்ணமதுபுட்பருகம் பேறுனதெய்வமாதித்தனுமே. 40

தெய்வமதாம் நாகனுட சிறப்பைக்கேளு செயலானசகலகலையுண்டாக்கிவித்து, பைவமடாபாடிவித்து கண்ணைவிழிப்பித்தும் பாங்காகசிமினுக்குஞ் சேமமசைவைக்கும், பொய்தமாம் பொன்னினுடவர்ணமாகும் பெரிதானதெய்வமது அனந்தனுகும், கொய்வமாங்கூர்மனுடக்குணத்தைக்கேளு கொடியமனந்தன்னில் நின்று நிமைக்கொட்டாமே. 41

நிமைக்கொட்டுங் கொட்டாவிதானுங்கொள்ளும் நேரானவாய் மூலங்கபோலமுண்டாக்கும், கமைக்கொட்டுக்கண் விழிக்கும்மூடப் பண்ணும் காட்சியெல்லாங்காண்பிக்கும் விழிநீரோடும், மிமைக் கொட்டுவர்ணமதுவெளுப்புமாகும் மேலானதெய்வந்தான் விஷ்ணு வாகும்கமைக்கொட்டுந் திருகறணற்றன்குணத்தைக்கேளு கடுனைவு ணுசிதனிற்கசிவுண்டாமே. 42

கசிவுண்டாம்கடும்பசியின்காமஞ்சொல்லுங் கன்னியேயிருத்த லொடுபோகலாகுந், துசிவுண்டாய்த்தும்பலோடு மிரும்பலுண்டாய் சுயம்பானவர்ணமது கறுப்புமாகும், தெசிவுண்டாம் தெய்வமது சிவனுமாகும் திரேத்தையின் கூத்தான திறமுமாகும், குசிவுண் டாம்தேவதத்தன்குணத்தைக்கேளு குடிலமாய்ச்சோம்புமுறித்தி தல்தானே. 43

முறித்திடுதல் முழிக்கும்போதயிற்சியாகி முகிளிகமாய்க்கண் தனையேனுடியுலாவித்துத், தறித்திடுதல்கண்டைகொள்ளல் தர்க்கம் பேசல்சண்டாளகோபத்தையுண்டுபண்ணல், குறித்திடுதல்குய்யத் தானந்தன்னிற் கூர்ந்ததெய்வந்தேவேந்த்ரன்படிசுவர்ணம், தறித் திடுதல்தனஞ்செயனைசாத்தக்கேளு சாங்கமாம்மூக்கில்நின்று தடிக் குந்தானே. 44

தடித்துமேவுடம்பெல்லாம்வீங்கப்பண்ணும் தந்திரமாய்க்கன் னத்திற்சமுத்திரல்போலாம், துடித்துமேசுந்தரமாய்க்கோசமாகித் திரண்டுமேதுஞ்சில காலந்தன்னில், வடித்திடுமே வாய்வெல்லாம் போனபின்புமாண்டானதலைவெடிக்கும்மூன்றுநாளில் நடித்திடுமே தலைவெடித்தப்பால்போகும் பதின்வர்ணம் நீலமென்று மறிந்து கொள்ளே. 45

அறிந்திடுதல்லாத்துமாவே தன்மந்திரியாதலால் கயிதுயிறைந் தும்மதுவேவாய்வு, வெறிந்திடுதல்விசையமஞ்சின் விபரங்கேளு மீறியதோரமாவாசைப்பருவத்தோடு, தறித்திடுதல் மலவசையஞ் சலவசையமாதல் தாக்கான சுக்கிலத்தால்விசையமஞ்சு, எறித்திடு தல்லமாவசையும் மன்னந்தண்ணீர் மிருக்குமிடமென்றறிந்துயியம் பிடீரே. 46

இயம்பிடவேபருவசையம் மாவதுதான் விளம்பினவியன்ற அன்னந்தண்ணீர்தானேகமாருப்ந்து, புயம்பிடவேபிறியமிடம்மல வசையம்புகளில் பொசித்ததெல்லாம் மலமாக்கிப்போக்கிவிக்கும், தயம்பிடவே சலவசையம்தான் பொசித்து நிறதாங்கியேயிருக்கு மிடம்சலப்பையாகும், சுயம்பிடவேசுக்கிலமாம் வினயஞ்சொல்லித் துள்ளிநிற்கும் சுக்கிலப்பையென்றுசொல்லே. 47

சொல்லானவிசையமஞ்சின் றொகுப்பைச்சொன்னேம் சூட்சு மாங்கோசபஞ்சின் சுருபமாதல், அல்லான அன்னமயகோசமென்

னல்லறிதான் பிருணமயகோசமாதல், மல்லானமனோமயமாம்விக்கியானமயமாய் மாசத்தவானந்தமயமேயாச்சு, மெல்லானவிதன்விரவுவிளம்பலாதல் மெய்வாய்கண் மூக்கோடுசெவியுமாமே. 48

ஆமேஐம்பொரியதுவேபிரிதிவியின்கூறுல் அன்னமயகோசத்தில் லப்புவந்தணைந்தால், ஊமேயூனுண்டாகில் பிருணமயகோசம் சுத்துமீதில் தேய்வுவந்தாலப்புத்தியாதல், மாமேமனோமயமாய் கோசமாகும்வாய்வு விதில்வந்தணைந்தால்விகாரமாதல், நாமேமெய்ஞ்ஞானமயகோசமயமாதல் நபித்தசுத்தயாகாசம் சுகமுண்டாமே.

வந்தாலானந்த மயமென்றும்பேரும் மகத்தானகோசமஞ்சில்லெடுத்தவுடலதுவாய், குந்தாலகோசமஞ்சின் குணத்தைச்சொன்னேன்குறிப்பான ஆதாரமாறுங்கேளு, மூந்தாலமுதலாதாரஞ்சுவாதிஷ்டானம் முதுந்தமணிபூரகமு மனாகதம்விசுத்தி, அந்தாலாலாக்கினையுமாதாரமாகும் அடுக்காக ஆதாரம்மறையக்கேளே. 50

கேளேமூலாதாரங்குதங்குய்யத்துக்கும் கெடியாகநடுவிருக்குமபானத்தின்மேல், வேளேவினுதண்டின்கீழிருக்கும் மிக்கநடுவேஓரங்குலப்பிரமாணம், மூளேமுக்கோணம் நாலிதழ்க்கமலமாகிமுனிந்தனுலிதழுமே அட்சரனுலாகில், வாளேமுக்கோணம் நடுமந்திரம் இறிங்காரம் வல்லபையும் கணேசனுமேலவலம்பக்காமே.

பக்கமென்றமந்திரங்கள் சிறிங்காரமாதல் பகருனதெய்வம்விக்னேசுவரனுமாதல், வக்கமாம்மூலத்தில்வங்கென்றாணிவாசியையுமேமறவாமல்மாறியூதி, ஒக்கமாம்மூலத்தின்கீழடியில்தானும் ஓங்காரகம்பமதின்னடியிற்கட்டி, இக்கமாம்மிதிவரையும்தெரிசித்தாக்கால் இகபரமும் வெளியாகியேறலாமே. 52

ஏறவேபளிச்சென்றுமூலத்தில்தான்யிதற்குமேலிரண்டங்குலத்தின்மேலே, கூறவேநால்வட்டம்மாறிதழ்தான் குறித்தசுவாதிஷ்டானம்மின்னெளிதானாகில், நாறவே ஆறுஅட்சரமேயாதல்லதற்குள்ளே பிரிதிவிதாங்குடியிருப்பார், வேறவேதன்தானிருக்குமாகில் விளங்கியதோரட்சரமும்ககாரமாமே. 53

நகாரமாமெழுத்ததுவும்பிரமமாகும் லபிதமாம்பீசமது பிரிதிவுக்காகும், உகாரமாமந்திரத்தையுன்னிக்கொண்டு உயிர்வாய்வைகும்பிக்கிலுருவுதோன்றும், சிகாரமாமுப்புரினால் சிரசுநாலும் சிறந்த சரஸ்வதியுமங்கேதெளிவாய்க்காணும், பகரமாய் தெரிசித்துப் பழக்கம் பண்ணப் பாருலகம்பக்கமெல்லாம் பண்மையாமே.

பண்மையா மாருமங்குலத்தின்மேலே பரிந்தபிறையதுவு மணி பூரகந்தான், தொண்மையாம் சுத்திலும்பத்திதழுமாக சுயம் அட்சரம்பத்தியல்புமாகி, அண்மையாமப்பூரக்கிடமதாகி யதுக்

குள்ளிருந்தரியதெய்வம் விஷ்ணுவாகில், தண்மையாமிடப்பாகம் சத்திமானு சகலபீசாட்சரத்துக் குயிர்மாறுதே. 55

மகாரமாமட்சரத்தால்விஷ்ணுதோன்றி வவ்வதுவும்மப்புவின் பீசமென்னில், விகாரமாம்வேதமதும்விதித்தகாலே விரைந்தகவுஸ் துவமணியபொருளஞ்சாகில், நிகரமாம்லட்சுமிதன்பாகமாகிநேர் மையாய்வாசிகொண்டுவங்கென்றாதி, உகாரமாயூதினதாலுலகவாழ் க்கையொருநொடிக்குள்வெளியாகும்மூணிப்பாரே. 56

ஊணியேயிதற்குரைப்பது மேலிநாங்குயர்ந்தவங் குலம்நாக தத்தன்வீடு, தோணியேதிரிகோணமிதழ்பனிரெண்டாகில் சுத்தி லும்மீறுதுஅட்சரமதாகி, சேணியேதேய்வுகுடியிரும்புமாகி சிகார மாமெழுத்தாகிசிறப்புமாகி, பூணியேயபீதபீசயவ்வுமாகி புராந்துருவி ருத்திரனும்புரிந்தவாறே. 57

புரிந்தெழுத்தில்சிகாரமதாய்ருத்ரன்ருத்திரி புரியாமல்வாசி வைத்துச்சிங்கென்றாது, கரித்திருந்தகாயமும்பாலையாகும்கருவரி யவேதத்தின்சுருத்துத்தோன்றும், பறிந்திதற்குபன்னிரண்டுஅங் குலத்தின்மேலே பார்வையாம்விசுத்தியின் வீடதுவேதென்னில், லரிந்தவறுகோணமிதழதனிலேதா னட்சரமீரெட்டுஞ்சோடசமு மாமே. 58

ஆமென வகாரமதுவறுகோணத்துள் அமர்ந்தமயேஸ்வரனும மயேஸ்பரியுமேதல், வேமெனவேஅதர்வணவேதத்தோடு மிக்கான வாய்வதுவும்மிதனுக்குள்ளே, போமெனவும் பீசமதுயவ்வுமாகும் புகழாகும்பித்ததுவும்வாசிஊதி, வாமெனவும்வங்கென்று யிருத்தி பார்க்க வயசொல்லாமொருநாளாய்மனதிற்காணே. 59

காணுமிதின் மேலீரெட்டங்குலத்தில்கண்ட மாருதம்புருவம் மளவதாகி, ஊணவேயிரண்டிதழாயோங்கிநின்று உத்துநிற்கும் அட்சரமிண்டதாகும், மானவேநடுமையம்பகாரம்நிர்க்கு மாக்கி னைக்குள் வீடாகும்மாகாயந்தான், பூணவேபூதபீசம்பவ்வுமாகும் புகழானமாணிக்கம்பிரவையவ்வே. 60

யவ்வுக்குள்சதாசிவமும் சத்திநிர்க்குமங்கும்நின்றுகும்பித்தா லனேகசித்தி, மவ்வும்பரமானந்தம் மருவிநின்று மகிட்சியாகருவுத னின்னிடமதாகி, யவ்வுமைம்புலன்தனைபே நீயறியப்பண்ணியறி வோடு நினைவுதனில்மயக்கத்தாட்டி, உவ்வும்முன்னப்படியே நடத் திக்காண்டன் னுகுந்துகுருவெழுந்தருளி உருதிப்பாரே. 61

பார்க்கவேயாதாரம்மாறுமாச்சுபரிந்திட்டதத்துவங்கள்முப்ப தோறும், சேர்க்கவேசித்தத்துவமாகுங்கண்டீர் சிறந்திருந்தமண்ட லங்கள்மூன்றுங்கேளு, ஆர்க்கவேஅக்கினிமண்டலத்தினோடுஆதித் தமண்டலமும்சந்திரமண்டலம், தேர்க்கவேயிதின்சூட்சம்சொல்லக் கேளு கருதியாம்மூறத்தின்துடர்ச்சிதானே. 62

துடர்ச்சியாம்சுவாதிஷ்டானத்தின்கீழே சுயம்பாகும்நடுமைய மக்கினிமண்டலம், முயர்ச்சியாமுச்சுடராய் மூலமட்டும் முளைந்த சுவாதிஷ்டான மட்டுநிற்கும், மயர்ச்சியா மணிபூரகம் மனோகதத் தின்நடுவேவளையம்போல்சூரியமண்டலந்தானிற்கும், பயர்ச்சியாம் தணிபூரமனோகதத்தில் படர்ந்ததொரு சூரியமண்டலந்தான்பாரே.

பாரென்றால்சும்மாய்த்தான் பார்க்கப்போமோ பரந்தோடும் வாசியைநீமாட்டிப்பாரு, வேரென்றால்விசுத்தியாக்கினையின்கீழே விளங்கிவிடும் சந்திரமண்டலந்தான்பாரு, தூரென்றால் துவாதேசி துரியாதீதம் சுடரொளியாய்ப் பிரகாசமாகிநிற்கும், மூரென்றால்ம ண்டலங்கள் மூன்றுமாச்சு மூர்க்கமா மலமூன்றின் முடிவுகேளே.

முடிவான ஆணவம் மாய்கைகாமியம் முயர்ச்சியா மிதின்விரி வுயாணவந்தான், செடிவானசெம்புநிரக்களிம்புபோலும் சிறுநெல் லினுமிபோலும்மாற்றுமாவை,மிடிவானமேலொடேழாமல்கார்த்து முடிப்பித்துத் தன்னுதென்றேகாத்திருக்கும், வடிவானமாய்கைய து ஆணவத்தைக்கண்டே வருகிறதும்தெரியாமல்மடிக்குந்தானே.

மடிக்கின்ற காமியந்தான் கண்டதுக்கெல்லா மகிழ்ந்திடுதல் லாய்கையைத்தான்மயக்கிவித்துத், துடிக்கின்றமலமூன்றின்செய லுமாச்சுதொழமூன்றுமவனியாம்சூட்சங்கேளு, நடிக்கின்றவாதபி த்தசேத்துமமூன்றுநயமாகும்மிதின் விரிவைநாடிக்கேளு,வடிக்கின் றவாதமதுவாய்வுதலைகலங்கிமத்திபமாம்மக்கினியின்மார்க்கமாமே.

மார்க்கபித்தம்மக்கினியின்நிலையைப்பத்த மசக்கிவித்து மாய் கையுடன் வருந்தப்பண்ணும், தீர்க்கமாய்சேத்துமமது சலம்மிகுதி யாக்கி திதிவாரங்கள்தோறுமிடைவிடாமல், மூர்க்கமாம்தோழமிது மூன்றுமாச்சு மீறியதோரட்சணையின் மூன்றைக்கேளு, யூர்க்கமாம் புத்திரெட்சைலோகரெட்சையுறுதியாம் அரத்திலெட்சை மூன்று மாச்சே. 67

ஆச்சென்றமூன்றையுந்தானறியக்கேளு அதிகமாம்அரத்திரெ ட்சையதின்கூரேதில், வேச்சென்றஅர்த்தமேல்வாசைப்படுதல் வி ளங்கியதோர்லோகறெட்சை விதனைக்கேளு, காச்சென்றகாணியு மோறளவுதேடி காரியங்கள்தன்மேலேயாசையாதல், பாச்சென்ற சைகர்மியத்தைத்தேடி பயந்திடுதல்றெக்ஷணையிம்மூன்றதாமே. 68

மூன்றானபின்பதுதான் இனைந்தான்மூன்று மொழியும்சாத்தி பராசத்தகமீசம், வேன்றானமிதின்விரிவுவிளம்பலாதல்வெகுளிபே சாதிருத்தல் வேண்டுவதுகொடுத்தல், தான்றான தன்னைச்சார்ந்தா ரைக்காத்தல் தகமையுடன்பேசல் தம்முயிர்போலெண்டல், பான் றானபகைஞர் வேண்டுதல்தீர்க்கல் பலகலைகள்ளரிதல் பயிலபு ண்டாமே. 69

உண்மெலக்கசோறுருகி வாழ்தலுண்மை உருதெரிதல்லுணர்வு நலம் புகழேபூண்டல், தண்டுதொடாண்மையொடு மேம்பாடானசாத்தியதோர்குணமெல்லாம் ராசத்துக்காகும், மிண்டுதாமசகுணமுமேமீதாவென்னில் மிகுதியாம்வஞ்சனையேசெய்தலாகும், வண்டு வழிபாட்டொழிதல்வாதுபோராடல் வணக்கமில்லாவெகுளிதனை விளம்பலாமே. 70

விளம்பிடுதல்செய்நன்றியறிதல்நிந்தைவிகல்பமிகசிந்தைவரை மிடுக்கம்பேசல், முளம்பிடுதல்முன்னுரைத்தல்பழியேகூறல் முகத்திருடல்பேசல் பகையுடனேவாழ்தல், விளம்பிடுதல்பொய்குலைகள் களவுகாமம் பொல்லாங்குயாவையுமேபுகழ்ந்துபேசல், களம்பிடுதல் காமத்தின்குரோதம்மிக்கக் கடித்திருந்தாமீசகுண காட்சியாமே.

காட்சிதரும்சாத்தியகுணந்தானேதென்னில் கமழ்க்கடிமை சாந்தகமைதயவொடுக்கம், தாட்சியாம்தன்னகவுதகத்திடுதல் தயவானகுணமமனப்புகழேபூண்டல், மாட்சியாம்மறையோனு மனமியக்கல்பூணல், வலிஞோரைவாழ்த்தல்நல்லோர்க்கீய்தல் நாட்சியாய்பிரைதண்டி பணிதல்நலமரிதல் நல்லோர்க்குப்பொருளீதல்வாங்தேடல்தாமே. 72

அரந்தேடல்உறவின்முறைசுத்தத்தாரை அதிதிபரதேசிக்கன்னமீதல், தரந்தேடல்தெய்வமறையோரைக்காணல் தேவனுக்குஉபசாரச்சித்தைசெய்தல், புரந்தேடல்புண்ணியங்கள்தேடலின்பம்பூசுரர்க்குஆதிகள்பொலிகுடுத்தல்,தாந்தேடல்சாத்மீகத்தின்குணமுமின்று சாத்தினேம்திரிகுணத்தின் தண்மைதானே. 73

தண்மையாம்வினைரெண்டின்பயனேதென்னில் சார்ந்தொரு நல்வினைதீவினைதான்ரெண்டு, பண்மையாமிருவினையின்பயனேதென்றால் பயன்றநல்வினையதுதான்புண்ணியமாகும், திண்மையாம் தீவினைதான்பாதமாகும் சேர்ந்தவிதுரெண்டாலே நரகசொர்க்கம், புண்ணியமே செய்பவர்க்குநல்வினையுமாதல் பொல்லாதபாவிகட்குத் தீவினைதானுமே. 74

ஆமேதான்ராகமொட்டையறியக்கேளு அதிகமாகும்குரோதமொடுலோபமோகம், வாமேமதமாச்சரியம் மிடும்புஆங்காரம்வகையாகயிதின்குணமே வழுத்தக்கேளு, காமேதான்காமியமும் மாசையாதல்காடிதானக்குரோதமதுபிணக்கமாகும், போமேதான்லோபமதுபிடிபாடாகும் பொல்லாதமோகமதுபிரிவுமாமே. 75

பிரிவுமதுமாவதுவும்கெருவமாகும் பரிதானஆச்சரிய மாங்காரந்தான், முறிதியிடும்பாவதுவும்முதாசினமாங்காரம் முரவேகமாவதுவும் கடூரமாகும், நரியெட்டுராகமதின்நலமைசொன்னேன் நாகமாம்மவத்தை அஞ்சின்நடத்தையாதல், அரிவுசிரித்திவத்தை அஞ்சும்விளம்பலாதலால்ஆக்கிரமாம் சாக்கிரசொர்ப்பனமுமாமே. 76

சொர்ப்பனமாம்சுழித்துரியம்துரியாதீதம் சுகாதீதமாமவத்தைஅஞ்சின்சூட்சம், நிர்ப்பனசாக்கிரம்நேத்திநேநேநின்று நிறைந்திருக்குங்கருவியுடன்நேசமாதல், கர்ப்பினைசொர்ப்பனங்கண்டசதானந்தன்னிற் கலந்திருக்குங்கருவியுடன்காயத்தோடு, ஞர்ப்பனம்சுழித்தியிறு தியக்கமலத் தியங்கிநிற்குமதுகருவியுடன் னியம்பிடாயே. 77

இயம்பிடவுதுரியமறுநாபிக்கமலம் பிணங்கிநிற்கும் கருவியுடன்னேத்தம்போலாம், முயம்பிடவும் துரியாதீதம் மூலாதாரம் முணர்ந்துநிற்கும் கருவியுடன் போகமாகி, சுயம்பிடவும் கருவிகள் தான் தொண்ணூத்தாறும் காரியமாய்தேகத்தைக்கார்த்துநிற்கும், முயம்பிடவும் முப்பத்தூதாதவமுந்தானும் முபர்ச்சியாம்வித்தியா தத்துவமாமென்றே. 78

தத்துவமாம்கருவிகள்தான் தொண்ணூத்தாறுஞ் சடத்திலெங்கும் மூடாடித்தகமையாகும், முத்துவமாம் மூடல்தனிலுண்மைகேளு முதிர்க்கிடெனும்புவியிலுற்பவித்து, அத்துவமாமப்போதுவுன்னித்தாளாய் அதிமுகத்துக்கருவியிட்டு ஆக்கைஉருவாய், சத்துவமாம்முருவாகி துவையத்தின்கண் தாக்கான அவ்வென்றும் அட்சரந்தானுமே. 79

அவ்வென்னும் மட்சரத்தில்நாடிதோன்றும் மன்னுடிதன்னில் நின்று தத்துவங்கள்தோன்றும், எவ்வென்னுமெனும்புசதை வண்பிடரிநரம்பும் மீரெட்டுப்பழுவொடுயிரண்டுகொடுங்கை, மூவ்வென்னும்முட்டுக்கால்வெட்டுவளையாகி மூட்டியடைத்தங்களேரூபமாகி, கவ்வென்னும் மிடையோடுபிங்கலையுஞ்சேர்த்து சுழிமுனையென்றொருதுணையும்வழியுமாமே. 80

வழியதுவாய்வாசல்வலம் மேற்கொண்டங்கே வலமாகஉடலுண்டவண்மையெல்லாம், கழியதுவாய்கானலதாய்காந்தலாகி கபமலம்போலெரிந்துமேயடியில்பாய்ந்து, சுழியதுவாய்சுனையாகி தூராதூரக் குழியாலதுர்ப்பாவைநிணமுமாய்பத்தியயீரல், பெழியதுவாய்காளிதநாரிப்பித்து பொரும்பலுமாய் செருப்பலுமாய் கிருமியாமே. 18

கிருமி உற்பத்தி.

கிருமியாய்வகைதேறும்வாய்வேநின்று காணமுமுன்னூத்தறுபதுமொழங்குடல்கிரங்கம், அருமிவிருத்தியுமந்த வுடல்தானங்கம்அமர்ந்தமுப்பத்துமூவிரண்டு, முழக்குடல்தான்எருமையொன்பதுவாசல் ஒப்புண்டாகிஓமடிந்துமலசலம்மிந்திரியமூன்றுய், வருமையாய்வச்சிரத்தோல் மேலேபோத்தி வழிபலவாய்மொழியாய்ச்சந்துமாச்சே. 82

சந்துமூணரைக்கோடிரோமத்துவாரந்தாக்கானநாலெட்டுவுருப்புமாகி, இந்திருபத்துவிரலும்ஜனுங்காகில் லீருமெட்டுச்சாணிரமேகம்வாகி, நந்துணர்ச்சாண்பருமன்மெய்வாய்விருதானாகி நலத்தசெவியுடல்பிருதிநவில்கூராகி, பத்துரெண்டுகாலுமதாய் இரண்டுகையாய் பதினாறுகவுறுடையவீணாகண்டே. 83

தண்டோடுஆறுதெரு கடலேழாகுந் தாக்கானத்தூணெட்டுமுப்பதுவேசந்து, யெண்டோடுயெழுபதுபேரெலும்புதானும்மேத்தமாம்மெழு முச்சாணெலும்புமாகும், மூண்டோடுயெலும்புமுச்சாண்சளைதயுமாகும் முக்கியமாமெண்பல்யீரலுமாமென்க, கண்டதொருநானாழி உதிரமாகுங் கார்ப்பதுவாசலையுமென துடைத்ததாமே. 84

உடைத்துதிரமாங்கிஷந்தான்மேதையஸ்தியுயர்ந்தசுக்கிலமம்பச்சைத்தாது, படைத்தபலம்முப்பத்துரெண்டுமாதல் பழுவுபதிநார்ப்பதெனபண்பாமென்க, முடைத்தமேதைமுதுகுகண்டு பனிரெண்டுதோர்வைமிக்கசூழதாளவகையஞ்சுமூம்வஞ்சதாகில், நடைத்தநரம்பெலும்பேழிமசைவுங்கூட்டி நயம்பிடவேசதைமேவி நாட்டித்தன்றே. 85

நாடியேபிடரியினிற்கோத்தநாடி நரம்பின்னலெழுபத்திராயிரமுமென்க, ஆட்டியேஅசைவுடல்சானதுவங்கில்லா ஆருயிரும்நாற்பதுஆறதாகும், தூட்டியதோரெழுத்தையீராயிரந்தான் துடர்ந்தவினைவருமே ஆயிரமாமென்க, ராட்டியேகுணங்கள் பதினாரதாகும் பகர்சேத்துமமானிலத்தின்குணத்தினாலே. 86

அனலெழுப்பி வாய்வுபத்தும்சுருக்கிநாபி அல்லல்வாசலோன்பதுக்கும்கதவொன்றிட்டு, தணலெழுப்பியிசுபாவாசருள் திரந்துயிடையினாடி பிங்கலைநாதனைநோக்கி, நினலெழுப்பின்பனெனும்நெய்சொரிந்துநேராகஅமுர்தமென்னும்திரியெட்டு, வனலெழுப்பிமணிவிளக்கேநிறையவேதத்தினவசியைநீ வரவழைத்துவைத்துக்கொள்ளே. 87

கொள்ளவேஐம்புலனைநாசமாக்கி கோசாரம்மட்சரத்தை அளவரிந்து, அள்ளவேயன்பத்தோரட்சரத்துள்ளாதாரம்நிராதாரசோதித்தேரி, ஒள்ளமும்மண்டலத்தின்வலமாய்வந்து யுதிரமண்டலமொக்கிப்பாலசோரிகள்ளேகாம, வெகுளிமேரெதுகதுவாசி கடும்புரவிந்துளைசதாங்கிக் கருதிப்பாரே. 88

தாங்கியேயிருமூன்றுவெருவுஞ்சுற்றிதயங்காதஅசுவங்கள்தெருதான்ரெண்டும், மேங்கியேவாயிருத்துயிரணார்வாய்வு யிரவுபகல்வாக்கியமில்லாமல்ஓங்கி, ஓங்காரமூலமெனுநாடி யுருதிகண்டுயெழுபத்தீராயிரம்நாடி, தாங்கியேநரம்போடுயிவைகட்கெல்லாம் நலத்தஉரப்பதுநாடி ஒன்றுண்டாமே. 89

உருமுடித்துகீழெலும்புபதிந்துமேவி யுகமையாந்தலைதனிலே யீஸ்பரன்தான், சிறுமவினைசெய்வினைபின்பயிலமூண்டுத் திகழிந்த சந்திரமண்டலத்தினிமைப்பாலுண்டு, தருவினைசெய்சத்தபரிசரூப ரசகெந்தந்தானும் வகைதோறும்முறுக்கொடுத்துத் திருவினை செய்து, தகமையறிந்துள்நோக்கித் தொண்ணூத்தாறுங் கருவி தத்துவமுமாமொன்றென்றாமே. 90

ஒன்றென்னும்பிதிலாதித்தன்போலா யொருபத்தும்பாரித்து னமர்ந்தவாரும், நன்றென்னும்காலோடு கைத்தாமரையினில் நடு வேனுழைந்து பிராகிமெய்யில்லோடி, பிண்டிநரம்பாலெலும்பை பிணப்பசைவித்து பெருநாடிபுகுமத்தையரிந்தடக்கி, அன்றுநாடிக ள்பத்தும்செரிந்தடங்கி ஆதிசிவனுந்திமுதல்வுருவுமாமே. 91

ஆமேயெழுபத்தீராயிரமும் நாடியொடுபிரமசூட்சம்மியம்பிட வே, முதுகெலும்புவெளுகத்தாரு மூமேமுப்பத்தொரு துவாரக் குழியுமாகி, முதிர்ந்துநின்றஐஒழுக்குஉதிரமாதல், நாமேநாழிஞு வாதம், முனநாழிபித்தம் நாழிஞுசிலேத்துமமாய்நலத்ததாமே.

நலத்தமயிர்மூணரைகோடி ரோமத்துவாரம் நல்லிருத்தெண் கோடிமலத்துவாரம், மூலமுப்பதுத்தெண்கோடிநவத்துவாரம்முய ன்றரத்தம் அறுபலமாங்கில்நூராகும், கெலந்தகெந்தம்மெண்பது வாமரோமம் நூத்தெட்டுகெடியானமேதைபலமைனூராகும், பில த்ததோல்முன்னூரு பலமேயாகும், போனநிணந்தானும்பலமு மாமே. 93

ஆமென்றகுடல்முன்னூற்றேழு பலமாகும்மதிகமாம் வழு கைநாற்பலமுமாகும், சேனென்றசிலவுதான்கண்கள்ரெண்டுஞ்சிரக் கவேயிரண்டுகளஞ் சாகுங்கண்டாய், நாமென்றநாக்குநாற்களஞ்சித மாகும்நாக்கெந்தம்மூக்கதுதான்முக்கதஞ்சு, காமென்றகனனஞ்சே ர்நாக்கழஞ்சுகமந்தெலும்பெனூத் தொருபத்தெண்பலமுமாமே.

என்னுவேயிரைச்சிபதம் னூத்தறுபத்தஞ்சு யேத்தமுப்பலந் தானும்மூளையாகும், பன்னுதாமரையெட்டு ஐங்கழஞ்சுயிரக்கவே கலப்பையும்முழந்தானீளம், கன்னவேகருவிகள்தான்தொண்ணூத் தாறுங்கணக்காகும்முடல்குறிப்புகாயந்தானுங், தன்னவேதத்துவ ங்களெல்லாஞ் சொன்னேன் சார்ந்தநாடியதன் தண்மைசாத்து ரேனே. 95

நாடி.

சாத்தினேன்நாடியுடபருவமொடு தாக்கானணுக்குமலமூத்திர மாங், காத்துரேன்கண்ணோடுபேச்சுதானுங் காரியமாயெட்டுதகை பரிட்சைதன்னில், லாத்தினேன்னவையிலுள்ள குணங்களெல்லாம்

மசாத்திய சாத்தியமறிந்து அவையம்பார்த்து, நாத்துரேன்நாடியு டதண்மையெல்லாம் நலமறிந்து துர்க்குணத்தை நயந்துபாரே.

யூகிமுனி நாடிதத்துவ முற்றிற்று.

ஆக செய்யுள் 1148.

ஏழாவது, தேரையர்

நாடி கூறுகின்றார்.

உள்ளுரை நாடிப்பரிட்சை.

கருபடைத்தவணைவாழ்த்தி கைதனில்நாடிபார்க்கப்
பெருவிரலங்குலத்திற் பிடித்திடநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்வாதம் யிருவிரலோடில்பித்தம்
திருவிரல்மூன்றிலோடில் சிலேற்றுமநாடியாமே. 1

பாவையர்க்கிடதுகையாம் பார்ப்பதுபுருடர்க்கெல்லாம்
மேவியவலக்கையாகும் மேன்படுமெருதுக்கெல்லாம்
தாவியகாலதாகு மந்திக்குக்கன்னமாகும்
பூவுலகதனில்நாடி பொருந்தியேபார்க்கும்வாறே. 2

வாதத்தின்படைவீரு ஞபிக்கும்கீழே
வணபித்தம்படை வீடுகண்டத்தினுள்ளே
ஓதத்தின்படை வூடுஉச்சிக்குள்ளே
ஒன்றைவிட்டொன்று கூடினல்கொன்றிட்டுவிடுமே. 3

வியாதிபிறக்கும் வழி.

வாதமெண்பத்தினலு வந்திடுவகைகளாய்ந்து
ஒதியபித்தனலு பத்துனெருமையாக
மாதவமுடையோர்கேளீர் வருஞ்சன்னிபதிமூன்றுகும்
ஓதவேயிருபத்துநாலு உளத்தில்நீரிழிவுமென்றே. 4

வாதமாம்நாடிமுன்னும் வரும்பித்தநடுவதாகும்
போதவேசிலேத்துமத்தாற் புக்கியகடையதாகும்
மாதவமுடையோரேகேள் வழுத்தியநாடிமூன்றும்
சாதகந்தருவதென்று தவத்தவருரைத்தவாறே. 5

அண்டியவாதந்தானும் ஆனதோர்வாசம்போல
மிண்டியேஉதைத்துக்காட்டும் மேலடிகாயும்தாகம்

அண்டியேஉடம்பதெல்லாம் அங்கங்கேகடுத்துநோகும்
விண்டிடும்வாய்பெனத்தும் மிகுத்திடும்சுரங்களாமே. 6

பித்தமாஞ்சுரங்கள்தானும் பெய்திடுந்தாதுபாதி
மற்றதுநடக்குஞ்சத்தே மறதியுமசதிகாணும்
நத்தமிழுடையபேர்கள் நாளும்பத்தறியவேண்டி
உத்ததுசொன்னோம்கேளீர் உகமையாய்கண்டுகொள்ளே. 7

வந்திடும்சிலேத்துமந்தான் வருவதுபாம்புதேரை
குந்தியேநடுக்கங்காயம் குளிருடன்யிரும்பலுண்டாம்
சுந்ததுமார்புநோகும் தக்காதுகக்கலுண்டாம்
இந்தவார்சிலேற்றுமத்தால் யெய்திடுஞ்சுரங்கள்தானே. 8

வாதமும்பித்தந்தானும் வளர்ந்திடுமிப்பால்கேளீர்
போதவேதலைவலிக்கும் புத்தியுமறதியுண்டாம்
ஆசமுங்கடுத்துநோவாம் அடிபட்டாப்போலுளைக்கும்
சாதனமறிந்துகொள்வீர் தருந்தொந்தரோகமென்றே. 9

மெத்தவேனுவரண்டு விக்கலும்தண்ணீர்தாகம்
பத்தியசாமுமுண்டாம் பாயைவிட்டோட்டங்கொள்ளும்
உத்ததுசொன்னோம்கேளீர் உலகுள்ளோரறியும்வாறு
மத்ததுசன்னிவாதம் வந்திட்டவியாதியாமே. 10

வாதமும்பித்தந்தன்னு லுவர்ந்திடும்ஐயங்கூடில்
ஊதியேதலைவலிக்கும் உதித்திடும்மயக்கம்விக்கல்
போதவேயசதிகாணும் பொருந்தியஒளிமயங்கும்
நாதமும்உடைத்துக்காட்டும் நடக்கும்பார்விழைச்சல்நாடி. 11

அடர்ந்திடும்கண்சிவந்து அறிவழிந்தயர்ந்துசோர்ந்து
விடர்ந்ததுகொண்டவன்போல் மெய்மறந்தசதிகாணும்
மடர்ந்தைசேர்திரிதோஷங்கள் வந்திடும்விபரந்தன்னை
நடர்ந்திடும்நினைவினாலே நற்குறிகண்டுகொள்ளே. 12

வயித்தினில்வலியுமுண்டாம் வரும்பக்கயிசுவுகண்டு
உயித்திடும்சரங்களுண்டாம் உள்ளத்துள்சூலைதோன்றி
சயித்தியமடைந்துவாயு தக்கதோர்பக்கறுக்கும்
எயித்திடும்சூலையாலே யெய்திடும்தோஷந்தானே. 13

அறணைவால்துடிப்புப்போலே அதுதுடித்திட்டால்வாதம்
பறவுதேள்கொடுக்கும்போது பதைக்கநாழிகையிரெட்டில்
மரணமேயாகுமென்று மண்புடனுரைக்கும்நூலோர்
விழிமலர்க்குழலினளே விபரமோடறிகுவீரே. 14

சிறுவர்தம்தொட்டிலாட்டல் செய்யப்பாலிழைச்சல்போலும்
இதுமெள்ளநடக்குமாகில் வியாதியுமீளாதென்று

குறிகிடும்முப்பத்தைந்தில் கூட்டைவிட்டேகுமென்று
நறுமலர்க்குழலினாளே நாட்டுளோர்க்குரைத்திடீரே. 15

மயிரிழைபோலேதானும் வந்தெதிர்நடக்குமாகில்
உயிரதுவிட்டுப்போகும் வுத்ததோர்ந ழியாறில்
பெயரதுவாயடைத்து பெருமூச்சுமதிகமானால்
உயிரதுவொழியுமென்று உரைத்திடில்தோஷமென்றே. 16

எறும்பதுநடக்கும்போலே யியலுடன்வாதவீட்டில்
தறும்பியேநடக்குமாகில் தையலேகேளீர்சொன்னோம்
குறுகிடும்நாலுநாளில் கொய்திடுமுயிரும்நீங்கும்
உறும்படிஎன்றுநீங்க ளுரைத்திடீர்உலகத்தோர்க்கே. 17

பாம்புபோல்வளைத்துக்காட்டி பாய்ந்திடும்தேரைபோலாம்
ஆம்படியாறுநாளில் அப்பாலுமிப்பாலில்லை
போம்படியறிந்துகொள்ளும் போய்விடுமாதந்தானும்
தேம்பிடுமடநல்லாளே செப்பினோமறிகுவீரே. 18

வாதமுந்தணிந்துமெத்த வரும்பித்தமுதரஞ்செத்து
போதவேசிலேத்துமத்தில் புக்கியேயிருக்குமாகில்
நாதமுங்குறைந்துபோகும் நாழிகையிரண்டிற்சாவாம்
மீதுனுமுரைத்தோங்கேளீர் யியலுடனுலகத்தோரே. 19

தருணத்தில்தாதுகேளீர் சயித்தியமுட்கொண்டேகும்
அருகியகண்மறைக்கும் ஆகமங்கைகாலோயும்
மறதியுமசதியாகும் வாதமும்நாடாதங்கே
குறிகிடும்சீவன்மூன்றில் குன்றிடுமென்றுகூறே. 20

ஒன்றைவிட்டொன்றுநாடி உதைத்துமேகிடக்குமாகில்
நன்றிலாமறதியாகும் நாளதுபிலன்குறைக்கும்
குன்றியேயஸ்திதன்னில் கூடியசுரமுதித்தால்
சென்றறுயிருபத்தஞ்சில் செற்றிடுமெனறுகூறே. 21

பித்தமேவாதவீட்டில் பெய்திடுமாகுமிப்பால்
உத்ததுகூறிக்காட்டீர் உருமொழிமயக்கங்கண்டால்
அத்ததுமாதமொன்றில் ஐயமென்றறிந்துகூரே
கத்தவருரைத்தயிர்ந்த கட்டியசூஸ்திரங்கள்தானே. 22

நாடி நடைகுறிப்பறிவது.

வருநமக்குத்தநாடி வலதுகைமானிடருக்கெல்லாம்
அருவயர்யிடதுகையில் ஆய்ந்தவர்பார்க்குங்காலை
பெருவிரல்வாதமாகும் பின்விரல்பித்தமாகும்
திருமணிவிரலில்நாடி சேற்றுமமென்றுசெப்பே. 23

அன்னமேகோழிவோணுன் மயிலெனநடக்கும்வாதம்
பின்னேயேயானைமயட்டை பெருத்திடும்பித்தமாகும்
சொன்னவாய்மொழிநல்லாளே சுத்தியபாம்புதேரை
அன்னமேஐயமென்று அறிந்திடிறணையாதானே. 24

கையதுநடக்குமெத்த கண்களைமுழித்துப்பார்க்கும்
மெய்யதுநடக்கும்வீட்டை வீட்டைவிட்டோட்டங்கொள்ளும்
மையமாய்நிலம்புரண்டு மடிக்கடியெழுந்திருக்கும்
வையகப்புலவோர்கேளீர் மரணமென்றறிந்துக்கொள்ளே. 25

பலபலபேச்சும்பேசும் பாய்சிலேகிழித்துக்காட்டும்
சலமதுஉழட்டிக்கேழ்க்கும் சாலவேசுவாசம்காணும்
தலமதிற்றரும்பெடுத்துத் தாண்டியேயெழுந்திருக்கும்
பிலமதுமிகுத்துக்காட்டும் பிழையாதென்றியம்பிடீரே. 26

நாக்கதுயீரமுண்டாய் நயனப்பாருவைகள்நன்றாய்
மூக்கதுயீரம்வத்தி முகக்களைமாறுதாகில்
ஆக்கவேசுவாசமத்து அயறுமேதூக்கம்போல
தாக்கிடுஞ்சுரமும்பெற்ற தானிருந்தாலுமிராறும். 27

வாதமுடிகித்தனத்தேள் வருஞ்சுரம்கொஞ்சமாகில்
போதவேதாகமட்டாய் போகநித்திரையுமுண்டாய்
ஏதமாய்த்தீவனங்களெத்திடாசுரங்கள்தானும்
மாதவமுடையோர்கேளீர் வந்ததோர்வியாதிமீளும், 28

சுரக்குறிப்பறிவது.

உடம்பெலாமீரமுண்டாம் உதித்திடும்சுரங்களுண்டாம்
தடங்கண்ணுஞ்சொருகிமெத்தே தாகமுங்கொஞ்சமாகும்
விஷங்கடித்ததுபோல்சத்த மேலுடம்பசதிகாணும்
மடந்தைகள்சொன்னேமித்தை வருஞ்சீதசுரமென்றேதே. 29

நாடிகள்மூன்றுமட்டில் நடந்துடனிருந்துதாகில்
பாடல்போலுடம்புநொந்து பற்றியசுரமுஞ்சத்தே
கூடியேயிருந்துதோலே குளுத்துடல்மறிதிகண்டால்
காடவருரைத்தயிந்த கடியசூஸ்திரங்கள்தானே. 30

பக்கமேயிசுவுகண்டு பத்தியயிரைச்சலுண்டாம்
கக்கவாய்வழுத்திருக்கும் சற்றுமேசுரமுண்டாகும்
மிக்கவேகுளிருண்டாகும் விரிமலர்மந்தமாகும்
அக்கவேசொன்னேமித்தை அசீரணச்சுரமென்றேதே. 31

காலுமேகுடைச்சல்கண்டு கடுத்திடும்யிடுப்பும்பக்கம்
மேலுமேசுரமுங்கண்டு விழியதுகாந்தல்காணும்

ஆலுமேகினுக்கள்கண்டு அழுத்திடும்பிறட்டிக்காட்டும்
சேலுமாவிழிநல்லாளே தொந்தமாஞ்சொரமென்றேதே. 32

காயுமேசுரங்கள்மெத்த கால்கைகளுதறிகாட்டும்
ஒய்விலாவயிறிரைச்சல் வுதித்திடும்பேதியுண்டாம்
வாயதுபிரட்டல்கண்டு வழவழத்திருக்குமானல்
ஆயுமேவல்லோர்கேளீர் அதிசாரசுரமென்றேதே. 33

பக்கமேதுடிக்குமார்பு பதைத்திடும்முகம்வெளுக்கும்
ஒக்கவேசுரமுங்காயும் ஓயுங்கைகால்கள்மெத்த
தக்கவேவலிகளுண்டாம் கண்வெளுத்திட்டேபோகும்
அக்குலம்அஸ்திபான அதிசுரமென்றுகூறே. 34

நாவதுவரளுஞ்சத்தே நறுக்கென தலைவலித்து
ஆவதுசுரமுமுண்டா யடிக்கடிதண்ணீர்கேழ்க்கும்
போவதுகண்கள்ரெண்டும் போதவேயனல்படைக்கும்
நாவமாய்மலங்கள்கக்கும் உள்வெக்கைசுரமென்றேதே. 35

உடம்பதுஉலருஞ்சத்தே வுறத்தநீர்புடைத்துக்காட்டும்
தடைபடாசுரமுங்காணும் தாடையும்வற்றிக்காட்டும்
நடந்திடில்கைகாலோயும் நாக்குமேயனலதாகும்
வடப்படுமுலைநல்லாளே வருமுழுக்காச்சலென்றே. 36

முளைமார்பிலிளைப்புண்டாகும் மோதியசுரமுங்காணும்
அலையவேவாதத்துக்கு அங்கங்கேவுளைப்புண்டாகும்
பலவிசைதண்ணீர்கேட்கும் படுக்கையும்கொள்ளொட்டாது
சிலைவிழிமடநல்லாளே ருத்திராங்கசுரமென்றேதே. 37

குளிரும்பின்காயுமெத்த குடிலமுமதிகமாகும்
தளிரதுநாவுதானே தாகமாய்வரண்டுகாணும்
வெளிபவர்ச்சித்துமேனி மேலெல்லாந்தினவுகாட்டும்
தளிர்குழல்மொழியினளே தாகளிர்சுரமென்றேதே. 38

உடம்பெல்லாம்வேர்த்து வுத்ததோர்சுரமுங்காயும்
அடைந்திடுமிரைப்புகாணு மடிக்கடிசுரம்விட்டோடும்
உடம்பதுநீர்போல்காணும் ஊன்றியவாயறிவித்தோன்றும்
படந்திடும்சித்தத்தோடும் பயித்தியம்சுரங்கள்தாமே. 39

பறைவிட்டுளெலும்பிற்றுக்கி பொட்டமுஞ்சுரமுந்தோன்றி
வரைபுகலீரல்வெந்து வருமதுநாக்கில்தாக்கி
கரையுமேமயீரல்தானும் கடிகியேநாக்கும்வேகும்
இடிமுலைமாதேயிந்த நாவெட்டிக்காச்சலாமே. 40

உத்தியேருளுந்துமெத்த உழலையும்தாகமாகி
சித்தியேநடுக்கலுண்டாய் சொல்லுமேயனேகம்போது

பத்தவேவேண்டாமிந்த படருமிச்சுரத்துக்குத்தான்
வித்தணமடநல்லாளே மிகநாடிச்சுகமென்றோதே. 41

இராஜகூட்டத்தின் விபரம்.

ஓர் சரீரத்திலே வாதராஜன் பித்தராஜன் சிலேத்துமராஜன் இம்மூவரும் அந்தசரீரத்திலேஇராச்சியபாரம்பண்ணுகையில்இவர்கள் தங்களிடம்விட்டு யிடம்பேர்ந்தால் காணுங்குணங்களும் தங்களிடம்விட்டு போகாதிருந்தால் காணுங்குணங்களும் அறியும்படி உணர்த்தியது.

வாதராஜன்பித்தராஜன் வருகின்றசிலேத்துமராஜன்
ஆதியாய்மூவர்தானும் அவரவர்வீட்டில்நின்று
போதவேயுறவதாகி பொருந்தியேயிருப்பாராகில்
சேதமுமில்லைரோகஞ் செடமதில்நாடிடாதே. 42

உபத்திரமொன்றுமில்லை உடலினில்வியாதியில்லை
நலமதாய்வாதமிஞ்சில் நல்கிடும்வியாதியுண்டு
எவமதாய்பித்தமிஞ்சில் யேறிடும்பயித்தியங்கள்
அவமிகுசிலேத்துமந்தான் அதுமிஞ்சிவிளையலாமே. 43

காலங்கள்வரும்போதன்போ கடுகியேமூவர்தானும்
கோலங்கொண்டொன்றோடொன்று கொடும்பகையாகியப்போ
நீலம்பூண்டிருக்கும்ராஜன் நேர்ப்படுங்கோபமாகி
வேலும்பாசங்கள்கொண்டு வெளிப்பட்டுஉயித்தியஞ்செய்வார். 44

வாதராஜன்முன்னெழுப்பி வருபித்தராஜன்தன்னை
ஆதரைதொண்ணூத்தாறு மந்திரிமார்களோடே
போதவேபிடித்தவீட்டை பொடிபடயிடிக்கவென்று
நாதமுழங்கபித்த ராஜனைவளைத்துக்கொண்டான். 45

ஏணிகள்வைத்துப்பின்னும் யேறியேயெழுந்துபின்பு
ஆனையும்படையுவீர ரனைவரையும்வெட்டிக்குத்தி
சேனைகள்மிரண்டபோது செய்வதாய்வாதராஜன்
பாணியேபித்தராஜன் தன்னையுங்கட்டினனே. 46

குத்தியேசேனையெல்லாங் கோட்டையைபிடித்தபின்பு
மத்துமேவாதராஜன் மகிழ்ச்சியோடிருக்கும்போது
பற்றியேசிலேற்றுமராஜன் படையெடுத்தெழும்பிவந்து
உத்திடும்வாதராஜன் தன்னையும்வளைத்துக்கொண்டான். 47

வாதராஜன்சேனைபான மந்திரிமாரையெல்லாம்
கோதாவெட்டிப்பின்பு கோட்டையைப்பிடித்திடித்து
ஏதமில்சிலேற்றுமராஜன் யெய்திடும்வாதந்தன்னை
போதவேவெட்டிப்போட்டு புகட்சியோடிருக்குங்காலை. 48

அப்போதுசேற்றுமராஜன் அரசதுயாளும்போது
மெப்பானமேல்சுவாசம் வெய்யகண்சொருகிப்போகும்
தப்பாதுஅள்ளெடுத்து சரீரமும்குளுக்துபோகும்
ஒப்பாதுநாட்டைவாங்கும் வுயிரதுநீங்குந்தானே. 49

பிறிதிவும்பாம்பதுபோலே பாய்ந்ததுமெப்பாலேகும்
அறிகியாப்பித்தந்தானு மருவியதேய்விற்சென்று
சிறுமெயுவுதாவாய்விற் சிதறியுமாகாசத்தில்
உறுதியாமிவ்வாறுலே உயிர்விட்டுவோடுந்தானே. 50

அப்பொழுதுடலேவிட்டு ஆத்துமம்பிறிந்துதென்று
செப்பிடுமனிதருக்கு சேரிடுங்காலனுலே
கொப்பனவறிந்துகண்டு குணங்களேயறிந்துகொண்டு
தப்பித்துவென்றுகூறி சடகெனவிட்டிப்போமே. 51

தேரையர்நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1199.

எட்டாவது புண்ணுக்கீசர்

நாடி கூறுகின்றார்.

போங்குறிஅவத்தைதானும் புனலொடியசந்துநாறும்
ஏங்குறிசிலேர்ப்பனந்தான் எய்தியமுடிச்சிவீழும்
ஓங்கதுசுழிதானேது வந்திடும்பலபேச்சாக
தாங்கதுதுரியந்தானே தப்பிடுமயக்கம்தீர்ந்தே. 1

தீதுறுஅவத்தையஞ்சில் தெளிவுறுமுகடுபார்க்கில்
ஓதியஅவத்தையாறில் வுடலதுதிமிர்த்துக்காட்டும்
நீதிபோம்அவத்தைஏழில் நினைவற்றும்பொசிப்பேனென்று
மாதியாஇரைத்தயெட்டில் முகடுபஞ்சடையுமென்றே. 2

கொண்டிடுமலத்தைக்கேளாய் கூர்விழிமூக்குகாது
உண்டொடிவுச்சிவுந்தி வுள்ளங்கால்கைகாலெங்கும்
விண்டிடவெளுத்துக்காட்டி மிகுத்திடுஞ்சேர்ப்பமென்று
அண்டர்களறியச்சொன்னேம் அஞ்சாநாள்மரணமென்றே. 3

தன்னுடசைகைதானும் தனக்கதுதோன்றுமாகில்
முன்னுரைஅறிதல்கேட்கல் முயன்றுரையதற்குலத்து
என்னதுன்றறிதல்ஏங்கி யெளப்புடன்திகைப்பத்தோன்றல்
சொன்னம்போல்வரண்டுமெய்யும் தோன்றிடலேழ்நாட்காலே. 4

பிரண்டதுமருண்டுமேலே பொருதும்நீர்நடக்குமாகில்
இரண்டரைநாளெதென்ன இயம்பினர்மரணமென்று
சுரண்டமெய்குழலினளே சாத்தினுமெட்டதாகும்
திரண்டநாள்வந்ததென்று சிக்கெனதெரிந்துசொல்லே. 5

அறிந்திடாபயித்தியம்நின்று வாதமும்சேத்துமமங்கே
பிறிந்திடாதோடுமாகில் பெய்வளேமாதேகேளாய்
இறிந்ததோர் ஆகமத்தின் நேர்படயெறந்தேயோடில்
மறிந்திடாக்கடிகைதொண்ணூர் வுலகினில்மரணமென்றே. 6

வேறு.

சேறுமிமுருகண்டோங்கும் சோங்கும்கைகாலுடனே
ஊறிமுழன்றேநெஞ்சலரும் உடனேசேத்துமக்கோதண்டம்
நீருமிருக்கும்கண்சிவக்கும் நேரேஇருக்கவோடாது
பாருங்கிரிகைக்குணங்கண்டால் பரமன்மீட்கமாட்டாரே. 7

காலும்கையும்புறம்வீங்கி கண்டஞ்சோர்ந்துநாவரண்டு
மேறுங்கனத்தேயிளப்பெய்தி மிகுந்ததேகமுண்டாகி
தோலும்கசையும்படபடத்து துய்யநெஞ்சில்குளிந்திடிகில்
மாலும்பிரமர்வந்தாலும் மரிக்கும்பிழைப்பதரிதாமே. 8

புண்ணாக்கீசர் நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 120.

ஒன்பதாவது சூதமுனி

நாடி கூறுகின்றார்.

வாதமது முன்னெழுந்துதாழ்ந்துசத்தே மயிலதுபோல்நடை நடந்து மயங்குமாகில், சேதமது வில்லையெண்பத் தாறுமாண்டில் செப்படா மரணமென்றே தீர்க்கமாக, நாகமது குறைந்துவிட்டுளெப்போற்கண்டால் நாளெட்டில் மரணமென்றேநம்பலாகும், போது மதுயில்லையிதுபிசகிடாது பெரியவாரஞ்சூதமுனிப்பேசுங்காலே.

காலான பித்தமது துடியேகொண்டு கனலெழுந்து வந்திடுகில் சீதமாச்சு, மாலாகிலும்பார்க்க மருந்துமில்லை மரணமது மூன்று திங்கள் வரிசையாகும், காலான பித்தமது தொங்கிதொங்கி நடை நடந்து பம்பரம்போல் நடக்குமாகில், மேலான பதின்மூன்றுந் திங்கள்தன்னில் வித்திருந்த கூரழியும் விரும்பிப்பாரே. 2

அழைத்துடனே அனுப்பிவிப்பான் பித்தராசன் அதுகேழ்ப் பான் சீதமதுமப்புபோலே, களைத்துடனே வந்திருப்பான் கயரு போட்டு கண்ணெலாம் முழிபிரண்டு சுரமும்வந்து, வளைத்துடனே அக்கினியும் வந்துதண்ணீர் வாகப்பண்ணுங் கரைந்துவிடும்வகை தான்பாரு, இழைத்துடனே கூடுவிட்டுபேகும்பாரு பின்னமொரு குறிதனையே யியம்புறேனே. 3

இயம்புகிறேன்பித்தமொடுவாதங்கூடில் யியல்பானகொந்திப் பென்றறியலாகும், நயம்பெறவே சிலேற்பனமும் கூத்தாடினல் நாட்டலாமென்றேதான் நாட்டலாகும், நயம்பெறவே பித்தமது விழுந்துதானுல் சொல்லரிது பேசாதே சுருக்குமெத்த, இயம்பு கிறேன் தாம்விழுந்து ஆறுமாசம் யினிதான சடலமதுவகும்பாரே.

ஆமடாகண்சிவந்த சுழித்திவாங்கி அறிவுகெட்டு மதிமயங்கி ஓசைகுன்றில், போமடா ஆளும்நால் சீவன்போகும் போதமது நின்றுசற்றே பேதமாகில், நாமடா பித்தமது வீழ்வதில்லை நம்ப ரிது வம்புவரும் நாடாதேகேள், சாமடா மூன்றும்நாள் சீவன்போ கும் சக்கரமு மருதியென்றே சாத்தலாமே. 5

சாத்துகிறேன்வாதபித்த சிலேற்பனமென்றே சார்வானதிகை நாடி பத்துண்டென்றும், ஏத்துகிறேன் ஒருவிரலுக் கிரண்டுநாடி இயல்பான அஞ்சுவிரல் பத்துநாடி, மாட்டுகிறேன் அங்குட்ட விர லிற்றனே குத்தறிஞர் பிராணனொடு அபானன்தானும், போத்து கிறேன் தற்செனி விரலுக்குத்தானே புகழ்பெரிய உதானனொடு வியானன்தானே. 6

ஆகுமது மதியமாம் விரலிற்றனே யடுத்துநின்ற நாகனொடு கூர்மன்தானும், போகமது யணுபிகையெனும் விலிற்றனே புகழ் பெரிய சமானனொடு கிரிகான்காண, ஏகுமதுகட்டிகவிரலில்தானே இயலான தேவனொடு தனஞ்செயன்தான், ஏகுமதுயிப்படி யியல்ப தாக இயலான தனஞ்செயனு மாகுமானே. 7

பத்தாகும் வாதபித்த சிலேற்பனமூன் றும் பருவதங்கள் தப் பியே பதருமாகில், வத்தாதசீதமது வந்துதோன்றில் வரிசை யொடு விக்கலுடன் குழிற்சைமேவும், எத்தாக யிளைப்புடனே பேச்சுமில்லை யிதமான வாதமது விழுந்துதானுல், அந்தமா யிரு பத்தோர் நாளில்சாவார் ஆதிவாதம்பித்தமதைப் பிரிந்துபாரே. 8

கேளப்பா மூன்றுமிக யசைவுநின்று கெடியான விரல்மூன் றில் துப்புகாணில், நாளப்பா சாசனத்தில் குடிகொள்ளும் நல மான மூத்திரங்கடுத்துச் சிறுத்துப்போகும், தாளப்பா பிராண வலி எலிவுகுத்து சரீரத்தில் வேர்வையெழும்பி வாய்வுமாகும், சூலப்பா முலைமூளை வெளியில்காணும் சுரங்காணு மதாக்கியொடு சோபங்காணே. 9

உரைக்கிறேன்பித்தத்தில்வாதங்கூடில் உதரவலிகொண்டுமிக
வுடம்புவீங்கும், நிறைக்கிறேன்பித்தமது அசைவுகண்டால் நெஞ்சி
வலிபிறவலிப்புநெற்றிக்குற்றும், மறைக்குறேனீறேழில் மரண
மாவார் மண்டலத்தில்வெறியெழும்பி வழியைப்பார்க்கும், மறைக்
கிறதோர்மருந்துதனை சொல்லவொட்டி தர்க்கரித்துக்கொள்ளுமடி
யதின்மேற்கேளே. 10

சோபமில்லா யேப்பமதுகவிழ்ந்துகாணும் சோகியங்களில்லை
யது துணுக்கமைந்து, தாகமொடுவிக்கல்வந்தால் நீரைக்கட்டி சஞ்
சலத்தையுண்டாக்கும் மலமுங்கட்டும், வாதமுடன் சீதமதுகூடும்
போது வந்துவிடும் யிழுப்புடனே யிருபதாம்நாள், பூதமதுகூடுவி
ட்டு ஏறிப்பாயும் பொய்யல்லசூதமுனி புகழ்ந்திட்டேனே. 11

புகழ்ந்திட்டேன்சன்னியெல்லாமூன்றுக்குள்ளே பூட்டினேன்
சிலேற்பனத்தைப் பகுத்துப்பாரு, இகழ்ந்திட்டேன் யினிதிரேகம்
பார்க்கவேண்டாமினிதானசடலமெல்லாம்குளிர்ச்சிகாணும்,மகிழ்ந்
திட்டேன்சிலேற்பனத்தைப் பிரித்துப்பார்க்கில் மகிழ்ந்தெழுந்தநா
டியதுபோய்பொங்கக்கண்டால், தனந்திட்டவிசைபோக்கியாவிபோ
கும்தப்பாது எழுபதுநாள் தான்சொன்னோமே. 12

சொன்னதினால்நாடியெல்லாங்காணர்காணர் சூட்டியமாய்நிலை
யறிந்துசொல்லவேணும், எண்ணத்தினாலாகாது என்றசொல்லையிரு
மாந்துநின்றுக்கால்காணர்காணர்,முள்ளிதனால்வாதசிலையொக்கவே
ணும் மூன்றுதினங்கிழத்தாகமுளையக்காணும், பின்னதினால்வே
றொன்றும்பார்க்கவேண்டாம் பிறந்துவாரும் நாடியெல்லாம் பேசக்
கேளே. 13

கேளப்பாமூலத்திலெழுந்தவாய்வு கெடியானவிரல்மூன்றில்து
டிப்புகாண்கில், நாளப்பாசூசனத்திற்சூடேகொள்ளும் நலமுடனே
வலமிருக்கஅசனஞ்செல்லா, சூளப்பாகுடல்பொருமி வலியேகாணு
ம்தொடாதபித்தமதுகடினமாகும், கேளப்பா தேகமெல்லாம்புண்
போல்நோகும் சிக்கெனவேவலங்கழியுஞ்சிரேபாரே. 14

பாரப்பாமூலமதில் எழுந்தவாய்வு பாங்குடனேதீருமதுபதி
னோராம்நாளில், சீர்பெறவேவாரமதில்மருந்துசெய்தால் தீரும்வாத
பித்தமதிலேவாங்கும், ஆரப்பாயிதையறிந்து செய்யாவிட்டால்
அண்டபிண்டகாடென்றுமனலேமீறும், தாரப்பாகிராணியைப்பொ
ற்குணமேகண்டு கவரிவருமன்பத்தோரும் நாளில்தானே. 15

தானென்றகயபிருமல்நாடிதன்னை மாத்துகிறேன் பித்தத்தில்
சிலங்கூடில், கோனென்றசிரசுதனில் நீரேகொள்ளும் குத்துடன்
பிருதில்வரில் கோளைகாணும், தேனென்றபீளைவரும் ரெத்தம்கா
ணும் மாதுமத்திபமாம் செப்பலாகும், நானென்றவுடம்புதனில்
தீராரோக முரைக்குறேன்யின்னதென்று முந்திமுந்தி. 16

மூந்தினதோர்பாதமுடன்காலுதன்னில் முகத்திலேவீக்கமது கண்டுதானால், மூந்தியதோர்கழிச்சலுடன்கிராணியாகும் பேசரிது தீராத அசாத்தியமாகும், சிந்தியதோர்வாந்தியுடன் வீக்கங்கண் டால் தீராதுதீராது திண்ணமாகும், அந்தியதோர்சயமிருமல் சலக் கிராணி ஆராலும்தீராது அசாத்தியந்தானே. 17

அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராசாங்கத்தில் அறிந்திட வேயின்னதென்று யடைவாய்க்கேளு, அசாத்தியந்தான் நீர்க்கோ வைசத்திகுன்மம் ஆனதொருவலிகுன்மம் யோனிப்புற்று, அசாத் தியந்தான்குலைநோவும் நாக்கிற்பத்தும் அண்டத்தில்பவுத்திரமும் தொண்டைப்புற்றும், அசாத்தியந்தான்முசல்கிருமி வளால்விச் சொடு ஆராலுந்தீராது அழிவுதானே. 18

தானென்றசலக்கழிச்சல் மதமும்தப்பி தலைதனிலேயுதித்தெ ழுந்த பிலவைத்தானும், கானென்றதாருவலிகாசிகண்டமாலை கன் னத்தில்புத்துடனே மாறக்கண்டேன், தேனென்றமுகவாதம் சன் னிவாதம் சேத்மசுரம்சுரமாந்தைகவிசையோடு, ஊனென்றவுயிர் நிலைக்குமிவ்வளவும் உள்ளபடிசொன்னேம்வாத நிலையைப்பாரே. ()

வாதமதுகீழ்நோக்கா திருந்தபித்தம் வையத்தில்சேராதேய னல்தாழாதே, பேதமதுசெய்யாமல்பிச்சிடாமல் பிலத்திருந்தால் பிராணணங்கே பிலத்திருக்கும்பிசகேயில்லை, நீதமதுதப்பியேஜபத் தோளே னிழவாதமகிழ்நோக்கினேரவோடில், தீதாகும்வியாதி யெல்லாம்சனிப்பித்தோடும் சீருடையவாதநிலைநாடித்தேரே. 20

நாடியுடவிதங்களெல்லாம்வாதவீட்டில் நாடலாம்மலையாதேநல் மாயய்யா, தேடிவரும்நோய்களெல்லாம்ராசாவைத்தான் சேர்ந்து நின்றால்காணுமது செப்பவேண்டாம், ஆடிவரும்பித்தமது அரசன் கீழே அமர்ந்திருப்பன்கலந்திடுவான்பித்தநல்ல, கொடிதானவற்கு குற்றஞ்செய்தால்யாமே குன்மாகசிலேற்பனத்தை யழைப்பான் பாரே. 21

அழைத்துடனே அனுப்பிவிப்பான் பித்தாசன் அதுகேழ்ப் பான்சீதமது மப்புபோலே, சளைத்துடனேவந்திருப்பான் கயறு போட்டு கண்ணெல்லாம்முழிபிரண்டு காமும்நொந்து, வளைத்துட னே அக்கினியும்நவிலுதண்ணீர் வளமாகக்கரைந்துவிடும் வகைதான் பாரு, இழைத்துடனேகூடிவிட்டுயேகும்பாரு யின்னமொருகுறித னையேயியம்புவேனே. 22

இயம்புகிறேன்பித்தமொடுவாதங்கூடில் இயல்பானதொந்திப் பென்றறியலாகும், நயம்பெறவேசிலேற்பனமும்கூடினுக்கால் நாட் டலாம்நலமென்றேநாட்டலாகும், சுயம்பெறவேபித்தமது விழுந்து தானால் சொல்லரிதுபேசாதேசுருக்குமெத்த, இயம்புகிறேன்கபம் விழுந்த ஆறுமாசம்யினிதானசடலமதுவகும்பாரே. 23

சடலமதுயேகிவிடும்வகையைக்கேளு சாத்துகிறேன்வாத்தும நிலையைப்பாரு, உடலமதுநடுநடுங்கிவிழைத்துதானால்லொன்பதாமாத மதில்சாவாரென்றே, கடலுமதுகலங்கிவிடும்பித்தராசன்கதித்திரு ந்தவீடுவிட்டு காதில்சென்றால், நடலுமதுகுறைந்துவிடு மறுபதா நாளில் நாடுவிட்டுகாடுபுகும் நடையைப்பாரே. 24

நடையிதுதானிருந்தாக்கா லாறுநாளும் நாளதனிலறிவார்கள் நாதனவார், விடைதனிலேயேறிவரும் சிவனார்சொன்னார் வேந்தர் சூதமுனிவெளியில்போட்டார், கடைதனிலேசெடலமது நேர்ந்து புண்ணாய் கறுத்தநூந்தாநாவதுவும் நீர்தானாகில், யிடைதனிலேயே மூம்நாள் சாவாரென்றே இயல்பானசூதமுனியியம்பினேனே. 25

இயம்பினார்நாடியெல்லா மிதலிற்குள்ளே யிடையிடுநடுபிங் கலையுஞ்சுழிமுனையுமாகும், இயம்பினாரிதுதானே வாதபித்தமையா முயல்பானக்காலரையும்ஒன்றுமாகும், இயம்பினாரிப்படியேநடக்கு மாகில் பிடுக்கங்களொன்றுமில்லை யிருக்கலாகும், இயம்பினார் சூட் டியே தோன்றிச்சீதம் யெழும்பினால் பிணிபலதுபேசுந்தானே. ()

தானென்றநாடிநிலை யறியவேண்டும் சதாகாலஞ்சாஸ்திரத் தை, நோக்கவேண்டும், ஊனென்றதத்துவங்கள் சரிகைக்கூறும் உற் றுணர்ந்துபஞ்சபாதங்கள்நீக்கி, தேனென்றமனோன்மணியாள் பா தந்தன்னை தினந்தோறு மறியாமல்சேவித்தேற்றி, நானென்ற ஆணு வங்கள் மாய்கையாறு நல்லபரிகாரஞ்செய் நாடிமுற்றே. 27

சூதமுனி நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1234.

பத்தாவது வால்மீகர்

பூதநாடி கூறுகின்றார்.

ஐவிரலைந்துநாடி அதுசெய்யும்வகையைக்கேளீர்
மெயவிரலொன்றுவாதம் மொழிவிரலொன்றுபித்தம்
நெய்நடுவிரலேசிலேத்மம் நேர்விரல்பூதநாடி
மையவிரலேசொன்ன வகுத்தனர்வால்மீகர்தானே. 1

புகழ்ந்திடும்பூதநாடி பூனைபோல்நடக்குமாகில்
நகழ்ந்திடும்பொற்செவ்வாய்போல் நடக்குமேசுருக்கதாக
உகழ்ந்துதான்கொடுத்ததுண்டு வுண்மையாய்மனதில்கொள்வீர்
மகிழ்ந்திடுங்கழிப்பில்லாட்டால் வாங்கிடமாட்டாதென்றே. 2

வேந்தனும்பூதநாடி வெள்ளெலிபோலேகுன்றில்
சாந்தமாகப்பொண்பே புதன்வெள்ளிதன்னில்தொட்டு
ஏந்தியாள்தனமுங்கெட்டு யிரச்சிபோல்திரேகம்வற்றும்
காந்தழல்கையுங்கண்ணுங் காந்திடும்நெருப்பதாமே. 3

மூடியபூதநாடி மூனையதுபோலேதோன்றில்
நேடியேதீரன்மாடன் திங்களில்தொகுத்ததுண்டு
கூடியேபுணர்ச்சிகாணுங் கொடியமெய்நோவுங்காணுங்
சூடியதிரேகம்வற்றும் துவாலையுமிரக்குந்தானே. 4

பின்னியபூதநாடி பின்னிடாதோடிவாங்கில்
உன்னியபிறமருச்சி வுச்சியென்றதனில்தொட்டு
கன்னியும்மணமுங்காணு கசரோகம்போலேவற்றும்
தன்னையுமறியொட்டாது தலைச்சுத்துமயக்கந்தானே. 5

மன்னியபூதநாடி வண்டதுபோலேயூர்ந்தால்
தன்னிகறில்லாமாடன் சனியதில்மாலைநேரம்
உன்னியேபிடித்ததுண்டு ஒருவர்கையகப்படாது
பன்னியபேச்சுந்தப்பும் பயமதுசாடுந்தானே. 6

பலபெரும்பூதநாடி பாம்பதுபோல்நெளியுமாகில்
இலம்பெருமருந்துதண்ணீர் யிருளதேதீண்டிச்செய்யும்
நலம்பெருந்துவாலைசாய்க்கும் நாளிலேதிரேகம்வற்றும்
சிதம்பரசக்கரத்தால் தீருமேதிட்டந்தானே. 7

பவுத்துள்ளபூதநாடி வலசங்குபோலேவூர்ந்தால்
சமதுள்ளசுடலைமாடன் தனிப்புதன்பிடித்ததுண்டு
அபத்தமேபேசுவிக்கு மாருக்குமகப்படாது
உவத்துக்குள்புவனையென்ற தோன்றினால்தீருந்தானே. 8

சடுதியில்பூதநாடி தடதடென்றுநடக்குமாகில்
பிடரியும்வலிக்கும்நெஞ்சம் பின்பரையடித்துக்கொல்லும்
சுருதியைப்போலேதிரேகம் சுட்டிடுமுதிரங்கக்கும்
சடுதியில்போமேவயிரவன் சக்கரஞ்சிவத்தினாலே. 9

இருகியபூதநாடி யிழுத்திழுத்தேதிரேவாக்கில்
குருகியேபிசாசுமெத்தக் கூடியேச்சிப்போலும்
இருகியசெவ்வாய்தன்னில் யேழரைப்பொழுதில்தீண்டில்
மருகியவுடலும்வத்தும் வாலைமந்திரத்தால்போமே. 10

பொருந்தியபூதகாடி பிணத்தைப்போல்கிடைக்குமாகில்
வருந்தியேதிரேகம்வற்றி வாய்வதுமிகுத்துகாட்டும்
திருந்தியேபோகவென்றால் தீர்ந்திடும்வகையைக்கேளு
மருந்துமந்திரக்கழிப்பு மணியுடன்தீருந்தானே. 11

கலங்கியேபூதநாடி கரைகண்டுபோலேவூர்ந்தால்
இலங்கியமத்துமுன்ன மெந்தயப்புசர்சுபோலாம்
நயங்கியேநாடிதொட்டால் நாளிலேவத்திக்கொள்ளும்
யணங்கியேயனுமன்மந்திரம் சடாக்ஷரங்கட்டப்போமே. 12

செப்பிடும்பூதநாடி தேரையைப்போலேதோன்றில்
வப்பிடுந்திரேகந்தன்னில் வலமுடன்மற்றதெல்லாம்
யப்புடன்தேங்காய்தன்னி லடைத்துவெள்ளாவில்வைத்து
செப்புமேமீசனுனை செய்வினைக்குணமிதாமே. 13

கருத்திடும்பூதநாடி கரைகண்டிபோலேவூர்ந்தால்
அமர்ந்திடும்பூவைபண்ணி யாளியுமரைந்துகட்டி
துடர்ந்தபாழ்ங்கிணறுவெந்த சுடலையில்புதைத்துவைத்து
கடைந்திடுக்குருவில்செய்த கபடவஞ்சனையிதாமே. 14

தோன்றியபூதநாடி தொக்குபோல்சுற்றுமாகில்
வீன்றிடவுருவேபண்ணி விரைந்துபொற்பதித்துசேர்த்து
மூன்றியமாமுசந்தி முகந்திடும்வீட்டில்வைத்து
தூன்றுமந்திரத்தால்செய்த சூனியமெண்ணலாமே. 15

திரைந்திடும்பூதநாடி னெருப்பதுபோலேசுட்டால்
சிரைந்திடும்பில்லியாகும் செல்வகுணம்பரிட்சைகேளீர்
குரைந்திடாக்குரங்குநாயுக் கூட்டமும்பயமும்நாட்டல்
மரைந்திடமயக்கஞ்செய்யும் வால்மீகர்வுரைத்தவாறே. 16

வால்மீகர் பூதநாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1250.

பதினேருவது மச்சமுனி

நாடி கூறுகின்ருர்.

அறிந்தேகொள்நாடிதானும் ஆண்பாலின்வலப்பக்கந்தான்
செறிந்தேதர்க்கிடக்கை சென்மித்துவிட்டபின்னும்
குருந்தேவுந்தனிடக்கையாற் கூறுமூன்றுவிரல்பத்து
தெரிந்தேவாதமருள்தத்தம் சேட்பகுணமும்பாரீரோ. 1

கைதனைபிடித்துநீயும் கடவுளைப்பார்த்துஎண்ணி
உய்யதோரல்லவென்று வுத்தரிநாடிபார்க்க
பையவேதொடருந்தொட்டு பகைப்பதுகண்டபோதே
மெய்தனிற்குணங்கள்கண்டு மேவியேவிளம்பிடாயே. 2

வாதக்குறிப்பு.

அங்கையைமுறித்துநெட்டி அடைவுடன்மேலேவாங்கி
செங்கையாற்பிடித்துநாடி திடமுடனுரைக்கக்கேளும்
மூங்கைபில்வாதநாடி முருகியேயோடுமாகில்
மங்கையேமலத்தைகட்டும் மென்றுநீசெப்பிடாயே. 3

பித்தலட்சணம்.

செப்பியபித்தந்தானுந் திகைத்துமேஓடுமாகில்
அப்பியவாதனாடி அழுந்தியேநிற்குமாகில்
மெப்புடன்பிறண்டுமீறி விறகெனகளிக்குமாகில்
ஒப்புடன்மரணமென்று வுரைத்ததுவுண்மையாமே. 4

சிலேற்பலட்சணம்.

சிலேற்பனவாதத்தோடு சிலும்பியேபிசகுமாகில்
பிலேற்பனஐயத்தோடு சீறியேதொடருமாகில்
விலேற்பனஐயத்தோடு மீறியேதொடருமாகில்
சலேற்பனவைத்தியோர்கள் சாடையாய்ச்சொல்லலாமே. 5

மரணநாடி நிலைகுறிப்பு லட்சணமறிதல்.

பித்தமேவாதந்தானும் பிலத்துடன்சடலந்தன்னில்
மத்தியவைபந்தானும் வலப்புறமோடுமாகில்
ஒத்தகண்மீலமாகி விடல்தனில்வேர்வையாகும்
சத்தியமாகச்சொன்னேம் சடுதியில்மரணந்தானே. 6

எய்புமாதுமச்சமுனிசெப்பிய
துய்யமண்டல முரைந்துதுலங்கிய
மெய்யுமானிடர்க் கோதியமெய்ப்பொருள்
அய்யனன் மச்சனுக்கருளினன். 7

திருமுறைமுனிவன்சொல்லு வாகடக்கோர்வைதன்னில்
உரும்பலவியாதிமீட்டு வுன்முகமலநீராலும்
வரும்பலநாடியாலும் வகைப்படிபாருமென்று
தெருவுளம்பஞ்சபீதத் திக்கயஞ்செய்கைபாரே. 8

பித்தவாத சிலேற்பனக் குறிப்பு.

ஊக்கமாம்பித்தநாடி வுகர்ந்துடன்தவளைபாம்பு
நீக்கியேசிலேற்பனந்தான் நீண்டதுஆமைபோல
தாக்கியபித்தந்தானும் தண்மையாய்துடித்துநிற்கில்
போர்க்குறுமரணமென்று புகல்முனிசெப்பினரே. 9

பித்த சிலேற்பனக் குறிப்பு.

அன்னமேகேளாய்பித்த சிலேற்பனநாடிதானும்
வின்னமாம்வாதநாடி குறுகியேயொன்றாய்க்கூடி
முன்னமாம்பித்தத்தோடெ முடுகியேநிற்குமானால்
சொன்னசொல்தப்பாதையா சொருகியேமரணமாவான். 10

பித்தத்தில் பித்த சிலேற்பனக் குறிப்பு.

பித்தத்தில்பிறந்தபித்த சிலேற்பனமெதுவாயோடில்
சித்தத்தில்வாதந்தானும் சிதறியேயொடுங்குமாகில்
அத்தத்தில்சிலேற்பனந்தான் அடங்கியேகொதிக்குமாகில்
நித்தமோர்பகலுக்குள்ளே நேர்மையாய்மடிவார்தாமே. 11

வாதத்தில் வாத சிலேற்பனக் குறிப்பு.

வாதத்தில்பிறந்தவாத சிலேற்பனகுறியைக்கேளும்
நீதுற்றுப்பித்தந்தானும் நெருங்கியேகொதிக்குமாகில்
தாதுற்றவாதந்தானும் தனிப்படஓடுமாகில்
ஆதுற்றுப்பதரிமேனி அடைவதுதிண்ணந்தானே. 12

துன்னியவாதம்ரண்டும் சிலேற்பனமொன்றாய்க்கூடி
அள்ளியபுருவங்கண்ணுள் அரணைவால்துண்டைப்போலும்
கொள்ளியபித்தந்தானும் குருவிவால்துடிப்புபோலும்
முள்ளியிக்குணங்கள்கண்டால் முடிவதுதிண்ணந்தானே. 13

துடியிடியடித்தாற்போல தொடுத்திடும்சிலேற்பம்ரண்டும்
கடுகியஐயம்ஒன்று கடிந்துமேகாணவேண்டி
மடவரவல்குலாளே பாம்பெனவாதமோடும்
அடவினிலறிந்துகொள்ளும் அருமுனியுரைத்தவாறே. 14

பித்தசெய்கை.

ஏகவார்குழலாய்பித்தம் செய்குறியியம்பக்கேளாய்
கோலவேல்விழிகள்ரண்டு குளிர்ந்துமேநடுக்குமல்லால்
சீலநீர்க்கடுத்துநொந்து சிறுகெனவீழும்மின்னம்
ஞாலமேஅறியச்சொன்னேம் நவின்றிடுமுண்மைதானே. 15

வாதசெய்கை.

மானேகேள்வாதம்ரண்டும் வகுத்தசேற்பனங்கள்ரண்டும்
ஆனதோர்சரீரம்நோவாம் அங்கைகால்திமிர்த்துக்காட்டும்
மூனமாமுதிரத்துள்ளே ஒத்தையுமிகுத்துவிம்மும்
பானலங்கண்ணினாள்கேள் வாதத்தின்செய்கையாமே. 16

செய்யதோர்பித்தம்ரண்டும் சிலேட்டுமமெலழுந்ததானல்
அய்யதோர்பசியுமில்லை அடிக்கடிவுதாம்வீழும்
துய்யதோர்நயனம்மீரும் சுத்தமேமஞ்சள்போலாம்
பேய்கள்போல்தத்தம்பேசி பிதற்றுவதுண்மைதானே. 17

மச்சமுனிநாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1297.

பனிரண்டாவது புலிப்பாணி

நாடி கூறுகின்றார்.

வருநமக்குற்றநாடி வலக்கைமானிடனுக்கெல்லாம்
அரிவையர்க்கிடதுகையில் ஆய்ந்தவர்பார்க்குங்காலை
பெருவிரல்வாதமாகும் பின்விரல்பித்தமாகும்
திருமணிவிரலில்நாடி சிலேத்துமமென்றுசெப்பே. 1

அன்னமேகோழியோனன் மயிலனடக்கும்வாதம்
பின்னையோரட்டையாமை பெருத்திடுபித்தமாகும்
சொன்னவாய்மொழிநல்லாளே சுத்தியபாம்புதேரை
அன்னமேஅய்யமென்று அறிந்திடவாகுந்தானே. 2

கையதுநகருமெத்த கண்களைமுழித்துபார்க்கும்
பொய்யதுநடுக்கும்வீட்டை விட்டுவிட்டோட்டங்கொள்ளும்
மையமாய்நிலம்புரண்டும் அடிக்கடிஎழுந்திருக்கும்
வையவேபுதல்வர்கேளீர் மரணமென்றறிந்துகொள்ளே. 3

பலபலபேச்சுபேசும் பாய்ச்சீலைக்கிழித்துக்காட்டும்
சலமதுவுருட்டிக்கேட்கும் சாலவேசுவாசங்காணும்
தலமதிற்றுரும்பெடுத்து தாண்டியேயெழுந்திருக்கும்
யிலமோதான்மிகுந்துகாட்டும் பிழையாதென்றியம்பிடீரே. 4

நாக்கதுயீரமுண்டாய் நயனப்பாருவைகள்நன்றாய்
மூக்கதுயீரம்வற்றி முகக்களைமாறுதாகில்
ஆக்கவேசுவாசமென்று அமருமேதூக்கம்போல
தாக்கிடுஞ்சுரமும்பெற்றல் தானிருந்தாலுமீளும். 5

வாதமுமுடுகித்தேறி வருஞ்சுரங்கொஞ்சமாகில்
போதவேதாகமாட்டாய் போதநித்திரையுமுண்டாய்
வாதமாய்த்தீபனங்கள் ஒத்திடச்சுரங்கள்தானும்
மாதவமுடையோர்கேளீர் வந்ததோர்வியாதிமீளும். 6

உடம்பெலாமீரமுண்டாய் ஒத்திடுஞ்சுரங்களுண்டாம்
தடங்கண்ணுஞ்சொருகிமெத்த தாகமுங்கொஞ்சமாகும்

விடங்கடித்ததுபோற்சற்றே மேலுடம்பசதிகாணும்
மடந்தைகேள்சொன்னேமித்தை வருஞ்சுரமென்றேயோதே. 7

காலுமேகுடைச்சலுண்டு கடித்திடுயிடுப்புபக்கம்
மேலுமேசுரங்கள்கண்டு விழியதுகாந்தல்காணும்
ஆலுமேகனுக்கள்கண்டி அழுந்தியேபிரட்டிக்காட்டும்
சேலுமாவிழிநல்லாளே சொந்தமாம்சுரமென்றோதே. 8

காயுமேசுரங்கள்மெத்த கால்கைகளுதரிக்காட்டும்
ஓய்விலாவயிறெரிச்சல் உத்ததோர்பேதியுண்டாம்
வாயதுபினத்தல்கண்டு வழுவழுத்திருக்குநாவு
ஆயுறுவல்லோர்கேளீர் ஆதிசாரசுரமென்றோதே. 9

பக்கமேதுடிக்குமார்பு பகைத்திடுமுகம்வெளுக்கும்
ஒக்கவேசுரமுங்காயும் ஓயுங்கைகால்கள்மெத்த
கக்கவேவலிகளுண்டாங் கண்வெளுத்திட்டேபோகும்
அக்குலஅஸ்தியான அதிசாரமென்றேயோதே. 10

சொல்லியநாடிதன்னைச் சுருக்குடன்பார்க்கும்போது
மெல்லியபித்தந்தானும் மீறியேதொடர்ந்துநின்றால்
வல்லியவாதந்தானும் வந்துமேயுறையுமாகில்
சொல்லவோர்ராவுக்குள்ளே சொல்வதுதிண்ணந்தானே. 11

சேத்துமநாடிதானும் திரிந்தியவாமைபோல
நாட்டியயீசல்போல நயந்துமேசொல்லுமாகில்
மீட்டவேவேண்டாமாறு நாளினில்மரணமாவான்
திட்டவேபுலிப்பாணிசொன்னார் திறமுடனறிந்துசொல்லே. 12

புலிப்பாணிநாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1279.

பதின்மூன்றாவது சட்டமுனி

நாடி கூறுகின்றார்.

ஆதிசத்தி யடிபணிந்தன்புடன்
நீதியாகநெருங்கும் மானிடர்க்கு
வாதியானவைத்தியர் பிழைக்கவே
சோதியாகசுருக்கமாய் கூறுவாம். 1

வாதக்குறிப்பு அசாத்திலக்ஷணங்கள்.

சொல்லும்வாதக் குறிப்புகளுவேன்
வெல்லும்வாதம் விரவியேயோடிடில்
புல்லும் புகலத்துடித்திடில்
கொல்லுமேமன் கொடுபோவதுண்மையே. 2

பித்தக் குறிப்பு.

வுண்மையாகவுறைக்கிறேன் பித்தங்கேள்
கண்மையாமுச்சி கடுகெத்துடித்திடில்
வண்மையாங்கண்ணீர் வாகாய்ப்பெருகிடும்
தண்மையாமேனி தரைதனிற்கொல்லுமே. 3

சேத்துமக் குறிப்பு.

கொல்லுமீளைகுறிச்குஞ் சேத்மதுங்ககேள்
வெல்லுமாலைவிளங்கத் துடித்திடில்
ஆல்லுமேபக லொன்றரைநாளினில்
கொல்லுங்கொல்லுங் குறுமுனிதப்பாதே. 4

வாதபித்த சிலேத்துமக்குறிப்பு.

தப்பாதையா தரணியில்மாந்தர்க்கு
வொப்பாங்தொந்தம் யுரைக்குறேன்யுண்மையாய்
செப்பாஞ்சேத்துமம் சிறந்தவாதபித்தம்
அப்பாதுடித்திடி லரன்பதிசேர்வாபே. 5

வாதபித்தக் குறிப்பு.

சேரும்வாத சிறந்ததோர்பித்தமும்
கூரும்நாவுங் குதிக்கும்மண்டுகம்போல்
வீருந்தானு விளங்கப்பதைத்திடில்
சேருமெமபுரஞ் சேர்வதுமுண்மையே. 6

பித்தவாதக் குறிப்பு.

உண்மைவாத முறைக்கும்பித்தமுடன்
உண்மைமாத்திரை யொன்றுமேமீறிடில்
உண்மையாமுட லொடுங்கியடங்கிடும்
உண்மையாங்காலன் வுடல்கொண்டுபோவதே. 7

சேத்துமவாதக் குறிப்பு.

போவான்காலன் புரல்வமுநிச்சயம்
சாவான்சேத்துமம் சாற்றும்வாதமுறில்
நாவாற்கூறவும் நவிலவரிதுகாண்
பாவால்சித்தர் பகருமொழிமெய்யே. 8

சேத்துமபித்தக் குறிப்பு.

மெய்யாய்சேத்தும மேவப்பொருந்திடா
தைய்யாபித்த மாணவால்துடிப்புபோல்
நொய்யாமாத்திரை நுவலப்பிரண்டிடில்
பையமால்பதம் பகருடல்செல்வதே. 9

சாத்தியாசாத்தியம்.

பித்தமயங்கிடில் பேசாதேபோய்விடு
யெத்தியதாது வெழும்பிடில்வாதமாம்
முத்தியமாத்திரை யொடுங்கிபெருகிடும்
சத்தியாய்வைத்தியம் தப்பாதுசெய்திடே. 10

செய்யமாந்தகஞ் சிறந்தமேதோர்வைத்தியம்
நய்யநாடி நவின்றிடபார்த்துமே
பெய்யமருந்து பிசகாதறிந்திடில்
உய்யுஞ்சில னுலகழியாதிதே. 11

சட்டமுனிநாடி முற்றிற்று
ஆக செய்யுள் 1290.

பதினன்காவது போகர்

நாடி கூறுகின்றார்.

ஜெனனமானிடர்க்கு சிறப்புடன்நாடிசொல்வேன்
கனமதுசிரசுதொண்டை கடியதோர்விலாவுமட்டும்
புனலொடுரத்தமூளை பூட்டியநரம்புதாது
வனமுடனெழுபத்திரா யிரநரம்பறிந்துசொல்வாம். 1

சொல்லியநரம்பினாலே தோன்றியமானிடர்க்கு
துல்லியவெலும்புமூளை துடிபெறவலித்துக்கட்டி
புல்லியசையுமரத்தம் புகழுடனென்றாய்க்கூடி
வல்லியதோலினாலே வகுத்ததோர்காயமாமே. 2

வாத சாத்தியம்.

காயமாம்மாந்தருக்கு கருதியேநாடிதன்னில்
தோயவேசாத்தியங்கள் தொகுப்புடன்சொல்லக்கேளீர்
மாயமாம்வாதத்தாலே மதிப்புடன்கழிச்சல்கண்டு
காயமுமழிவதில்லை களிப்புடன்கூறினாரே. 3

கூறினார்முனிவர்தானும் குறுமுனியருளினாலே
தேறினார்சித்தர்தாமும் தெளிவறவறிந்துகற்றூர்
மீறினாரிஷிகள்போகர் மேன்மையாந்தபோதனர்கள்
தூறினாரந்தநாடி தொகுத்ததோர்குறிப்புதானே. 4

பித்தமாம்நாடிதானும் பிசகியேயோடக்கண்டால்
நித்தமும்சுரமுந்தோன்றி நெருங்கியமலமும்வீழ்ந்தால்
உத்ததோர்காயந்தானு முண்மையாய்த்தேறுந்தேறும்
சத்தியமாகச்சொன்னோம் தரணியில்மாந்தருக்கே. 5

போசனம்வெறுத்துவிக்கல் பொருமுதல்புடைத்துச்சேர்தல்
ஆசனங்குளிர்ந்தவூதம் அங்கங்கேபுறத்தேவீங்கல்
கோசமுமேறவாங்கல் குளிர்ந்திரவாங்கலேதான்
நாயிவன்கருவியென்றே நவின்றுதான்விட்டுபோகான். 6

விட்டநீர்அடைத்தல்போல விழியினீர்சிதபச்சிந்தல்
அட்டமுங்குளிர்ந்துகாணல் அங்குகால்பறந்தேவீங்கல்
உட்டனம்பிரவேசித்தல் வரவுதலிற்றுச்சேர்ந்தால்
நட்டமாஞ்சாவுதிண்ணம் நாடியேகைகொடாதே. 7

கைதொடிபுண்போலாதல் கருத்துடல்வழவதல்ல
மெய்தொடிஞுதிரம்நீளம் விழிதனிற்சிகப்புபூணே
செய்யொழிகமலம்புந்தி சிறுமுகம்குருவோசித்தல்
ஐவருமொடுங்கிசித்தம் ஆடுவாராடாதென்னே. 8

சிரமதுகனகனத்து செவியடைத்திருமலாகி
சுரமதுவெகுவதாகச் சோரைபோற்சிறுநீர்வீழும்
சரமதுசிதறிவீசி தாகமும்வெகுவதாக
விரவியேவிழிதியங்கி முழியாதுவிடையமென்றே. 9

மருந்திடவிரும்பிடாதே மறுவிறப்பிட்டுமேலும்
தருந்தரிசீதங்கள்வீங்கி தாளடிக்கீழேகட்டி
பருந்திரீர்பிறவேவாங்கி பார்வையுமிகுதியானல்
மருந்திடவென்றேநீயும் மரணமென்றறிந்துகொள்ளே. 10

மரணமாம்போகர்சொன்ன வாக்கியம்பிசகதில்லை
தரணமாமாந்தர்க்காக சாற்றினேமிந்தநூலை
காணிகாரனவர்க்கு நாட்டாமலிந்தநூலை
திரமுடன்அறிவதற்கு செப்பினேமிந்தநூலை. 11

போகர்நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1301.

பதினேந்தாவது வரரிஷி
நாடி கூறுகின்றார்.

மேவியபுறங்கையாலே மிக்கவேநாடிபார்க்கில்
ஆவலாய்வாதநாடி ஆமைபோலிறங்குமாகில்
பாவையேபெருமூச்செய்து பரலோகமடைவதென்று
காவியங்கண்ணினய்கேள் மரணமாமென்றுசெப்பே. 1

செப்பியநாடிதானும் சிருகிருவெனவகித்து
ஒப்பியதொண்டைக்குள்ளே சயமடைத்திரையுங்கண்டாய்

தப்பியகபந்தானங்கே தரியாமல்பிசகுமாகில்
கப்பியமரணம்வந்து காலையில்மடிவர்தானே. 2

மெய்யதோர்பித்தம்வந்து வாய்வதுமிகுந்துகாட்ட
அய்யமேவிட்டகன்று அடைந்திடுமிளைப்புமாகும்
துய்யதோர்விழின்மந்தம் சோருநீரிடமேசுத்தி
அய்யனுருரைத்ததுண்மை அஞ்சாநாள்மரணமாவான். 3

மீண்டுவாய்வழவழத்து மேனியும்வெளுக்குமாகில்
தாண்டியபேச்சுதானும் சதண்டாராகமட்டும்
வீண்டியமரணமாக விரண்டரைக்கடிகைமுன்னே
கூண்டனயிளப்புக்கூட குரைந்திடுமுயிரையெண்ணே. 4

கன்னியேயாவுமெத்தக் கறுப்பதாய்நாக்கும்மூக்கும்
தன்னிடகுணமுமாரி தவ்வியகுணமுமிஞ்சில்
என்னமேகுணமிதானல் யிதற்குநீருரிமைபூண்டு
உன்னியமருந்துசெய்தால் ஒழிந்ததுமரணமென்றே. 5

முதுகொடுமயிறுவீங்கி மூலமும்தாதுகெட்டு
செதுசெவிக்கண்ணும்வாயுஞ் சோவிப்பதுவர்குன்றி
முதுந்தனவாருமூன்று முதியவஞ்சினைப்பளாகில்
விதியவன்வசமேசென்று விட்டுநீபிரிந்திடாயே. 6

வற்றியமலஜலங்கள் மற்றுளசெவிகள்நாசி
உற்றதோர்கன்னம்நாக்கு உறுதியாய்ப்பலமுமற்று
இத்தனைகுணமுங்கண்டு இருந்தனவியல்புமாறி
வித்தகர்முன்புசென்று விளம்புவதறிவதாமே. 7

தன்னுடையசைகைதானும் தனக்கதுதோன்றுமாகில்
மூன்னுரைப்பறிதல்கேட்டல் மூவன்றுரைப்பதற்குவந்து
இன்னதென்றறிதல்யேங்கி இளைப்புடன்திகைப்புதோன்றில்
சொன்னம்போல்வரண்டுமெய்யும் தோன்றிடவேழ்நாட்சாவே. 8

அரிந்திடாப்பித்தம்நின்று வாதமுஞ்சேத்துமமங்கே
பிரிந்திடாதோடுமாகில் பெய்வளைமாதேகேளாய்
இரிந்ததோராகமத்தின் நேர்படவொத்தேயோடில்
மரிந்திடாகடிகைதொண்ணூற் றளவினில்மரணமென்னே. 9

வரரிஷிநாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1310.

பதினாறுவது மச்சமுனி

நாடி கூறுகின்றார்.

பார்த்துமே வாதத்தின் செய்கைகேளு பாங்காகமானிடர்க்கு சொல்லுகின்றேன், ஆர்த்துமே அரணைவால் துடியைப்போலும் அடிக்கடி நாழிகைதான் பிரளுமாகில், வேர்த்துமே வுடலெங்கும் நொந்துகாணும் விரவியே மேனியெங்கும் குளிர்ச்சிகாணும், கோர்த்துமே மங்கைநல்லாள் வாதச்செய்கை கூறுகிறேன் வாதத்தின் செய்கைதானே. 1

காணவே புருஷர்க்கு வாதநாடி கருங்குருவி மான்வாலின் துடிப்புபோலும், எனவே அன்னத்தின் நடையைப்போலும் எழிலானபுறாவின்றன் நடக்கைபோலும், ஆணவேபித்தத்தின் செய்கைகேளு அழகான நடையைப்போ லிருக்கும்பாரு, யீனவேசேத்துமந்தான் தவளைபோல எழிலானவிட்டில்போல் குதிக்கும்பாரே.

ஸ்திரீ நாடிலக்ஷணம்.

சொல்லுகிறேன் ஸ்திரீகட்கு யிடதுபக்கம் சொகுசாகமானிடர்க்கு சொல்வேன்பாரு, வெல்லுகிறேன்வாதமது பாம்புபோலாம் விதமான பித்தமது அட்டைபோலாம், சொல்லுகின்ற அய்யமென்ற நாடிதானும் சிறியகருங்குருவிமானின் ரெக்கைபோலும், அல்லுவது வழங்குகின்ற நாடிமூன்றும் அவனியிலே அறிகிறது அருமைபாரே. 3

பஞ்சபூத நாடிலக்ஷணம்.

சொல்லுவேன் ஐந்தாம்விரல் பூதநாடி சுகமுடனாலாம்விரல் வாதமென்க, எல்லுவேன்மூவிரலாம்பித்தமாகும் எழிலானயிருவிரலையமாகும், தொல்லுலகில்வழங்குகின்றசிறுவிரல்தான் சுத்தமுள்ள குருநாடியென்றுசொல்வார், மல்லுமொருநாடிகள்தான் ஒன்றுக்கொன்று வளர்கின்றபின்னலின்றன் வண்மைபாரே. 4

சொல்லியதோர்நாடியின்றன் வண்மைகேளு சொற்பெரியவாதத்தின் அணியைப்போல, வெல்லவேகீழ்மேலே பிரண்டுவோடில் வீணாகமேனியது வருந்திவாடும், கொல்லவேபித்தமதுமேலேயேறி கொடிபாகல் கொடியதுபோலுருகுமாகில், மெல்லவேவியர்வையது அதிகமாகி மிக்கவேசிறுநீர்தான் கட்டிப்போமே, 5

சிலேத்துமத்தின்பித்தமது புலியைப்போல சீறியேநிற்குகின்றகுணத்தைக்கேளு, அற்பமாய்சன்னிபிரவேசமாகி அடிக்கடிதான் தலைநோவும்மயக்கமுண்டாம், பாற்பெனவேபஞ்சபூதநாடிதானும் கடுகவேமேல்வீங்கிகப்புகாணும், தீர்க்கவேநாடியது திமிர்ந்துநின்றால் தீராதுஅசாத்தியமென்றறையதாமே. 6

மரணலட்சணம்.

வேறு.

மண்டலந்தன்னில்வாழு மானிடரானவற்கு
விண்டிலம்விசைநரம்பு குளுந்துமேவோடுமாகில்
குண்டலம்பற்கடித்து பொறியெல்லாந்தான்கலங்க
துண்டெனவிருக்குமாகில் துணியவேமரணம்சொல்லும். 7

சொல்லவேமூச்சயர்ந்து சுகமுடனடுக்கமுண்டாய்
வெல்லவேமணியும்நட்டு வியர்வையுமதிகமானால்
எல்லவேசிலேத்துமந்தான் எழிலானதவளைபோலாய்
மெல்லவேநடக்குமாகில் மெய்யதாய்மரணமாவான். 8

துடிப்புடன்சேத்துமந்தான் சுருக்கெனஓடுமாகில்
அடிப்புடன்திரேகம்வற்றி அழலைகணதிகமாகி
முடிப்புடன்தலைகனத்து முய்யவேமயக்கமாகும்
இடுப்புடன்மூன்றாம்நாளில் இன்பமாய்மரணஞ்சேர்வான். 9

நில்லவேபித்தநாடி நிலைதப்பிஓடுமானல்
மெல்லவேகாசந்தானும் மிகவுடன்தொடர்ந்துகாணும்
வெல்லவேயிளையுண்டாய் யிரும்பலுமதிகமாகி
செல்லவேபயணமாவான் சிரப்புடனுரைத்தோம்பாரே. 10

உரைத்தோமேவாதபித்தம் கிலேத்துமமூன்றுகூடில்
கரைக்கவேதேள்கொடுக்கைப்போல காணவேதுடிக்குமாகில்
இரைக்கவேயிருமல்கண்டு யிருபதுநாளிற்கொல்லும்
முரைப்படிராமதேவ ருரைத்ததுவுண்மையாமே. 11

இராமதேவர்நாடி முற்றிற்று.

ஆகசெய்யுள் 1321.

பதினேழாவது இடைக்காடர்

நாடி கூறுகின்றார்.

சீர்பொருந்துஞ்சாஸ்திரமும்மருந்துப்பையும் தெய்வீகமானப் போல்பலதுஞ்சொல்லி, பேர்பொருந்தும்யெழுத்தாணி அம்மிஒலை யியல்பானகருவிமுதல்பைக்கரையுஞ்செப்பு, கூர்பொருந்துஞ்சாஸ் திரங்கள்சொன்னானல் குருவாகும்இதருடனே பெதிர்க்கவேண் டாம், தார்பொருந்துசாஸ்திரஞ் சொல்லாவிட்டால் சண்டாளமருந் துடனே பையைவாங்கே. 1

பகையாதே அவருடனேயெதிர்க்கவேண்டாம் பன்னிரண்டுபி ழைநீக்கியிந்தநூலை, குறையாமலிருந்துநீவிருந்துவாங்கிகொள்ளன

வே அவருடையக்கிறும்போனல், நிறையாகசீஷனுய் வந்தானுனல் நேர்மையாய்விருதியந்து பாகஞ்சொல்லி, துரையாகபதிலுரைத்து வைப்புஞ்சொல்லி சூட்சமாய்மனமறிந்துசொல்லும்சொல்லே. 2

நாராசம்பிடித்தகைக்குப்பேர்தான்சொல்லு நன்ருகயிடதுகை யில்ஓலைசொல்லும், ஓபாமனுண்டியதோருண்மைசொல்லும் ஒட்டி முடிக்தெட்டெழுத்தினுருவஞ்சொல்லும், வாராமலல்குதித்தவசன ஞ்சொல்லிப்பார்த்தங்கேசெண்டடைத்தவடிவைச்சொல்லி, நேராக நீண்டெழுத்தின் நிலையைச்சொல்லி நிட்சயமாய் அரியென்றும் பொருளுஞ்சொல்லே. 3

நாராசம்பிடித்தகையோ ஞானமூர்த்தி நன்ருகயிடதுகையில் ஓலைசத்தி, ஓாமனுண்டினதோருண்மைஞானம் ஒட்டிமுடித்தெட் டெழுத்தேவுருவியோனி, பாராமலங்குதித்தவசனவாய்வுபாழங்கே செண்டடைத்தவடிவுலிங்கம், நோாகநீண்டெழுத்தே அடியாதாரம் நிச்சயமாய் அரியென்றும்பொருளும்நீரே. 4

குளிர்ந்திருக்கும் அம்மிக்கு பேர்தானென்ன கூடாடுங்குழவி யுடன் பேர்தானென்ன, தெளிந்தரைக்கும் விரலுக்கும் பேர்தா னென்ன தேமிறுமருந்தினிட பேர்தானென்ன, களிக்திருக்குஞ் செப்புமூத லடைப்புதானும் நான்முகத்தோன் வகுத்தபடி நன் ருச்சொல்லும், மொழிந்துரையும் பண்டிதரை யிந்தநூலை மோசங் கள்வாராதென்று மொழிந்திடீரே. 5

குளிர்ந்திருக்கும் அம்மியது சத்தியாகும் கூடாடுங் குழவி யது லிங்கமாகும், தெளிந்தரைக்கும் விரலஞ்சும் பஞ்சபூதம் தேக மூறும் மருந்தெல்லாஞ் சிவமேயாகும், களிந்திருந்த செப்புமூத லடைப்புதானும் நாதருட சிகாரத்தில் கபாடமாச்சு, மொழிந்து ரையும் பண்டிதரே யிந்தநூலை யுகந்துரைத்து அம்மிதனை வாங் கிடீரே. 6

உரைக்கிரதோர்செந்தூரம்பேர்தானென்ன உத்தரசக்கெந்தி முதல் தாரமேது, அரைக்கின்ற மண்ணுமுதல் சீலையேது அதின் றுவெரு குப்பிமுதற் கால்கையேது, நிரைக்கின்ற அடுப்புமுதல் தீபமேது நிகழாதமணலேதுத் தாளியேது, வரைக்கடங்கா பண்டி தரே யிந்தநூலை வகைபிரித்து யின்னதென்று வகுத்திடீரே. 7

உறைக்கிறதோர் செந்தூரம் சிவமுமாச்சு அரைக்கின்ற மண் ணுமுதல் சிவசத்தியாகும், அடைத்தகுப்பி சலாகைமுதல் வேத மாச்சு வரைக்கடங்கா தாழியது ஆழியாச்சு, வகைசொல்லி பண்டி தரே மருந்தேவாங்கி பரைக்கடங்கா செய்பாகம் கைபாகம் பார் த்து, பண்டிதரே யிந்நூலைப் பணிந்திடீரே. 8

பொற்பணியாய்ச் சமைந்தசெப்பு பேர்தானேது பொரியான வெள்ளியுட செய்கைச் சொல்லும், நற்பணியாய் சமைந்தவகை செப்புமென்ன நலம்பெரிய சாஸ்திரங்கள் நன்ருய்ச் சொல்லும்,

தற்பணியாய் போகாமல் தரித்துப்பார்த்து தாரணியி லின்னதெ ன்று தயவாய்ச் சொல்லும், சிற்பணியும் பண்டிதரே யிந்தநூலை திறமாக வாய்திறந்து செப்புவீரே. 9

பொறற்பணியாய் சமைந்தசெப்பு யிறைவனுரும் பொறியான வெள்ளியென்றால் வேதனப்பா, தற்பணியாய் சமைந்தவகையீசன் விந்து தலம்பெரிய சாஸ்திரங்கள் பரத்தின்னேதம், நற்பணியாய்ப் போகாம லிந்தநூலை நலமாகவிருநுவனை வாங்கிக்கொள்வாய், சிற் பணியும் பண்டிதரே சொல்லாவிட்டால் திறமாக சிஷனுய் வைத் திடாயே. 10

இடைக்காடர் நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1331.

பதினெட்டாவது கொங்கணர்

நாடி கூறுகின்றார்.

அஞ்சுருவா யெடுத்ததொரு பஞ்சலோகம் அடைப்பேது செப்பேது அறுந்து சொல்லும், கஞ்சமேகாம்பூர லோகஞ்சொல்லு களிப்பான பித்தளையின் திருவுஞ்சொல்லும், வெஞ்சமரில் சாஸ்தி ரங்கள் எடுத்துப்பேசி வேதாந்தஞ் சித்தாந்தம் விரித்துச்சொல் லும், நஞ்சுகந்த பண்டிதரே யிந்தநூலை நயந்துநீ யுன்னுடைய செப்புவாங்கே. 1

அஞ்சுருவா யெடுத்ததொரு பஞ்சலோகம் அதைதிருந்த செப்புவரு பேரைகேழ்க்க, கஞ்சுபடா ஆகாசம் செப்பூவன்னி கரு வானரேசமட வாய்வேயாகும், வெஞ்சமடா பித்தளை பிரிதீவு மாகும் வேதாந்தந் திறவென்றால் அப்பின்கூறு, நஞ்சுகந்த பண்டி தரே யிந்தநூலை நாடரிய யின்னதென்று நவிலுவாயே. 2

கஞ்சமென்ற ஆகாசம் நிறத்தைச் சொல்லும் கடுஞ்செப்பு வன்னியுட நிறத்தைச்சொல்லும், வஞ்சமென்றலோகந்தான் வாய் வேயாகும் வரும்பித்தளை பிரிதீவுக்கு நிறத்தைச்சொல்லும், மிஞ் சவேதேகிக்கு அப்பின்கூறு விதமான நிறத்தையெல்லாம் விழுங் கிப்பார்த்து அஞ்சாமல் யெடுத்துரைக்கும் வயித்தியோரே ஒவ் வொன்றாய் யின்னதென்று வுரைத்திடீரே. 3

கஞ்சமென்றால் யாகாசம் புகைபோல்மேனி கடுஞ்செப்பு நிற மென்றால் சிவப்பேயாகும், வஞ்சமென்றால் லோகந்தான் உருப்பே யாகும் வரும்பித்தளை யென்றால் பொன்போல்மேனி, மிஞ்சவே தேயுக்கும் அப்பின்கூறு விதமான படிகம்போல் நிறத்தைச் சொல் லும், ஒஞ்சாம லெடுத்துரைக்கும் பண்டிதரேஐயா ஒவ்வொன்றாய் யின்னதென்று யுகந்துகேளே. 4

திடமானஞ்சத்தின் வீட்டைச்சொல்லும் தேடரிய தாம்பிரத்தின் வீட்டைச்சொல்லும், உடலானபித்தளேயின் வீட்டைச்சொல்லும் உத்தமலோகத்தின் வீட்டைச்செல்லும், சடமான திராவுக்கும் வீட்டைச்சொல்லும் தருவானஅஞ்சினுட சக்கரத்தின்வீடு, திடம்பெரிய வயித்தியரேயிந்த நூலை சூட்சமாயின்னூலை திறந்திடரே.()

தேரிடசக்கரத்தின் யெழுத்தைச்சொல்லும் சேப்பானதாம்பிரத்தின் அட்சரத்தைச்சொல்லும், யேரிடலோகத்தின் யெழுத்தைச்சொல்லும் யியல்பானபித்தளேயின் யெழுத்தைச்சொல்லும், கோடரிய திரவுக்கு அட்சரங்கள்சொல்லும் குருவாகும்பண்டிதரே தொகுத்துபார்த்து, நாடரியயிந்த நூலின் யெழுத்தைச்சொல்லும் நன்ருகமருத்துசெப்பு வாங்குவாயே. 6

தேடரிய கஞ்சந்தாம் அகாரமாச்சு தீயான தாபூரம் சிகாரமாச்சு, கோரறிய திராவுக்கு மகாரமாச்சு குருவாகுமுறுவான பஞ்சபூதம், சீரறியசிகாரமது நடுவேயாச்சு சிறப்பான வருவுருவும் காணலரச்சு, நாடறிய யின்னூலை நன்ருய்ச் சொல்வேன் நாணமில்லா வயித்தியரே வணங்கிக்கேளே. 7

மரத்திஞல் சடைந்தசெப்பு வகைதான் சொல்லும் வளர்மூங்கில்விரலுக்கு வகைதானென்னு திறத்திஞல் மிளகுடைய கொம்பைச்சொல்லும் திறமானமேதுசில செப்பச்சொல்லும், பறத்திஞலெழுந்தபசு யினத்தின்செம்பு பாங்கானகரியினுட மூலஞ்சொல்லும், திறத்திஞ லெழுந்ததொரு கரியின்கொம்பை திடம்பெரிய வயித்தியரே செப்பிடரே. 8

மரத்திஞல் கடைந்தசெப்புக் காந்தமூசி மாபெரிய மூங்கிலுட விஷமுமாகும், திரத்திஞல் கடைந்தமிலா மாலிஞேரம் திரமான மேதிகுலம் காலபீடம், சிரத்திஞல் கரியென்ருல் கொம்பின்செப்பு சீர்பெருங் கயமுகனில் மூலமாகும், வரத்திஞல் நாதாக்கள் அமைத்தபோம் வண்மையுள்ள நாடியது வளமைபாரே. 9

கொங்கணர் நாடி முற்றிற்று.

ஆக செய்யுள் 1340.

பதினெண்சித்தர்கள் நாடிசாஸ்திரம்

முற்றிற்று.